பாரதி நினைவு
நூற்றாண்டு மலர்

பாரதி நினைவு நூற்றாண்டு மலர்

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

01.10.2022

பாரதி அன்றும் இன்றும் என்றும்

"தமிழால் பாரதி தகுதி பெற்றதும் பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும்" என்று பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். சொல்லை வில்லாக ஆக்கி பாரதி எய்த கவிதைகள் இன்று வரை கூர்மையாகப் பாய்ந்து கொண்டே இருக்கின்றன.

புதிய சொல், புதிய கருத்து, புதிய பாங்கு, புதிய சிந்தனை, புதிய முயற்சி என 100 ஆண்டுகளுக்கு முன் பாரதி தொடங்கியது இன்றும் புதிய சொல்லாக, கருத்தாக, சிந்தனையாக, முயற்சியாக இருப்பதுதான் பாரதியின், பெருமை, வலிமை!

அதனால்தான் பாரதியாரை 'மக்கள் கவிஞர்' எனப் போற்றினார் பேரறிஞர் அண்ணா. அக்கவிஞர் வாழ்ந்த வீட்டை அரசு இல்லம் ஆக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

காலத்தால் அழியாக் கவிதைகளைத் தந்த பாரதி மறைந்த 100–ஆவது ஆண்டில், காலம் அதனை மறத்தகுமோ என்ற எண்ணத்தில் அவரது நினைவைப் போற்றும் 13 அறிவிப்புகளை தமிழ்நாடு அரசு செய்தது. பாரதி நினைவு நூற்றாண்டை நினைவூட்டி பாரதியை பெருமைப்படுத்தியது.

இதற்கு மகுடம் வைப்பது போல, 'பாரதி நினைவு நூற்றாண்டு மலர்' மிகச் சிறப்பாக 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ரா.அ.பத்மநாபன், பெரியவர் சீனி.விசுவநாதன், பேராசிரியர்கள் ஆ.இரா.வேங்கடாசலபதி, ய.மணிகண்டன், பத்திரிக்கையாளர் கடற்கரய் ஆகியோர் பாரதியியலுக்கு தொண்டாற்றி வருகிறார்கள். அவர்களது திரட்டல்களில் இருந்து இந்த மலர் தொகுக்கப்பட்டுள்ளது பொருத்தமானது. பழ.அதியமான், பாரதி கிருஷ்ணகுமார்,பாரதி பாஸ்கர், டாக்டர் வி.வெங்கட்ராமன், நிரஞ்சன் பாரதி ஆகியோர் தங்களது படைப்புகளை வழங்கிப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

பாரதி அன்றும் இன்றும் என்றும் தேவைப்படுபவர் என்பதைச் சொல்லும் சிறப்பு மலராக இதனைத் தயாரித்து வழங்கிய ‘தமிழரசு’ ஆசிரியர் குழுவுக்கு எனது பாராட்டுகள்.

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள்: 07/09/2022

அணிந்துரை

"தேசப்பற்று, தெய்வப்பற்று, தமிழ்ப்பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர்தான் பாரதியார். இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடியவராக மட்டுமே இருந்திருந்தால், அதற்காக மட்டுமே அவர் நினைவு கூறப்பட்டிருப்பார். அதற்கும் மேலாக அவர்தம் எழுத்தாற்றல் மூலம் சமூக, பொருளாதார உரிமைகளுக்காக பாரதியார் கவிதை வரிகளாய் உலவி வருகிறார் என **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

பாரதியார் அவர்கள் வாழ்ந்த தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்து இல்லத்தை, அரசு நினைவில்லமாக அமைத்துத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்கள். அவர் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 10.09.2021 அன்று பாரதியார் அவர்கள் மறைந்து 100 ஆண்டுகள் எய்தியதையொட்டி, அவர் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாளினை **"மகாகவி நாளாக"** அறிவித்து சிறப்பு செய்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் **'மக்கள் கவி'** என்று போற்றப்பட்ட பெரும்புலவர் பாரதியார் அவர்கள் மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளைப் போற்றும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் **"பாரதியார் நூற்றாண்டு நினைவு நாள் சிறப்பு மலர்"** ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள், ஆயிரமாண்டுகள் கழித்தும் தமிழ்ச் சமுதாய மக்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் உள்ளதால் இதனைப் படித்து பயன்பெற அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்.

அன்புடன்,

7/9/22

(மு.பெ.சாமிநாதன்)

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

கவிதைத் தீ

பாரதி என்கின்ற ஒற்றைச் சொல் தமிழகத்தில் பல பரிமாணங்களை உள்ளடக்கிய ஒன்றாக எப்போதும் ஒளிர்கிறது.

கவிஞராக, கட்டுரையாளராக, இதழியலாளராக, தீர்க்கதரிசியாக, தேசபக்தராக, விடுதலைப் போராட்ட வீரராக, மொழிப்பற்றாளராக, பன்மொழி வித்தகராக, சமத்துவ சித்தராகப் பரிமளித்து பாரதத்தில் நவமணியாய் சுடர்விட்ட வரகவி அவர்.

வாழும் காலத்தைத் தாண்டி சிந்திக்கிற மனிதர்கள் அனைவருமே வாழும் காலத்தில் நிந்திக்கப்படுகிறார்கள். வறுமையே அவர்களுக்குப் பரிசளிக்கப்படுகிறது. புறக்கணிப்பே அவர்களுக்குப் பாராட்டுப் பத்திரம் ஆகிறது. பாரதியார் முற்போக்குச் சிந்தனைகளை எப்போதும் முன்மொழிந்தவர். சாதிகளை இடக்கையால் புறந்தள்ளியவர். அனைவரும் சமம் என்று அறைகூவல் விடுத்தவர். ஒன்றுபட்ட இந்தியாவைக் கவிதைகளில் கனவு கண்டவர். அறிவியல் வளரும் ஆற்றல்மிகு பாரதத்தை வழிமொழிந்தவர். வீரத்தையும், மெய்ஞானத்தையும் ஒருசேர கவிதைகளில் உரைத்தவர். அவருடைய ஒவ்வொரு வரியிலும் பல பாடல்களின் சாரம் குவிந்திருக்கும். அவருடைய கட்டுரைகள் தெளிவின் வடிவமாக நம்மை வழிநடத்தும்.

பாரதியாரின் அத்தனை கவிதைகளுமே இன்று மேற்கோள் காட்டப்படுகின்றன. திருக்குறளுக்கு அடுத்ததாக தெருவெங்கும் முழங்குவது அவருடைய வரிகளைத்தான்.

பாரதியார் இன்று உலகமெங்கும் உச்சரிக்கப்படுகின்ற ஒப்பற்ற பெயர். அவருடைய நினைவு நூற்றாண்டை மலராக வெளியிட்டு அவர் பங்களிப்பை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வதுதான் உயர்ந்த செயல்பாடாக இருக்க முடியும்.

பாரதியின் கவிதைகள் காலத்தைத் தாண்டியவை மட்டுமல்ல, நமக்கான சீர்திருத்த செயல்பாடுகளுக்குக் காலக்கெடுவை நிர்ணயித்தவையும் ஆகும். அவர் இளைஞர்கள் ஒளிபடைத்த கண்ணினராக, உறுதிகொண்ட நெஞ்சினராக இருக்க வேண்டும் என்று எண்ணியவர். பெண்கள் கல்வி பெற்று சுடர்விட வேண்டும் என்று சொல்லியவர். அத்தகைய மகத்தான மனிதர் நம்மால் இன்றும் கொண்டாடப்பட வேண்டியவர்.

நாம் அவரைக் கொண்டாடுவதற்கு ஒரே வழி அவர் படைப்புகளைப் படிப்பதும், அவர் கண்ட கனவுகளை நிறைவேற்றுவதுமே. அதற்கான ஒரு சாளரமாக இந்த பாரதி நினைவு நூற்றாண்டு மலர் நேர்த்தியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. பல திக்குகளிலிருந்து கிடைத்த முத்துகள் மாலையாகத் தொகுக்கப்பட்டு மலராக ஒளி வீசுகிறது. புகைப்படங்களும், கோட்டோவியங்களும் இதை வாசிப்புக்கு ருசியாக்கியிருக்கின்றன.

மலரை வாசிப்போம்! மனத்தைச் செம்மைப்படுத்துவோம்!

(இறையன்பு)

தொலைபேசி: 044–25671555 நகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

'பாரதி நினைவு நூற்றாண்டு'

சிறப்பு மலர் - வாழ்த்துரை

தமிழிலக்கிய வரலாற்றில் 'புதுநெறிகாட்டிய புலவன்' என்றும் 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்றும் பாவேந்தர் பாரதிதாசனால் பாராட்டப் பெற்ற பெருங்கவிஞர் நம்முடைய தேசியக் கவி பாரதியார் ஆவார்.

விடுதலை உணர்ச்சியும், தமிழுணர்ச்சியும் பாரதியாரின் கவிதைகளில் அங்கிங்கெனாதபடி மிளிர்ந்தன. சொல் புதிதாய், சுவை புதிதாய்க் கருத்துப் புதிதாய் செழுங்கவிதைகளைப் படைத்துக் காலத்தை வென்று வாழும் மகாகவியாய்த் திகழ்கிறவர்.

நாட்டு விடுதலைக்காகப் பலரும் பல வகைகளில் பாடுபட்ட காலத்தில், விடுதலை உணர்வைத் தமிழில் பாடி, தமிழுக்கு வளம் சேர்த்த பெருமையும் பாரதியாருக்கே உரியது.

இத்தகைய பெரும்புகழ்க் கவிஞர் பாரதியாரின் நூற்றாண்டு நினைவு நாளினைப் போற்றிடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.09.2021 அன்று சட்டப் பேரவையில் பாரதி பிறந்த செப்டம்பர் 11ஆம் நாளினை 'மகாகவி நாளாக' ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என அறிவித்தார்கள்.

அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை, பாரதியாரின் நூற்றாண்டு நினைவு நாளில் பாரதி நினைவு நூற்றாண்டு சிறப்பு மலரினை வெளியிடுவது பெருமிதமாக உள்ளது.

சிறப்பு மலர் தமிழின் சிகரமாக தகத்தகாயமாக மின்னட்டும் என வாழ்த்தி, தொய்வின்றிப் பணியாற்றிய அனைவரையும் வாழ்க வெல்க என வாழ்த்துவதில் உவகையடைகிறேன்.

27/9/21

அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை.

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009, மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நிகரி : 044-25672021

முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

ஆசிரியர் உரை

'எமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' எனப் புரட்சி முழக்கம் செய்தவன் மகாகவி பாரதியார். அந்நியரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டின் விடுதலைக்காகவும் மேலோர் கீழோர் எனச் சாதி அடுக்குகளிலும், ஆண் – பெண் என்ற பாகுபாட்டிலும் ஒடுக்கப்பட்டிருந்த மக்களின் சமூக அரசியல் விடுதலைக்காகவும் பாடிய அக்கினிக்குஞ்சு பாரதியார்.

பாரதி மறைந்து நூறாண்டுகள் ஆனாலும் அவன் கவிதைகள் நேற்றைய பிரச்சினைகளுக்கு இன்று எழுதப்பட்டதைப்போல், மானுட சமுதாயத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் அமரத்துவம்தான், அவனை அவன் மறைந்தும் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும் நினைவோடு புகழ்ந்திட நம்மை ஆற்றுப்படுத்துகிறது. அதனால்தான் பாரதி யுகக் கவிஞன் எனப் போற்றப்படுகிறான்.

மகாகவி பாரதியார் அவர்களை நினைவுக்கூரும் வகையில், கடந்த ஆண்டு நூற்றாண்டு நினைவுநாள் துவங்கப்பட்டு 14 சிறப்பு அறிவிப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அவ்வறிவிப்புகளைச் சிரம் மேற்கொண்டு செய்துவரும் செய்தித் துறையால் பாரதியார் அவர்கள் மறைந்த செப்டம்பர் 11ஆம் நாள் "மகாகவி நாளாகக்" கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில், பெரும்புலவன் பாரதியாரின் சுதந்திரப் போராட்ட வீர வரலாறு, பாரதி குறித்து அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் "பாரதியார் நூற்றாண்டு நினைவு சிறப்பு மலர்" என்ற மலரினை உருவாக்கி வெளியிட்டு, நீடுதுயில் நீக்க பாட வந்த நிலா பாரதியின் நினைவின் நூற்றாண்டில், தமிழ்நாடு அரசின் செய்தித்துறை தன் அஞ்சலியைச் செலுத்துகிறது. இந்நூலை உருவாக்கும் வரலாற்று வாய்ப்பை எண்ணிப் பாரதியின் தீராக் காதலன் என்ற முறையிலும் தமிழரசு ஆசிரியர் என்ற முறையிலும் அகம் மகிழ்கிறேன்.

அன்புடன்

(வீ.ப. ஜெயசீலன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009, மின்னஞ்சல்: dipr@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25671300, நகலி : 044-25677777

பொருளடக்கம்

PEOPLE'S POET 1948..........10
- பேரறிஞர் அண்ணா

பாரதி பாதையை நாம் போற்றுவோம்! 17
- பேரறிஞர் அண்ணா

தமிழ் தேசிய கவி.......... 26
- தந்தை பெரியார்

பெருங்கவிஞர் பாரதி.......... 28
- முத்தமிழறிஞர் கலைஞர்

பாரதி இன்றும் தேவைப்படுகிறார்! 36
- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

நினைவில் பாரதியார்.......... 44

பாரதி வாழ்க்கை வரலாறு 48
- சீனி விசுவநாதன்

பாரதி கவிதைகள்.......... 70

வ.உ.சி. கண்ட பாரதி 92

பாரதிதாசன் கண்ட பாரதி 108

செல்லம்மாவின் பாரதி..........122

பாரதியை அறிதல் புரிதல் தெளிதல்..........126

கட்டுரைகள்

சுதேசி இயக்கத்தில் பாரதியின் புரட்சிகர நோக்கும் போக்கும்... 140
- தொ.மு.சி.ரகுநாதன்

பாரதியின் இறுதிக்கால இந்திய விடுதலை இயக்கச் செயல்பாடுகள்...150
- பேராசிரியர் ய.மணிகண்டன்

காலம் ஆனார் பாரதி... 160
- பாரதி கிருஷ்ணகுமார்

பாரினில் ஆச்சரியம் பாரதி அல்லவா?.. 166
- பாரதி பாஸ்கர்

வாலிகனும் கதலியும் பாரதியும் இளைஞர்களும்... 170
- பழ அதியமான்

பாரதியியல் பயில்வோம்!... 176
- நிரஞ்சன் பாரதி

பாரதியின் கனவுக்குத் தடை.. 180
- டாக்டர் வி.வெங்கட்ராமன்

பாரதியின் ஆப்த நண்பர் ஆர்யா!..192
- கடற்கரய் மத்தவிலாச அங்கதம்

பாரதியின் ஆங்கில எழுத்துகள்... 198
- ஆ.இரா.வேங்கடாசலபதி

பாரதியின் கருத்துப் படங்கள்... 207
- ஆ.இரா.வேங்கடாசலபதி

ஆவணங்கள்... 217
- ய.மணிகண்டன்

PEOPLE'S POET

1948

பேரறிஞர் அண்ணா

Charming and significant as the term is, it is a warm tribute not only to the poet but also to the people for the people - had their monarchs and Ministers, their warriors and saviours, their seers and saints, miracle - mongers and priests, but had no poets and from ages past there were poets in abundance, poets who supplemented the scriptures or who polished the palaces by their poetry, but poets who sang for and about the people, in the people's tongue, were very very rare. The poet's voice did the function of the temple bell or the palace drum but rarely did that voice represent the innermost thoughts of the people and when at times poets spoke about the people, it was to point out to them, how greedy and worldly they have become, how impermanent and illusory this world is, how sinful is silver and how ungodly is gold, and such like sermons - sermons that supplemented the royal rod and the whip of the aristocrat. Poets became in due course one more important item in the Royal paraphernalia, one more policeman, who filed the case here and asked the high heavens to deliver the Judgment later on.

These poets spoke in a different tongue altogether and were far from the people. They despised the crowd from where they rose, and used their poetic genius to gain admission in the royal palace, and when once there, they went on weaving wordy wreaths for monarchs of all sorts, provided his gold was pure. The poets of the Sangam period, are noble exceptions to this sorry rule, and they are the poets least known to the people of our days.

Poets either became vendors of virtue in verses or became pleasure-merchants, and they found it hard and unprofitable to become the People's Poet. That is the reason why we find no outstanding people's poet after the Sangam Age, in Tamil Nadu.

POETS OF YORE

Virtue itself came to be considered as an investment for a happy life in another world. Hence, poets who came after the advent of this false and pernicious theory began to extol the particular bank of dispensation for which they were the self-appointed agents. Like the clever banker, or the active insurance agent, these poets began to pour forth rhymes in abundance, about the soundness of their Bank, about the delightful dividends and the bright prospects. If one poet gave the people a sweet song about the powers of Garuda of Maha Vishnu up rose another to supply us with a sacred sonnet about the stately bull of Siva, or the beautiful peacock of Muruga or even the ugly buffalo of the all powerful God of Death, Yama.

All these poems were of the highest order, looked at from the artist's point of view - there was rhythm, diction, similies, metaphors, parables, all in abundance except reason. These poets thought that the temple bell did not work well and thought if their duty to lend their poetic strengh to supplement the sound - duty or no duty, it was such a paying job that there was a rush in that direction. Poets assumed an attitude of superiority - they enjoyed the common man's confusion, they tried to compromise contradictions and beautify absurdities - they were loud in their denunciation of things worldly; the worthlessness of human life, the littleness of mankind and they presented a poetic picture of the unknown world heaven up above the clouds, and the hell underneath the earth - the telescope was in the womb of science hence heaven existed, and the poets entertained the people with imaginary descriptions about the theological worlds! The ignorant stood amazed and the intelligent adored the art and not the thought.

ROLE OF PEOPLE'S POET

It is not easy to take up the role of a people's poet - Bharathi rose equal to this stupendous task. It is easy to become the poet of the classes, some sweet sonnets about the silvery moon swimming in a sea of blue, some poems

about the twinkle of the stars, fine poems about the fragrance of the flower, the rhythm in rivers, lyrics about love and verses about valour - these are enough to secure a place of honour in the poets gallery. But to discharge the duties of a people's poet one has to cross hurdles of hatred, take many a dive in to dangers and should not think about patronage and popularity. Though a select circle of friends knew and spoke about the poetic genius of Subramania Bharathi, the people as a whole were almost unaware of their poet till at a later stage, and then too, it was the poems of a political colour that was presented to the people, and not the poems which a people's poet alone can conceive and deliver.

We had poets in abundance. The shepherd sleeping inside a temple forgetful of his home and vocation the goddess returning after her midnight supervision, the smile on her lips on seeing the simpleton, her curious idea to make him a poet, the gentle pat and the touch of the divine rod, the wonderful result these were known to the people. One becomes a poet, because of the divine touch, and it is his duty to sing devotional songs to a particular deity or to all. this theory held the ground so strongly, that the people were not prepared to meet the people's poet, even when one came forward. The people will cast a look of contempt and suspicion on one who says boldly" I am the people's poet, I sing for them and about them, because I am one of them. There would be no recognition and the more radical his poems are, the more vehement will be the opposition. And in this dangerous ground, we find Subramania Bharathi taking steady steps victoriously.

BHARATHI'S AGE

Bharathi was born on the frontier of two eras-the feudal order was in full force in his homeland, Ettayapuram had a palace surrounded by huts, age-old castes were still in power, he himself was



a Brahmin by birth - but side by side with feudalism and Sanathanic order of Society, modernisim was peeping in, industrial revolution was dawning the old order met the new with sorrowful and scornful eyes, and there was challenge in the look of the new era. Bharathi was born during that period and more could have imagined that he will become the warrior in the duel between the old order and the New - for in the old order of things his was a comfortable place.

BHARATHIAR'S CLAIM TO GREATNESS

He was born moreover in this land of paradoxes a land where arrogance and humility, cruelty and kindness march together-where there is energy in abundance and absurd contemplation strong enough to dissipate the energy, a land of some dazzling ideas and millions of mute people, a land where there is apoplexy at the centre and anaemia at the extremes, the land of courage as well as fear, the land of faith as well as despair. Byron and Burke landed here just then, only to meet Bharatam and Bagavatham. The booming of the gun became familiar to the ears of the people and the age- long temple drum was not silent in such a land of paradoxes and perplexities, Bharathi was born, and in such a land history moves but slowly and it needs a strong push if it should move at all Bharathi's claim to greatness rests chiefly on this he gave the push, as the people's poet.

Bharathi was not merely the bard of Nationalism he was certainly the morning star of reformation only because he was the people's poet. He was the angry with the foreigner, and wanted his country to become free but that was not his goal that was not to be his end. It was but the beginning - he wanted to free his country, men from all shackles, wanted them to rise up in the estimation of the world, wanted to see, a new land peopled by men and women of a new type altogether. He found the people enveloped in fear. Fear was written on their very faces. They were afraid of anything and everything, not only did they fear the foreigner and his gun but their own brethren chanting some slogams, they were afraid of ghosts and phantoms.

FIGHT FOR FREEDOM

Such a People, cannot become the standard bearers of freedom, and a land peopled by such cannot lift its head high, and look straight at the world, even if the foreign power is driven out. Hence Bharathi wanted his countrymen, to drive out the fear from their mind shed off inferiority complex. He instilled into their mind gross hope and courage, he placed before them their own hidden powers and pointed out to the masses, their ignorance and superstition, their inferiority complex and their caste prejudices Bharathi saw clearly, and he determined to root out these evils, and none but a people's poet could have

been so deeply interested in these problems. But Bharathi knew full well, that it was the age of the common man - the era of democracy and he wanted the people to fight for freedom - he did not deliver more devotional hymns to the divinities, nor did he send poetic appeals to the princess of the land - he addressed the man with the plough, the woman at the cradle, and even the children at the play - grounds.

He did not, like the poets of a bygone age, pointing out, ancient scripts in support of freedom, but placed before the masses, the world events of importance, the freedom movements of distant lands. He announced to the people, the dawn of freedom in Italy through the marvellous ressurrection of the masses; thanks to Mazzini the patriot - he painted in glowing colours, the picture of France after the revolution, and placed a brand new picture about Russia, free from the shackles of Czardom. Free Belgium, free France, Red Russia -these were the pictures that he placed - not the theological lands of Indra or Brahma and having placed these pictures, he also presented them with a pen picture of countrymen at Fiji islands, and like Shakespeare he asked, look at this picture and at that! That is the people's poet. One who is not afraid of pointing out the folles and foibles of his own people, one who is not afraid of showing to his own people, how slow they are in thought and action whereas peoples of other lands were moving fast and faster to a nobler sphere of activity and life. He was not afraid of the privileged class, and did not falter to place the full facts before the people.

As the people's poet it was his duty to unmask cannot and hypocrisy wherever it was to be found, and he did that with remarkable courage and enthusiasm.

CONSERVATISM CONDEMNED

There is an attempt by interested parties to enlarge the portrait of Bharathi the National Bard, not entirely because they love that portrait but - because, they think that portrait's immensity will conceal from the public eye, the other portrait of Bharathi, the people's poet. Bharathi's poems are no mere hornests. The people's poet, was not afraid to lay bare the absurdities of ancient systems and thoughts, and in almost infuriated tone he asks those who champion the cause of conservatism in very strong words, 'Fools! Do you argue, that things ancient ought on that account be true and noble ! Fallacies and falsehoods there were from times immemorial, and dare you argue that because these are ancient these shoud prevail ?"

LIVE IN THE PRESENT, SHAPE THE FUTURE

In ancient times, do you think that there was, not the ignorant, and the shallow - minded! And why after all should you embrace so fondly a carcass

- dead thoughts. Live in the present and shape the future, do not be casting lingering looks to the distant past, for the past has passed away never again to return - so says Bharathi - and there in we meet. He gave a moral code for the masses, not unrelated to life, as some of the ancient codes were, he boldly differed from the ancient codes and placed before the people, a new vision altogether. He refused to allow the thought of Maya philosophy to have a hold on the people - he ridiculed that theory, strongly and infuriated the Asramites, but he was not afraid of the consequences. A people immersed, in such a thought, Bharathi said, will become inactive, unprogressive and such a people will become worthless.

HIS RELIGION

Hunger and poverty and ingorance, he will not tolerate, and he raises his powerful voice against the tyranny of the rich, and threatens the whole world with dire consequence even if a single individual is made to starve. He wants the people to lead a full life develop their faculties improve their commerce - industralise their land and enjoy all the benefits of the new era. His religion, is not to be priest - craft and slogan - shouting - his religion is service to humanity and brotherhood in the broadest sense.

TASK UNFINISHED WILL BE FINISHED

The task that lies before the people's poet, is a mighty one. It is his task to make the people realise new truth, take a new path, and get a new process of valuation altogether. It is his task to release the people from the clutches of the Astrologer, and place before them the Astronomer, his is the task to drive out the Alchemist from the people's mind so that the chemist can come in. His is the task to push aside the priest so that the teacher can get a place. The people's poet has the mighty task of driving out the influence of the Miracle monger so that the Medical man can find a place in the order of things. Superstition is to be fought out, so that science can flourish. In short the people's poet has the task of a revolutionary a and more difficult than that of the revolutionary, for the people are apt to mistake the tyrant for the saviour and the saviour for the tyrant. He fought with courage, and though the battle is not over yet, and though he is no more alive, he has given an armoury of thought, enough for the successful termination of the fight, and the best and lasting tribute that one can pay to this people's poet, is to continue the fight -the fight for freedom of the people, in its fullest and noblest sense. And there are men for the job and it will be finished.

(அறிஞர் அண்ணா 1948ஆம் ஆண்டு அகில இந்திய வானொலி நிலையத்தில் மகாகவி பாரதியார் குறித்து ஆற்றிய முதல் ஆங்கில உரை)

பாரதி பாதையை நாம் போற்றுவோம்!

பேரறிஞர் அண்ணா

எட்டயபுரத்திலே, தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு, அழகிய மண்டபம் அமைத்துச், சீரிய முறையில் விழா நடத்தினர்.

பரங்கியாட்சியை ஒழித்தாக வேண்டுமென்ற ஆர்வத் தீ கொழுந்துவிட்டெரியும் உள்ளத்துடன் வாழ்ந்தவர் பாரதியார். தாயகத்தில் உலவத் துரைத்தனத்தார் தடை விதித்ததால், புதுவையில் தங்கிப் புதுப்பாதை வகுத்தார் பாரதியார்.

அவருக்குக் ‘காணிக்கை’ செலுத்த ஆட்சி அலுப்பையும் பொருட்படுத்தாது, ஆச்சாரியார் வந்தார் – ஆயிரக்கணக்கான தமிழர்கள் கூடினர் இசைவாணர்கள் – கலைவாணர்கள் – எழுத்தாளர்கள் பற்பலர்.

‘கல்கி’ ஆசிரியர், இப்பணியினைத் திறம்பட நடத்தி முடித்தார். விழாச் சொற்பொழிவுகளில், நாவலர் பாரதியார், சிவஞானக் கிராமணியார், ஜீவானந்தம், நாமக்கல்லார், எழுத்தாளர் சங்கத் தலைவர் பெ. தூரன் ஆகிய பலரும் கலந்துகொண்டனர்.

நண்பர் சிவஞானம் பெருமிதத்துடன் கூறினார், “அதிகாரமற்ற கரம் அஸ்திவாரக்கல் நாட்டுகிறதே என்று, முன்பு ஆயாசப்பட்டேன் இன்றோ, ஆளும் கரம், மணிமண்டபத்தைத் திறந்துவைத்தது கண்டு அகமகிழ்கிறேன்” என்று, உண்மை. வங்கமாளும் ஆச்சாரியார், மணிமண்டபத்தைத் திறந்தார். வறுமையாளராகக் கவனிப்பாரற்று, நாடு கடத்தப்பட்டு நலிவுற்றிருந்த பாரதியாருக்கு, நாடு முழுவதும் கொண்டாடும் அளவினதான விழா நடந்தேறியது.

பாரதியாரின் கவிதைத்திறன், அதனாலாய பயன், மறுக்கமுடியாதன. பாரதியாரின் தனிப்பண்புகளை, அவரை அந்நாளில் அறிந்தவர்கள் கூறிடக் கேட்டால், புதுஉலகு காண விழைபவர்களின் அகமெலாம் மகிழும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பாரதியாரைக் குறித்துப் பேச ஆரம்பித்தால், அவருடைய கண்களிலே ஓர் புத்தொளி தோன்றிடக் காணலாம்.

பாரதியாரின் காலம் வேறு; இக்காலம் வேறு. எனவே, இன்றுள்ள எண்ணங்களை எல்லாம் அவர் அன்றே ஆய்ந்தறிந்து கூறியிருக்கவேண்டுமென்றோ, நாம் எடுத்துரைப்பதும், வரலாற்று உண்மையுமான ஆரிய திராவிடப் பிரச்சினையை அவர் கூறியிருக்க வேண்டுமென்றோ நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. அவருடைய பாடல்களிலே பல இடங்களில், அவர், ‘ஆரியர்’ என்ற சொல்லை, உயர்த்தியேதான் பாடி இருக்கிறார். அந்தக் காலம், நாமெல்லாம் பள்ளிகளில் ‘ஆரிய மத உபாக்கியானம்‘ எனும் ஏட்டினைப் பாடமாகப் படித்த காலம். நம் தலைவர், தமிழ் நாட்டுக் காங்கிரசிலே பெருந்தலைவராக இருந்த காலம்.

ஆரியர் – திராவிடர் பிரச்சினை, ஓர் ஆராய்ச்சி – வரலாறு. இதனை நாம், பாரதியாரிடம் காண்பதற்கில்லை.

ஆரியம் என்பது, ஓர் வகைக் கலாச்சாரம் வாழ்க்கை முறை.

திராவிடம், அதுபோன்றே, தனியானதோர் வாழ்க்கை முறை.

இது, இன்று விளக்கமாக்கப்படுவதுபோல, பாரதியாரின் நாட்களில் கிடையாது.

பல ஜாதி – பல தெய்வ வணக்கம் – பற்பல விதமான மூட நம்பிக்கைகள் தெய்வத்தின் பெயர்கூறித் தேசத்தின் பொருளைப் பாழாக்கும் கேடு – இவைதாம் ஆரியம்!

‘ஒன்றேகுலம், ஒருவனே தேவன்’ இது திராவிடம்.

இரண்டிலே எது நல்லது? எந்தக் கலாச்சாரத்துக்கு நீர் ஆதரவு தருவீர்? என்று பாரதியாரைக் கேட்க, யாருக்கும் வாய்ப்பில்லை. கேட்டிருந்தால், நிச்சயமாக அவர் திராவிடக் கலாச்சாரத்தையே விரும்பியிருப்பார். அவருடைய பாடல்களில் பிற்காலப் பகுதிகளில் – இந்தச் சூழ்நிலை இருக்கக் காணலாம்.

பாரதியார் விஷயத்தில் பகுத்தறிவாளர்களுக்குள்ள மதிப்பு, முதலில், பரம்பரை வழக்கப்படி அவர் தேவியின் வரப்பிரசாதம் பெற்றதாலோ, முனிவர் அருளாலோ, பஞ்சாட்சர உபதேசப்பலனாலோ, பாட ஆரம்பித்தார் என்று அருட்கவியாக்காது விட்டார்களே, அதுதான்.

நாமகளைத் துதித்தார் – நாலைந்து ஆண்டு – பலன் இல்லை. பிறகோர் நாள், ‘அம்மே! இனி நான் உயிர் வாழேன்’ என்று கூறி, நாவை அறுத்துக்கொள்ளக் கிளம்பினார்; உடனே களுக்கென ஓர் சிரிப்பொலி கேட்டது; அம்மை பிரசன்னமாகி, ‘பாலகா! பாடு!’ என்றாள் உடனே அவர் பாடலானார் – பாடினார், பாடினார், பார் முழுதும் பாடல் பரவும் வரை பாடினார் என்று, பாரதியார் புராணம் கட்டாதவரையில், நமக்கெல்லாம் மிகக்களிப்பு! நமக்குக் களிப்பு என்பது மட்டுமல்ல, பாரதியாருக்கே உண்மையில் பெருமை. அவர் நாமகள் பூமகள் அல்லது வேறோர் தேவனின் அருள் பெற்றவரல்லர்; அவர் ஓர் கவி, சிந்தனையில் பட்டதைச் செந்தமிழில் கவிதையாக்கினவர் என்பதனால்தான்.

கூடுமானவரையில், பாரதி விழாச் சொற்பொழிவாளர்கள், அவருடைய அருமை பெருமைகளை எடுத்துரைக்கையில், ‘புராணம்‘ பேசாதிருந்ததுபற்றி நாம் மகிழ்கிறோம். அன்பர் ஆச்சாரியார் மட்டும், பாரதியாரை, ஓர் ‘முனிவர்’ என்று கூறினார். ஆனால் அதற்கும், அவர் வழக்கமான பொருள் கூறத் துணியார். பாரதியாருக்குள்ள பெருமை, முதலில் இது.

மற்றோர் பெருமை, அவர், தம்முடைய நாட்களிலே, மற்றவர்களை விட வேகமாக முன்னேற்றக் கருத்துகளைப் பாடி, அதன் பயனாக அவருடைய சமூகத்தாராலேயே அலட்சியப்படுத்தப்பட்டு, வறுமையில் வாடி, அன்னிய ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி, அல்லலை அனுபவித்து, அந்த அல்லலால் மனம் உடையாமல், நோக்கம் மாறாமல் அரைக்க அரைக்க மணக்கும் சந்தனமானாரே, அந்தப் பண்பு.

அவருடைய பண்பு, ஜாதிக்கட்டுக்களை உடைத்தெறியக் கூடியதாக இருந்தது என்பது, அவருடைய கவிதைகளிலே, பல ரசமான இடங்களில் தெரிகிறது.

அவருடைய நாட்டுப்பற்றும், மொழிப் பற்றும் அந்த நாட்களில் நையாண்டி செய்யப்பட்டது! இன்று, அவருக்கு மகாகவி என்ற பட்டம் தரவும், பளிங்கு மண்டபம் கட்டவும் தமிழகம் முன்வந்தது! கவிஞரைப் போற்றும் மாண்புக்கும், அதைக் கவர்ச்சிகரமான முறையிலே நடத்திக்காட்டிய கல்கியின் திறமைக்கும், நமது பாராட்டுதல்.

“பாரதி மண்டபத்தை, விழாவுக்காகப் போடப்பட்ட பந்தல் மறைத்துக் கொண்டிருக்கிறது” என்று, அன்று ஆச்சாரியார் பேசினார்.

மண்டபத்தைப், பந்தல் மறைக்கிறது! மண்டபத்தை மட்டுமல்ல! தேசியக் கவிதைகள் என்ற ஒரு பகுதியை மட்டுமே பெரிதாக்கி நாட்டிலே பரப்பிக் காட்டுவதால் பாரதியாரின் முழு உருவம், மக்களின் கண்களுக்குத் தெரியவொட்டாதபடி மறைக்கப்படுகிறது!

பாரதியார், தோத்திரப் பாடல்கள் பல பாடினார். ஆனால், தேவார திருவாசகமும், திருவாய் மொழியும் பாடியான பிறகு பாடினார். எனவே, அவருடைய கவிதைகளிலே, தோத்திரப்பகுதி முக்கியமோ, அவருடைய பெருமைக்குச் சான்றோ ஆகாது, வைதீகர்களின் நோக்கத்தின்படியேகூட,

பாரதியார், வேதாந்தப் பாடல்கள் பல பாடியுள்ளார். ஆனால், அவருக்கு முன்னர்த் தாயுமானாரும் வள்ளலாரும் பாடிவிட்டனர். எனவே, அந்தப் பகுதியும் பழம் பதிப்புப் போன்றதுதான்.

அவருடைய நாட்டுப்பற்றுப் பாடலே, அவருடைய கவிதைகளில் மிக முக்கியமான மற்றக் கவிகள் பாடாத காலத்திற்கேற்ற பலன் அளித்த பகுதி.

விடுதலைப்போர் புரிய அவருடைய கவிதைகள் தக்க கருவியாயின. எனவேதான், வெள்ளையன் வெளியேறிய விழாவுக்கு அடுத்ததாக, பாரதி மண்டபத் திறப்புவிழா நடைபெற்றது.

ஆச்சாரியார் சொன்னார், “அன்னிய ஆட்சியை எதிர்த்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், பல கவிகள் பாடல்கள் இயற்றினர். தமிழர்களுக்கு தமிழ்க் கவிதானே பயன்பட முடியும்? பாரதியார், அந்த வகையிலே தமிழருக்குப் பயன்பட்டார்” என்று.

ஆகவே, பாரதியாரின் பக்திப்பாடல் வேதாந்தப் பாடல் இவைகளைவிட, நாட்டுப்பற்றுப் பாடலே மகத்தான பலன் தந்தது! விழாக் கொண்டாடின அன்பர்கள் இந்தப் பகுதியைத்தான் விளக்கினார்கள் விஸ்தாரமாக. மதுரை முஸ்லீம் தோழர் ஒருவர், “பாரதியாரின் பாடல் ஆங்கிலேயரை ஓட்டிய அணுகுண்டு” என்று கூறினார். பாரதியார் பாடல்களைப் பயன்படுத்திக்கொண்டு பாராளும் அளவு உயர்ந்த பலர், பாரதியாரை ஏதோ ஓர் சமயத்திலே மட்டும் எண்ணுவதுடன் இருந்தனர். இக்குறையைப் போக்கி கவிஞரின் நினைவுக்குறியாக ஓர் அழகிய மண்டபத்தை அமைத்தார் கல்கி.

ஆச்சாரியார் சொன்னாரே பந்தல் மண்டபத்தை மறைக்கிறது என்று. அதுபோல, பாரதியாரின் தேசியப் பாடல்களை மட்டுமே பரப்பிய காரணத்தால், நாட்டவருக்குப் பாரதியாரின் முழு உருவமும் தெரியவில்லை! இனியாவது தெரியுமா என்றால், தெரியச் செய்தாலொழியத் தெரிவதற்கில்லை என்றே கூறலாம்.

“ஆடுவோமே பள்ளு பாடுவோமே!”

“வந்தே மாதரம் என்போம்”

“செந்தமிழ் நாடென்னும் போதினிலே”

“தாயின் மணிக்கொடி பாரீர்”

“ஜெய ஜெய பாரத”

இப்படிப்பட்ட பல தேசியப் பாடல்களை, நாட்டு மக்களின் செவிக்கும் சிந்தனைக்கும் கொண்டுவந்துள்ளனர். பாரதியார் அவ்வளவுதானா? அல்ல! பாரதியாரின் முழு உருவம், அதுவல்ல! அடிமை நிலை போகவேண்டும் என்ற கோபநிலையில் உள்ள பாரதி அது. ஆனால், அதைத் தாண்டி, நாட்டு உள்நிலை, மக்கள் மனநிலை இவைகளைக் கண்டு மனம் நொந்து வேதனைப்படும் பாரதி இருக்கிறார்! மக்களின் மந்த மதியினைக் கண்டு, அவர்களைத் திருத்தவேண்டும் என்ற ஆவல் கொண்டு, துடிக்கும் பாரதி இருக்கிறார்! நாடு எப்படி எப்படி இருக்கவேண்டும்? சமூகம் எவ்வண்ணம் அமைய வேண்டும்? என்ற இலட்சியம் கூறும் பாரதி இருக்கிறார்!

தேசீயப் பாரதியின் உருவம் இத்தனை பாரதிகளை மறைக்கிறது, ஆச்சாரியார், பந்தல் மண்டபத்தை மறைக்கிறது என்று கூறினாரே அதுபோல!

பெரிய பந்தல், விழாவுக்காக. மண்டபமோ கவியின் பெருமைக்குரிய சின்னம். விழா முடிந்ததும் பந்தலைப் பிரித்து விடுவார்கள் – மண்டபம் நின்று அழகளிக்கும். அதுபோல், பாரதியாரின், 'தேசீயக்கவிதை, அன்னியரை ஓட்டும் அரும்பணிக்காக மட்டுமே அமைவது. அந்தக் காரியம் முடிந்ததால், இனி அந்தப் பந்தலுக்கு அவசியமில்லை. அவசியமில்லாததால் அது எடுபடும். அது எடுபட்ட பிறகுதான், பாரதியாரின் மனம் தெரியும். பாரதியாரின் முழு உருவமும் தெரிய, அவருடைய கவிதா சக்தியின் முழுப்பயனையும் பெற, அப்போதுதான் முடியும்.

இனியும் மேடைகளிலே ஏறி, 'தாயின் மணிக்கொடி பாரீர்' போன்ற தேசபக்திப் பாடல்களை மட்டுமே பாடிப் பயனில்லை.

தாயின் மணிக்கொடி பார்க்கிறோம்; இங்கே காயும் வயிற்றையும் காண்பீர் என்று, மக்கள் முழக்கமிடுவர்! எனவே, எந்தப் பகுதியை மட்டும் அதிகமாகப் போற்றி நாட்டுக்கு எடுத்துரைத்து வந்தார்களோ, அந்தத் தேசீயப் பாடல் பகுதிக்குள்ள பயனும் ஜொலிப்பும், இனி இராது! ஆகவே, பாரதி பயன் இல்லையா? அல்ல, அல்ல! பயனுள்ள பகுதி, பலரறியாப் பாரதி! மறைக்கப்பட்ட பாரதி, இனித்தான் மக்களுக்குத் தெரியவேண்டும்.

தேசீயக் கவிக்கு அப்பால் நிற்கிறார், அந்தப் பாரதி! அந்தப் பாரதி, ஆங்கிலேயனை ஆரிய பூமியிலிருந்து விரட்டும் பாரதி மட்டுமல்ல; நாட்டை விட்டுக் கேட்டினை எல்லாம் ஒட்டவேண்டுமென்று கூறும் பாரதி! மேடைகளிலே, இதுவரை நிறுத்தப்படாத பாரதி! தேசபக்தர்களின் நாவிலே நின்று, இதுவரை நர்த்தனமாடாத பாரதி! மறைந்திருக்கிறார், பொன்னாலான பெட்டிக்குள் முத்துமாலை இருப்பதுபோல! அந்தப் பாரதியை நாம் அறிமுகப்படுத்தினால், விழாக் கொண்டாடியவர்களிலேயே பலருக்கு, முகமும் அகமும் சுருங்கக்கூடும்! ஆனால், அந்தப் பாரதி, நெடுநாட்களுக்கு மறைந்திருக்க முடியாது. வெளிவந்தாலோ, இன்று அவரை வந்திருக்கும் பலரே, நிந்திக்கவும் கூடும்! இதோ அந்தப் பாரதி – பந்தலால் மறைக்கப்பட்டுள்ள மண்டபம்!

பண்டைப் பெருமை – பழங்கால மகிமை அந்த நாள் சிறப்பு – என்றெல்லாம் பேசுகிறார்களே, அவர்களை நாம் எவ்வளவோ கௌரவமாகத்தானே கேட்கிறோம், "ஐயோ! பழைய காலத்தைக் கட்டிப் பிடித்தழுகிறீரே, இது சரியா?" என்று.

பலருக்குத் தெரியாத முழுப் பாரதி, அவர்களை இலேசில் விடவில்லை! 'மூடரே!' என்று அவர்களை விளிக்கிறார், கேட்கிறார் அவர்களை.

"முன்பிறந்ததோர் காரணத்தாலே மூடரே,
பொய்யை மெய்யெனலாமோ?
முன்பெனச் சொல்லும் கால மதற்கு
மூடரே, ஓர்வரை துறை யுண்டோ?
முன்பெனச் சொல்லின், நேற்று முன்பேயாம்
மூன்றுகோடி வருடமு முன்பே!
முன் பிறந்த தெண்ணிலாது
புவிமேல் மொத்த மக்களெலா முனிவோரோ?
நீர் பிறக்கு முன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை என நினைத்தீரோ?
பார் பிறந்ததுதொட் டின்றுமட்டும்

பலபலப்பல பற்பல கோடி
கார்பிறக்கு மழைத்துளி போலே
கண்ட மக்க ளனைவருள்ளேயும்,
நீர் பிறப்பதன் முன்பு மடமை
நீசத்தன்மை இருந்தன வன்றோ?''

பழமை விரும்பி, என்ன எண்ணுவான் பாரதி யாரைப்பற்றி?

"சென்றதினி மீளாது மூடரே நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா,
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்றுவிளை யாடி இன்புற் றிருந்து வாழ்வீர்
தீமையெலாம் அகன்றுபோம் திரும்பி வாரா."

மற்றுமோர் சாட்டை, வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசுபவர்களுக்கு வகையாகத் தருகிறார் பாரதி! "சென்றது இனி மீளாது", மூடரே! மனுதர்மம் இருந்ததே! அரசுகளிலே ஆதிக்கம் இருந்ததே! நமது வலக்கரத்திலே அக்னி இருந்ததே! நம்மைக் கண்டதும், மற்றவர்களுக்கெல்லாம் பயபக்தி இருந்ததே! இவை எல்லாம் இன்று இல்லையே! மீண்டும் கிடைக்கப் பெறுவோமா என்றெல்லாம், எண்ணி எண்ணி ஏங்காதீர்! "சென்றது இனி மீளாது!" என்று திட்டமாகக் கூறுகிறார். 'கூறுகிறேன் கேளுங்கள் மூடர்களே!' என்று, இடித்துரைத்துப் பேசுகிறார். இந்தப் பாரதி, மேடையிலே தோன்றாத பாரதி!

"செத்தபிறகு சிவலோகம் வைகுண்டம்
சேர்ந்திடலாமென்றே எண்ணி யிருப்பர் பித்தமனிதர்"

...

"சாதிக் கொடுமைகள் வேண்டாம்–அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்"

...

"அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடு வீரே!
பெரும்புகழ் உமக்கே இசைக்கின்றேன் நான்
பிரமதேவன் கலையிங்கு நீரே"

...

"பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லை யென்றால்,
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை!"

தேசியக் கவிஞரால் மறைக்கப்பட்டுள்ள புரட்சிக் கவிஞர் தெரிகிறார், இன்னும் தெளிவாக!

"நெஞ்சு பொறுக்கு தில்லையே – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்"

என்று சோகிக்கிறார் பாரதி! ஏன் நிலைகெட்டுவிட்டது? தேசியக் கவியாக மட்டும்

இருப்பின், பரங்கி பிடித்தாட்டப் பாரதநாடு பரிதவித்தது என்று மட்டுமே கூறுவார். ஆனால், பலருக்குத் தெரியவிடாதபடி மறைக்கப்பட்டிருக்கும் முழுப் பாரதி, பேசுவதைக் கேளுங்கள்.

“அஞ்சி அஞ்சி சாவார் – இவர்
அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே!
வஞ்சனை பேய்களென்பார் இந்த
மரத்திலென்பார் அந்தக் குளத்திலென்பார்!
துஞ்சுது முகட்டிலென்பார்! – மிகத்
துயர்ப்படுவார், எண்ணிப் பயப்படுவார்!
மந்திரவாதி யென்பார் – சொன்ன
மாத்திரத்திலே மனக் கிலி பிடிப்பார்!
யந்திர சூன்யங்கள் – இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள்!’’

சாடுகிறார், சாடுகிறார், மூட நம்பிக்கைகளை!

“கொஞ்சமோ பிரிவினைகள்? ஒரு
கோடி யென்றால் அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான் – அப்பன்;
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார் – பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்!”

இங்ஙனம், சமுதாயத்திலே உள்ள கேடுகளை – மனதிலேயுள்ள தளைகளை – மூடக்கொள்கைகளைத் தாக்குகிறார், தமது கவிதா சக்தியைக்கொண்டு!

'பாரதியாரா?' என்று ஆச்சரியத்துடன் நாடு கேட்கும், அவர் சொன்னதத்தனையும் சொல்லப்போனால்! ஆனால், அந்தப் பாரதியாரை, அரும்பாடுபட்டு மறைத்திருக்கிறார்கள்!

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!" என்ற ஒரு வரியைக்கூட, அவர் சொன்னதாகச் சொல்ல அஞ்சி மறைத்தனர், அருந்தமிழ் நாட்டவர்தான்! பாரதியார், அந்தச் சமுதாயத்தை மேலும் என்னென்ன கூறினார் என்று தெரிந்தால்தானே, பாரதியாரின் முழு உருவம் தெரியும்?

"இந்நாளிலே பொய்ம்மைப் பார்ப்பார் – அவர்
ஏது செய்தும் காசு பெறப்பார்ப்பார்!
பிள்ளைக்குப் பூணூலா மென்பான் – நம்மைப்
பிச்சுப் பணம் கொடெனத் தின்பான்!
பேராசைக்காரனடா பார்ப்பான்! – ஆனால்
பெரியதுரை என்னில் உடல் வேர்ப்பான்!
யாரானாலும் கொடுமை செய்வான்! – பணம்
அள்ளி இடவில்லை யெனில் வைவான்!"

பாரதி சிறப்புவிழாக் கூட்டங்களிலே, இந்தப் பாரதி தெரிந்தாரா? இல்லை! அவர் மறைந்திருக்கிறார், மண்டபம் பந்தலால் மறைக்கப்பட்டிருப்பதுபோல! விழா முடிந்தது; பந்தலும் பிரிக்கப்பட்டது; மண்டபம் தெரிகிறது என்பதுபோல, வெள்ளையர் வெளியேறும் விழா முடிந்தது! இனித், தேசியக் கவிதை அலங்காரத்தைக் கடந்து நிற்கும், பாரதி காணவிரும்பிய புது சமுதாயம்!

"ஏழை என்றும் அடிமை என்றும்
எவனுமில்லை, ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்போர்
இந்தியாவில் இல்லையே!"

என்ற இலட்சியம் ஈடேறிய நிலைபெற்ற சமுதாயம், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமில்லாத சமுதாயம், பழமை மோகத்தில் படியாத சமுதாயம், காசியில் பேசுவதைக் காஞ்சியிலுள்ளோர் கேட்பதற்கான கருவி செய்யும் சமுதாயம், அத்தகைய புதிய சமுதாயத்தைக் காண விரும்பிய பாரதி நிற்கிறார். ஆனால் அவரைப் பந்தல் மறைத்துக் கொண்டிருக்கிறது! அவரை, நாட்டுக்குத் தெரியவிடாதபடி செய்வதில், பலருக்கு இலாபம் இருக்கிறது! எனவே, தேசியக்கவி மட்டுமே தெரியவேண்டும் என்று எண்ணி ஏற்பாடுகள் செய்வார்! ஆனால், அந்த எண்ணமும் ஈடேறுவதற்கில்லை. மக்களுக்குத் தெரிய ஒட்டாது அவர்கள் மறைத்து வைத்துள்ள பாரதியார், உண்மையில் மறைந்துவிடவில்லை. அதோ பாடுகிறார், கேளுங்கள்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம் ஜாதி
இருக்கின்ற தென்பானும்......"

இது பாரதிதாசன் குரல் அல்லவா? என்பீர்கள். ஆம்! பாரதிதாசன்தான்! அவர்தாம், மணிமண்டபத்தைவிட விளக்கமாக, முழுப் பாரதியைத் தமிழகத்துக்குத் தரும் அரும்பணியாற்றுகிறார், அவரிடம் நாங்கள், முழுப் பாரதியாரைக் காண்கிறோம். களிக்கிறோம், வாழ்த்துகிறோம்.

"அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
உடலினை உறுதி செய்

எண்ணுவ துயர்வு
ஏறுபோல் நட
ஒற்றுமை வலிமையாம்
ஔடதங் குறை
கற்ற தொழுகு
கால மழியேல்
குன்றென நிமிர்ந்து நில்
கூடித்தொழில் செய்
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்
சரித்திரத் தேர்ச்சிகொள்
சாவதற் கஞ்சேல்
சிதையா நெஞ்சுகொள்
சூரரைப் போற்று
சோதிடந் தனையிகழ்
தெய்வம்நீ என் றுணர்
தையலை உயர்வு செய்
தொன்மைக் கஞ்சேல்
நினைப்பது முடியும்
நூலினைப் பகுத்துணர்
நெற்றி சுருக்கிடேல்
பிணத்தினைப் போற்றேல்
புதியன விரும்பு
பேய்களுக் கஞ்சேல்
போர்த்தொழில் பழகு
முனையிலே முகத்துநில்
மேழி போற்று
யாரையும் மதித்துவாழ்”

இவை, பாரதியாரின் புதிய ஆத்திசூடி! புதிய பாதை! பாரதி பாதை!

தேசீய மணிமண்டபத்தோடு முடிந்துவிடுவதல்ல, அதற்கும் அப்பாலுள்ள சமதர்மபுரிக்குப் போவதற்கு அமைந்த பாதை!

அந்தப் பாரதி பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் – அரும்பணியாற்றும் நாம், பாரதியார் பெற்ற சிறப்புக்கண்டு பெருமையடைவதுடன், பாரதியாரின் முழு உருவமும் மக்களுக்குத் தெரியச்செய்யும் காரியத்தையும் மேற்கொண்டுள்ளோம். பாரதி காட்டிய பாதையை, நாடு நன்கு அறியவேண்டும்!

பரங்கியை ஓட்டிவிடுவது மட்டுமல்ல அது. நாட்டின் கேட்டுக்குக் காரணமாக உள்ளதனைத்தையும் ஓட்டிப், புதிய சமூக அமைப்பாக்கும் பாதை! அந்தப் பாரதி பாதையை நாம் போற்றுகிறோம்!

(திராவிட நாடு – இதழ்: 19.10.1947)

தமிழ் தேசிய கவி

காலஞ்சென்ற தமிழ் தேசிய கவி சி.சுப்பிரமணிய பாரதி அவர்களின் தேசிய நூல்களின் முதலிரண்டு பாகங்களை சென்னை அரசாங்கத்தால் அராஜக நூல்களென்று பறிமுதல் செய்திருப்பதாகத் தெரிகிறது.

அந்நூல்கள் பறிமுதல் செய்யப்படுவதற்கு காரணம் ஜஸ்டிஸ் கட்சியார்தான் என்று “தமிழ்நாடு” பத்திரிகை ஜஸ்டிஸ் கட்சியார் மீது வீண் பழி சுமத்துகிறது.

சென்னை அரசாங்கத்தார் மேற்படி நூல்களைப் பறிமுதல் செய்வதற்கு முன்னரே பர்மா அரசாங்கத்தார் பறிமுதல் செய்தனரே அதற்கு யார் காரணம் என்று “தமிழ்நாடு” கூறுமா?

பர்மா அரசாங்கம் பறிமுதல் செய்த புத்தகத்தை சென்னை கவர்மெண்டாரும் பறிமுதல் செய்ய வேண்டும் என்ற ஒரு அரசாங்க முறை

39

பழியோரிடம்
பாவமோரிடம்

குடிஅரசு – கட்டுரை – 30.09.1928

இருந்து வருவதால் மேற்படி நூல்களை சென்னையில் பறிமுதல் செய்வதற்கு பர்மா கவர்மெண்டார் தான் காரணம் என்று சுதேசமித்திரன் பத்திரிகையும்கூட சொல்லியிருக்கிறது. ஆகவே, இந்த பறிமுதலுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் எந்த விதத்திலும் காரணமாயிருக்கவில்லை.

பறிமுதல் செய்யப்பட்ட மேற்படி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் நூல்களில் ராஜீயத்தைவிட பார்ப்பனீயமே மிகக் கடுமையாகக் கண்டிக்கப்பட்டிருப்பதால் அவை பறிமுதல் செய்யப்பட்டதற்கு யார் காரணமா யிருந்திருக்கலாம் என்பதை அறிந்தும் அறியாததுபோல் ஜஸ்டிஸ் கட்சியாரை ‘தமிழ்நாடு’ தாக்குவதைப் பார்த்தால் அதைக் ‘கோடாரிக்காம்பு’ என்று சொல்லுவதா அல்லது பழியோரிடம் இருக்க பாவத்தையோரிடம் சுமத்துகிற தென்பதா?

பெருங்கவிஞர் பாரதி

‘நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா காடு கமழ வந்த கற்பூரச் சொற்கோ’

முத்தமிழறிஞர் கலைஞர்

ஒவ்வோர் ஆண்டும் பாரதி விழாவை முன்னின்று நடத்துவதில் பெரும் ஆர்வம் காட்டிய கலைஞர் அவ்வை டி.கே.சண்முகம் இந்த ஆண்டு படமாக மாறிவிட்டார்.

ஆனால், மறைந்தவர்களுக்குப் பெருமை செலுத்துவது என்பது அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவதில்தான் அமைந்திருக்கிறது என்பதற்கேற்ப, பாரதியார் சங்கத்தினர் இந்தப் பணியை இந்த ஆண்டு நிறைவேற்றியதோடு, வருகிற ஆண்டுகளிலும் இப்பணி சிறப்புற நடைபெறும் என்பதற்கான உரைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

இந்த விழா, பாரதியாரைப் போற்றுவது, புகழ்வது என்ற அளவோடு அமையாமல், பாரதியின் எழுச்சிக் கவிதைகளை மேலும் பரப்புகிற அளவுக்கு ஊக்கமும், உற்சகமும் வழங்குகிற வகையில் அமைகிறது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

வரவேற்றுப் பேசிய மகாலிங்கம் அவர்கள் பாரதியின் நூறாம் ஆண்டுவிழா 1982ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிறது என்றும், அந்த விழாவிற்கும் நான் வந்து சிறப்பிக்க வேண்டுமென்றும் அவர் விருப்பத்தை வெளியிட்டார். இதே நிலையில் வந்து சிறப்பிப்பதா? அல்லது வேறு நிலையில் வந்து சிறப்பிப்பதா என்கிற கேள்விக்கு நான் இப்போது பதில் சொல்லாவிட்டாலும் – நிச்சயமாக எந்நிலையில் இருந்தாலும், வருகிற நிலையை மறக்க மாட்டேன் என்பது உறுதியாகும்.

“நீ மாத்திரம் வந்து கலந்துகொள்வாயா? என் சங்கதி என்ன?” என்று சிலம்புச் செல்வர் கேட்கமாட்டார் என்று நம்புகிறேன்.

கடந்த ஒரு வார காலமாக நானும் சிலம்புச் செல்வரும் கலந்துகொள்கிற பல நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் நடைபெற்று வருகின்றன.

நேற்றைய தினம்கூடக் கலைவாணருடைய விழா இராஜாஜி மண்டபத்தில் நடந்து முடிந்ததும், சிலம்புச் செல்வர், “எப்போது மறுபடியும் சந்திக்கலாம்” என்று கேட்டுப் பிறகு அவரே நினைவுபடுத்திக்கொண்டு “நாளைக்குத்தான் சந்திக்கப் போகிறோமே” என்றார்.

நான், “இதே பக்கவாத்தியங்களுடன் இங்கேயும் கச்சேரி வைத்திருக்கிறோம்” என்று நகைச்சுவைக்காகச் சொன்னேன்.

கச்சேரி பழக்கப்பட்டதென்றாலும் பாகவதரும் பக்கவாத்தியங்களும் ஒன்றாக இருந்தாலும்கூட மக்கள் தொடர்ந்து ரசித்துக்கொண்டிருக்கிறார்களே – அதற்கு என்ன காரணம் என்றால் – அது வித்வான்களுடைய திறமையைப் பொறுத்து அல்ல. மக்களுக்கும் கச்சேரி நடத்துகிறவர்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற உள் உணர்வுதான் – உண்மை உணர்வுதான்! கச்சேரி தொடர்ந்து நடைபெற்றாலும், அலுப்பு சலிப்பு இல்லாமல், சென்னை மாநகர மக்கள் மாத்திரமல்ல; தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இன்றைக்கு இந்தக் கருத்துக்களை ஆயிரம் தடவை சொன்னாலும், அதை அகமகிழக் கேட்கிற ஆர்வத்தைப் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

பாரதியாருடைய பாடல்களை இசையோடு பாடுவதில் மறைந்த கலைஞர் டி.கே.சண்முகம் எவ்வளவு திறமை வாய்ந்தவரோ அதைப் போலவே, அப்பாடல்களை அவர் எழுதிய உணர்வோடு எடுத்துச் சொல்வதில் தலைசிறந்து விளங்குபவர் நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் ஆவார்கள்.

நான் அண்மையில், எட்டயபுரத்தில் பாரதி பிறந்த இல்லத்தைத் தமிழக அரசு சார்பில் விலைகொடுத்து வாங்கி, அதை வரலாற்றுச் சின்னமாக்கும் விழாவிற்குச் சென்றிருந்தேன். அக்ரகாரத்திற்கு நடுவில், ஆலயத்தின் ஓரத்தில் அமைந்திருந்த அந்த வீட்டிற்குள் பாரதியின் இலக்கியங்கள், அவர் கைப்பட எழுதியவை ஆகியன அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருந்த காட்சியை நான் கண்டேன். அழகாக, பொடிப்பொடியாக அச்சுக் கோர்த்ததுபோல், அவர் எழுதிய அந்த எழுத்துக்கள் பாதுகாக்கப்பட்டு, அப்படியே வைக்கப்பட்டுள்ளன.

பாரதியார் பயன்படுத்திய கருவிகள், இரவு நேரத்தில் உலவப்போனால் கையில் எடுத்துச் செல்கின்ற ஈட்டி போன்ற மிக நீளமான வேல்கம்பு ஆகிய இவைகள் எல்லாம் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

புரட்சியைப் பற்றிப் பாடுகிறவர்கள், பேசுகிறவர்கள் எல்லாம் புரட்சிக்காரர்களாக இருந்துவிட முடியாது. ஆனால், பாரதியார் பாடினார் – பேசினார் – உண்மையிலேயே புரட்சிக்காரராகவும் இருந்தார்.

வீரர்களுக்குக் களத்திற்குத் தேவையான போர்ப் பரணிகளை எழுதித் தருகின்ற ஆற்றல் புலவர்களுக்கு இருக்கலாம்.

கருணாகரத் தொண்டைமானின் ஆற்றலைப் பற்றி, குலோத்துங்கனின் போர்முறையைப் பற்றி, ஜெயங்கொண்டான் எழுதிய கலிங்கத்துப் பரணியைப் படிக்கிற நேரத்தில் ஒரு புதிய ஆவேசம் நமக்கு ஏற்படுகிற அளவுக்கு அவர் யாத்துத் தந்திருக்கிறார். என்றாலும் அவர் போர்க்களம் சென்ற புலவர் அல்லர்.

ஆனால், பாரதியார் ஆவேசமான கருத்துக்களை எழுத்தாக்கி, கவிதை முத்தாரமாக ஆக்கி, நமக்குத் தந்தார் என்பது மாத்திரமல்ல; அவரே களத்திலே நின்றார் என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

பாரதியார் பாட்டு எழுதிக் கொடுத்து, “இவைகளைப் பாடிக்கொண்டு போர்க்களத்திற்கு நீங்கள் செல்லுங்கள்!” என்று மற்றவர்களை விட்டு ஆழம் பார்த்துத் தான் மட்டும் ஒதுங்கிவிட்டவரல்லர்.

தானும் போர்க்களத்திற்குச் செல்கிற மனத்தெளிவைப் பெற்றவர் பாரதியார்.

அவருடைய பாடல்களை ஆரம்பத்திலே மதிக்க மறுத்தவர்களும் உண்டு. அவர்களே பிறகு மதித்துப் பாராட்டிய செய்தியும் தமிழகத்தில் உண்டு. நான் அதைப் பற்றி விரிவாக

இந்த நேரத்தில் கூறுவதால், மறைந்தவர்களுக்கு இழுக்குக் கற்பித்த குற்றத்திற்கு ஆளாவேன் என்பதால் அதை நான் விட்டுவிடுகிறேன்.

அப்படி மதிக்க மறுத்தவர்களும் – பிறகு அவரை மதித்தார்கள் என்பது பாரதியாருடைய ஆற்றலைக் காட்டுகிறதேயல்லாமல் – விமர்சித்தவர்களுடைய ஆற்றலைக் காட்டவில்லை.

பாரதியார் அவருக்குப் பிறகு எந்த வாரிசும் இல்லையென்று தன் வாழ்வை முடித்துக் கொண்டிருப்பாரேயானால் அவர் பெருங்கவிஞர் என்று போற்றப்பட்டிருக்க முடியாது. அவர் ஒரு பெருங்கவிஞர் என்ற போற்றப்படுவதற்குரிய சிறப்புகளில் ஒன்றாகத் திகழ்வதுதான், அவரது பாரம்பரியம் ஒன்று, இன்று தமிழ்நாட்டிலே திகழ்வதாகும்.

பாரதிதாசன், பாரதியாருடைய நேர்வாரிசாகக் கனகசுப்புரத்தினமாக இருந்து, பாரதிக்கே தாசன் என்று தன்னைத்தானே அழைத்துக்கொண்டு பாரதிதாசனாக மாறியவர் – பாரதியார் பற்றிப் பாரதிதாசன் பாடுகிற நேரத்தில் – "நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா, காடு கமழ வந்த கற்பூரச் சொற்கோ" – என்கிற இவ்வளவு அழகான தமிழ்ச் சொற்களால் பாரதியாரைப் பற்றி பாரதிதாசன் வர்ணிக்கிறார்: பாரதிக்கு இணை பாரதியேதான் என்று பாரதிதாசனே பலபடப் புகழ்ந்திருக்கிறார்.

பாரதிதாசனுக்குப் பிறகும் பல புலவர்கள் பாரதியாருடைய நடையைப் பேணி, அவருடைய பாணியைப் பின்பற்றிப் பாமரர்களுக்கும் விளங்குகின்ற அளவிற்குப் பாடல்களை எழுதிக் காட்டுகிற காரணத்தால்தான் பாரதியாருடைய சிறப்பு, மேலும் மேலும் வளர்ந்துகொண்டிருக்கிறது.

விழுதுகள் இல்லாவிட்டால் ஆலமரத்திற்குப் பெருமையில்லை. அதைப்போல, இப்படிப்பட்ட பாரதிக்கே பரம்பரை இல்லாமல் போயிருந்தால், பாரதிக்குப் பெருமையில்லாமல் போயிருக்கக்கூடும். ஆகவே, விழுதுகளால் ஆலமரம் பெருமையடைவது போல், பாரதியாருக்குப் பிறகு ஏற்பட்டுள்ள பாரதியார் பரம்பரையால் பாரதி பெரும் பெருமைபெற்று விளங்குகிறார். பாரதியின் வரலாற்றில், எனக்கு முன்னால் பேசியவர்கள் அவருடைய கவிதைச் சிறப்புக்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

பாஞ்சாலி சபதம் எழுதிய பாரதியார் அவர்கள் சொன்ன கருத்துக்கள் எனக்கு ஏற்புடையவைகளா இல்லையா என்பது வேறு. ஆனால், அவ்வளவு அழுத்தம்திருத்தமாக அந்தக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. பாரதம் எழுதியவருக்கேகூட தோன்றாத ஒன்றைப் பாஞ்சலியினுடைய நாவினில் நடமாட வைத்துப் பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் கூறுகிறார்.

சூதாட்டத்தில் தருமன் தம்பியரை எல்லாம் வைத்து சூதாடி தோற்றுத் தன்னையும் வைத்துச் சூதாடித் தோற்ற பிறகு, கடைசியாகப் பாஞ்சாலியையும் வைத்துச் சூதாடுகிறான்.

அதிலும் தோற்றவுடன் பாஞ்சாலி அழைக்கப்படுகிறாள் சபைக்கு! துச்சாதனன் கூறுகிறான்.

"உன் கணவன் உன்னை வைத்துத் தோற்றுவிட்டார். வா சபைக்கு!" என்று. அப்போதும் பாஞ்சாலி கேட்கிறாள். "தருமன் என் கணவன்தான்? சூதாட்டத்தில் தன்னையே தோற்றுவிட்ட பிறகு, என்னை வைத்துச் சூதாடுவதற்கு என்ன உரிமை பெற்றிருக்கிறார்?" என்று பாஞ்சாலி கேட்பதாக – அவள் கேட்டாளோ இல்லையோ – பாரதி கேட்கிறார்.

அவ்வளவு புரட்சிகரமான கருத்தைப் பாரதம் எழுதிய அந்தப் பாவாணரும் சிந்திக்காத கருத்தைப் பாரதியார் சிந்தித்தார். அவருடைய எழுத்திலே எழுச்சி வேகம், மிடுக்கு உணர்ச்சி எல்லாம் இருப்பதைப் போலவே அவருடைய வாழ்க்கையிலே பல இடங்களில் நகைச்சுவை துள்ளி விளையாடுவதைக் காணுகிறோம்.

ஒருமுறை புதுவை மாநகரத்தில் அவர் கதாகாலட்சேபம் கேட்டுக்கொண்டிருந்தாராம். கதாகாலட்சேபத்தில் பாடுகின்ற பண்டிதர்கள் “அரகர நமப் பார்வதி பதயே” என்று சொன்னால் இருக்கின்ற பக்தர்கள் எல்லாம் “அரகர மகாதேவ” என்று சொல்வது வழக்கம். வைணவ காலட்சேபத்தில் அந்தப் பாகவதர் ஒவ்வொரு முறையும் “கோபிகா காந்தஸ்மரணே” என்று சொல்வார். பக்தர்களெல்லாம் “கோவிந்தா கோவிந்தா” என்று சொல்வார்கள். பாரதி உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். ஒரு ஐந்து ஆறு முறை பாகவதர் சொல்ல, பக்தர்கள் “கோவிந்தா” என்று சொன்னார்களாம்.



பாரதி சுற்றுமுற்றும் பார்த்துப் பக்கத்திலிருந்த ஒருவரை அழைத்து, அவரது காதிலே ஏதோ சொல்லிவிட்டார். மறுபடியும் பாகவதர் "கோபிகா காந்தஸ்ரமணே" என்று சொன்னதும் பக்தர்கள் "கோவிந்தா கோவிந்தா" என்று சொன்னபோது – கூட்டத்தின் நடுவிலிருந்த ஒருவர் எழுந்து "இங்கேதான் இருக்கிறேன்! என்னையா கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டாராம். அவருடைய பெயர் கோவிந்தன். இது பாரதியார் செய்த குறும்புத்தனம். இப்படியும் அவருடைய வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் உண்டு.

ஆகவே, நகைச்சுவைக்கும் அதிபராக, நல்ல தமிழுக்கும் அதிபராக, வீராவேசத்திற்கும் அதிபராக, விடுதலை வேட்கைக்கும் அதிபராக விளங்கிய பாரதியார் இன்று இல்லை. இன்னும் ஒன்பதாண்டுக் காலத்தில் அவருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாட இருக்கிறோம்.

இந்த நேரத்தில் சிலம்புச் செல்வர் அவர்கள் ஒன்றை ஞாபகப்படுத்தினார்கள்.

பாரதியாரைப் போல தேச விடுதலைக்காக தியாகம் செய்தவர்கள் என்றென்றைக்கும் நமது நினைவில் வைத்துப்போற்றத்தக்கவர்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அவ்வை சண்முகம் அவர்கள் பெயரால் தெரு ஒன்றின் பெயர் அமைய வேண்டும் என்று சொன்னார்கள்.

நான் ஒருமுறை அண்ணா பாலத் திறப்பு விழாவில் சில பெயர்களைச் சொல்லிவிட்டேன். மாநகர ஆட்சி உரிமையிலே மாநில சுயாட்சி கேட்கின்ற முதலமைச்சர் இப்படித் தலையிடலாமா என்ற கேள்விக்கு ஆளானவன். ஆகவே, சிலம்புச் செல்வர் கூறிய கருத்தை மாநகராட்சி மன்றத்திற்கு நான் பரிந்துரையாக வைப்பேன் என்ற உறுதியை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வைக்கப்படும் என்று சொன்னால் அது உத்திரவிடுவதுபோல் ஆகிவிடும். ஆகவே பரிந்துரை செய்கிறேன். பரிந்துரை செய்தாலே அது நடைபெறும் என்கிற நம்பிக்கை இருக்கிற காரணத்தால் அது நிறைவேறும்.

வீரவாஞ்சிநாதனைப் பற்றி இங்கே சொன்னார்கள். எனக்கிருக்கும் சங்கடமெல்லாம் நான் சொல்கின்ற ஒன்றை அல்லது இந்த அரசு சொல்கிறது என்ற காரணத்தினாலேயே ஏற்புடையதாக இருந்தாலும், அதற்கு மறுப்புத் தரவேண்டும் என்கிற மனப்பான்மை இந்த நாட்டில் இருக்கிறது.

72ஆம் ஆண்டிலே டில்லிப் பேரரசுக்குத் தமிழக அரசின் சார்பிலே எழுதப்பட்ட கடிதத்தில் வாஞ்சிநாதன் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்று தானும் சுட்டுக்கொண்ட ரயில்வே நிலையத்தை மணியாச்சி என்று அழைப்பதற்குப் பதிலாக வீரவாஞ்சி ஜங்ஷன் என்று அழைக்க வேண்டும் என எழுதப்பட்டது. அதற்கு வந்த பதில்தான் இது வட்டார தேசபக்தி. ஆகவே, அதற்கு அந்தப் பெயர் வைப்பதற்கில்லை என்பதாகும்.

ஒரு விழாவில் சிலம்புச் செல்வரும், செங்கல்வராயனும் இருந்த நேரத்தில் நான் இதை வெளியிட்டேன்.

இப்படிக் கடிதம் வந்தது தவறு. உடனடியாக வீரவாஞ்சி ஜங்ஷன் என்று பெயர் வைக்க வேண்டும் என்று தமிழகத்தில் இருக்கிற எல்லாக் கட்சிக்காரர்களும் ஆதரவு தெரிவித்திருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

ஆனால், இந்த அரசு சொன்னது என்ற ஒரே காரணத்திற்காக அதை எதிர்த்தவர்களும் பத்திரிகைகளில் எழுதியவர்களும் உண்டு.

மணியாச்சி என்று இருந்தால்தான் அது ஆஷ்துரையை வீரவாஞ்சி சுட்டுக்கொன்ற இடம் என்று ஞாபகம் வரும். வீரவாஞ்சி நகரம் என்று பெயர் வைத்துவிட்டால் ஞாபகம் போய்விடும் என்ற புதிய விளக்கங்களெல்லாம் தந்தவர்கள் உண்டு.

அவர்கள் எல்லாம் யார் என்றால், தமிழ்நாடு என்ற பெயரே இலக்கியத்தில் கிடையாது என்று ஒரு காலத்திலே வாதித்தார்கள். அவர்கள் இந்த அற்புதமான யோசனையை எனக்குச் சொன்னார்கள். இன்னும்சிலர் வேடிக்கையாக "உன் கையில் அதிகாரத்தை வைத்துக்கொண்டு மத்திய சர்க்காரைப் போய்க் கேட்கிறாயே! நீ மணியாச்சி என்ற ஊரின் பெயரை வீரவாஞ்சி நகரம் என்று மாற்றிவிடு. பிறகு தானே அவர்கள் இரயில்வே ஸ்டேஷனுக்குப் பெயர் வைத்துவிடுவார்கள்!" என்று கூறுகிறார்கள்.

மணியாச்சி என்ற ஊரின் பெயரைக்கூட மாற்றுகிற அதிகாரம் மாநில அரசுக்குக் கிடையாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஊரின் பெயரைக்கூட மாநில அரசு மாற்ற முடியாது. அதற்கான உத்திரவு மத்திய அரசிடம்தான் பெற வேண்டும். ஏனென்றால் அஞ்சலகம் போன்றவைகள் இருக்கின்றன. மணியாச்சியை வீரவாஞ்சி என்று நாமே வைத்துவிட்டால் பிறகு மணியாச்சிக்கு வரும் தபால்கள் எல்லாம் குப்புசாமி, தெற்குத் தெரு, வீரவாஞ்சி நகரம் என்று வந்தால், அது எங்கேயோ அலைந்து திரிந்து அனுப்பிய முகவரிக்கே திரும்பிப் போய்ச் சேரும்.

எனவே மாநில அரசு பெயர் மாற்றினால் பயனில்லை. புதிதாகத் தோன்றுகிற ஊர்களுக்கு வேண்டுமானால் மாநில அரசு பெயர் வைக்க இயலுமேத் தவிர, இருக்கிறவைகளின் பெயரை மாற்றுகிற அதிகாரம், உரிமைகூட மாநில அரசுக்கு இல்லை. அது மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. மாநில சுயாட்சிப் பிரச்சாரத்திற்குப் புதியதொரு கருவியை நான் இந்தச் செய்தியின் மூலமாகத் தருகிறேன்.

இப்படிப்பட்ட காரியங்கள் நிறைவேற்றுகிற நேரத்திலே அரசியல் கட்சிச் சார்பற்ற முறையிலே அனைவரும் ஒன்றுகூடிப் பணியாற்றிட வேண்டும். இதுபோன்ற நல்ல நோக்கங்களுக்கு ஆதரவு தரவேண்டும். இதைப் பாரதியாரின் விழாவில் நாம் ஒரு சூளுரையாக மேற்கொள்ள வேண்டும்.

(1973ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் நாள் பாரதியார் விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை)

பாரதி
இன்றும் தேவைப்படுகிறார்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

‘தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில், இலகு பாரதிப் புலவன் தோன்றினான்’ – என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எழுதினார். பல ஆயிரம் சிந்தனைகள் கொண்டவர் பாரதி அவர்கள்.

அந்தச் சிந்தனைகள் யாருக்கும் கட்டுப்படாத சிந்தனைகள், சுதந்திரச் சிந்தனைகள் ஆகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாலே அடக்க முடியாத சிந்தனைகள் கொண்டவராகப் பாரதி இருந்ததால்தான் இன்று நாம் அவரைப் போற்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

குடும்பமாக இருந்தாலும்
சாதியாக இருந்தாலும்
மதமாக இருந்தாலும்
அரசாக இருந்தாலும்

– எந்த அடக்குமுறையையும் கேள்வி கேட்டவர் பாரதியார் அவர்கள்.

கடந்த ஆகஸ்ட் 15ஆம் நாள் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடி ஏற்றி வைத்துவிட்டு முதலமைச்சர் என்ற முறையில் நான் உரையாற்றும் போது, மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டன, அவர் மறைந்த ஆண்டின் நூற்றாண்டு என்று இந்த ஆண்டைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

பாரதி மறைந்தாலும் அவரது கவிதை வரிகள் மறையாது. மக்கள் மனதில்

வாழ்ந்துகொண்டுதான் இருக்கும். பாரதியின் அச்சிட்ட புத்தகங்கள் மறைந்தாலும் மக்கள் மனதில் உள்ள பாரதியின் பாடல்களைக் கொண்டு அவற்றை மீண்டும் அச்சிடலாம். அத்தகைய வலிமை பாரதியின் படைப்புகளுக்கு உண்டு.

★ **அச்சம் தவிர்**

★ **உடலினை உறுதிசெய்**

★ **ஏறுபோல் நட**

★ **கொடுமையை எதிர்த்து நில்**

★ **சூரரைப் போற்று**

★ **சோதிடந்தனை இகழ்**

★ **தெய்வம் நீ என்று உணர்**

★ **பிணத்தினைப் போற்றேல்**

★ **புதியன விரும்பு**

★ **போர்த்தொழில் பழகு** – என்ற அவரது புதிய ஆத்திச்சூடி வரிகள் எல்லாம் எத்தனை நூற்றாண்டுகள் கழித்தும் எழுச்சியையும் உணர்ச்சியையும் ஏற்படுத்தக் கூடியவை. அதனால்தான் அவரை ‘மக்கள் கவிஞர்’ என்று 1947ஆம் ஆண்டே மகுடம் சூட்டி எழுதினார் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

“பாரதியின் பாதை – புதிய பாதை! சமதர்மப் புரிக்குப் போவதற்கு அமைத்தப் பாதை! பரங்கியரை ஓட்டி விடுவது மட்டுமல்ல நாட்டுக்கு கேடு தரும் அனைத்தையும் ஓட்டி புதிய சமூக அமைப்பாக்கும் பாதைதான் பாரதியினுடைய பாதையாகும். அந்தப் புதிய பாதையை நாம் போற்றுவோம்” என்று 1947ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள். அதையே வானொலியிலும் பேசினார்கள்.

அதனால்தான் கழக அரசு அமைந்தவுடன், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரானபோது எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி அதனை நினைவில்லம் ஆக்கிப் பெருமை சேர்த்தார் முதல்வர் கலைஞர் அவர்கள். அன்றைக்கு அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய சி.பா.ஆதித்தனார் அவர்கள் தலைமையில் 12.05.1973 அன்று நடந்த விழாவில் பாரதியார் இல்லத்தை வரலாற்றுச் சின்னமாக அறிவித்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

இதன் தொடர்ச்சியாகப் பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகளை நேற்றைக்கு முன்தினம் தமிழ்நாடு அரசு சார்பில் நான் அறிவித்திருக்கிறேன்.

★ மகாகவி பாரதியின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாளை அரசின் சார்பாக, மகாகவி நாளாக அறிவித்துள்ளோம்.

★ பாரதி பெயரால் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி பாரதி இளங்கவிஞர் விருது வழங்க இருக்கிறோம். மாணவர் ஒருவருக்கும் மாணவி ஒருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்பட இருக்கிறது.

★ பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளைத் தொகுத்து ‘மனதில் உறுதி வேண்டும்’ என்ற புத்தகமாக அரசு வெளியிட இருக்கிறது. 37 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியர்க்கு இந்தப் புத்தகம் வழங்கப்பட இருக்கிறது.

★ பாரதி ஆய்வாளர்களான பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோர் நினைவாக அவர்களது குடும்பத்தாருக்கு நிதி வழங்கப்பட இருக்கிறது.

★ பாரதி படைப்புகளை மீட்டெடுத்த பெரியவர் சீனி.விசுவநாதன், பேராசிரியர் ய.மணிகண்டன் ஆகியோருக்கும் நிதி வழங்கப்பட இருக்கிறது.

★ பாரதியின் உருவச் சிலைகள் பூம்புகார் கலைக்கூடத்தில் தயாரிக்கப்பட இருக்கின்றன.

★ 1973ஆம் ஆண்டு பாரதியாரின் இல்லத்தைத் திறந்துவைத்துப் பேசிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பாரதியினுடைய கையெழுத்தை வியந்து பாராட்டி இருக்கிறார். ‘அழகாகப் பொடிப்பொடியாக அச்சுக்கோர்த்ததுபோல பாரதியார் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்’ என்று சொன்னார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அந்தக் கையெழுத்துப் பிரதிகள் மொத்தமாகத் தொகுக்கப்பட்டு அவை அதன் வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடப்படும்.

★ புகழ்பெற்ற ஓவியங்களுடன் பாரதியின் கவிதைகள் சித்திரக்கதை நூலாகவும் வெளியிடப்படும்.

★ பாரதி குறித்த முக்கிய ஆய்வு நூல்கள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடப்படும்.

★ பாரதியின் நூல்கள் தொகுக்கப்பட்டு எட்டயபுரத்திலும் திருவல்லிக்கேணி இல்லத்திலும் வைக்கப்படும். சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரையில் அமைய உள்ள கலைஞர் நினைவு நூலகத்திலும் பாரதியியல் என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும்.

★ உலகத் தமிழ்ச் சங்கங்களை இணைத்து பாரெங்கும் பாரதி என்ற நிகழ்ச்சி நடத்தப்படும்.

★ “திரையில் பாரதி” என்ற பெயரில், திரைப்படங்களில் இடம்பெற்ற பாரதி பாடல்கள் கொண்ட இசை நிகழ்ச்சி விரைவில் நடத்தப்படும்.

★ சென்னை, பாரதி நினைவு இல்லத்தில் ஓராண்டுக்கு வாரந்தோறும் நிகழ்ச்சி நடத்தப்படும்.

★ திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதி பெயரில் ஆய்வு இருக்கை அமைக்கப்படும்.

★ காசியில் பாரதி வாழ்ந்த வீட்டைப் பராமரிக்க நிதி உதவி வழங்கப்படும்.

★ பாரதி படைப்புகளைக் குறும்படமாக எடுக்க நிதி உதவி வழங்கப்படும்.

★ பாரதியின் பாடல்கள் பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்களில் எழுதியும் வரைந்தும் வைக்கப்படும்.

★ மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வாழ்வாதாரப் பூங்காவுக்குப் பாரதியார் பெயர் சூட்டப்படும். – இப்படி ஏராளமான அறிவிப்புகளைத் தமிழ்நாடு அரசு செய்திருக்கிறது.

'இது எனது அரசல்ல, நமது அரசு' என்று நான் சொல்லி இருக்கிறேன். இந்த அரசு ஒரு கட்சியின் அரசாக இல்லாமல், ஒரு கொள்கையின் அரசாக, ஓர் இனத்தின் அரசாக இருக்கும் என்றும் சொல்லி இருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் தமிழ்நாட்டுக்காகவும் உணர்ச்சிமிகு கவிதைகளைத் தந்த மகாகவி பாரதியைத் தமிழ்நாடு போற்றுகிறது.

இந்திய சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட தியாகிகளைப் போற்றுவதற்கும் மொழிப்போராட்டத்துக்காகப் பாடுபட்ட தியாகிகளை மதிப்பதற்கும் எல்லைப் போராட்ட வீரர்களைப் போற்றுவதற்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் மறந்தது இல்லை. நான் அதை பட்டியலிட ஆரம்பித்தால் அது மிக நீளமாகப் போய்விடும்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் அறிவிப்புகளைக் கடந்த வாரத்தில் நான் செய்தேன். பாரதியின் நண்பர் பரலி சு.நெல்லையப்பருக்கு நிதி உதவி வழங்கிவந்த அரசுதான் தி.மு.க. அரசு. அந்த வரிசையில் தான் பாரதி நினைவு நூற்றாண்டு விழாவையும் தமிழ்நாடு அரசு முன்னெடுத்து நடத்தி வருகிறது. பாரதியைப் போற்றுவதற்குக் காரணம், அவரது சிந்தனைகள் காலங்களைக் கடந்தும் தேவைப்படுபவை என்பதால்தான்.

★ சாதி இரண்டொழிய வேறில்லை என்றே தமிழ்மகள்

பாரதி ஆய்வாளரான திரு. சீனி விசுவநாதன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'பாரதி நினைவு நூற்றாண்டு விருது' மற்றும் விருதுத் தொகைக்கான காசோலை வழங்குதல்.

பாரதி ஆய்வாளர்களான மறைந்த பெரியசாமித்தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவர்களது குடும்பத்தாருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'பாரதி நினைவு நூற்றாண்டு விருது' மற்றும் விருதுத் தொகைக்கான காசோலை வழங்குதல்.

பாரதி ஆய்வாளரான பேராசிரியர் முனைவர் ய.மணிகண்டன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'பாரதி நினைவு நூற்றாண்டு விருது' மற்றும் விருதுத் தொகைக்கான காசோலை வழங்குதல்.

சொல்லிய சொல் அமிழ்தம் என்போம் – என்று இன்றைக்குப் பாரதி அதற்காகத் தேவைப்படுகிறார்!

★ **சாதி நூறு சொல்லுவாய் போ போ போ** – என்று விரட்டிய பாரதி இன்றும் தேவைப்படுகிறார்!

★ **ஒன்று பட்டால் உண்டு வாழ்வே நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே** – என்று கண்டிக்கப் பாரதி இன்றும் தேவைப்படுகிறார்!

★ **சாதி, மதங்களைப் பாரோம்** – என்று கம்பீரமாக அறிவிக்கப் பாரதி இன்றும் தேவைப்படுகிறார்!

★ **முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடமை** – என்று பிரகடனம் செய்வதற்குப் பாரதி இன்றும் தேவைப்படுகிறார்!

★ **யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்** – என்று தமிழ் உணர்ச்சியோடு பாடக்கூடிய பாரதி இன்றும் தேவைப்படுகிறார்!

★ **இயேசு கிறிஸ்துவைப் புகழ்ந்து எழுதிவிட்டு ஓம் சக்தி** – என்று முடிக்கும் சகோதரத்துவப் பாரதி இன்றும் தேவைப்படுகிறார்!

★ **சங்கராபரணம் இராகத்தில் அல்லாவுக்கும் பாட்டு** எழுதிய பரந்த மனப்பான்மை பாரதி இன்றும் தேவைப்படுகிறார்!

★ **காக்கை குருவி எங்கள் சாதி நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்** – என்று சுற்றுச்சூழல் பேசிய பாரதி இன்றும் தேவைப்படுகிறார்! இத்தகைய பாரதிகள் இன்றும் தேவை!

அன்பு வேண்டும்
அறிவு வேண்டும்
கல்வி வேண்டும்
நீதி வேண்டும்

இந்த நான்கையும்தான் பாரதி விரும்பினார். அவரது எல்லாப் பாட்டுக்கும் அடிப்படை இதுதான். இந்த நான்கும் கொண்டவர்கள் மேலோர், மற்றவர்கள் கீழோர் என்பது பாரதியின் கருத்து. இத்தகைய மேலோரை உருவாக்க வானவில் பண்பாட்டு மையம் போன்ற அமைப்புகள் இன்னும் சிறப்பான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், நீங்கள் மேற்கொள்ளக்கூடிய அந்த முயற்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய அரசு என்றைக்கும் துணை நிற்கும், துணை நிற்கும் என்ற உறுதியைச் சொல்லி, வாழ்க பாரதி! பாரதி! என்று கூறி விடைபெறுகிறேன்.''

(சென்னை, வானவில் பண்பாட்டு மையம் சார்பில் 12.09.2021 அன்று நடைபெற்ற மகாகவி பாரதியார் நினைவுநாள் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை)

தினமணி

செப்டம்பர் 11 மகாகவி நாள்

ஆண்டுதோறும் 'பாரதி இளம் கவிஞர்' விருது

முதல்வர் மு.க.ஸ்டாலின் அ...

6 பாரதி ஆய்வாளர்களுக்கு விருது, பாராட்டுச் சான்றுகள்

முரசொலி

மகாகவி பாரதியாரின் நினைவு நாளான

செப். 11 - 'மகாகவி நாளாக' கொண்டாடப்படும்!

பாரதியின் பெருமையைப் போற்றி நூற்றாண்டின் நினைவாக

முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான அறிவிப்புகள்!



THE NEW INDIAN EXPRESS

11.09.2021

LEGENDARY POET

BIG PLANS FOR BHARATHI'S 100TH DEATH ANNIVERSARY

EXPRESS NEWS SERVICE @ Chennai

ON the eve of the 100th death anniversary of legendary poet and freedom fighter Subramania Bharathi, Chief Minister MK Stalin on Thursday announced 14 measures to honour his contributions to society.

The measures include publishing the manuscripts of Bharathi as a critical edition, honouring Tamil scholars who have done research on the works of Bharathi and making available the works of the poet to the younger generation.

The Chief Minister, in a statement here, recalled that way back in 1947, DMK founder and former Chief Minister CN Annadurai had described the late poet as Makkal Kavi (people's poet). In 1973, former Chief Minister M Karunanidhi had turned Bharathi's ancestral house at Ettayapuram as a memorial.

STATE GOVT TO OBSERVE MAHAKAVI DAY

1 The State government will observe the **death anniversary of poet Subramania Bharathi as Mahakavi Day**. Poetry competitions will be conducted at the State level for school and college students and **Bharathi Youth Poet Award will be given to a boy and girl with ₹1 lakh cash prize**

2 Select poems and essays of Bharathi will be **compiled into a volume titled Manathil Uruthi Vendum** (Need for a Resolute Mind) and will be **distributed to 37 lakh students at cost of ₹10 crore**

3 The families of Tamil scholars – P Thooran, ...

4 **Statues of Bharathi and the artefacts will be produced** through Poompuhar and sold at concessional rates

5 Manuscripts of Bharathi will be gathered and published as a critical edition; besides, **the poet's works will be published in English**

6 **A music concert will be** staged at Nehru Indoor stadium (after containing Corona infection completely) wherein Bharathi's songs used in **Tamil films will be sung**

7 For the next one year, **weekly programmes will be conducted** at Bharathi Memorial in Chennai for one year to commemorate the centenary of ...

தினகரன்

பாரதியாரின் நினைவு நாளான

செப்.11 இனி ஆண்டுதோறும் மகாகவி நாள்

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

தினத் தந்தி

மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு
மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 14 அறிவிப்புகள்

'நினைவுநாள் மகாகவி நாளாக கடைப்பிடிக்கப்படும்'

மு.க.ஸ்டாலின் வெளியிட்ட...

(1-ம் பக்க தொடர்ச்சி)

மகாகவி பாரதியார்

14 அறிவிப்புகள்

இசைக் கச்சேரி

நூற்றாண்டு

'பாரதியியல்' தனிப்பிரிவு

தினமலர்

உண்மையின் உரைகல்

பாரதியார் நினைவு நாள் 'மகாகவி நாள்' ஆக கடைப்பிடிப்பு

- 37 லட்சம் மாணவர்களுக்கு புத்தகம்: இளங்கவிஞர் விருது
- 14 அறிவிப்புகளை வெளியிட்டார் முதல்வர் ஸ்டாலின்

dt NEXT

CM declares Sept 11 as Mahakavi Day

Stalin made the announcement to commemorate firebrand poet Bharathiyar on his 100th death anniversary

KEY ANNOUNCEMENTS

நினைவில் பாரதியார்

1947 ஆகஸ்டு 13இல் எட்டயபுரத்தில், பாரதியார் மணிமண்டபம் மூதறிஞர் இராஜாஜி அவர்களால் திறக்கப்பட்டது.

1949 சென்னை மாநில முதலமைச்சர் ஓ.பி.இராமசாமி ரெட்டியார் அவர்கள், பாரதி நூல்களின் பதிப்புரிமையைப் பாரதியாரின் இளவல் சி.விசுவநாத அய்யரிடமிருந்து பெற்று, அரசுடைமையாக்கினார்.

1960 செப்டம்பர் 11இல் பாரதியார் நினைவாக பதினைந்து காசு அஞ்சல் தலையை ஒன்றிய அரசு வெளியிட்டுச் சிறப்பித்தது.

1968 மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியில் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, சென்னை கடற்கரைச் சாலையில் அனைத்துத் தமிழறிஞர்களுக்கும் சிலை வைக்கும்போது மகாகவி பாரதியார் அவர்களின் முழு திருவுருவச் சிலையும் வைக்கப்பட்டது.

1973 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், எட்டயபுரத்தில், பாரதியார் பிறந்த வீடு அரசுடைமையாக்கப்பட்டு, 12.05.1973 அன்று பாரதியார் நினைவு இல்லமாகத் திறந்துவைக்கப்பட்டது.

1976 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், சென்னை பைகிராப்ட்ஸ் சாலைக்குப் பாரதியார் சாலை எனப் பெயர் சூட்டப்பட்டது.

1981 தமிழக அரசின் சார்பில் டிசம்பர் 11, 12, 13 ஆகிய நாட்களில் எட்டயபுரத்தில் பாரதி நூற்றாண்டுத் தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

1982 கல்கத்தாவில், தமிழக அரசால் அளிக்கப்பட்ட பாரதியார் முழு திருவுருவ வெண்கலச் சிலை திறந்துவைக்கப்பட்டது.

எட்டயபுரத்தில் பாரதியார் மணிமண்டபத்தை நிருவகித்து வந்த குழுவினரிடமிருந்து தமிழக அரசு அதைப் பெற்று, ரூ.2.50 இலட்சம் செலவில் புதுப்பித்து, 40 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1.25 கோடி செலவில் பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பாலிடெக்னிக் நிறுவப்பட்டுள்ளது.

1985 கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

1987 பிப்ரவரி 4இல் புதுடெல்லி பாரதி நகர், லோதி சாலையில் 600 சதுர மீட்டர் பரப்புள்ள இடத்தில் 10 அடி உயரத்தில் தமிழக அரசால் நிறுவப்பட்ட மகாகவி பாரதியின் திருவுருவச் சிலையை அன்றைய மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்களின் தலைமையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள் திறந்துவைத்தார்.

1989 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 18.07.1989 அன்று கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.

1993 சென்னை, திருவல்லிக்கேணியில் பாரதியார் இறுதிக்காலத்தில் வாழ்ந்த இல்லம், தனியாரிடம் இருந்ததைத் தமிழக அரசு கையகப்படுத்தி, புதுப்பித்து, 1993ஆம் ஆண்டு பாரதியார் நினைவு இல்லமாகப் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

1996 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் இல்லம் புதுப்பிக்கப்பட்டும், நூலகம் அமைக்கப்பட்டும் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

1997 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “பாரதியார் விருது” தோற்றுவிக்கப்பட்டது.

2021 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மகாகவி பாரதியாரைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் செப்டம்பர் 11ஆம் நாள் ‘மகாகவி நாளாகக்’ கடைபிடிக்கப்படும் என அறிவித்தார்.

100

1. மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் இனி ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைபிடிக்கப்படும். இதனையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி 'பாரதி இளங்கவிஞர் விருது' மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும்.

2. பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் மற்றும் கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் சுமார் 37 இலட்சம் பேருக்கு 10 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர்களில் முக்கியப் பங்காற்றிய பாரதி ஆய்வாளர்களான, மறைந்த பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மற்றும் ஆய்வாளர்கள் திரு. சீனி.விசுவநாதன் அவர்களுக்கும், பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களுக்கும், தலா மூன்று இலட்சம் ரூபாயும், விருதும், பாராட்டுச் சான்றிதழும் அரசால் வழங்கி கவுரவிக்கப்படும்.

4. பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்த கலைப்பொருட்களைப் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

5. பாரதியின் கையெழுத்துப் பிரதிகள் தேடித் தொகுக்கப்பட்டு, அவை வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடப்படும். பாரதியின் வாழ்வை சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக்கதை நூலாகவும், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவியங்களுடன் நூல் ஒன்றாகவும் வெளியிடப்படும். மேலும், பாரதியாரின் படைப்புகள் மற்றும் பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிப்படும்.

6. பாரதியாரின் நூல்கள் மற்றும் அவரைப் பற்றிய ஆய்வு நூல்கள் அனைத்தையும் தொகுத்து, எட்டயபுரம் மற்றும் திருவல்லிக்கேணியில் உள்ள

பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்!

–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்

பாரதியார் நினைவு இல்லங்களிலும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரையில் அமைய உள்ள கலைஞர் நினைவு நூலகத்திலும் வைப்பதற்கு ‘பாரதியியல்’ என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும்.

7. உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து பாரதி குறித்த நிகழ்வுகள் ‘பாரெங்கும் பாரதி’ என்ற தலைப்பில் நடத்தப்படும்.

8. திரைப்படங்களில் இடம்பெற்ற பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம்பெறும் இசைக்கச்சேரி ‘திரையில் பாரதி’ என்ற நிகழ்வாக நேரு உள்விளையாட்டு அரங்கில் கொரோனா தொற்றுப் பரவல் முழுமையாக ஒய்ந்த பிறகு நடத்தப்படும்.

9. பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு, சென்னை பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சியொன்று செய்தித்துறையின் சார்பில் நடத்தப்படும்.

10. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதியார் பெயரில் ஆய்விருக்கை அமைக்கப்படும்.

11. உத்திரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பாராமரிக்க அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்படும்.

12. பாரதியார் படைப்புகளைக் குறும்படம் மற்றும் நாடக வடிவில் தயாரிக்க நிதியுதவி வழங்கி அவற்றை நவீன ஊடகங்களின் வழியாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பாரதியாரின் உணர்வுமிக்க பாடல் வரிகளைப் பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய இடங்களில் எழுதியும் வரைந்தும் பரப்பப்படும்.

14. பெண் கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் பெயர், ஊரக வளர்ச்சித்துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு ‘மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா’ எனப் பெயர் சூட்டப்படும்.

எழுத்தும் தெய்வம் – எழுதுகோலும் தெய்வம்
என வாழ்ந்து புதுநெறி காட்டிய புலவன் பாரதியைப் போற்றுவோம்.

பாரதி வாழ்க்கை வரலாறு

பிறந்த வீடு
பகுதி நேர நூலகம்

1917 இல் புதுவையில் எடுத்த படம்
உட்கார்ந்திருப்பவர்கள்: புதல்வி சகுந்தலா, மனைவி செல்லம்மாள்.
நிற்பவர்கள்: புதல்வி தங்கம்மா, நண்பர் ராமு, நண்பர் விஜயராகவன், பாரதி

பிறந்தார் பாரதி

சென்னை ராஜதானியில் எட்டயபுரம் என்ற ஊரில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதியன்று, சின்னச்சாமி – லக்ஷ்மி அம்மையார் ஆகியோருக்கு ஒரு கவியரச வீரன் பிறந்தான்.

அந்தக் கவியரச வீரனுக்குச் சுப்பிரமணியன் என்ற பெயர் சூட்டப்பட்டது.

பிள்ளைத் திருநாமம் சுப்பிரமணியன் என்பதாக இடப்பட்டிருந்தாலும் 'செல்லப் பிள்ளை'யான காரணத்தால் சுப்பையா என்ற செல்லப் பெயரும் வழங்கப்படலாயிற்று.

சீனி. விசுவநாதன்

எட்டயபுர சமஸ்தானம்

சுப்பிரமணியனுக்கு ஐந்து வயது. அப்போது – அதாவது, 1887இல் சுப்பிரமணியனின் தாயார் லக்ஷ்மி அம்மையார் காலமானார். சிறுவயதிலேயே சுப்பிரமணியன் தாயற்ற சேய் ஆனார். தாயற்ற சுப்பிரமணியன் சிறிதுகாலம் தாய்வழிப் பாட்டனார் வீட்டிலே வளர்க்கப்பட்டு வந்தார். பாட்டனார் செந்தமிழ்ச் செய்யுளால் மூன்று பொழுதும் சிவனடிப் போற்றும் தகைமையாளர். அன்னவர் தவப் பூசனையைக் கண்ட பேரனுக்கும் அந்த இளம் வயதிலேயே தமிழ் ஞானப் பயிற்சியில் ஆர்வம் ஏற்பட்டுவிட்டது.

தமிழிலே தேர்ச்சிப்பெற்ற பாட்டனாரும் சிறுவன் சுப்பிரமணியனுக்குத் தமிழ்ப் பாடல்களைச் சொல்லிக் கொடுத்தார். தந்தையும் தமிழிலே மிக்க தேர்ச்சிப் பெற்றிருந்த காரணத்தால், ஆறாம், ஏழாம் வயதிற்குள்ளாகவே, சுப்பிரமணியனுக்குத் தமிழிலே நல்ல ஞானம் கைகூடிவிட்டது.

சில சமயங்களில், சின்னச்சாமி தம் மைந்தனை எட்டயபுர அரண்மனைக்கு அழைத்துச்செல்ல முற்பட்டார். இன்னும் சில சமயங்களில் சமஸ்தானத்தில் நடைபெறும் இலக்கிய சம்பந்தமான விவாதங்களைக் காணவும் அழைத்துச் செல்வார். சிறுவன் சுப்பிரமணியன் 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்பக் கல்விப் பயிற்சிப் பெற்று, கூரிய அறிவுடையவனாகி வளர்ச்சி அடைந்தனன்.

எட்டயபுர சமஸ்தான இலக்கிய விவாதங்களைக் கூர்ந்து கவனித்த சிறுவன் சுப்பிரமணியன், இலக்கிய அமுதத்தைப் பருகினான். காலப்போக்கில், வழிவழியாகக் கைவரப் பெற்ற தமிழ்ப்புலமை சிறுவன் சுப்பிரமணியனுக்கும் வாய்த்துவிட்டது. அத்துடன் கவிபாடும் தொழிலும் பழக்கமாகிவிட்டது. அதுமுதற்கொண்டு 'புலவர்களுடன் சகவாசமும் சேர்ந்துக் கொண்டது. சிறுவன் சுப்பிரமணியனின் புலமைப்பேறு 'கருவிலே பெற்ற பேறு' என்று சொல்கிறார், பின்னாளில் நாவலர் என்ற பெயரால் அழைக்கப்பட்ட சோமசுந்தரம் என்பார். மற்றப் பாடங்களில் ஆர்வம் இல்லை. எப்போதும் கவி எழுதும் ஆர்வம்தான் அவனுக்கு இருந்தது.



சின்னச்சாமி ஐயர்

காசியில் பாரதி

அதனால் காசிக்குப் படிக்க அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு உறவினர் இல்லத்தில் இருந்து படித்தார். அங்கிருந்த ‘ஜெய்நாராயண கலாசாலை’ என்ற இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் பாரதி சேர்க்கப்பட்டார். தமிழ் படிக்க வசதி இல்லாதக் காரணத்தால், பாரதி அங்குத் தம்முடைய சுய முயற்சியால் தமிழ் அறிவை வளர்த்துக்கொண்டார். ஹிந்தியும், சமஸ்கிருதமும் படித்து, அம்மொழிகளில் போதியத் தேர்ச்சிப் பெற்றார்.

நெல்லையில் கல்வி பயின்ற இந்துக் கல்லூரிப் பள்ளி

அடுத்து, 1900ஆம் ஆண்டிலே அலகாபாத் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மத்திய இந்துக் கல்லூரியின் பிரவேசப் பரீட்சைக்கு அமர்ந்து, (Allahabad University Entrance Examination) அதில் முதல் வகுப்பில் தேறினார். இதுதான் பாரதியின் பள்ளிப் படிப்பிலேயே மிக உயர்ந்தபட்ச படிப்பு ஆகும். இதற்குமேல் பின்னிட்டுப் பாரதி எவ்விதப் படிப்பும் படிக்கவில்லை.

காசிக்கு வந்த பிற்பாடுதான் பாரதியின் நெஞ்சம் விரிவடைந்தது; அறிவிலே தெளிவுப் பிறந்தது. காசியில், தாம் வாழ்ந்த குறுகிய காலப் பகுதியில் பாரதி தம் அறிவை ஆழப்படுத்திக்கொண்டார்; சிந்தனை வளங்களைச் சீர்படுத்திக் கொண்டார்; உள்ளத்தை உயர்த்திக்கொண்டார். காசியானது பாரதியைப் புதுமனிதனாகவே மாற்றிவிட்டது. காலப்போக்கில், இயற்கையாகவே பாரதியிடத்தில் குடிகொண்டிருந்த தேசிய சிந்தனைகள் மேலே எழும்பி, வளர்ச்சி பெறத் தொடங்கின.

அன்றைய காசியின் தோற்றம்

உருமாறிய தோற்றம்

சிறுவனாக இருந்த காலத்தே – காசியில் வாசம் செய்த நாளிலே பாரதியின் உள்ளத்தைப் பாதித்தச் செய்கைகள் பற்பல. ஒருபுறத்தே சக்தி வழிபாட்டின் மகிமையை உணர்த்திய காசிதான், மறுபுறத்தே கருங்காளிப் பொம்மை வணக்கத்தைக் காட்டிப் பாரதியின் உள்ளத்தைப் பண்படுத்தியது. அநீதியைக் கண்டு மனத்தைப் பொங்கி எழச் செய்யவும் தூண்டியது.

பாரதி காசியில் இருந்தக் காலத்தில்தான் குடுமியை எடுத்துவிட்டு, வங்காளிப் போன்று ‘கிராப்’ வைத்துக் கொண்டார்; வடக்கத்திய பாணியில் வால் விட்ட பெரிய தலைப்பாகையைக் கட்டிக்கொண்டார்; மீசை வைத்துக்கொண்டார்; கச்சம் வைத்து வேஷ்டியைக் கட்டிக்கொள்ளும் வழக்கத்தையும் கைக்கொண்டார். சக்தி வழிபாட்டிலும் ஓரளவு ஈடுபாடு கொள்ளலானார்.

ஆக, பாரதியின் அகப் – புற வாழ்வில் பலவித மாற்றங்களைக் காசி வாசமானது தேற்றி அவரைப் புதிய மனிதராகவே மாற்றி விட்டது. பின்னர், எட்டயபுரம் சமஸ்தானத்தின் அழைப்பை ஏற்று 1903ஆம் ஆண்டின் முற்பகுதியில் பாரதி எட்டயபுரம் திரும்பிவிட்டார்.

பாரதியின் செல்லம்மா

01.03.1903 அன்று அவருக்கு கடையத்தில் செல்லம்மாளுடன் திருமணம் நடந்தது. செல்லம்மாளுடன் எட்டயபுரம் திரும்பினார்; பிறந்த மண்ணில் புதுவாழ்வைத் தொடங்கினார். தம் தகப்பனார் உத்தியோகம் பார்த்து வந்த அதே ஜமீனில் உத்தியோகம் பார்த்தார். மன்னருக்கு நாளிதழ்கள் படித்துக் காண்பிப்பதுதான் வேலை. அத்துடன் ஜமீன் சமஸ்தான தமிழ்ப்புலவர்கள் நடத்திவந்த வாதப் பிரதிவாதங்களிலும் பாரதி பங்குக்கொண்டார். தம்முடைய வாதத்திறனால் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

ஷெல்லி தாசன்

மூத்தப் புலவர் பெருமக்களுடன் பாரதி அவ்வப்போதுக் கருத்து வேறுபாடுகள் கொண்டதும் உண்டு; தம்முடைய மேதா விலாசத்தினால் பலச் சமயங்களில் பரவசமூட்டியதும் உண்டு. மற்றும், ஆங்கிலக் கவி ரத்தினங்களாகிய கீட்ஸ், ஷெல்லி போன்றவர்களின் கவிதைகளிலே தம் நெஞ்சத்தைப் பறிகொடுத்தார், பாரதி.

தம் மனத்தைப் பெரிதும் கவர்ந்த கவிஞர் திலகம் ஷெல்லியின் பெயரால் “ஷெல்லியன் கில்டு” என்ற ஓர் அமைப்பையும் பாரதி தோற்றுவித்தார்; தமக்குத்தாமே ‘ஷெல்லி தாஸ்’ என்றப் புனைப்பெயரையும் சூட்டிக்கொண்டார். ஆங்கிலக் கவிதை வடிவமான ‘சானெட்’ பாடல் வகையும் பாரதியின் நெஞ்சத்தைத் தொட்டதால், அவ்வகைப் பாக்களையும் தாமும் புனைய ஆசை கொண்டார். அவரது வளர்ச்சி, சிலருக்குப் பிடிக்கவில்லை.



பாரதியின் தம்பி சி.விசுவநாதனும் தங்கை லட்சுமி அம்மாளும்

முதல் கட்டுரை

அந்த நாளில் திருநெல்வேலியிலிருந்து “சர்வ ஜன மித்திரன்” என்றப் பெயரில் பத்திரிகை ஒன்று வெளிவந்துகொண்டிருந்தது. பத்திரிகையும் தன் பெயருக்கு ஏற்ற முறையில் ஜனரஞ்சகமாகவே அமைந்தும் விட்டிருந்தது. நெல்லைச் சீமையில் இப்பத்திரிகைக்கு நல்ல செல்வாக்கும் இருந்தது.

நெல்லைச் சீமையில் மக்களைக் கவர்ந்த பத்திரிகையான ‘சர்வ ஜன மித்திர’னில் பாரதி கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையில் பொதுவாகப் பணக்காரர்கள் பற்றியும், அவர்கள் செய்யும் அநாகரிகமான செய்கைகளைப் பற்றியும் பாரதி எழுதி இருந்தார்.

‘தங்களுக்கு அனுகூலமாக ஏதாவது சந்தர்ப்பம் கிடைக்காதா? என்று ஏங்கிக்கொண்டிருந்தப் பொறாமைக்காரர்களுக்கு இந்தக் கட்டுரையானது வெறும் வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்கு அவல் கிடைத்தது போலாகிவிட்டது. ஆவலை நினைத்துக் கொண்டு வெறும் உரலை இடித்தவர்கள் சும்மா இருப்பார்களா?

ஜமீந்தாரிடம் ஓடோடிச் சென்றனர், பத்திரிகையைக் காட்டினர்; பாரதியின் கட்டுரைக்குப் புதிய வியாக்கியானங்களைத் தந்தனர். ‘பாரதி ஜமீந்தாரையேத் தாக்கி எழுதும் அளவுக்குத் துணிந்து விட்டார்’ என்றுக் கோள் மூட்டினர். அதனால், 1904 ஜூன் மாத வாக்கில் எட்டயபுரத்தை விட்டு வெளியே வந்துவிட்டார்.

மதுரையம்பதியில்...

எட்டயபுரத்தில் சேவகம் புரிந்து, ஊரைவிட்டு வந்து, வேலை தேடிப் பல ஊர்களில் அலைந்த பாரதிக்கு இறுதியில் மதுரையில் தமிழ் ஆசிரியப் பணி கிட்டியது. மதுரைச் சேதுபதி ஹைஸ்கூலில் பாரதிக்கு 1904 ஆகஸ்டு முதல் தேதியன்று தமிழாசிரியராகப் பணிபுரிய வாய்ப்புக் கிடைத்துவிட்டது. மாதச் சம்பளமாக ரூ.1780 பெற்றார்.

இந்தத் தமிழாசிரியர் பணியிலும் அவர் தொடர்ந்து இருக்கவில்லை. 01.08.1904 முதல் 10.11.1904 வரை – பாரதி மூன்று மாதங்கள் பத்துத் தினங்கள்தாம் சேதுபதி பள்ளியில் தமிழ் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயராக இருந்தார்.

பாரதி பணிபுரிந்த மதுரை சேதுபதி பள்ளி

மதுரைச் சேதுபதி பள்ளியில் பாரதி வேலை பார்த்துக்கொண்டிருந்த சமயம், ‘சுதேச மித்திரன்’ ஜி.சுப்பிரமணிய ஐயர் தம் பத்திரிகை விஷயமாக மதுரைக்கு வந்திருந்தார். அவருக்கு பாரதியை அறிமுகம் செய்துவைத்தவர் தமிழ் பண்டிதர் கோபால கிருஷ்ண ஐயர். சுதேசமித்திரனில் வேலை போட்டுத் தரவும் இவர் சொன்னார். ‘சுதேச மித்திரன்’ சுப்பிரமணிய ஐயருக்குப் பிறவிக் கவி சுப்பிரமணிய பாரதியைக் கண்டதும் ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது.

ஆகவே, கோபால கிருஷ்ண ஐயரின் விருப்பப்படி பாரதிக்குச் ‘சுதேசமித்திரனில் வேலை தருவதாகச் சொன்னார்; உடனே பாரதியைச் சென்னைக்குப் புறப்பட்டு வரும்படி அழைப்பு விடுத்தார்.

பாரதி சென்னை விஜயம்

பாரதியும் மறுபேச்சுப் பேசாமல், சுதேசமித்திரன் ஜி.சுப்பிரமணிய ஐயரின் அழைப்பை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.

புதியப் பணிப்பொறுப்புக் காரணமாக, சேதுபதி பள்ளியில் தாம் ஆற்றிவந்த பணியை ‘ராஜினாமா’ செய்தார். பின் கடையம் புறப்பட்டுச் சென்றார்; மனைவியிடம் விஷயத்தைச் சொன்னார். தான் மட்டும் சென்னைக்குப் புறப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படிக்கும் பணித்தார்.

1904 நவம்பர் மாதம் பாரதி சென்னைக்கு வந்தார். அதுபோது செல்லம்மாள் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தார்.

சென்னையில் பாரதி முதலில் காலடி பதித்த இடம் ‘ஜார்ஜ்டவுன்’ என்று பின்னாளில் அழைக்கப்பட்ட ‘பிளாக் டவு’னின் லிங்கிச் செட்டித் தெருவில் ஆகும். அந்தத் தெருவில் குடியிருக்க வீட்டை வாடகைக்கும் அமர்த்திக்

கொண்டார். அப்போது சுதேசமித்திரன் அலுவலகம் அரண்மனைக்காரன் தெருவில் இருந்தது.

சுதேசமித்திரன்

சென்னை வந்துச் சேர்ந்தச் சில நாட்களிலேயே பாரதிக்கு நண்பர்கள் பலர் வாய்த்து விட்டனர். சமூகச் சீர்திருத்தத்தில் பாரதிக்கு விருப்பம் ஏற்பட்டதால், அப்போது சென்னையில் இயங்கி வந்த சென்னை ஆசாரத் திருத்தச் சங்கத்தில் உறுப்பினராகவும் சேர்ந்தார்.

சென்னை வந்த புதிதில் பாரதிக்குக் கிடைத்த முதல் நண்பர் வக்கீல் எஸ்.துரைசாமி ஐயர் என்பவராவார். இவரைத் தொடர்ந்து சக்கரை செட்டியார், ஜெயராம் நாயுடு, ரகுநாத ராவ் என்றிப்படி நண்பர்களின் பட்டியல் நீள்கிறது. பாரதியின் சென்னை விஜயம் வரலாற்றுப் புகழ்பெற்றுவிட்டது.

சுதேசமித்திரன் அதிபர்
ஜி.சுப்பிரமணிய ஐயர்

தம் இருபத்து இரண்டாம் வயதளவில் பாரதி 'தமிழ் ஜன சமூகத்தாரின் அறிவை வளர்ப்பதை மேன்மையாக'க் கொண்ட 'சுதேச மித்திர'னில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். அருட்கவியாகவும், ஆசுகவியாகவும் விளங்கிய பாரதி, தேசம் அறியும் கவிஞராக – குறிப்பாகவும் சிறப்பாகவும் – தேசியக் கவிஞராகச் 'சுதேச மித்திரன்' பத்திரிகையின் வாயிலாக அறிமுகம் ஆனார்.

பாரதியைச் சரித்திர புருஷராக மாற்றிய பெருமை 'சுதேச மித்திரன்' ஜி.சுப்பிரமணிய ஐயருக்கே உண்டு. தம் பத்திரிகைப் பணிகளால் தமிழ்மக்களை அரசியல் துறையில் கண்விழிக்கச் செய்த பெரியார், இவர். நவபாரதச் சிற்பிகள் வரிசையில் வைத்து வணங்கத்தக்க இவர், நாட்டு முன்னேற்றத்திற்காக ஆற்றிய பணிகளுக்குக் கணக்கே இல்லை.

பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் சுப்பிரமணிய ஐயரே தலையங்கங்கள், அரசியல் விமர்சனங்கள் முதலானவற்றை எழுதி வந்தார். பத்திரிகை உலக அனுபவத்தில் பாரதி புதியவர் என்பதால் அவரிடம் செய்தி தொகுத்தல், மொழிபெயர்த்தல், பிழை திருத்தம் செய்தல், செய்திகளைச் சுருக்குதல் – ஆகிய இன்னபிறப் பணிகளே ஒப்படைக்கப்பட்டன. பத்திரிகையில் சேர்ந்த குறுகிய காலப் பகுதியிலேயே பாரதி தம் திறமையால் ஆற்றியப் பணிகளால் சுப்பிரமணிய ஐயரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிவிட்டார்.

முதல் சொற்பொழிவு

'சுதேச மித்திரன்' பத்திரிகையில் சேர்ந்தக் காரணத்தால் பாரதி 'நாட்டுக்கு உழைத்தல்' என்ற தர்மத்தைக் கைக்கொள்ளலானார்; 'சுதேச மித்திரன்' பத்திரிகையில் பாரதி சேர்ந்தபொழுது அவருக்கு வயது இருபத்து இரண்டுதான்!

சுதேசமித்திரன் அலுவலகம்

சுப்பிரமணிய ஐயரிடம் பெற்றுப் பயிற்சிக் காரணமாகப் பாரதியும் 'தேசபக்தி' என்னும் நவீன மார்க்கத்தில் தம்மையும் பிணைத்துக் கொண்டு 'சுதேச சேவகம்' புரிதலையே தம் வாழ்வுப் பணியாகக் கைக்கொண்டார்.

பாரதி ‘சுதேச சேவகம்’ புரியக் கங்கணம் கட்டிக்கொண்ட நிலையிலும், பொது விஷயங்களிலும் அக்கறைக் காட்டிவந்தார். அதுபோது சென்னையில் இயங்கிவந்த மாணவர் தமிழ்ச் சங்க வருடாந்தர விழாவில் பாரதி பங்குக் கொண்டார்; ‘கருணை’ என்னும் தலைப்பிலே அருமையானச் சொற்பொழிவையும் ஆற்றினார். சென்னை வந்துச் சேர்ந்த ஆறு மாதங்களுக்குள்ளாகவே பாரதிக்குப் பொது நிகழ்ச்சியில் கலந்துக்கொள்ளும் வாய்ப்பும், பேசுகின்றப் பேறும் வாய்த்தன.

பத்திரிகை ஆசிரியர்

வங்க நாட்டிலே சுதேசிய விரதத் தர்மம் தலைதூக்கிய நேரத்தில் தான் பாரதி ‘தமிழ்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியே நோக்கமாகக் கொண்டு வெளிப்பட்ட மாதாந்தரப் பத்திரிகையான சக்ரவர்த்தினியின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

‘சுதேச மித்திரன்’ தினசரிப் பத்திரிகையில் துணையாசிரியராகவும், அதேசமயம் ‘சக்ரவர்த்தினி’ மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார், பாரதி. ‘வங்கத்தில் தோன்றிய சுதேசிய உணர்ச்சியைப் பொது நலங் கருதித் தமிழ்நாட்டு மாதர்களும் கொள்ள வேண்டும்’ என்ற ஆசையின் காரணமாக, அது சம்பந்தமான செய்திகளைச் “சக்ரவர்த்தினி”யில் வெளியிட்டார், பாரதி. சொல்லப்போனால், தம்மளவில் தாம் ஆசிரியராகப் பொறுப்பேற்ற ‘சக்ரவர்த்தினி’ பத்திரிகை வாயிலாகச் சுதேசிய எண்ணங்களைப் பெண்களினிடையே பரப்ப முன்வந்தார், பாரதி.

‘தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு அல்லும் பகலும் இந்தியாவின் நலமே கருத்தாகக் கொண்டுப் பாடுபட்டு வந்த மஹான்’ தாதாபாய் நௌரோஜியின் பிறந்தநாளைப் பெருஞ் சிறப்புடனும், உற்சாகத்துடனும் கொண்டாடப் பாரத நாட்டின் பலப் பகுதிகளிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன.

அதுசமயம், அதாவது 1905 செப்டம்பர் மாதம் 4ஆம் தேதியன்று அம்மஹானது பிறந்தநாளைச் சென்னை நகரிலும் கொண்டாட ஜி.சுப்பிரமணிய ஐயர் விரும்பினார். ஐயரின் வாயிலாகத் தாதாபாயின் மகிமைகளை அறிந்துக் கொண்ட பாரதி, அப்பெரியாரிடம் அளவுகடந்த மதிப்பும், மரியாதையும் கொண்டார்.

1905 செப்டம்பர் மாத ‘சக்ரவர்த்தினி இதழில் தாதாபாய் நௌரோஜியின் சரித்திரச் சுருக்கத்தை எழுதி வெளியிட்டார். இந்திய அரசியலைக் கூர்ந்து கவனித்துத் தம் அளவில் கீதங்களை இயற்றியும், தேசியச் சிந்தனைகளை ஊட்டும் செய்திகளை வெளியிட்டும், தேசியத் தலைவர்களின் வரலாற்றுக் கருக்கங்களை வரைந்தும் ‘சுதேச சேவகம்’ புரிந்து வருகையில், அவருடைய ஆசிரியர் சுப்பிரமணிய ஐயர் திட்டமிட்டு மேலும் சில ஆக்கப்பூர்வமானச் செயல்களில் ஈடுபடுவாராயினார்.

எங்கள் நாடு

தமிழ்நாட்டுப் பூர்விகமான தொழில்கள் அன்னியர் போட்டியால் நாசமாகிவிட்டது பற்றியும், அத்தொழில்கள் மீண்டும் புத்துயிர் பெற்றால் நம் மக்கள் புதிய வாழ்வுப் பெறுவர் என்பதுப் பற்றியும் சுப்பிரமணிய ஐயர் தீர்க்கமாகச் சிந்தித்துச் செயல்படலானார்.

தம் போன்றக் கருத்துடைய நண்பர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, தாம் கருதியக் காரியங்கள் வெற்றிபெற 1905 அக்டோபர் நாளில் வந்த தீபாவளிப் பண்டிகை நன்னாளையே தேர்ந்தெடுத்துச் ‘சுதேசிய நிதி’ (National Fund) என்பதாக ஒரு நிதி அமைப்பையும் தோற்றுவித்தார்.

சென்னை நகரில் நிதி வசூல் செய்யும் பொருட்டு, சிலப் பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து அவர்கள் கைகளில் சீலிட்ட உண்டிப் பெட்டிகளைத் தந்து, வசூல் வேட்டையிலும் தீபாவளித் திருநாளிலேயே சுப்பிரமணிய ஐயர் இறங்கிவிட்டார். வங்கத்திலே ‘சுதேசிய விரதம்’ மேற்கொண்ட தருணத்திலேயே, தமிழகத்திலே சுப்பிரமணிய ஐயர் ‘சுதேசிய நிதி’ப்பணிகளிலே ஈடுபட்டுவிட்டார். சுதேசிய நிதிப் பற்றிய சிந்தனைகளைத் தொடர்ந்துத் தம் பத்திரிகையிலேப் பெருமுயற்சி அறிக்கையிட்டுத் தெரிவித்து மக்களின் ஆதரவைத் திரட்டினார். வங்கத்தில் எழுந்தச் சுதேசிய விரதத் தர்மமும், தமிழகத்திலே தோற்றுவிக்கப்பட்ட ‘சுதேசிய நிதி’ முயற்சியும் பாரதியை வெகுவாகக் கவர்ந்தன.

இவ்விரு இயக்கங்களும் ஆல்போல் தழைத்துப் பெருகி வளர்ந்து நாட்டு மக்களை மேனிலைப்படுத்தவே எழுந்தன. இந்த உண்மையைப் பத்திரிகையாளர் என்ற முறையில் மட்டுமேயல்லாது, சுதேச சேவகம் புரியும் தொண்டில் ஈடுபட்டுள்ளவர் என்ற பான்மையிலும் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பொறுப்புத் தமக்கும் உண்டு


சுதேசமித்திரன்.
The Swadesamitran.
[தினப்பதிப்பு.]
15th December, 1920
G. W. CARNRICK CO, New York.

என்பதைப் பாரதி நன்கு உணர்ந்தே இருந்தார். அந்த பின்னணியில் அமைந்தது, “எங்கள் நாடு” என்கிற நெஞ்சை அள்ளும் கீதம். இந்தப் பாடல் ‘சுதேச மித்திரன்’ இதழில் 1905 அக்டோபர் 24இல் பிரசுரமானது.

வந்தே மாதரம்

தமிழ்நாட்டிலும் சுதேசிய முயற்சிகளை மேற்கொண்டவர்கள் ‘வந்தே மாதரம்’ என்கிற மந்திரச் சொல்லை உச்சரித்தனர்; ‘வந்தே மாதர’ கீதத்தையும் இசைத்தனர். பாரதியும் ‘வந்தே மாதர’ வீரிய வாசக தோத்திரத்தில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார். தம் நெஞ்சத்தை அள்ளிய – கொள்ளை கொண்ட – ‘வந்தே மாதர’ கீதத்தின் உட்பொருளைத் தமிழக மக்களுக்குப் புலப்படுத்த ஆசை கொண்டார் பாரதி.

ஆசைக் கொண்ட அளவிலேயே பாரதி சற்றும் காலதாமதம் செய்யாமல், பங்கிம் சந்திர பாபுவின் தெய்விகப் பாடலை மொழிப்பெயர்த்து, விளக்கக் குறிப்புடன் 1905 நவம்பர் மாத ‘சக்ரவர்த்தினி’ இதழில் வெளியிட்டார்.



அன்னியர் சம்பந்த விலக்குதான் இந்திய மக்களுக்கு விமோசனம் தரும் எனப் பாரதியும் திடமாக நம்பினார். அந்நிய ஆட்சியை விலக்கி சுய ஆட்சி பெற ‘பகிஷ்காரம்’ ஒன்றுதான் சரியான வலுவான ஆயுதம் என்று நாட்டு மக்களிடையே எடுத்துச் சொல்லி, சுதேசி இயக்கம் வெற்றி பெறப் பாரதி மிகத் தீவிரமாகச் ‘சுதேச சேவகம்‘ புரிய முன்வந்தார், திலகர் காட்டிய வழியில்.

“இந்தியா” பத்திரிகை தோற்றம்

மாதாவின் பெயரையே பத்திரிகையின் பெயராகச் சூட்டிக் கொண்டு விட்டதான ‘இந்தியா’ வாரப் பத்திரிகையானது 1906ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் தேதி முதற்கொண்டுத் தமிழக மண்ணிலிருந்து பவனி வர ஆரம்பித்தது. பத்திரிகையை ஆரம்பித்தவர்கள் பாரதிக்கு நன்கு அறிமுகமானவர்கள்.

பாரதி சென்னை வந்த காலத்தில், ‘சுதேச சேவகப் பணி’யுடன் பத்திரிகைப் பணிகளை ஆற்றிய வேளையில் வாய்த்த ஒத்தக் கருத்துடைய அன்பர்கள் ஆரம்பித்தப் பத்திரிகைதான் ‘இந்தியா’. தேசிய ஒருமை சுதேசிய இயக்க ஆதரிப்புடன் அரசியல் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்து, வெளிப்பட்டது ‘இந்தியா’.

‘தமிழ்நாட்டு மக்களிடையே ராஜீய அறிவைப் புகட்ட வேண்டும்’ என்று எண்ணம் கொண்டிருந்த துடிப்புள்ள இளைஞர் திரு. எஸ்.என்.திருமலாச்சாரியார்தான் ‘இந்தியா’ பத்திரிகையைத் தொடங்கினார்.

இந்தியாவின் ஆசிரியர்

இவருடைய பத்திரிகைப் பணி சிறக்கத் திரைமறைவில் இருந்து உதவியவர்கள் அழகிய சிங்கப்பெருமாள் அய்யங்காரும்,

எம்.பி.டி.ஆச்சாரியாரும், மண்டயம் சீனிவாசாச்சாரியாரும் ஆவர். தேசநலத்தின் பொருட்டு எழுந்த ‘இந்தியா’ பத்திரிகையாளர்களுடன் பாரதிக்குத் தொடர்பும் ஏற்பட்டது.

‘சுதேச மித்திரன்’, ‘சக்ரவர்த்தினி’ ஆகியப் பத்திரிகைகளில் பணியாற்றிக் கொண்டே ‘இந்தியா’ பத்திரிகைக்கும் ‘விஷயதானம்‘ செய்து வந்த பாரதியைப் பலரும் மெச்சினர்; நண்பர்கள் பலர் வாய்த்தனர். அரசியலில் தீவிரவாதப் போக்கை நாடி நின்ற ‘இந்தியா பத்திரிகை நிர்வாகிகள் தமிழகத்தில் திலகர் கொள்கைகளைப் பரப்பவேண்டும் என்பதில் தீவிரம் காட்டினர்.

இந்த நிலையில், பாரதியிடம் ‘இந்தியா’ பத்திரிகையின் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்து விடுவதெனவும் பத்திரிகைப் பொறுப்பாளர்கள் முடிவும் செய்துவிட்டனர். ‘இந்தியா’ பத்திரிகையின் பொறுப்பாளர்கள் பாரதியிடம் தங்கள் பத்திரிகையிலேயே முழுநேர ஆசிரியராகப் பணியாற்ற வேண்டும் என்று கோரினார்கள். பாரதியும் நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று, தமக்குப் பத்திரிகை உலகக் குருவாக வாய்த்த ஜி.சுப்பிரமணிய ஐயரின் ஆசியோடு ‘இந்தியா’ பத்திரிகையின் பணிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதாவது, 1906 செப்டம்பர் மாத வாக்கில் ‘இந்தியா பத்திரிகைக்குப் பெயர் போட்டுக் கொள்ளாத ஆசிரியராகப் பணியாற்றப் பாரதி வந்து விடுகிறார்.

கேலிச்சித்திரம்

பாரதி ‘இந்தியா’ பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன், பத்திரிகையில் பலவித மாற்றங்களைச் செய்தார்; தலையங்கங்கள் எழுதுவதிலிருந்துச் செய்திகளைத் தொகுத்துத் தரும் முறை வரை பலவிதங்களிலும் புது வழிகளைப் புகுத்தினார்; கேலிச் சித்திர முறையை அறிமுகப்படுத்தினார்.

அன்று நம்மை ஆண்டு கொண்டிருந்த பிரிட்டிஷ் ஆட்சியை தயைதாட்சண்யம் இன்றி மிகக்கடுமையாகத் தாக்கி எழுதினார்; அவர்களுடைய வரவு – செலவுத் திட்டங்களை விமர்சனம் செய்தார், பாரதி. ஜனரஞ்சகமான முறையில் விஷயங்களை எழுதி, அவர்களுடைய மனங்களைக் கொள்ளை கொண்டார், பாரதி.

இந்தியச் சுதந்திர முயற்சிக்காகக் குரல் கொடுத்தப் பிற நாட்டு நல்லறிஞர்களின் கருத்துக்களை மொழிபெயர்த்துப் பாரதி வழங்கினார். நாட்டின் தொழில் மேன்மைக்கு மட்டுமில்லை; கலை வளர்ச்சிக்கும் தொண்டுச் செய்தவர்களையெல்லாம் பாரதி பெரிதும் பாராட்டிக் கொண்டாடினார்.

உள்ளூர் வெளியூர், வெளிமாநில – வெளிநாட்டுச் செய்திகள் யாவும் முறைப்படி பிறப் பத்திரிகைகளினின்றும் திரட்டி வாசக நேயர்களின் பல்துறை அறிவு வளர்ச்சிக்கும் வழிகோலினார், பாரதி. பாரதியின் உணர்ச்சிகரமான எழுத்துக்களும், மொழி பெயர்ப்புக்களும், மற்றும் மக்களிடையேத் தேசிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கக் கையாண்ட முறைகளும் நல்ல வரவேற்பைப் பெற்றன.

பாரதி ‘இந்தியா’ பத்திரிகையின் பொறுப்பை ஏற்றச் சில மாதங்களிலேயே, பத்திரிகைப் பலருடையக் கவனத்தைக் கவர்ந்தது; பத்திரிகை உலகமும் பாராட்டுதல்களைத் தெரிவித்தது. ஆக மொத்தத்தில், ‘இந்தியா’ பத்திரிகைக்குப் பாரதியின் வரவானது புதியப் பொலிவை ஊட்டியது எனலாம்.

நெல்லைச் சீமையில் தேசியப் பேரெழுச்சி

‘தென்னாட்டின் பாரிசால்’ என்று பெருமையோடுப் பேசப்படும் திருநெல்வேலிச் சீமையில் தேசியக்கொடி ஏந்தி, நாட்டு நலனில் அக்கறை கொண்டு, வருவாய் மிகுந்த வக்கீல் தொழிலைத் துறந்து, கப்பல் கம்பெனியை ஆரம்பித்து, தமிழர்களின் மானத்தைக் காப்பாற்றியவர் ஒருவர் உண்டென்றால், அவர்தாம் வ.உ.சி. என்று பலரும் சொல்வார்கள்.

வ.உ.சிதம்பரனார்

நெல்லைச் சீமையிலேக் கட்டுக்கோப்பான முறையில் சுதேசி இயக்கத்தை வளர்த்த பெருமை இவரையே சாரும். ஜனங்களுக்குள் தேசாபிமானத்தையும், ஒற்றுமையையும் உயிர்ப்பித்து வளரச் செய்த வ.உசி. அவர்கள் 1906ஆம் ஆண்டின் இடைப் பகுதியில் சுதேசிய இயக்கத்தில் தம் கவனத்தைச் செலுத்தலானார். வ.உ.சி. அவர்களுடன் தோளோடு தோள் கொடுத்து நின்றவர் சுப்பிரமணிய சிவா. குடும்பத்தை மறந்து, தேசத்தையேத் தெய்வமென வழிபட்டு நின்று, இந்திய விடுதலைப் போரில் குதித்தத் தியாகச் செம்மல் அவர். 1908இன் முற்பகுதியில் சுதேசி இயக்கப் பிரசாரத்திற்காக நெல்லையில் காலடி எடுத்து வைத்த சிவா, சுதேசியச் செம்மல் வ.உ.சி.க்கு நண்பரானார். அவர் காரியங்கள் யாவிற்கும் இவரும் கை கொடுத்து உதவலானார். ‘அரசியல் இரட்டையர்’ என்று சொல்லும் அளவுக்கு வ.உ.சி.யும், சிவாவும் ஒன்றாகவே இணைந்துச் செயல்பட்டனர்.

புதிய அத்தியாயம்

வ.உ.சி.யும், சிவாவும் தென்பாண்டிச் சீமையிலேத் தேசிய நெருப்பை அவிய விடாமல் காத்து நின்றனர். இவ்விருவருடைய பிரசங்கமாரிகளைக் கேட்ட அச்சீமை மக்கள் எல்லாம் தங்கள் ஜாதி மத பேதங்களை மறந்தனர்; எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒற்றுமை உணர்வு கொண்டனர்.

சென்னையில் எப்படிப் பாரதி குழுவினர் செயல்பட்டனரோ, அப்படியே நெல்லைச் சீமைப் பகுதியிலே வ.உசி. குழுவினர் செயல்பட்டனர். சென்னை நகரிலே பாரதி கொண்டாடியதைப் போலவே, தூத்துக்குடியிலும் விபின்சந்திர பாலர் விடுதலை நாளைத் திருநாளாகக் கொண்டாட வ.உ.சி.யும், சிவாவும் விரிவான ஏற்பாடுகளைச் செய்தனர், அதே மார்ச் 9ஆம் தேதியன்றே. அதுதான் திருநெல்வேலி எழுச்சியாக மாறியது. அதன் விளைவாக 1908 மார்ச் 12ஆம் தேதி வ.உ.சி.யும், சிவாவும் கைதுச் செய்யப்பட்டனர்; பாளையங்கோட்டைச் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

தமிழகத்தில் ராஜ நிந்தனைக்காகச் சிறைச் செல்லும் புதிய அத்தியாயத்தை வ.உ.சி., சிவா ஆகியோர் தொடங்கி வைத்தனர். சென்னை நகரக் கூட்டங்களும், தூத்துக்குடி நெல்லைச் சம்பவங்களும் அரசுத் தரப்பு வட்டாரத்தில் கலக்கத்தை உண்டுப் பண்ணி விட்டிருந்தன.

சென்னையில் நெல்லை

சென்னை நகரப் போலீஸ் கமிஷனரின் கடிதத்திற்கு அப்போதைய தாற்காலிகத் தலைமைச் செயலர் எழுதிய 1908 மார்ச் 18ஆம் தேதிய கடிதத்தில், “சுப்பிரமணிய பாரதியையும் எதிராஜ் சுரேந்திரநாத் ஆரியாவையும் ஒருசேரக் கைதுச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் எடுத்தாக வேண்டும். அப்போதுதான் அமைதியை நிலைநிறுத்த முடியும். சட்டத்தை மீறும்படிக் கூட்டத்தைத் தூண்டினர் என்பதற்குப் போதுமான சான்று இருக்கும் பட்சத்தில் அவர்களைக் கைதுச் செய்யலாம்’’ என்று குறிப்பிட்டிருந்தார். தாற்காலிகத் தலைமைச் செயலரின் கடிதத்தைப் பெற்ற போலீஸ் கமிஷனர் ஆழ்ந்து பரிசீலனை செய்தபின்னர், கைது முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

சொல்லப் போனால், வ.உ.சி., சிவா ஆகியோர் கைது செய்யப்பட்ட காலப் பகுதியிலேயே பாரதியையும் கைதுச் செய்யப் போலீஸ் தரப்பில் வலை விரிக்கப்பட்டுவிட்டது. எந்த வகையிலேனும் பாரதியைப் பிடித்துச் சிறையில் தள்ள வேண்டும் என்று போலீஸ் தரப்பு துடிதுடித்துக் கொண்டிருந்தது.

சுப்பிரமணிய சிவா

பாரதியும் எதைப் பற்றியுமே கவலைப்படாமல், தீவிரமான அரசியல் பிரசாரங்களிலும், நெல்லை மக்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளுக்கு நிவாரணம் தேடுவதிலும், வழக்குத் தொடர்பானச் செலவினங்களுக்கு நிதி திரட்டுவதிலுமான பணிகளில் தம் நண்பர்களுடன் இரவு பகல் என்றுப் பாராமல் ஈடுபட்டிருந்தார்.

குறிப்பாக, 1908 மார்ச் 29ஆம் தேதி மாலை தெற்குக் கடற்கரையில் லேடி வென்லாக் பூங்கா எதிரே சென்னை ஜனசங்கத்தின் சார்பில், தூத்துக்குடி திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த தேசபக்தர்களுக்கும், மாவீரர்களுக்கும் அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டாகக் கூட்டம் நடத்தப் பெற்றது. கூட்டத்தில் பெரும் அளவில் மாணவர்கள் கலந்துக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்க அம்சம். பொதுமக்களும் ஆவேசத்துடன் காணப்பட்டார்கள். கூட்டத்தில் பாரதி தமிழில் பேசினார்.

நிதி நோக்க முயற்சிகள்

“சிதம்பரம் பிள்ளையும் அவரது தொண்டர்களும் நாட்டிற்காகத் திருநெல்வேலியில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பின் அங்கே எப்படிக் கலவரம் மூண்டது? அது முழுக்க முழுக்க அரசின் வணிக வழியிலான குறுக்கீட்டினால்தான் ஏற்பட்டது. ஏனெனில், அரசில் பாதிப்பேர் வணிகர்கள்; பாதிப்பேர் ஆட்சியாளர்கள். அப்படியும் அல்லாவிடில் அவர்களில் முக்கால்வாசிப் பேர் வணிகர்கள்: கால்வாசி மட்டுமே ஆட்சியாளர்கள் என்று கருதும்படியாக இருக்கிறது.

திருநெல்வேலியில் நடந்த அந்தக் கலவரம் கடவுளின் செயலாகும். அது நாட்டிற்கு இறுதியாக நன்மை பயக்கவே நடந்தது. அந்தக் கலவரங்களில் நான்கு பேர்கள் கொல்லப்பட்டனர். அவர்களுடைய பெண்டுப் பிள்ளைகள் மற்றும் பெற்றோர்கள் இருந்தால், அவர்கள் உதவிக்கு உரியவர்கள். எனவே, அவர்களின் நிவாரண நிதிக்கு இயன்ற வரை நிதிக் கொடுத்து

உதவ வேண்டும்'' என்றுக் கூட்டத்தினரைப் பாரதி உணர்ச்சி பூர்வமாகக் கேட்டுக் கொண்டார்.

இங்ஙனமாக அன்றைய தினம் பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்த மக்களிடம் வேண்டிக் கொண்டதோடு மட்டும் நில்லாமல், திருநெல்வேலிக் கஷ்டநிவிர்த்தி நிதி என்பதாக நிதித் திரட்டும் முயற்சி தேசப் பக்தர்களால் மேற்கொள்ளப் பட்டபோது, பாரதியும் நிதி முயற்சிக்குத் துணை நின்றார். தான் சார்ந்து இருந்த சென்னை ஜன சங்கத்தின் சார்பிலும் நிதி திரட்டிக் கொடுக்க முன்வந்தார்.

நிதித் திரட்டுவதற்காக வெளியிட்ட அறிக்கையைப் பாரதி 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரம் செய்தார். "திருநெல்வேலித் தேசாபிமானிகளுக்கு நாமனைவரும் நமது கடமையைச் செலுத்துவதில் தாமதம் புரிதல் கூடாது'' எனவும், திருநெல்வேலிச் சகோதரர்களுக்கு நாமனைவரும் நம்மால் இயன்ற உதவி செய்துத் தீரவேண்டுமென்பதில் ஆக்ஷேபமில்லை. இச்சமயத்தில் நாம் பிரிவுபட்ட ஆலோசனைகளால் நமது பொது முயற்சியைத் தளரவிடலாகாது'' எனவும் தமிழ்மக்களிடம் பாரதி மன்றாடிக் கேட்டுக் கொண்டார். 'நிதி நோக்க முயற்சிகள் நன்கு முடிக' என்று வாழ்த்துரையும் வழங்கினார், பாரதி.

விபின் சந்திரபாலர்

பாளையில் பாரதி

தேசபக்த நண்பர்கள் நிதிச் சேகரிப்புப் பணியில் ஈடுபட்ட போது, பாரதியும் அப்பணியில் தீவிரமாகப் பாடுபட்டார். நிதித் திரட்டும் பணி அறிக்கையில் அவரும் கையொப்பமிட்டு எந்த அளவுக்குப் பாடுபட முடியுமோ, அந்த அளவுக்கும் மேலாகவே பாடுபட்டார். மக்களின் நெஞ்சத்திலே வ.உ.சி. பற்றிய சித்திரத்தைப் பதியச் செய்ய பாரதி எடுத்துக்கொண்டப் பிரயத்தனங்கள் பலப்பலவாகும்.

தவிர, நெல்லை பாளையங்கோட்டைச் சிறைச் சாலையில் தவ வாழ்க்கையை மேற்கொண்டிருந்த வ.உ.சி., சிவா ஆகிய தம் நண்பர்களைக் காண 1908 ஏப்ரல் 26ஆம் தேதி நெல்லைக்குப் பாரதி வந்துச் சேர்ந்தார். பாரதி வரும்போது தம்முடன் தம் அருமை மனைவி செல்லம்மாளையும் அழைத்து வந்திருந்தார்.

பாரதி 27ஆம் தேதி பாளையங்கோட்டைச் சிறைக்குச் சென்று, நண்பர்களைச் சந்தித்துப் பேசினார்; வ.உ.சி.யும், சிவாவும் தங்களுடைய சொந்தக் காரியங்களைப் பற்றி மட்டிலுமே பாரதியோடு வார்த்தையாடாமல், உலகப் பொது விஷயங்களைப் பற்றி வெகு உல்லாசமாகப் பேசினார்கள்.

வ.உ.சி., சிவா ஆகியோர் சார்பில் வழக்காடும் வக்கீல்களுடன் நீதிமன்ற வளாகத்திற்குப் பாரதி சென்றிருந்தார்; சில நாட்கள் தங்கிப் பின்பு சென்னைத் திரும்பத் திட்டமிட்டிருந்தார். நெல்லையில் பாரதி தங்கியிருந்தபோது, 'பால பாரதா' பத்திரிகைக்கானச் சந்தாதாரர்களைச் சேர்ப்பதிலும் முனைந்து செயலாற்றினார்.

சென்னையிலிருந்து பாரதி புறப்பட்டுத் திருநெல்வேலி வந்தடைந்தது முதல் நெல்லையில் தங்கி இருந்த நாட்கள் வரை அவரை ரகசியப் போலீசார் நிழல் போலத் தொடர்ந்து வந்து அவருடைய நடவடிக்கைகளை எல்லாம் கூர்ந்துக் கண்காணித்து வந்தனர்.

தென்னிந்தியாவில் தேசிய இயக்கம் வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்த நிலையில், வட புலத்தில் தேசிய எழுச்சிப் போராட்டம் அற வழியினின்றும் நீங்கி, வெடிகுண்டு எறிதல் போன்ற கோரச் செயல்களில் திசைமாறிச் செல்லத் தொடங்கியது. 1908 ஏப்ரல் மாதம் 30ஆம் தேதியன்று முதன்முதலாக முஸாபர்பூரில் வெடிகுண்டு வெடித்தது.

போலீசார் கண்காணிப்பில் பாரதி

வங்கத்தின் முடிசூடா மன்னவராம் விபின் சந்திரபாலர் விடுதலைத் திருநாள் கொண்டாட்டமான 1908 மார்ச் 9ஆம் தேதி முதற்கொண்டே பாரதியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க முற்பட்டுவிட்ட போலீஸ்துறை, அதுபோதே கைதுச் செய்யவேண்டும் என்று துடிதுடித்தது. சந்தர்ப்பச் சான்றுகள் கிடைக்காதக் காரணத்தால், போலீசாரின் எண்ணம் நிறைவேறவில்லை.



சுரேந்திரநாத் ஆர்யா

இதனையடுத்து, 1908 மே மாதம் 10ஆம் தேதிய பேச்சை 'ஆட்சேபகரமானது' என்றுக் காரணங்காட்டி எப்படியாவது பாரதியைக் கைதுச் செய்யவேண்டும் என்று போலீஸ்துறை தீவிர முனைப்புடன் செயல்பட்டது; இதன்னியில், 'இந்தியா' பத்திரிகையில் வெளிவந்த விஷயங்களையும் 'ராஜபக்தி' விசுவாசத்துடன் பரிசீலிக்க முற்பட்டது.

இதுவேளை, நெல்லைக் கலவர' வழக்கும் சூடுபிடிக்க ஆரம்பித்தது. அக்கலவர வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட சுப்பிரமணிய சிவா 1908 ஜூன் 12, மற்றும் 25 ஆம் தேதிகளில் விசாரிக்கப்படுவதை முன்னிட்டு, அதில் சாட்சியம் அளிக்க நெல்லைக்கு வரும்படி பாரதிக்குச் 'சம்மன்ஸ்' அனுப்பப்பட்டது. 'சம்மன்ஸ்'படி திருநெல்வேலி செஷன்ஸ் கோர்ட்டில் ஆஜராக 1908 ஜூன் மாதம் 9ஆம் தேதி போட்மெயிலில் பாரதி சென்னையிலிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்டு விட்டார்; மறுநாள் சென்றடைந்தார். காலை நெல்லைக்குப் புறப்பட்டுவிட்ட செய்தியைத் தந்தி மூலமாகச் சென்னை நகர ரகசியப் போலீசார் மதுரை திருநெல்வேலி மாவட்ட போலீஸ் சூப்பிரெண்டெண்டுக்குத் தெரிவித்தனர்.

பாரதியைச் சாட்சியம் அளிக்கக் கோர்ட்டில் என்னக் காரணத்தாலோ அழைக்கவில்லை. இருந்த போதிலும், ஜூன் 21ஆம் தேதி வரை நெல்லையிலே தங்கி இருந்தார்; 22ஆம் தேதி காலை சென்னையை வந்தடைந்தார்; ரயில்வே போலீசாரும் பாரதியை ரகசியமாகக் கண்காணிக்கவே செய்தனர்.

சென்னைத் திரும்பிய பாரதி 'சும்மா' இருக்கவில்லை. திரும்பிய கையோடு நண்பர்களுடன் கலந்துபேசி, கூட்டம் ஒன்றிற்கும் ஏற்பாடு செய்திருந்தார். திடீரென்று எவ்வித முன்னேற்பாடும் செய்யாமல் கூட்டப்பட்டதால், கூட்டம் திருவல்லிக்கேணி சீமாட்டி பூங்காவிற்கு எதிரே அமைந்திருந்த தெற்குக் கடற்கரையில் நடைபெறும் என்பதாக அறிவிக்கப்பட்டது; துண்டுப் பிரசுரங்கள் மூலம் அறிவிக்கவும் அவகாசம் இல்லை.

சுதேசி உபந்நியாசி

கூட்டத்திற்குப் பொதுமக்களும் கணிசமான அளவில் வந்து விட்டிருந்தனர். இந்த நிலையில் பாரதிக் கூட்ட மேடையில் தோன்றினார். திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தேசியப் பிரசங்கங்கள் எவையும் செய்யக்கூடாது என்று சென்னை நகரப் போலீஸ் கமிஷனர் தடையுத்தரவு பிறப்பித்துவிட்டக் காரணத்தால், பொதுமக்களை அமைதியாகக் கலைந்து செல்லும் படியும், கூட்டம் திட்டமிட்டபடி ஜனசங்கக் கட்டிடத்தில் நடைபெறும் என்றும் தெரிவித்தார், பாரதி.

மக்களும் பாரதியின் வேண்டுகோளுக்கு இணங்கக் கலைந்து சென்றனர்; ஜன சங்கக் கட்டிடத்தில் கூட்டப்பட்ட கூட்டத்திலும் கலந்துக் கொண்டனர். அங்கு நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பாரதி பேசினார். பாரதியின் மேடைப் பேச்சுக்கள் அரசு அதிகாரிகளைக் கலக்கமடையச் செய்தன. குறிப்பாக, போலீஸ் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டன என்றே சொல்லலாம்.

புதுவை 'இந்தியா'

இந்தியா.

"INDIA"

பாரதியை வெளியே இருக்க விடுவது அதாவது, பேசவிடுவது ஆபத்து என்று போலீஸ் கமிஷனரும் கருதி, பாரதி பேரில் சட்டப்பிரிவுகள் 124A, 153A பிரகாரம் 'பழைய குப்பையைக் கிளறுவது என்பார்களே அதே மாதிரியில், 1908 மார்ச் 9 மற்றும் மே 10 ஆகிய தேதிகளில் அவர் பேசிய பேச்சுக்களுக்காக வழக்குத் தொடர விரும்பி, அதற்கான நடவடிக்கைகளைத் தீவிரக் கதியில் மேற்கொண்டார். பொதுவாக, அதுவேளை பாரதியைப் பலரும் தேசிய கவிஞர் என்றும், பத்திரிகையாளர் என்றும் சொல்லிப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்க, போலீஸ் தரப்பு அவரைச் சுதேசி உபந்நியாசி (Swadesi Preacher) என்றே குறிப்பித்துப் பெருமைப்படுத்தியது.

போலீஸ் கமிஷனர் பி.தி.வில்கீஸன் என்பவர் அட்வொகேட் ஜெனரலிடம் தொடர்புக் கொண்டார்; பாரதியின் குறிப்பிட்ட சொற்பொழிவுகளைப் பற்றி அவருடைய கருத்துருவைக் கேட்டுப் பெற்றார். அட்வொகேட் ஜெனரலும் பாரதியின் சொற்பொழிவுகள் இந்திய தண்டனைச் சட்டப்படி குற்றமுடையன என்றே அறிவுறுத்தினார். 1908 ஜூன் 24ஆம் தேதியன்று சென்னை அரசாங்கத் தலைமைச் செயலருக்கு, பாரதியால் நிகழ்த்தப்பட்ட இருச் சொற்பொழிவுகளுடன், அட்வொகேட் ஜெனரலிடம் பெற்றக் கருத்துருவையும் இணைத்து அனுப்பி, பாரதி பேரில் குற்றப் பத்திரிகை தயாரிக்க அரசாங்க உத்தரவைப் பெற அனுமதி கோரினார், போலீஸ் கமிஷனர். ஆனால் அனுமதி அளிப்பதற்குப் போதுமான ஆதாரங்களாக இல்லை என்று அரசின் உயர்மட்ட அதிகாரிகள் கருதினர். காலதாமதமாக அனுமதி கேட்கப்படுவதாகச் சொன்னார்கள். "9 மார்ச், 10 மே ஆகிய தேதிகளில் பேச்சுக்கள் நிகழ்த்திய சுப்பிரமணிய பாரதி மீது வழக்குத் தொடர வேண்டிய அவசியமில்லை என்பதாக ஹிஸ் எக்ஸலன்ஸி இன் கௌன்ஸில் கருதுகிறார்" (அரசு ஆணை எண்: 923 நாள்: 04.7.1908) என்றும் சொல்லப்பட்டு விட்டது.

பாரதியைப் பொறுத்தமட்டில் ‘இந்தியா’ பத்திரிகையில், எழுத்தில் புதுவழியைக் கண்டு, கம்பீரமான நடையில் எழுதிய காரணத்தால், பத்திரிகை பிரபலம் அடையலாயிற்று. பத்திரிகைப் பிரபலப்பட பிரபலப்பட, பாரதியும் எழுத்தில் வேகத்தையும் விறுவிறுப்பையும் காட்டினார்; சிறிதும் அச்சமின்றி எழுதினார்.

‘இந்தியா’ பத்திரிகை சட்டவரம்பை மீறிய எழுத்துக்களைக் கொண்டு வெளிவந்ததாகச் சென்னை நகரப் போலீஸ் கமிஷனர் முடிவு செய்து விட்டார். முடிவுச் செய்தக் கையோடு இந்தியா’ பத்திரிகையின் இதழ்களின் சில விஷயங்கள் மொழிபெயர்க்கப்பட்டன; சட்டத் துறையினரின் ஆலோசனைக்கும் அனுப்பப்பட்டன. இறுதியில், இந்தியா பத்திரிகையில் ‘இராஜத் துரோகக் கருத்துக்கள்’ உள்ளன எனக் கருதப்பட்டு, சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே, சென்னை போலீஸ் கமிஷனர் தலைமைச் செயலருக்கு ஒரு கடிதத்தை 1908 ஜூன் 24 ஆம் தேதி எழுதினார். அதில், அவர் ‘இந்தியா’ பத்திரிகையில் கலவரத்தைத் தூண்டும்படியானக் கட்டுரைகள் வெளிவருவதால், அப்பத்திரிகையின் மீது முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றுப் பரிந்துரை செய்திருந்தார். எனவே பாரதி கைதுச் செய்யப்படும் சூழல் உருவானது. புதுச்சேரி சென்றார் பாரதி.

புதுச்சேரியில் பாரதி

புதுவையில் பாரதிக்குத் தக்கச் சமயத்தில் உதவிட நண்பர்கள் கிடைத்தனர். நண்பர்களின் ஒத்துழைப்பால் பாரதியும் ஓரளவு மன அமைதி பெற்றார்; என்றாலும் தொடர்ந்துச் சோதனைகள் அவர் வாழ்வில் குறுக்கிட்டவண்ணம் இருந்தன. வாழ்க்கையில் சோதனைகள் தொடர்ந்த நிலையிலும், பாரதி நெஞ்சம் கலங்கினார் இல்லை.

நெருக்கடி நிலையில் பாரதி தவித்தபோது, அவருடையக் கவலையைப் போக்கிப் – பாரதிக்கு உற்றத் துணைவராக இருந்து உதவிகள் பல புரிந்தவர் – குவளைக் கண்ணன் என்கிற குவளையூர் கிருஷ்ணமாச்சாரியார். அதுவேளை சென்னையிலிருந்துத் தனியே புறப்பட்டு வந்திருந்த எஸ்.என்.திருமலாச்சாரியும் பாரதியைச் சந்தித்தார். இதன்பின் ஸ்ரீ.ஸ்ரீ.ஆசார்யார் அவர்களும் புதுவையை வந்தடைந்தார். மூவரும் ஒன்றுசேர்ந்தனர்.

ஸ்ரீ.ஸ்ரீ.ஆசார்யார் அவர்களுக்குப் புதுவை பழக்கப்பட்ட ஊர்; பலரை அவர் நன்கு அறிவார்; சிறு வயதில் அவர் புதுவையில் படித்தவர். ஸ்ரீ.ஸ்ரீ.ஆசார்யார் அவர்களைக் கண்டதும் பாரதிக்குத் தெம்பு வந்து விட்டது. ‘இனி என்னக் கஷ்டம் வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம்‘ என்றத் தைரியமும் பாரதிக்குப் பிறந்துவிட்டது.

புதுச்சேரியில் இந்தியா

பாரதி, திருமலாச்சாரி, ஸ்ரீ.ஸ்ரீ.ஆசார்யார் ஆகிய மூவரும் ஒன்றுகூடி எதிர்காலத் திட்டங்கள் பற்றி யோசிக்கலானார்கள்; இடையில் இவர்கள் மூவருமாக ஐரோப்பா சென்று சுற்றுப்பயணம் செய்வதென்று தீர்மானித்தனர். அதற்குமுன் ‘இந்தியா’ பத்திரிகையைப் புதுவையில் நடத்தத் தக்க ஏற்பாடு செய்துவிட்டுச் செல்வதென்றும் முடிவாயிற்று.

பத்திரிகை நடத்தும் பொறுப்பை திரு. எம்.பி.டி. ஆசார்யா அவர்களிடம் ஒப்படைக்கவும் அவர்கள் கருதினர்.

எம்.பி.டி.ஆசார்யா அவர்கள் அதுவேளை சென்னையில் இருந்தார். தங்கள் திட்டங்களைப் பற்றி எம்.பி.டி.ஆசார்யாவிடம் தெரிவிக்கக் கருதிய வேளையில், அவரே சென்னையிலிருந்து திடீரென்று ஒருநாள் புதுவை வந்து சேர்ந்தார். அவரிடம் 'இந்தியா' பத்திரிகைப் பொறுப்பைப் பற்றிப் பேசியபோது, அவர் தாம் இங்கிலாந்து செல்ல இருப்பதாகவும், தம்மால் பத்திரிகைப் பொறுப்பை ஏற்க இயலாது என்றும் தெரிவித்து விட்டார். அதனால் பாரதி குழுவினரின் ஐரோப்பா பயணம் தடைப்பட்டு விட்டது.

இந்தியா இதழை மீண்டும் தொடங்க சென்னையில் இருந்து அச்சகச் சாமான்களைப் புதுவைக்குக் கொண்டு வருவதில் ஈடுபட்டனர்; அதன்படி அச்சகச் சாமான்களும், அச்சு இயந்திரப் பகுதிகளும் புதுவைக்கு வரவழைக்கப்பட்டன. அச்சகத்திற்கு வேண்டிய அனைத்துப் பொருட்களும் சேகரிக்கப்பட்டு, அச்சகமும் அமைக்கப்பட்டு விட்டது. அச்சகத்தில் பணியாற்றப் பணியாட்களும் நியமிக்கப்பட்டுவிட்டனர்.

'இந்தியா' பத்திரிகையை வெளிக் கொண்டு வருவதற்கான அனைத்து ஆயத்தங்களும் நடைபெற்று விட்டன. முறைப்படி, பத்திரிகையைப் பதிவு செய்ய வேண்டியப் பணி ஒன்றுதான் எஞ்சி இருந்தது.

புதுவையில் 'இந்தியா' பத்திரிகை ஆரம்பிக்கப் பிரெஞ்சு அரசிடம் விண்ணப்பிக்கப்பட்டது. பாரதிக் குழுவினரின் முன் நடவடிக்கைகளைக் கேட்டறிந்த பிரெஞ்சு அரசினர், ஆரம்பத்தில் பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கான அனுமதியை வழங்க மறுத்தனர். இதைக் கண்டு பாரதியும் மற்றவர்களும் மனம் கலங்கவில்லை. பிரெஞ்சுச் சட்டப்படி, புதுவையில் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமானால், பிரெஞ்சுக் குடிமகனாக இருக்க வேண்டும் என்ற விதிமுறையை அவர்கள் அப்போதுதான் தெரிந்துக் கொண்டனர். நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில், ஸ்ரீ.ஸ்ரீ.ஆசார்யார் அவர்கள் துணிச்சலுடன் செயலில் இறங்கினார்; புதுவையைச் சார்ந்த வில்வ நல்லூரில் வசித்து வந்த அவருடைய பழைய நண்பரான எஸ். லக்ஷ்மி நாராயண ஐயர் பெயரில் இதழ் வெளியானது.

புதுவையில் புனர்ஜென்மம் எடுத்த 'இந்தியா'

சென்னையில் 1908 செப்டம்பர் 5 ஆம் தேதியன்று, பிரிட்டிஷ் அரசு மேற்கொண்ட நடவடிக்கையால் நின்றுபோன இந்தியா பத்திரிகை புதுச்சேரி அரசின் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு 1908 அக்டோபர் 10ஆம் தேதி முதற்கொண்டு பவனி வரத் தொடங்கியது. ஸ்வதந்திரம் (Liberte), ஸமத்துவம் (Egalite), ஸஹோதரத்துவம் (Fraternite) என்கிற இந்த மூன்று மணிமந்திரங்களையே தனது மூலாதார இலட்சிய முழக்கமாகக் கொண்டு 'இந்தியா' பத்திரிகை புதுச்சேரியில் மறுபிறவி எடுத்துவிட்டது.

புதுவை 'இந்தியா' பதிப்பிலும் பாரதியின் பெயர் இல்லை. அவ்வப்போது, அவர் பெயரால் பாடல்கள் வெளிப்பட்டன. என்றாலும், முழுப் பொறுப்பும் பாரதியினுடையது என்பது சொல்லித் தெரிய வேண்டிய அவசியமே இல்லை.

பிரெஞ்சு அரசும் பிரிட்டிஷ் அரசைப் போல் தங்களைக் கருதிவிடக்கூடாது என்பதால், பத்திரிகையை வெளியிட்டக் கையோடு, தங்கள் நோக்கங்கள் எவையெவை என்பனவற்றை மிகத் தெளிவாகப் பாரதி புலப்படுத்தினார். அமைதி, ஒழுங்கு, அபிவிருத்தி ஆகிய இவையே தங்களுடைய ‘இந்தியா’ பத்திரிகையின் குறிக்கோள்கள் என்பதை ஒரே சமயத்தில் பிரெஞ்சு பிரிட்டிஷ் அரசு அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டார்.

ஸ்வராஜ்யம்

தெள்ளத் தெளிவாக, ஒளிவு மறைவு இல்லாமல், சட்டத்திற்குச் சிறிதேனும் விரோதமில்லாதச் செயல்கள்தாம் தம் பத்திரிகைப் பணியும், தாம் மேற்கொண்டுள்ளப் புனிதமான ‘ஸ்வராஜ்ய முயற்சியும் என்பதைப் பாரதி புதுச்சேரி வந்தப் பின்னரும் புலப்படுத்திய பாங்கு பாரதி ‘யார்’ என்பதைப் பலருக்கும் இனங்காட்டி விட்டதெனலாம்.

பிரெஞ்சு தேச ராஜாங்கத்தின் நீதியை மதித்து நடப்பதாக உறுதியளித்த பாரதி, அதே நேரத்தில் உட்கட்சிப் பூசல்களில் கவனம் செலுத்தப் போவதில்லை என்றும் தெரிவித்தார். எல்லாவற்றுக்கும் மேலாகத் தாம் தஞ்சம் புகுந்துள்ள பிரெஞ்சு ராஜாங்கத்தில் ஏதேனும் சீர்திருத்தங்கள் தேவை என்றுக் கருதினால், அவையும் அப்போதப்போது அச்சமின்றித் தெரிவிப்பதும் தம்முடைய கடமை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

மற்றும், பிரிட்டிஷ் இந்தியா மக்கள் அமைதியுடனும், ஒழுங்குடனும் சுயாட்சிப் பெறுவதற்கான முயற்சிகள் செய்து வரவேண்டும் என்பதை இடைவிடாமல் வற்புறுத்தி எழுதி வருவதும் தம்முடைய தலையாய தர்மம் என்றும், அப்படி எழுதி வருவதுச் சட்ட விரோதமானச் செயலன்று என்றும் பாரதி அரசு அதிகாரிகளுக்கு உணர்த்தினார். ஆக, சட்டத்திற்கு உராய்தல் இல்லாத ஸாத்விக நெறியில் ‘ஸ்வராஜ்யம்‘ பெறுவதே தம் நோக்கம் என்பதைப் பாரதி உணர்த்தியதைக் கண்டோம்.

உண்மையான தேசபக்தி கொண்டோர் எல்லாம் ‘இந்தியா’ பத்திரிகையைத் தம்முடையதாகவே கருதிப் போற்றினர்; குறிப்பாக, பிரிட்டிஷ் இந்தியத் தமிழக மக்களின் ஆதரவாலும், புதுச்சேரி அன்பர்களின் அரவணைப்பாலும் பத்திரிகையின் செல்வாக்கு அபரிமிதமாக வளர்ந்தது. பாரதி அறிவித்தபடி ‘இந்தியா’ பத்திரிகையானது தன்னுடைய உயரிய இலட்சியக் கொள்கைகளினின்றும் சற்றும் வழுவாமல் பணியாற்றி வந்தது.

புதுச்சேரியிலும் பிரிட்டிஷார்

பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் பார்வையில் பிரெஞ்சுக் குடியேற்றமான புதுச்சேரியானது அரசியல் குற்றவாளி தஞ்சம் அடைவதற்கான ஆபத்தில்லாதப் புகலிடமாகக் காட்சி தந்தது. புதுச்சேரியில் பாதுகாப்பாக இருந்துக்கொண்டு, பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கும் பத்திரிகையை வெளியிட்டு, அப்பத்திரிகைப் பிரதிகளைப்

பிரிட்டிஷ் இந்தியாவில் விற்பனைச் செய்வதற்கும் ஏற்றக் களமாக அமைந்து விட்டதே என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் கலக்கம் கொண்டனர்.

பாரதி, திருமலாச்சாரி, சீனிவாஸாச்சாரி ஆகியோர் புதுச்சேரியைப் புகலிடமாகக் கொண்டு, வெகுவிரைவில் பத்திரிகையை ஆரம்பித்துவிட்டது கண்டு, பிரிட்டிஷ் அதிகாரிகள் மனம் புழுங்கினர். ஆகவே, பாரதி குழுவினர்க்கு எந்த வகையிலேனும் தொந்தரவுகள் தரப் பிரிட்டிஷ் அதிகாரிகள் திட்டமிட்டனர்.

முதல் கட்ட நடவடிக்கையாக, தங்கள் அரசுக்கு எதிராகச் செயல்படும் 'இந்தியா' பத்திரிகையை அதுவும் தங்கள் சட்டத்தின் பிடியிலிருந்துத் தப்பித்துத் தஞ்சம் புகுந்துள்ளவர்களால் நடத்தப்படும் பத்திரிகையை – ஒடுக்குவதற்கான ஒத்துழைப்பைத் தங்களுக்கு அளிக்கும்படியாகச் சென்னை மாகாண அரசு அப்போதைய பிரெஞ்சுக் கவர்னரைக் கேட்டுக் கடிதம் எழுதியது, 1909 ஜனவரி வாக்கில் பிரெஞ்சுக் கவர்னரிடமிருந்து சென்னை மாகாண அரசுக்குச் சாதகமானப் பதில் கிடைக்கவில்லை.



தன்னுடைய முதல் கட்ட முயற்சியில் வெற்றி காண முடியாத நிலையில், அடுத்தக் கட்ட முயற்சியில் பிரிட்டிஷ் அரசு ஈடுபட்டது. தனதுப் போலீஸ்துறையைச் சார்ந்தவர்களைக் கொண்டு பாரதி குழுவினரை வேவுப் பார்க்க வைத்தது: அவ்வப்போது சிறுசிறு தொல்லைகளைக் கொடுத்துப் பாரதி குழுவினரின் நிம்மதியைக் குலைத்து வந்தது.

உண்மையிலேயே, சுதந்திர உணர்ச்சி பெறவும், அடிமையில் மோகம் தீரவுமான முயற்சிகளில் பாரதி குழுவினர் சட்டரீதியிலான சாத்விக முறைகளையே கையாண்டு பணி புரிந்து வந்தனர் என்பதைப் பிரெஞ்சு அரசாங்கம் நம்பியது. அதனால், அவர்களிடம் எந்தவொரு விளக்கத்தையும் கேட்கவில்லை.

விஜயா பிறந்தது

பிரிட்டிஷ் இந்தியப் போலீசார் தந்தக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும், 'இந்தியா' வாரப் பத்திரிகையில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள் குறித்தும், செய்திகளை அன்றன்றுத் தரவேண்டும் என்பதற்காக நாளேடு ஒன்று வெளியிடுவதுத் குறித்தும் பாரதி உள்ளிட்ட மண்டயம் குடும்பத்தார் தீவிரமான ஆலோசனையில் ஈடுபட்டனர்.

அதன் விளைவாக அரியப் – பெரிய விஷயங்களைத் தாங்கி விஜயா என்றப் பெயரில் தினசரியானது 1909 செப்டம்பர் 7ஆம் தேதி முதல் புதுவை மண்ணிலிருந்து பவனி வந்தது. இதன் ஆசிரியர் பாரதி என்பது சொல்லாமலே விளங்கும். தமிழ் மக்களின் பொது அறிவு விருத்திக்கும், அரசியல் ஞானத் தெளிவிற்கும் 'விஜயா' பணிபுரிவதைத் தன் தலையாயக் கொள்கையாகக் கொண்டிருந்தது; தீவிரமானக் கருத்துக்களைக்

கொண்டக் கட்டுரைகள் தாங்கிய ஏடு என்று பிரிட்டிஷ் அரசு குறியும் வைத்தது.

“‘விஜயா’ நாளேடு வெளிவந்த ஒருமாதக் கால இடைவெளியின் பின் ‘இந்தியா’ வாரப் பத்திரிகை இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்துவைத்தது. பிரிட்டிஷ் அரசின் கொடுமைகளை அஞ்சாமல் எடுத்துச் சொல்லி, கொண்ட கொள்கைகளுக்காகப் பலவித கஷ்டங்களையும் ஏற்று, நம் நாட்டின் நன்மையை நாடி இயன்ற அளவு நிரந்தரமான நீதி நியமங்களைப் போதனை செய்து வந்தார், பாரதி.

‘இந்தியா’, ‘விஜயா’ ஆகியப் பத்திரிகைகளுக்குப் புதுவை மக்களிடையே. எதிர்பார்த்த அளவுக்கும் அதிகமாக ஆதரவு கிடைத்தது. நாட்பட நாட்பட விற்பனையும் கூடியது. பத்திரிகைகளின் விற்பனையும், ஆதரவும் பாரதியை உற்சாகம் கொள்ளச் செய்தன.

ஆங்கில – தமிழ் விளக்கங்கள் அடங்கியச் சித்திரங்கள் நிரம்பிய மாதப் பத்திரிகை ஒன்றைச் சித்திராவளி என்ற பெயரால் ஆரம்பித்தால் என்ன என்கிற ஆசை பாரதிக்குத் தோன்றியது. பத்திரிகையை 1909 டிசம்பர் மாதத்திலிருந்துக் கொணரவும் முயற்சி செய்தார் பாரதி. ஆனால், என்ன காரணத்தாலோ புதிய பத்திரிகை முயற்சி கைகூடவில்லை.

கடலூரில் கைது!

1912 ஆம் ஆண்டு முதலாகப் பாரதிக்கு தமிழகம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்துவிட்டது. அதனால் தான் அரசின் கருத்தை அறிந்துக் கொள்ள சென்னை மாகாண கவர்னருக்குப் பலக் கடிதங்கள் எழுதினார். 1914 ஆம் ஆண்டில் அவர் பேரில் வழக்குத் தொடரப்படும் என்று சட்டசபையில் தெரிவித்தத்தன் பேரில் தமிழகம் திரும்பும் ஆசையை கைவிட்டு விட்டார். சில ஆண்டுகள் கழித்து 1918 நவம்பர் 20 ஆம் தேதி புதுவையை விட்டுக் கிளம்பிவிட்டார். பிரிட்டிஷ் ஆட்சியின் எல்லையான கடலூரில் கைதுச் செய்யப்பட்டார். டிசம்பர் 14ஆம் தேதி விடுதலைச் செய்யப்பட்டார். கடையத்தில் வாழ்ந்த அவர், 1920ஆம் ஆண்டு மீண்டும் சென்னை வந்தார். மீண்டும் சுதேசமித்திரனில் பணியாற்றினார். பத்திரிகைப் பணிபோக எஞ்சிய நேரத்தை வேதாந்த விசாரணையில் கழிக்க முற்பட்டார்.

அமரர் பாரதி

அன்பர்களின் அழைப்பை ஏற்று பொதுக்கூட்டங்களில் கலந்துக் கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றினார். 1921 செப்டம்பர் மாதவாக்கில் அவரது உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. வயிற்றுக்கடுப்பு நோய் அவரை வாட்டி எடுத்தது. செப்டம்பர் 11 ஆம் நாள் தாண்டி 12 ஆம் நாள் அதிகாலை 1 மணிக்கு பாரதியின் உயிர்ப்பறவை உடற்கூட்டிலிருந்து சிறகடித்துப் பறந்து சென்றுவிட்டது.

முப்பத்தொன்பதாம் வயது முடியும் முன்பே மரணத்தைக் கடந்தார் அல்லது மரணத்தை வென்றார்.

பாரதி அமரர், அவருக்குச் சாவு கிடையாது.

***

தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

சுதந்திரப் பள்ளு

பல்லவி

ஆடுவோமே – பள்ளுப் – பாடுவோமே ;
ஆனந்த ஸ்வதந்திரம் அடைந்து விட்டோம் என்று

சரணங்கள்

பார்ப்பானை ஐயர்என்ற காலமும்போச்சே – வெள்ளைப்
பரங்கியைத் துரைஎன்ற காலமும்போச்சே – பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும்போச்சே – நம்மை
ஏய்ப்போருக்கு ஏவல்செய்யும் காலமும் போச்சே. (ஆடுவோமே)

எங்கும் சுதந்திரம் என்பதேபேச்சு – நாம்
எல்லோரும் சமம்என்பது உறுதிஆச்சு;
சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே – இதைத்
தரணிக்குஎல்லாம் எடுத்து ஓதுவோமே. (ஆடுவோமே)

எல்லோரும் ஒன்றுஎன்னும் காலம்வந்ததே – பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம்வந்ததே – இனி
நல்லோர் பெரியர்என்னும் காலம்வந்ததே – கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம்வந்ததே. (ஆடுவோமே)

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் – வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனைசெய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் – வெறும்
வீணருக்கு உழைத்துஉடலம் ஓயமாட்டோம். (ஆடுவோமே)

நாம்இருக்கும் நாடுநமது என்பது அறிந்தோம் – இது
நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம் – இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி அடிமைசெய்யோம் – பரி
பூரணனுக்கே அடிமை செய்துவாழ்வோம். (ஆடுவோமே)

ஓவியம்: ரவி

அச்சமில்லை

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றுவிட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
நச்சைவாயி லேகொணர்ந்து நண்பரூட்டு போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே,
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.

ஓவியம்: ரமணன்

வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்;
வாக்கினி லேயினிமை வேண்டும்;

நினைவு நல்லது வேண்டும்;
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;

கனவு மெய்ப்பட வேண்டும்;
கைவசமாவது விரைவில் வேண்டும்;

தனமும் இன்பமும் வேண்டும்;
தரணியிலே பெருமை வேண்டும்.

கண் திறந்திட வேண்டும்;
காரியத்தி லுறுதி வேண்டும்;

பெண் விடுதலை வேண்டும்;
பெரிய கடவுள் காக்க வேண்டும்

மண் பயனுற வேண்டும்;
வானகமிங்கு தென்பட வேண்டும்;

உண்மை நின்றிட வேண்டும்,
ஓம் ஓம் ஓம் ஓம்.

ஓவியம்: பிரேம் டாவின்ஸி

ஓவியம்: கோபிஓவியன்

பொய்யோ? மெய்யோ?

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே, நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ? – பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே! கேட்பதுவே, கருதுவதே, நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே நீங்க ளெல்லாம்
கானலின் நீரோ? – வெறுங் காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப்போற் புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ இந்த ஞாலமும் பொய்தானோ?

காலமென்றே ஒரு நினைவும் காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ? அங்குக் குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்க ளெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ? –இதைச் சொல்லொடு சேர்ப்பாரோ?

காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம் காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலேநித்தம் – விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதியில்லை;
காண்பது சக்தியாம் – இந்தக் காட்சி நித்தியமாம்.



நாட்டு வணக்கம்

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே – இதை
வந்தனைகூறி மனதில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ? – இதை
‘வந்தே மாதரம், வந்தே மாதரம்’
என்று வணங்கேனோ?

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து, அருள்
ஈந்ததும் இந்நாடே – எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே – அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே – தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி, இல்
போந்ததும் இந்நாடே – இதை
‘வந்தே மாதரம், வந்தே மாதரம்’
என்று வணங்கேனோ?

மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே – அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே – மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே – பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே – இதை
‘வந்தே மாதரம், வந்தே மாதரம்’
என்று வணங்கேனோ?

பாரத தேசம்

வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம்; அடி
 மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்;
பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்கு வோம்; எங்கள்
 பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்;
 சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
 மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்

வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்
 வேறு பலபொருளும் குடைந் தெடுப்போம்;
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே
 எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்

முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே;
 மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே,
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
 நம்மருள் வேண்டுவது மேற்க ரையிலே.

சிந்து நதியின்மிசை நிலவினிலே
 சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
 தோணிக ளோட்டிவிளை யாடிவரு வோம்.

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்;
 காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்;
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
 சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

காசி நகர்ப்புலவர் பேசும் உரை தான்
 காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய் வோம்;

ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம்

பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வார்''
காசினி வணிகருக்கு அவை கொடுப்போம்

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள்வைப் போம்கல்விச் சாலைகள்வைப்போம்;
ஓயுதல்செய் யோம்தலை சாயு தல்செய் யோம்;
உண்மைகள் சொல் வோம்பல வண்மைகள் செய்வோம்

குடைகள்செய் வோம்உழு படைகள் செய் வோம்;
கோணிகள்செய் வோம்இரும் பாணிகள் செய்வோம்;
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய் வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்

மந்திரம்கற் போம்வினைத் தந்திரம்கற் போம்;
வானையளப் போம்கடல் மீனையளப் போம்;
சந்திரமண் டலத்தியல் கண்டுதெளி வோம்;
சந்திதெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்

காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம்;
கலைவளர்ப் போம், கொல்ல ருலைவளர்ப் போம்;
ஓவியம்செய் வோம் நல்லஊசிகள்செய் வோம்;
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்.

சாதி இரண்டொழிய வேறில்லை! யென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்
நீதி நெறி யினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்.



துடிக்கின்ற நெஞ்சம்

நெஞ்சு பொறுக்கு திலையே–இந்த
        நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார்–இவர்
        அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார்–இந்த
        மரத்தில் என்பார்; அந்த குளத்தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார்மிகத்
        துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்.

மந்திர வாதி என்பார்–சொன்ன
        மாத்திரத்திலேமனக் கிலிபிடிப்பார்;
யந்திர சூனியங்கள்–இன்னும்
        எத்தனை ஆயிரம் இவர் துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே–ஜனம்
        தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்;

அந்த அரசியலை-இவர்
        அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார்

சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்-ஊர்ச்
        சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டு ஒருவன்-வெகு
        தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான்-அவன்
        ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்;
எப்போதும் கைகட்டுவார்-இவர்
        யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கிநடப்பார்

நெஞ்சு பொறுக்கு திலையே-இந்த
        நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்,
கொஞ்சமோ பிரிவினைகள்?-ஒரு
        கோடிஎன் றால்அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென் பான்-அப்பன்
        ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்-பின்பு
        நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.

சாத்திரங்கள் ஒன்றும் காணார்-பொய்ச்
        சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்றா யிருந்தாலும்-ஒரு
        கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ் வார்;
தோத்திரங்கள் சொல்லி அவர்தம்-தமைச்
        சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்;
ஆத்திரங் கொண்டே இவன் சைவன்-இவன்
        அரிபக்தன் என்றுபெருஞ் சண்டையிடுவார்.

நெஞ்சு பொறுக்கு திலையே-இதை
        நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே?
கஞ்சி குடிப்பதற் கிலார்-அதன்
        காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே-நிதம்
        பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின்றாரே-இவர்
        துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே

எண்ணிலா நோயுடையார்-இவர்
        எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தை கள்போல்-பிறர்
        காட்டிய வழியிற்சென்று மாட்டிக் கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்-பத்து
        நாலாயிரங் கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே-இவர்
        பொறியற்ற விலங்குகள்போல வாழ்வார்.

வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களி படைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறு போல் நடையினாய் வா வா வா.

மெய்மை கொண்ட நூலையே – அன்போடு
வேதம் என்று போற்றுவாய் வா வா வா
பொய்மை கூறல் அஞ்சுவாய் வா வா வா
பொய்மை நூல்கள் எற்றுவாய் வா வா வா
நொய்மை அற்ற சிந்தையாய் வா வா வா
நோய்கள் அற்ற உடலினாய் வா வா வா
தெய்வ சாபம் நீங்கவே, நங்கள்சீர்த்
தேசம் மீது தோன்றுவாய் வா வா வா,

இளைய பாரதத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினாய் வா வா வா
ஒளி இழந்த வானிலே – நின்றுஏறும்
உதய ஞாயிறு ஒப்பவே வா வா வா
களை இழந்த நாட்டிலே – முன்போலே
களை சிறக்க வந்தனை வா வா வா
விளையும் மாண்பு யாவையும் – பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய் வா வா வா.

வெற்றி கொண்ட கையினாய் வா வா வா
விநயம் நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமை சேர் முகத்தினாய் வா வா வா
கற்றல் என்றும் பொய்கிலாய் வா வா வா
கருதியது இயற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக்குள் உய்யவே – நாடுஎல்லாம்
ஒரு பெரும் செயல்செய்வாய் வா வா வா.



தமிழ் நாடு

ஓவியம்: மணிவண்ணன்

செந்தமிழ் நாடெனும் போதினிலே–இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே–எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே–ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

வேதம் நிறைந்த தமிழ்நாடு–உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு நல்ல
காதல் புரியும் அரம்பையர்போல்–இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு

காவிரி தென்பெண்ணை பாலாறு–தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி–என
மேவிய யாறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு

முத்தமிழ் மாமுனி நீள்வரையே–நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு–செல்வம்
எத்தனையுண்டு புவிமீதே – அவை
யாவும் படைத்த தமிழ்நாடு

நீலத் திரைக்கட லோரத்திலே–நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை–வட
மாலவன் குன்றம் இவற்றிடையே–புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு–புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு–நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு

வள்ளுவன் தன்னை உலகினுக்கே–தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு–நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்–மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

சிங்களம் புட்பகம் சாவக–மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி – அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்–நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு

விண்ணை யிடிக்கும் தலையிமயம் – எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார் – சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார் – தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு

சீன மிசிரம் யவனரகம் – இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் – கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு



தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
    இனிதாவது எங்கும் காணோம்;
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
    இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
    வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
    பரவும்வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
    வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
    உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
    வாழ்கின்றோம் ஒரு சொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
    தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணங்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வாழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

வ.உ.சி. கண்ட



பாரதியாரின் தந்தை ஸ்ரீ சின்னச்சாமி ஐயர் எட்டையபுரம் சமஸ்தானத்தில் உத்தியோகம் வகித்து வந்தார். அதே காலத்தில் எனது தந்தையார் ஸ்ரீ.வ.உலகநாத பிள்ளை அதே சமஸ்தானத்தில் வக்கீலாக சேவை செய்து கொண்டிருந்தார். என் தகப்பனாருடன், பாரதியாரின் தந்தையார் எங்கள் சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரத்திற்கு அடிக்கடி வருவதுண்டு.

எங்கள் ஊர் சரித்திரப் பிரசித்தமானது. 'வானம் பொழியுது, பூமி விளையுது: மன்னவன் காணிக்குக் கிஸ்தி ஏது?' என்று முழங்கி ஆங்கிலக் கும்பினியாரோடு அருஞ்சமர் புரிந்து பெரும்புகழ் எய்திய பாஞ்சாலங்குறிச்சிப் பாளைய மன்னன் வீரன் கட்டபொம்மன் காலத்தில் ஒட்டப்பிடாரம் சீரும் சிறப்பும் பொருந்திய சிற்றூராகத் திகழ்ந்தது. பின்னர் சமீப காலம்வரை ஒட்டப்பிடாரத்தில் தாலுகா கச்சேரியும், தாலுகா மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் இருந்து வந்தன.

இவ்விரண்டு கச்சேரிகளில் ஏதாவது ஒன்றில் 'ஜோலி'யாகவே எங்களூருக்கு ஸ்ரீமான் ஐயர் என் தந்தையாருடன் வருவார்.

அங்கு வந்த காலத்தில் என் வீட்டிலாவது, என் வீட்டிற்கு மேற்கேயுள்ள பழைய பாஞ்சாலங்குறிச்சித் தானாதிபதிப்பிள்ளை வீட்டிலாவது தங்குவார். அப்பொழுது எனக்குப் பதினைந்து அல்லது பதினாறு வயதிருக்கும். ஸ்ரீமான் ஐயர் எந்தையாரிடமும், என்னிடமும் மற்றையோரிடமும் பேசிய மாதிரியிலிருந்து அவர் ஒரு பெரிய மேதாவி எனதான் நினைத்தேன்.

என் தகப்பனார் என்னிடம் ஸ்ரீமான் ஐயருக்கு ஒரு மகன் இருப்பதாகவும், அவன் அதிபுத்திசாலியென்றும், சிறு பிள்ளையாயிருக்கும்போதே தமிழில் வெகு அருமையாகச் சுயம் பாடுவான் என்றும் கூறுவதுண்டு. ஐயரது குமாரன் பாடிய கவிகளை என்னிடம் சொல்லிக்காட்டி, அவனைப்பற்றி என் தந்தை வெகுவாகப் புகழ்ந்து பேசுவார். சிறுவயதிலேயே கவிபாடிய அச்சிறுபிள்ளைதான் சுப்பிரமணிய பாரதி என்று இன்று உலகமெல்லாம் புகழ்பெற்று விளங்கும் பெயர்.

பாரதி

முதல் சந்திப்பு

இப்பெரியாரை நான் முதன்முதலாகப் பார்க்கும் பாக்கியம் பெற்றது அவர் சென்னையில், 'இந்தியா' என்னும் பெயர் பெற்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த காலத்தில்தான். அந்தக் காலத்தில் 'இந்தியா'வுக்குப் பேரும் புகழும் பெருஞ்செல்வாக்கும் இருந்தன. பத்திரிகையின் சிறப்புக்குக் காரணம் ஆசிரியர்தான் என்பது சொல்லாமலே தெரியும்.

அது 1906ஆம் வருஷ ஆரம்பமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். அப்போது நான் தூத்துக்குடி யிலிருந்து சென்னை சென்றிருந்தேன். (எனது சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்திலிருந்து கச்சேரிகள் எல்லாம் எடுபட்டுவிட்டதனால் அப்பொழுது நான் தூத்துக்குடியில் வக்கீல் தொழில் புரிந்துவந்தேன்.) சென்னையில் திருவல்லிக்கேணியில் 'சுங்குராமசெட்டித் தெரு'வில் என் நண்பன் ஒருவன் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கிருந்து நான் பட்டணம் (town) போகிற வருகிற வழியில் ஒரு பெரிய வீடு இருந்தது. அதுதான் 'இந்தியா' பத்திராதிபர் ஸ்ரீமான் திருமலாசாரியார் வீடு என்று தெரிந்துகொண்டேன்.

ஒரு நாள் மாலை நாலு மணி சுமாருக்கு நான் 'இந்தியா' அதிபர் திரு.ஆசாரியாரைப் பார்ப்பதற்காக அப்பெரிய வீட்டிற்குள் புகுந்தேன். அங்கிருந்தவர்களிடம் விசாரித்ததில், "அவர் மாடியில் இருக்கிறார்" என்றனர்.

நான் மாடிக்குச் சென்றேன்; அங்கு ஒரு அய்யங்கார் அமர்ந்திருந்தார். அவர் இளவயதினராகக் காணப்பட்டார். முகத்தில் அறிவுச்சுடர் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர்தான் அதிபராக இருக்க வேண்டுமென நினைத்து அவரைக் கேட்டேன்.

"ஆம்" என்றார் அவர்.

அவரிடம் என் ஊரும், பேரும் சொன்னேன்.

அவர் மாடியின் உள்ளரங்கை நோக்கி, "பாரதி! உங்கள் ஊரார் ஒருவர் உம்மைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்" என்று உரக்கக் கூறினார்.

உடனே உள்ளிருந்து இருவர் வந்தனர். முண்டாசுக் கட்டுக்கும் முறுக்கு மீசைக்கும் பெயர் பெற்றது எங்கள் ஜில்லா. எனவே தலைப்பாகைக் கட்டை பார்த்ததுமே பாரதியார் என்பதை தெரிந்துகொண்டேன். முறைப்படி

இந்தியா பத்திராதிபர்
திருமலாசாரியார்

அதிபர் ஸ்ரீமான் ஆசாரியார், “இவர்தான் ‘இந்தியா’ ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி” என பாரதியாரைச் சுட்டிக்காட்டி அறிமுகப்படுத்தினார்.

ஆசிரியர் பாரதியார் என் ஊரையும், பெயரையும் பற்றி உசாவினார்.

நான், “ஒட்டப்பிடாரம் வக்கில் உலகநாதபிள்ளை மகன், சிதம்பரம்பிள்ளை” என்றேன்.

“ஓ அப்படியா! பிள்ளைவாளின் பிள்ளையாண்டானா நீங்கள்! உட்காருங்கள்!” என்று கூறி அருகிலிருந்த நாற்காலியில் அமரச் செய்தார். அவரும் மற்றவரும் வேறு இரு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டனர்.

பாரதியார் ஆரம்பித்தார்

“உங்கள் தகப்பனார் என் தகப்பனாரின் அத்யந்த நண்பர், அவாளை எனக்கு நன்னாத் தெரியும். உங்களைப்பற்றியும் கேள்விப்பட்டிருக்கேன்” என்றார் பாரதியார்.

ஆமாம்! எங்கள் ஜில்லாவிற்கே உரித்தான அந்தச் சிறந்த தமிழ்ப்பாணியில் அவர் பேசினார். பின்னர் பல்வேறு விஷயங்களைப் பற்றி நால்வரும் – குறிப்பாக நானும் அவரும் பேசிக் கொண்டிருந்தோம். தேசகாரியங்கள் பற்றிய பேச்சுக்களே எங்கள் அளவளாவுதலில் தலைமை வகித்தன. இந்த முதல் சந்திப்பும் பேச்சும் என்னைச் சோழனாகவும் அவரைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படி செய்தது.

பாரதியார் என்னை கடற்கரைக்கு அழைத்தார். நாங்கள் நால்வரும் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்று வெகுநேரம் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக்கொண்டிருந்தோம். வங்க மாகாணத்தின் சிங்கச் செயல்கள் பற்றியும் விபின் சந்திர பாலரின் தேசபக்தி, பிரசங்கங்கள் முதலியவை பற்றியும் பாரதியார் மிகுந்த ஆவேசத்துடன் பேசினார்.

என் உள்ளத்தில் மின்மினிப்பூச்சி போன்று மின்னிக்கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்குப்போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது. உணர்ச்சிப் பெருக்கால் இங்கு எழுதியுள்ள இதே வாக்கியத்தை நான் பாரதியாரிடம் சொன்னேன். இதே சமயத்தில் கடற்கரை மின்சார விளக்குகளும் ‘பளிச்’சென ஒளிவிட்டு எரிய ஆரம்பித்தன.

பாரதி, “பிள்ளைவாள், சக்தி துணை செய்வாள். நமக்குள் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது மின் ஒளியும் பிரகாசிக்கச் செய்தது நம் அன்னை பராசக்தியே! அவள் வாழ்க! இனி நம் முயற்சி வெற்றி, எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுப சகுனம் இதுதான். வாழி அன்னை! வாழி அம்மை! சக்தி வாழி!” என ஆவேசம் வந்தவர் போலப் பேசினார். அவர் முண்டாசுக் கட்டின் முன்தானைத் துணி காற்றில் வெற்றிக்கொடி போலப் படபடவென்று சப்தத்துடன் பறந்து கொண்டிருந்தது. கடல் அலை பேரிரைச்சலிட்டது. உள்ளம் நிரம்பிய மகிழ்வோடு நாங்கள் நால்வரும் திரும்பினோம்.

பின்னர் நாள்தோறும் நான் ‘இந்தியா’ ஆபீசுக்கும், அதிபர் வீட்டிற்கும் கடற்கரைக்கும் செல்லலானேன்; அதிபரும், ஆசிரியரும் நானும் அவ்வப்போது அளவளாவுவது வழக்கமாகிவிட்டது. சுப்பிரமணிய பாரதியும், நானும், சோழனும் கம்பனுமாயிருந்தது மாறிக் கடைசியில் மாமனும் மருமகனும் ஆயினோம்.

அன்னைக்கா ஆடு பலி?

ஒரு நாள் மாலை வழக்கம்போல நாங்கள் மூவரும் (பாரதி, ஆசாரியார், நான்) திருவல்லிக்கேணிக் கடற்கரையில் வார்த்தையாடிக் கொண்டிருந்தோம். எங்கெங்கோ சென்று கொண்டிருந்த எங்கள்

இந்தியா.

பேச்சு வங்க வள நாட்டின்மீது திரும்பியது. அப்போது காளிதேவிக்கு வங்கத்தில் ஆடு பலி கொடுப்பதைக் கண்டித்து விபின் சந்திரர் பேசிய பேச்சிற்கு மாமா உருக்கத்துடனும், ஆவேசத்துடனும் ஒரு வியாக்கியானம் செய்து முடித்தார். (இல்லை, 'பொழிந்து கொட்டினார்' என்று சொல்வதுதான் பொருத்தம்.) இவ்வியாக்கியானத்தைக் கேட்ட நான் கொழுத்த தேசாபிமானியாக மாறிவிட்டேன். (அதாவது இந்தக் காலத்திய தீவிரவாதி) இந்த வியாக்கியானத்தினால் தாங்கள் இருவரும் அதிகமாகப் பிணைக்கப்பட்டோம்; பெருமகிழ்ச்சி கொண்டோம். எங்கள் நட்பைப் பற்றி மாமா சொல்வார், "மாப்பிள்ளை, நமக்கினி யாரடா ஈடு?" என்று.

அதுமுதல் அவர் என் வீட்டிற்கு வருவதும் என்னோடு உண்ணுவதும் உறங்குவதும், நான் அவர் வீட்டிற்குப் போவதும் அவரோடு உண்ணுவதும் உறங்குவதுமாக இருந்தோம். பிரான்ஸ், இத்தாலி இவை போன்ற பிற தேசங்களின் சரிதத்தை மாமா ஆதியோடந்தமாக ஆவேசத்துடன் கூறிமுடிப்பார். நான் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம். இடையிடையே ஏதாவது சந்தேகம் தோன்றினால் அவரிடம் கேட்பேன். அவர் காரணம் கூறி விளக்குவார்.

கேட்டவுடனே பாட்டு!

ஒருநாள் இத்தாலி நாட்டுத் தேசாபிமானி மாஜினியின் தேச ஊழிய யௌவன இத்தாலி சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்ந்தோர் செய்து வந்த விசுவாசப் பிரமாணச் செய்யுளை ஆங்கிலப் பாஷையில் மாமா எனக்குப் படித்துக் காட்டினார். அதனைக் கேட்டதும் நான் சொக்கிப்போனேன்! அச்செய்யுளைத் தமிழ்ப் பாட்டாக மொழி பெயர்த்துத் தர மாமாவை வேண்டினேன். அவர் அன்றே அந்த இடத்திலேயே அதைத் தமிழில் கவிதையாக மொழி பெயர்த்துத் தந்தார். அதுதான் 'பேரருட் கடவுள் திருவடியாணை" எனத் தொடங்கும் பாட்டு.

பின்னர் நம் தேச ஆட்சியைச் சீக்கிரமே நாம் கைக்கொள்வதற்குச் செய்ய வேண்டியவைகளைப் பற்றிப் பேசுவதே வழக்கமாகிவிட்டது. தினம் ஒரு திட்டமிடுவதும் மறுநாள் மாற்றுவதும், மாற்றம் செய்தும் எங்கள் முயற்சிகளைப் 'பத்தரைமாற்றாகப் பக்குவம் செய்வதுமாயிருந்தோம்'. எங்கள் முயற்சிகளைப் பற்றி எங்கணும் பேசினோம். பிரசங்கம் புரிந்தோம். ஆனால் மாமா மட்டும் சொன்மாரி பொழிந்தார்.

தேசாபிமான ஊற்றென விளங்கும் திருவல்லிக்கேணி கோவில் பக்கத்திலுள்ள மண்டையன் கூட்டத்தாராகிய திருமலாசாரியார், ஸ்ரீநிவாஸாசாரியார் முதலியாரோடு அடிக்கடிப் பேசலானோம்; ஆலோசனை அனைத்தும் புரிந்தோம். அவ்வாலோசனையின் பயனாகத் திருவல்லிக்கேணியில் "சென்னை ஜனசங்கம்" என்ற தேசாபிமானச் சங்கம் எழுந்தது. பின்னர் நான் எங்கள் யோசனைப்படி தூத்துக்குடி திரும்பினேன்; தேச ஆட்சியின் மீட்சிக்கான வேலைகளில் ஈடுபட்டேன்.

சூரத் காங்கிரஸில் தமிழர்கள்

1907ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் சூரத்தில் நடப்பதாயிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில் தலைமை வகிப்பதற்குக் கல்கத்தாவிலிருந்த பெரிய சீமானும் பெயர் பெற்ற வக்கீலுமான ஸ்ரீ ராஜ்பிகாரி கோஷ் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. அது நம் பாரதியாரின் கண்களிலும் படாமல் போகவில்லை. தேச சேவையே

பாலகங்காதர திலகர்

லாலா லஜபதிராய்



அரவிந்தர்

பெரிதென நினைத்துச் சிறந்த தொண்டாற்றியதன் காரணமாகத் தேசம் விட்டுக் கடத்தப்பட்டு அப்பொழுதுதான் விடுதலையடைந்திருந்த லாலா லஜபதிராயை அவ்வருஷத்துக் காங்கிரஸின் தலைவராக்க வேண்டுமென பாரதியார் நினைத்தார்; என்னைச் சென்னைக்குப் புறப்பட்டு வரும்படித் தந்தி கொடுத்தார்.

நான் சென்னை சென்றேன். மாமா, நான், மற்றும் தேசாபிமானிகள் எல்லோரும் ஒருங்குகூடி ஆலோசித்தோம். லாலா லஜபதிராயையே காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்தோம். அதற்கான வேலைகளைச் செய்யும் பொறுப்பு மாமாவுக்கும் எனக்கும் அளிக்கப்பட்டது. அவ்வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதன் பொருட்டு நான் அரசனாகவும் மாமா மந்திரியாகவும் மாறினோம்.

முதலில் ஸ்ரீமான் பால கங்காதர திலகரையும், பாபு அரவிந்த கோஷையும் எங்கள் கொள்கைக்கு இணங்கும்படிச் செய்ய வேண்டுமென நினைத்தோம். அவ்விரு தேசாபிமானிகளுக்கும் கடிதங்கள் போன்ற நீண்ட தந்திகள் பல அனுப்பினேன். காங்கிரஸ் மகாநாட்டில் லாலா லஜபதிராய்க்குப் பெரும்பான்மையான வாக்குகள் (votes) கிடைக்கச் செய்வதற்காகச் சென்னை மாகாணத் திலிருந்தும் அநேக பிரதிநிதிகளைக் கூட்டிக்கொண்டு வர முடியுமாவெனக் கேட்டு அவர்கள் பதில் தந்தி அனுப்பினார்கள். அவ்வாறு செய்வதாக எனக்கு வாக்குறுதி பெற்றுக்கொண்டு, “காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு லாலா லஜபதிராயைத் தலைவராக்க வேண்டுவதைச் செய்கிறோம்” என்று ஸ்ரீ திலகரும், கோஷும் எனக்கு முடிவான தத்தி அனுப்பினார்கள்.

தலைவர் மாற்றத்திற்குக் கிளர்ச்சி

அது விஷயமாகத் திலகரது கேசரி பத்திரிகையிலும் பம்பாய் மாகாணத்தின் பிற தேசியப் பத்திரிகைகளிலும், ஸ்ரீ அரவிந்தரின் வந்தே மாதரம் பத்திரிகையிலும், வங்க மாகாணத்தின் இதர தேசியப் பத்திரிகைகளிலும் மற்றைய மாகாணங்களில் உள்ள தேசியப் பத்திரிகைகளிலும் பலமான கிளர்ச்சி செய்யப்பட்டது. சில மிதவாதிகள் தவிர மற்ற மிதவாதிகளும், அமிதவாதிகள் (தீவிரவாதிகள்) ஆகியோரும் தேசாபிமானிகளும் லாலா லஜபதிராயையே காங்கிரஸ் தலைவராக்கவேண்டுமெனப் பத்திரிகைகளில் எழுதித் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டார்கள். ஆரம்பத் தேதியும் நெருங்கியது. “ஏராளமான பிரதிநிதிகளுடன் நான் அத்தேதிக்குச் சில தினங்களுக்கு முன்னரே சூரத் நகரம் வந்துசேர வேண்டும்” என்று திலகர் பெருமானிடமிருந்து எனக்குத் தந்தி வந்தது.

சூரத்துக்கு ஸ்பெஷல் ரயில்

தூத்துக்குடியினின்று நான் சில நண்பர்களுடன் புறப்பட்டுச் சென்னை போய்ச்சேர்ந்தேன். மண்டையன் கூட்டத்தார் வீட்டில், "சென்னை ஜனசங்கத்தின் அங்கத்தினர்களாகிய இளந்தேசாபிமானிகளையெல்லாம் ஒரு கூட்டம் கூட்டி ஆலோசனை செய்தோம்." பாரதி மாமா நூறு பிரதிநிதிகளுக்குக் குறையாமல் சென்னையிலிருந்து சூரத்துக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று சொன்னார்.

அப்பிரதிநிதிகளில் பணம் இல்லாதவர்களுக்குப் பணம் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றும், அவர்களைச் சூரத்திற்குக் கூட்டிப்போய் வருவதற்குரிய செலவுத் தொகையில் ஒரு பாதியை மண்டையன் கூட்டத் தலைவர் ஸ்ரீநிவாஸாசாரியும், மற்றொரு பாதியை நானும் கொடுக்க வேண்டுமென்றும் எங்களுக்குள் முடிவு செய்துகொண்டோம். சுமார் நூறு பிரதி நிதிகளைக் கூட்டிக்கொண்டு வருவதாகத் திலகருக்குத் தந்தி கொடுத்தோம்.

அப்போது நடைமுறையில் (அமலில்) இருந்த காங்கிரஸ் மஹாசபையின் விதிப்படி சங்கங்களின் மூலமாகத்தான் காங்கிரஸுக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறே பல சங்கங்கள் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துச் சென்னைக்கு அனுப்பும்படியாகத் தமிழ்நாட்டிலுள்ள பல நண்பர்களுக்குத் தகவல் கொடுத்தோம். அவர்களும் அவ்வாறே பல்வேறு ஊர்களிலிருந்து பல சங்கங்கள் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துச் சென்னைக்கு அனுப்பினர். அவர்களில் அநேகர் சாதாரண இரயில் வழியாக சூரத் சென்றனர்.

எங்கள் சென்னைத் தலைவர் ஸ்ரீ.ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்களும் சென்னையிலிருந்து சூரத்துக்குச் சென்றார்கள். சென்னை ஜன சங்கத்தின் அங்கத்தினர்களாகிய இளந்தேசாபிமானிகள் எல்லோரும் ஒரு பெரிய இரயில் வண்டியை பிரத்தியேகமாகப் பதிவுசெய்து (Special Reserve) சென்னையிலிருந்து சூரத் சென்றோம். எங்களுடன் வந்தவர்களில் சென்னை அட்வகேட் ஸ்ரீமான் எஸ்.துரைசாமி ஐயர், எம்.ஏ.பி.எல், ஸ்ரீமான் வி.சக்கரை செட்டியார் பி.ஏ.பி.எல்., ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

சூரத் காங்கிரஸ் உடைக்கப்பட்டது

பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகள் சூரத் நகருக்கு வெளியே காங்கிரஸ் கோட்டையைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களில் தங்கியிருந்தோம். நகரின் நடுப்பாகத்திலுள்ள மாளிகை (பங்களா)களில் திலகர் முதலிய பம்பாய் பிரதிநிதிகளும், வேறு சில மாளிகைகளில் அரவிந்தர் முதலிய வங்கப் பிரதிநிதிகளும் தங்கியிருந்தார்கள்.

காங்கிரஸ் பிரசிடெண்டாக (தலைவர்) வந்திருந்த ஸ்ரீ ராஷ்பிகாரி கோஷ் எழுதி அச்சிட்டுக் கொண்டு வந்திருந்த தலைமைப் பிரசங்கத்தில் அப்போது 'அமிதவாதிகள்' என்று அழைக்கப்பட்ட திலகர், அரவிந்தர், பாரதியார் குழாத்தினாரைப்பற்றி இழிவாகச் சில வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்ததாக நாங்கள் அறிந்தோம். அவற்றை அப்பிரசுரத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று ஸ்ரீ ராஷ்பிகாரிக்கு திலகரும் அரவிந்தரும் சிலரிடம் சொல்லி அனுப்பினர். நீக்குவதற்கு ஸ்ரீ கோஷ் இணங்கவில்லை.

அவ்வாக்கியங்களைப் பிரசுரத்திலிருந்து நீக்காவிட்டால், காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ராஷ்பிகாரி தலைமை வகிக்க வேண்டுமென்ற பிரேரேபணையைத்(Proposal) தாம் எதிர்க்கப்போவதாக திலகர் பெருமான் அப்போதைய மிதவாதத் தலைவர்களாகிய ஸர்.பிரோஸிஷா மேத்தா, ஸ்ரீ கோக்கலே, வி.கிருஷ்ணசாமி ஐயர் முதலியவர்களுக்குச் சொல்லி அனுப்பினார். மிதவாதத் தலைவர்கள் பலரும் கூடி ஆலோசித்து பிரஸ்தாப வாக்கியங்களைப் பிரசுரத்திலிருந்து நீக்க முடியாதெனப் பதில் தெரிவித்துவிட்டனர்.

பின்னர் பால கங்காதரர் (திலகர்) காங்கிரஸ் மஹா சபைக்காகப் பல்வேறு மாகாணங்களிலுமிருந்து வந்திருந்த தேசீயக் கட்சிப் பிரதிநிதிகளையெல்லாம் சேர்த்து ஒரு கூட்டம் கூட்டினார். நடந்த விஷயங்களை எடுத்துச்சொல்லி ஆலோசனை செய்யக் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ ராஷ்பிகாரி அவ்வாக்கியங்களைத் தமது பிரசுரத்தினின்று நீக்காவிட்டால் அவர் (கோஷ்) தலைவராக வேண்டுமென்ற பிரேரேபணையை எதிர்க்கப் போவதாகவும், லாலா லஜபதிராய் தலைவராக வேண்டுமென்ற பிரேரேபணையைச் செய்யப்போவதாகவும் ஸ்ரீ அரவிந்தர், பாரதியார் முதலியோர் கர்ஜித்தனர். கடைசியில் அவ்வாறே செய்வதென்றும் அதைத் திலகர் முன்னின்று நிறைவேற்றி வைக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

காங்கிரஸ் மகாநாட்டில் கலாட்டா!

குறித்த நேரத்தில் குறித்த தேதியில் மஹாசபை கூடிற்று. காங்கிரஸ் தலைவரைப் பற்றிய பிரேரேபணையை எதிர்க்க வேண்டுமென்ற நோக்கமுடைய பாரதியார் முதலிய தேசீயவாதிகள் காங்கிரஸ் கொட்டகையில் பல பாகங்களிலும் உட்கார்ந்திருந்தோம். பிரம்மாண்டமான கொட்டகையில் எங்கு நோக்கினும் ஜனத்திரள். மத்தியில் பிரசங்க மேடை. 'எள் போட்டால் எள் விழாது' என்பார்களே, அம்மாதிரியான கூட்டம்.

வரவேற்புத் தலைவர் எழுத்து தமது வரவேற்புப் பிரசங்கப் பிரசுரத்தைப் படித்து முடித்தார். பிரசங்க மேடையிலிருந்தவர்களில் ஒருவர் எழுத்திருந்து ஸ்ரீ ராஷ்பிகாரி கோஷ் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கவேண்டுமென்று பிரேரேபித்தார். அங்கிருந்த மற்றொரு மிதவாதத் தலைவர் எழுந்திருந்து அதை ஆமோதித்தார்.

ஆமோதித்ததுதான் தாமதம்! திலகர் பிரசங்க மேடைமீது ஒரே தாவாகத் தாவினார். பிரேரேபணையைத் தாம் ஆட்சேபிப்பதாகத் தெரிவித்தார். கூச்சல் கிளம்பிற்று. பலர் பலவாறு திலகரைத் திட்டிக்கொண்டும், "உன் இடத்திற்குப் போ! பேசாதே! (go to your seat, Don't speak.) எனப் பேய்க் கூச்சலிட்டுப் பெருங்குழப்பம் செய்தனர்.

தலைவரைப் பற்றிய பிரேரேபணையைத் தாம் எதிர்ப்பதற்குரிய காரணங்களை எடுத்துச் சொல்வதற்காகப் பலமுறை திலகர் எத்தனித்தார். மிதவாதிகளின் பெருங்கூச்சலால் திலகர் வார்த்தைகள் காங்கிரஸ் பந்தலில் பிரதிநிதிகள் இருந்த இடங்களுக்குக் கேட்கவில்லை. திலகரோ, தம்மைப் பேசவிட்டாலன்றிப் பிரசங்க மேடையை விட்டுப் போகப்போவதில்லையென்று கூறி, நின்ற இடத்திலேயே அசையாது கையைக் கட்டிக்கொண்டு சிங்கம்போல் நின்றார்.

இச்சமயத்தில் ராஷ்பிகாரி கோஷ் பிரசங்க மேடை மேஜைமீது ஏறி நின்றுகொண்டு தமது தலைமைப் பிரசங்கத்தை 'விருவிரென' வாசிக்க தொடங்கினார். பந்தலின் பல பாகங்களிலிருந்தும் மீண்டும் கூச்சல் கிளம்பிற்று "இன்னும் உம்மைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவில்லை! உமது பிரசங்கத்தை வாசிக்கவேண்டாம்!" என்று பலர் கத்தினார்கள்.

மிதவாதிகள் பிரசங்க மேடைமீது ஏறி வந்து குழுமி நின்றுகொண்டு திலகரை நோக்கி, "உம் இடத்திற்குப் போம்! உம் வாயைத் திறவாதேயும்!" (go to your seat! Don't open your mouth.) என்று பெரும் கூச்சலிட்டார்கள்.

அப்போது அவர்கள் முன்பு திலகர் நின்ற நிலை, ஆஹா! இன்றும் அன்றுபோல என் மனக்கண்ணில் தோன்றுகிறது. அன்று அவர் நின்ற நிலையை மதம் பொழிந்து கர்ஜித்துக்கொண்டிருந்த பல நூறு யானைகளின் முன் அமைதியுடன் வேண்டுமென்றே அடங்கி நின்ற சிங்க ராஜாவின் நிலைக்கு ஒப்பிடலாம்.

காங்கிரஸ் கலைந்தது

அச்சமயத்தில் மேடைமீதிருந்த மிதவாதிகளில் சிலர் தாம் அமர்ந்திருந்த நாற்காலிகளைத் தம் தலைக்குமேலே தூக்கித் திலகர்மேல் எறிய முயற்சித்தனர். காங்கிரஸ் பந்தலின் முன்னணியில் இருந்த ஸ்ரீ கபர்தேயும், பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகளும் ஒரே பாய்ச்சலாய் மேடைமீது பாய்ந்து திலகரைச் சுற்றி வட்டமாக நின்றுகொண்டு அவர்மேல் எறியப்பட்ட நாற்காலிகளைத் தடுத்துப் பக்கத்தே தள்ளிக்கொண்டிருந்தனர். வேடிக்கை! அப்போதும் ராஷ்பிகாரி மூச்சுவிடாமல் வாயுவேகத்தில் தமது பிரசங்கக் குறிப்பைப் படித்துக் கொண்டிருந்தார்

சென்னைப் பிரதிநிதிகள், “உமது பிரசங்கத்தை வாசிக்க வேண்டாம். போய் உட்காரும்” என்று கூச்சல் போட்டனர். இந்தச் சமயத்தில் காங்கிரஸ் பந்தலின் பல மூலைகளிலும் முன்னரே ஒளித்து வைக்கப்பட்டிருந்த போக்கிரிகள் (goondas) தடிக்கம்புகளுடன் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு மேடைக்குச் சென்றார்கள். பந்தலிலே அலைமோதியது!

மேடைக்குச் சென்ற போக்கிரிகள் திலகரைச் சுற்றி அரண்போல நின்றுகொண்டு, எறியப்பட்ட நாற்காலிகளைத் தடுத்துக் கொண்டிருந்த சென்னைப் பிரதிநிதிகளைத் தடியால் தாக்கிக் கீழே சாய்த்தனர்; பார்த்தனர் பிரதிநிதிகள்! ஆர்த்தனர். பந்தலின் நாலா பக்கங்களிலிருந்தும் ஜோடுகளும், செருப்புகளும் குண்டர்களை நோக்கிப் பறந்தன. சில மிதவாதத்தலைவர்களுக்கும் அடி. நிலைமை கட்டுக்கடங்காது போகவே காங்கிரஸைக் கலைக்க வேண்டுமென்று போலீஸாருக்குத் தகவல் பறந்தது. போலீஸார் ‘குபுகுபு’வென வந்திறங்கினர். காங்கிரஸ் பந்தல் தமது ஆளுமையிலிருப்பதாகவும், கால்மணி நேரத்திற்குள் எல்லோரும் பந்தலை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்றும் போலீஸார் அறிவித்தனர்.

உடனே மிதவாதத் தலைவர்கள் குண்டர்களோடும் சில பிரதிநிதிகளோடும் பந்தலைவிட்டு வெளியேறிப் போய்விட்டனர். பிறகு, எங்கள் தலைவர்களும், நாங்களும் பந்தலைவிட்டு வெளியேறி அரவிந்தர் தங்கியிருந்த பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

தேசீயவாதிகள் மகாநாடு

திலகர், கபர்தே முதலிய பம்பாய்த் தலைவர்களும், பிரதிநிதிகளும், அரவிந்தர் முதலிய வங்க தேசத் தலைவர்களும் பிரதிநிதிகளும், பஞ்சாப் தேசத் தலைவர்களும், பிரதிநிதிகள் ஆகியோரும் பாரதியார், துரைசாமி ஐயர், சக்கரை செட்டியார், ஸ்ரீனிவாஸாசாரியார் முதலிய சென்னைத் தலைவர்கள், பிரதிநி திகள் முதலியோரும் கூடி ஆலோசித்தோம். மறுநாள் மாலை சூரத் நகரிலுள்ள பெரியதோர் கட்டடத்தில் “தேசீயவாதிகள் மகாநாடு”



சூரத் காங்கிரஸ் மாநாட்டின் முகப்பு



அமளிக்குப் பின் சேதமடைந்த மாநாட்டின் முகப்பு

ஒன்று கூட்டி மேல் நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

திலகரும் வைதீகமும்

இங்குத் திலகருடைய வைதீகக் கோட்பாடுகளைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லவேண்டுவது அவசியமாயிருக்கிறது. தேசீயத் தலைவர்களும், தலைவர்களும், பிறரும் அரவிந்தர் மாளிகை மாடியில் கூடி ஆலோசித்துக் கொண்டிருந்தபோது திலகருக்கு ஒருவன் சாப்பாடு கொண்டு வந்தான். அவன் திலகரைப் பார்த்து வலதுபக்கத்திலுள்ள தனித்ததோர் அறையைச் சுட்டிக்காட்டி, “அங்கே கொண்டுபோய் வைக்கட்டுமா?” என்று கேட்டான். திலகர், “தேச பக்தர்களுக்குள்ளேயா ஜாதி வேற்றுமை? தம்பி, இங்கேயே வை” என்றார். திலகர், கபர்தே, பாரதியார், நான் முதலிய பல்வேறு ஜாதிக்காரர்கள் ஒரே பந்தியில் வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டோம். எனவே தேச பக்திக்கு வெளியேதான் திலகரது வைதீகக் கோட்பாடு எல்லாம் என்பது தெளிவு.

ஏற்கெனவே கூறியபடி மறுநாள் மாலையில் தேசீயவாதிகளின் மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீ.அரவிந்தர் தலைமை தாங்கினார். இனி நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றிப் பல மாகாணத்தவரும் பிரசங்கித்தனர். மிதவாதிகளை விட்டுத் தனியே பிரிந்து தேசீயவாதிகள் வருஷந்தோறும் தனி மகாநாடு கூட்டி ஆலோசனை செய்து சுயஆட்சி அடைவதற்கான வேலைத்திட்டங்களை வகுத்து வருஷம் முழுவதும் வேலை செய்து வரவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

இந்த மகாநாட்டில் பாரதி மாமாதான் முன்னின்று வேண்டுவன செய்தார். பல்வேறு மாகாணத்தவர்களுடனும் அவரவரது பாஷையில் பேசி அவர்களைத் தம் வழிப்படுத்தினார். மாமாவுக்கு ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பல பாஷைகள் தெரியுமெனப் பின்னால் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன். நிறைவேறிய தீர்மானப்படி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு காரியதரிசியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று முடிவாயிற்று.

பம்பாய் மாகாணத்திற்குத் திலகரும், வங்கத்திற்கு அரவிந்தரும், சென்னை மாகாணத்திற்கு நானும் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றோம். எங்கள் வேலைத் திட்டங்களும்



வகுக்கப்பட்டன. பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகள் சென்னை வந்து சேர்ந்தோம். திருவல்லிக்கேணிக் கடற்கரையிலும், மூர்மார்க்கெட் முதலிய பல இடங்களிலும் நானும், மாமாவும் காங்கிரஸ் கலைக்கப்பட்டது பற்றியும், தேசியவாதிகள் மகாநாடு நிறுவப்பட்டது பற்றியும், அதன் வேலைத் திட்டங்கள் பற்றியும் பல பிரசங்கங்கள் தொடர்ந்து செய்துவந்தோம்.

இந்தச் சமயத்திலெல்லாம் மாமாவும் நானும் ஈருடலும் ஒருயிருமாக வேலை செய்தோம் என்றால் மிகையாகாது. எங்களைச் சிலர் “இரட்டையர்” என்றே கேலியாகக் குறிப்பிடுவார்கள். என்னைக் கண்டால் மாமாவைக் காணலாம்; அவரைக் கண்டால் என்னைக் காணலாம். கொஞ்சகாலம் சென்றபின் நானும் எனது நண்பர்களும் தூத்துக்குடி சென்றோம். மாமா இரயில் வரைக்கும் வந்து வழியனுப்பினார்.

கதர்க் கப்பல் கொடி காணுதே

தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல் வழி, வியாபாரம் செய்துவந்த வெள்ளையர்களை விரட்டியடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்கு கடல் ஆதிக்கம் வேண்டும். ஒரு காலத்தில் மேற்கே உரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா சுமத்ராவுக்கும் அப்பாலும் தமிழ்க்கப்பல் போய்வந்தது. அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். எனவே தமிழர்கள் மீண்டும் கடல்மேல் செல்வது எவ்வாறு என்பதைத் திட்டமிட்டேன்.

இத்திட்டத்தின் விளைவுதான் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி. எனது நண்பர்களின் நன்முயற்சியாலும் பொதுஜன ஆதரவாலும் சுதேசிக் கப்பல் கம்பெனி 1906ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கப்பல் கம்பெனியைக் கண்டு வெள்ளையர் வெகுண்டெழுந்தனர். அவர்களின் வியாபாரமும் கடலாதிக்கமும் நாசமடையத் தொடங்கியது. கப்பல் கம்பெனிக்குக் காரணஸ்தனான என்னைச் சிறைக்குள் தள்ள விரும்பினார்கள் வெள்ளையர்கள். சுதந்திர ஆட்சிக்காக நானும் சுப்பிரமணிய சிவாவும் இதர எனது நண்பர்களும் கிளர்ச்சி செய்துவந்தது வெள்ளையர்களுக்குக் கிலிபிடித்தது.

அப்போது அதிகாரத்திலிருந்த வெள்ளையர்களின் உதவியினால் என்னையும் எனது சகாக்களையும் சிறையில் தள்ளினால் சுதந்திரக் கிளர்ச்சி நின்றுவிடுமென எண்ணினர். வெள்ளை வியாபாரிகளின் தாசர்களான வெள்ளை அதிகாரிகள் என்மீதும், சிவாமீதும் எனது மற்றொரு நண்பர் பத்மநாப ஐயங்கார்மீதும் ராஜத் துவேஷ வழக்குத் தொடங்கினர். நாங்கள் இருவரும் 1908ஆம் வருஷம் மார்ச் மாதம் 12ஆம் தேதி கைது செய்யப்பட்டோம்.

நாங்கள் கைது செய்யப்பட்டதினால் ஆத்திரமடைந்த மக்கள் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் பல அடாத செயல்கள் புரிந்தனர். இதற்குப் பயந்து தூத்துக்குடியிலிருந்த வெள்ளையர்கள் தங்கள் இரவுகளைக் கப்பலிலேயே சிலநாள் கழிக்க வேண்டியது ஏற்பட்டது.

நெல்லையில் பாரதியார்

வெள்ளையர்களின் அடக்குமுறை இதே சமயத்தில் இந்தியா முழுவதிலும் தாண்டவமாடிற்று. வங்காளத்தில் அரவிந்தர்மீதும், பம்பாய் மாகாணத்தில் திலகர்மீதும், சென்னை மாகாணத்தில் என் வகையர்மீதும் ராஜத் துவேஷ வழக்குகள் ஒரேசமயத்தில் தொடரப்பட்டன.

என் வகையர்கள் கைது செய்யப்பட்டதும், சென்னை நண்பர்களான சீமான் ஸ்ரீநிவாஸாச்சாரி, சுப்பிரமணிய பாரதி முதலியோர் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது நாங்கள் மூவரும் (சிதம்பரம், சிவா, பத்மநாப அய்யங்கார்) பாளையங்கோட்டை மத்திய சிறையில் விசாரணைக் கைதிமாராக இருந்தோம். சென்னை நண்பர்கள் எங்களைச் சிறையில் கண்டு உரையாடிக் களித்தனர்.

என்னைக் கண்டதும் மாமா அப்படியே ஆலிங்கணம் செய்துகொண்டார். அவர் கண்களில் நீர் மல்கியது. “பிள்ளைவாள்! என்ன காரியம் செய்துவிட்டார்கள் பார்த்தீர்களா?” என்று மாமா அங்கலாய்த்தார். நான் சமாதானம் கூறி அவரைத் தேற்றினேன். அப்பொழுதுதான் மாமா எனக்கும்

கலெக்டர் விஞ்சு துரைக்கும் நடந்ததாக உருவகப்படுத்திக் கீழ்க்கண்ட பாடல்களை எழுதித் தந்தார்:

நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்;–கனல் மூட்டினாய்
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்;–வலி காட்டுவேன்.

கூட்டம் கூடி வந்தே மாதரமென்று
கோஷித்தாய்; எமைத் தூஷித்தாய்;
ஓட்டம் நாங்களெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்;–பொருள்–ஈட்டினாய்

கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்–சட்டம் மீறினாய்;
ஏழைப்பட் டிங்கு இறத்தல் இழிவென்றே
ஏசினாய்;–வீரம்–பேசினாய்

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்; புன்மை–போக்கினாய்;
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்; ஆசை ஊட்டினாய்

தொண்டொன் றேதொழிலாக் கொண்டிருந்தோரைத்
தூண்டினாய்;–புகழ்வேண்டினாய்;
கண் கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்–சோர்வை ஓட்டினாய்

எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவி னாய்;–விதை–தூவினாய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்ய வோ? – நீங்கள் உய்யவோ?

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திச்
சொல்லுவேன்;–குத்திக் கொல்லுவேன்;
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்;–பழி–கொள்ளுவேன்.

தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்–இனி – அஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? – தெய்வம் பார்க்குமோ?

வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்து வோம்;–முடி–தாழ்த்துவோம்;
எந்தம் ஆருயி ரன்னையைப் போற்றுதல்
ஈன மோ?–அவமானமோ?

பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளை கொண்டு
போகவோ?–நாங்கள்–சாகவோ?
அழுது கொண்டிருப் போமோ ஆண்பிள்ளைகள்
அல்லமோ–உயிர் வெல்லமோ?
நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ?–பன்றிச்–சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
நீத மோ?–பிடி–வாதமோ?

பார தத்திடை அன்பு செலுத்துதல்
பாப மோ?–மனஸ்–தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்ற மோ? – இதில்–செற்றமோ?

ஒற்றுமை வழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம்; நன்கு தேர்ந்திட்டோம்;
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்கெல்லாம்
மலைவு றோம்;–சித்தம்–கலைவுறோம்.

சதையைத் துண்டு துண் டாக்கினும் உன்னெண்ணம்
சாயுமோ?–ஜீவன்–ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மஹாபக்தி
ஏகுமோ? – நெஞ்சம் – வேகுமோ?

என் வகையார்கள்மீது கொண்டு வரப்பட்ட வழக்கில் எங்கள் பக்கம் வக்கீல்களாக ஆஜரான திருநெல்வேலி வக்கீல்களான சாதுகணபதி பந்துலு கணபதி ராமய்யர், டி.வி.கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீவைகுண்டம் டி.ஆர்.மகாதேவய்யர், சிவராமகிருஷ்ணய்யர் முதலிய தேசபக்தர்களுடன் சாது கணபதி பத்துலு ஆபீஸ் மேடையில் மாமாவும் மற்ற சென்னை நண்பர்களும் ஒரு வாரத்திற்கு மேலாகத் தங்கி வழக்கின் நடவடிக்கைகள், நடந்த வேடிக்கைகள் ஆகியவற்றைப் பார்த்துத் தமாஷாகச் சம்பாஷணைகள் செய்து கொண்டும் பாட்டுகள் பாடிக்கொண்டும் உல்லாஸமாகக் காலம் கழித்துக்கொண்டிருந்தனர்.

நான் சிறை செல்லும்போது காலஞ்சென்ற எனது மூத்தமகன் உலகநாதனுக்கு ஐந்து வயதிருக்கும். அவன் நான் போகுமிடங்களுக்கெல்லாம் என்னுடன் வந்து என் பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டிருந்ததனால் அப்பொழுதே அழகாக என்னைப்போலப் பிரசங்கம் செய்வான். தொட்டில் பழக்கம்தானே! உலகநாதனின் பிரசங்கத்தைக் கேட்டு மாமா ஆனந்தமடைவார். ஆடுவார்; பாடுவார்!

“பயலே, அப்படிப் பேசு, அப்பாவுக்கு மிஞ்சின பிள்ளையாயிருக்கணுமிடா குட்டிச்செதம்பரம் பிள்ளை நீதாண்டா” எனக் குழந்தையுடன் மாமா கொஞ்சி விளையாடியதாக என் மனைவி நான் சிறையிலிருந்தபொழுது எனக்கொரு கடிதம் எழுதி அனுப்பினாள். அக்கடிதத்துடன் மாமா என் மகன் உலகநாதனைப் பாராட்டிப் பென்சிலால் எழுதி அனுப்பிய ஒரு பாட்டும் இருந்தது. அதன் தலைப்பு “லோகநாயகி புதல்வன்” என்பதாக என் ஞாபகம். என் மகன் உலகநாதன் எப்படி எங்களை விட்டுத் தனது இருபத்திரெண்டாவது வயதில் பிரிந்து வாழ்வை நீத்தானோ அதேபோல அந்தப் பாட்டு போன இடமும் தெரியவில்லை.

மாமாவும் சென்னை நண்பர்களும் ஒரு வாரத்திற்கு அதிகமாக நெல்லையில் தங்கியிருந்துவிட்டுச் சென்னை சென்றுவிட்டனர். எங்கள்மீது தொடரப்பட்டிருந்த ராஜத் துவேஷ வழக்கில் நெல்லை அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் பின்னேயால் எனக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்குப் பத்து வருஷக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பெற்றோம். ஹைகோர்ட்டு அப்பீலில் எங்கள் தண்டனைகள் குறைக்கப்பட்டன. வழக்கின் ஆரம்பத்திலேயே பத்மநாபய்யங்கார் விடுதலை

செய்யப்பட்டார். நான் எனது தண்டனையைக் கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலுமாகக் கழித்துவிட்டு 1912ஆம் வருஷம் டிசம்பர் மாதம் விடுதலையடைந்தேன்.

புதுவையில் பாரதியார்

நெல்லையிலிருந்து பாரதியார் முதலியோர் சென்னை போய்ச் சேர்ந்ததும், சென்னையில் சுரேந்திரநாத் ஆரியாமீது ராஜத் துவேஷ வழக்குத் தொடரப்பட்டது. மாமா பேரிலும், ஸ்ரீனிவாஸாச்சாரியர் பேரிலும் சர்க்கார் ராஜத் துவேஷ வழக்குத் தொடரப்போவதாகவும், அவர்கள் ஜெயில் செல்ல விரும்பவில்லையானால், புதுச்சேரிக்குச் சென்றுவிடும்படியாகவும் பாரதியாரின் தேசிய கீதங்களில் மயங்கிக் கிடந்த கவர்மெண்டு எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் ஒருவர் பாரதியாரிடம் தகவல் தெரிவித்துவிட்டார்.

சில காரணங்களால் அவர் பெயரை நான் இங்கு சொல்ல விரும்பவில்லை. சிறையுள் கிடந்து தேச சேவை செய்யாதிருப்பதினும் வேறு தேசம் சென்று தேச சேவை செய்துகொண்டிருப்பதே மேல் என நாங்கள் அவர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்பினோம். முதலில் மாமா இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. பின்னர் மாமா புதுச்சேரி செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதினால் சென்றுவிட்டார் போலும்!

புதுச்சேரியில் அரவிந்தர் முன்னரே வந்திருந்தார். வ.வே.சுப்பிரமணிய ஐயரும் போய்ச் சேர்ந்தார். நெல்லைக் கலெக்டர் ஆஷ் துரையைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்வதற்கு உடந்தையாக இருந்தவர் என அப்போது சொல்லப்பட்ட என் ஊர் (ஒட்டப்பிடாரம்) மாடசாமிப் பிள்ளையும் புதுவை புகுந்தார். இவ்விதமாக இந்திய தேசாபிமானிகள் பலர் புதுவையில் குடியேறி நிலையாகத் தங்கிப் பத்திரிகைகள் வாயிலாகவும், வேறு வழிகளிலும் நமது தேச அரசாட்சியை மீட்பதற்குரிய வேலைகள் செய்துகொண்டிருந்தனர். அவர்களிடம் தோன்றிய சுதந்திரஜோதி, தமிழ்நாடு முழுவதும் சுடர் வீசிக்கொண்டிருந்தது.

பாரதியார் தங்கியிருந்த புதுச்சேரி இல்லம்

கண்ணனூர்ச் சிறையினின்றும் எனது தண்டனைக்காலம் கழிந்து விடுதலையடைந்த நான் என் குடும்பத்தோடு சென்னை வந்து தங்கியிருந்தேன். பாரதியார், ஸ்ரீனிவாஸாச்சாரி முதலிய சென்னை தேசபக்தர்களைக் காணவேண்டும் என்ற அவா எனக்கு மேலிட்டது.

புதுவையில் பாரதி தரிசனம்

நான் புதுச்சேரிக்குச் சென்றேன். மாமா வீட்டை விசாரித்துக் கண்டுபிடித்து அங்கு போய்ச் சேர்ந்தேன். மாமாவின் மனைவி மக்களையும் கண்டுகளித்தேன். அவருடன் தங்கி அடிசில் உண்டும், ஆவிநீர் குடித்தும், அவரது ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும், அகமகிழ்ந்து சின்னாள் கழித்தேன். மாமாவும் நானும் எங்கள் நண்பர் அரவிந்தர் மாளிகைக்குச் சென்றோம். பலர் என்னிடம் சொல்லியதுபோல அரவிந்தர் ஓர் ரிஷியாயிருக்கவில்லை. தேசபக்தராகவும், தேசத்தலைவராகவுமே விளங்கினார்.

தேச அரசாட்சியை மீட்பதற்குரிய பல வழிகளைப் பற்றி மீண்டும் பேசினோம். வழக்கமாக இவ்வாறு நடந்துவந்தது. ஒருநாள் மாலையில் அரவிந்தர் மாளிகையில் உலக முழுவதிலும் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப வேண்டுமென்பது குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். இது சம்பந்தமாக அரவிந்தரிடம் நான் இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்த வேண்டும் என்றும், அதற்கான பணத்தைச் சுலபமாகப் பொதுஜனங்களிடமிருந்து பெறலாமென்றும் கூறி ஒரு திட்டமிட்டு அதை அவருக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் மாமாவும், ஸ்ரீநிவாஸாச்சாரியாரும் அங்கு வந்து சேர்ந்தனர். எனது திட்டத்தைக் கேட்டு மாமா ‘கலகலென’ நகைத்தார். “பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகை நடத்தவே திண்டாடும்போது இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகை நடத்துவது என்பது சாமான்யமா? அதற்கு எவ்வளவு ஆள் வேண்டும்? எவ்வளவு பணம் வேண்டும், இதெல்லாம் நடக்கிற காரியமா? ஓய்?” எனக் கேட்டார்.

எனக்கு மாமாமீது கோபம் வந்துவிட்டது. “பாரதி, ஊரை ஆள ஒரு பத்திரிகை போதும். உலகத்தை ஆள எவ்வளவு பத்திரிகைகள் வேண்டும்?” என்று கூறி என்னவோ கடுசொற்கள் சிலவும் கூறிவிட்டேன். மாமாவின் மணி வாக்கு என்னமோ உண்மையாய்த்தான் ஆயிற்று. ஆனால் எனது பத்திரிகைத் திட்டந்தான் பொய்த்துப் போயிற்று.

நான் புதுவையில் மாமா வீட்டில் தங்கியிருந்த காலத்தில் நண்பர் வ.வே.சுப்பிரமணிய ஐயர் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து எங்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அவரது எளிய உடைபாவனைகளும், உள்ளும் புறமும் ஒத்த பேச்சும் அவருடைய தேசாபிமான நிறைவும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.



வ.வே.சு. ஐயர்

ஆஷ்



மாடசாமி பிள்ளை

கலெக்டர் மிஸ்டர். ஆஷ் துரை கொலை சம்பந்தமாக நான் ஏற்கெனவே அறிந்தவற்றைப் புதுவை நண்பர்களிடம் தெரிவித்து ஒப்பீட்டு உண்மையறிந்தேன். ஒட்டப்பிடாரம் மாடசாமிப் பிள்ளையையும் கண்டுபேசினேன்.

மானம் பெரிது, பெரிது மானம்!

புதுச்சேரியில் பாரதியார் முதலியோருடன் தங்கியிருந்த நாட்கள்,

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையவர்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நுகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறையும் பதி"

என்னும் பாவை அடிக்கடி நினைக்கவும்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்னும் பாவின் உண்மைப் பொருளைக் காணவும் செய்தன. கடைசியாக பாரதியார் முதலிய உண்மை அறிஞர்களையும் உண்மைத் தேசாபிமானிகளையும் மிக வருத்தத்தோடு பிரிந்து சென்னை வந்து சேர்ந்தேன். நான் தோற்றுவித்த கப்பல் கம்பெனியைச் சேர்ந்த ஒரு கம்பெனி நசித்தபின் எங்கள் கப்பலை எங்கள் எதிரியான பி.ஐ. எஸ்.என். கம்பெனியாரிடமே அப்போதிருந்த சுதேசிக்கப்பல் கம்பெனி அதிகாரிகள் விற்று விட்டது எனது உடைந்த மனத்தில் உதிரம் பெருகச் செய்தது. இதுபற்றி மாமாவிடம் நான் பிரஸ்தாபித்தபோது அவர் ஆவேசம் கொண்டு சொல்லிய சொற்கள்தான் நான் புதுவையைப் பிரியும்போது என் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவை:

"சிதம்பரம், மானம் பெரிது! மானம் பெரிது! ஒருசில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக்கப்பலை விற்றுவிட்டார்களே, பாவிகள். அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொறுக்கி

வங்காளக் குடாக்கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்த சில காசுகள் போய்விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும்? பேடிகள்!" என்று எவ்வளவோ கடுஞ்சொற்கள் கூறினார். என் செய்வது தமிழ்நாடு உயரவில்லை என்றுதான் சொல்லவேண்டும்: புதுவையிலிருந்து நான் என்னுடன் கொண்டு வந்தவை புஸ்தகங்கள் படுக்கைகள் மட்டுமல்ல; மாமாவின் இந்த மணிவாசகமும்தான்.

கடைசியாகக் கண்டது

பின்னர் பல வருஷங்களுக்குபிறகு சென்னையைச் சேர்ந்த பெரம்பூரில் நான் வசித்துக்கொண்டிருந்தபோது ஒருநாள் நான் திருவல்லிக்கேணி முதலான இடங்களுக்குப் போய்விட்டு இரவு சுமார் பத்து மணிக்கு என் வீடு வந்து சேர்ந்தேன். என் வீட்டுத் தார்சா (வராந்தா)வில் இருவர் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தனர். வந்தவுடன் நான் கைகால் கழுவிவிட்டு வீட்டுக்குள் சென்றேன். சாப்பாடு போடும்படி என் மனைவி மீனாக்ஷியிடம் கூறினேன். அவள் இலைபோட்டுப் பரிமாறியதும் நான் சாப்பிட ஆரம்பித்தேன். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது தார்சாவில் தூங்குபவர்கள் யார் என விசாரித்தேன். "உங்கள் மாமனார் பாரதியாரும், அவருடன் வந்துள்ள யாரோ ஒரு சாமியாரும்" என்றனள் என் மனையாள்.

"எப்போது வந்தார்கள்?" என்றேன். "இரவு எட்டு மணிக்கு வந்தார்கள். வரும்பொழுதே மாமா உங்களைத் தேடிக்கொண்டு வந்தார்" என்றாள்.

"இருவரும் சாப்பிட்டார்களா? விசாரித்தாயா?" என்று வினவினேன். "வந்ததும் உங்களை எங்கேயென்றும், எப்பொழுது வருவீர்கள் என்றும் கேட்டார்கள். பட்டினம் போயிருக்கிறார்கள் என்றேன். நான் சொல்வதற்குள்ளாக எப்பொழுது சிதம்பரம்பிள்ளை வருவார் மீனாக்ஷி என்று மீண்டும் கேட்டார். 10 மணிக்கு வருவார்கள் என்றேன். எங்களுக்குப் பசிக்கிறது, முதலில் சோறு போடு என்றார்கள். போட்டேன். இருவரும் சாப்பிட்டனர். சாப்பிட்டுவிட்டு நீங்கள் வந்தவுடன், அவர்களை எழுப்பும்படி சொல்லிவிட்டு பாயும் தலையணையும் கேட்டார்கள். படுக்கையை எடுத்துக் கொடுத்தேன். வாங்கிக்கொண்டு தார்சாவிற்குச் சென்றுவிட்டார்கள்" என்றார்.

நான் அவசர அவசரமாக எனது சாப்பாட்டை முடித்துக்கொண்டு தார்சாவுக்கு வந்து "மாமா, மாமா!" என உரக்க எழுப்பினேன். இருவரும் எழுந்துவிட்டனர். க்ஷேமம் விசாரித்தேன். க்ஷேமத்தையும் தாம் வந்த வரலாறு பற்றியும் கூறினார் மாமா. புதுச்சேரியில் வசித்துவந்த பல இந்திய நண்பர்களின் க்ஷேமத்தையும் விசாரித்தேன். மாமா பதில் அளித்துக்கொண்டே வந்தார்.

பின்னர் அவ்வப்போது சென்னையில் நான் 'சுதேசமித்திரன்' பத்திரிகை ஆபீசுக்குப் போயிருந்த சமயங்களிலெல்லாம் அங்கு உதவி ஆசிரியராக இருந்த மாமாவைக் கண்டு பேசியிருக்கிறேன். அருமை மாமாவின் எழுத்துக்கள் 'மித்திரன்' வாயிலாக எனக்கு ஆனந்தம் ஊட்டி வந்தன.

மாமா மறைந்தார்: மாண்பு மணத்தது!

கொஞ்ச நாளில் மாமா காலஞ்சென்றது கேட்டுத் திடுக்கிட்டேன். துக்கக்கடலில் ஆழ்ந்து தத்தளித்தேன். 'நல்லார்க்கு அதிக காலம் இல்லை போலும்!' என நினைத்தேன்.

மாமா இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டாலும் அவரது தேசீய கீதங்களும் மற்றைய பாடல்களும், கதை, கட்டுரைகளும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்துப் புகழ் வீசும் என்பதில் ஐயமில்லை. அவருடைய பெயர் தேசாபிமானிகளுடைய சரிதத்தில் மட்டுமல்லாமல் கவிதா மேதைகளின் சரிதத்திலும் வைரம் என ஒளிவிடும்.

அவருடைய பாடல்களின் அருமை பெருமையையும் சிறிது இயம்ப வேண்டும் என நினைத்தேன். ஆனால் எனக்கு ஆற்றலின்மையாலும் அவகாசமின்மையாலும் அவ்வேலையில் புகாது நின்று, கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியின் பாடல்களையே நம் தேசத்து மக்கள் என்றென்றும் படித்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தே மாதரம்! வாழ்க பாரதி!

பாரதிதாசன் கண்ட

நான் நிரவியிலிருந்து புதுச்சேரிக்கு மாற்றப்பட்டு வந்தபோது புதுச்சேரியில் பாரதியார் இருந்தார்! வ.வே.சு. அய்யர், சினிவாச ஆச்சாரி ஆகியோர் புதுவையில் இருந்தார்கள். அரவிந்தர் இருந்தார்.

இவர்களையெல்லாம் புதுச்சேரி மக்கள் 'சுதேசிகள்' என்றார்கள். இவர்களையெல்லாம் புதுச்சேரி மக்கள் வியப்போடு பார்த்தார்கள்.

"வில்லினை எடடா – கையில்
வில்லினை எடடா – அந்தப்
புல்லியர் கூட்டத்தைப்
பூழ்தி செய்திடடா!"

என்ற பாரதியின் வீரப் பாட்டை புதுச்சேரி யிலுள்ள இளைஞர் எல்லோரும் படினார்கள். பாரதி தெருவில் வரும்போது மக்கள் கிண்ணித் தேரைப் பார்ப்பதுபோல் மகிழ்ந்தார்கள்.

பிரெஞ்சுப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும்.

"நம் தாய்நாடு தமிழ்நாடு"
"எங்கள் உடம்பில் ஓடும் குருதி தமிழ்க்குருதி" என்று கூவினார்கள்.

புதுச்சேரியில் கால்வைத்த நான் பள்ளிக்கூடத்தில் ஓர் தமிழாசிரியன்; மேலும், என் ஆசிரியர்கள் நடத்தும் கலைமகள் கழகத்தின் உறுப்பினன்; பாரதி முதலியோர் சூழ்ந்துள்ள சுதேசி பல்கலைக்கழகத்தில் ஓர் மாணவன். இந்த நேரத்தில் எனக்கு ஏற்பட்ட எதிர்ப்பு மிகப் பெரியது.

சுதேசிகளுடன் (தாய்நாட்டுப் பற்றாளர்களுடன்) நான் சேர்ந்திருப்பதால் பிரெஞ்சு சர்க்கார் அதிகாரிகள் என்னை எதிர்த்தார்கள். பெரிய மனிதர்கள் என்ன எதிர்த்தார்கள். பள்ளியில் அதிகாரிகள் எதிர்த்தார்கள்.

கவிஞன் ஆனேன்

எதிர்ப்புக்களை நான் பொருட்படுத்தவில்லை? பாரதி வீட்டில் நான் ஒரு கவிஞன்! பிறகு புதுவைக்கே ஒரு புதுமுறைக் கவிஞன்! அன்றியும்

பாரதி



சுதேசிகளின் காப்பாளர்களில் நான் குறிப்பிடத்தக்க ஆள்.

என் தோழர்கள் என்னிடமிருந்து "சூரர்குலம் வேரறுக்க ஒரு வேலும்" என்பது போன்ற பழைய முறைப் பாடல்களை இழந்தார்கள். என் மூலம் பல புதுமுறைப் பாடல்களைக் கேட்டுக்கேட்டு அவர்கள் வீரமிக்கவர்களாக ஆனார்கள்.

ஏறத்தாழ நான் பாரதியாரிடமிருந்து பல புதுமுறைக் கவிதை எழுதப் பழகினேன். சுதேசிகளுடன் நான் முன்னின்று உழைத்தது கொஞ்சமன்று! என்னால் உடனிருந்து காப்பாற்றப்பட்டு வந்த உத்தமர் வீரர் அறிஞர் மாடசாமி புதுவையை விட்டுச் சென்றார். அதன் பிறகு பாரதி முதலியவர்களின் 'வாரண்டு' தீர்ந்ததால் சென்னைக்குப் போனார்கள்!

தமிழ் உலகத்தில் பாரதி

பாரதியார் என்றால் ஸ்ரீ சி.சுப்பிரமணிய பாரதியாரைத்தான் குறிக்கும். பாரதி என்றால் நமக்கு அவருடைய நினைவுதான் வருகிறது. அல்லது பாரதி யார் என்று கேட்டாலும் விடை தெரியுமாறு ஆராய்வோம்.

பசி ஏற்பட்டபோது உணவு கிடைத்தது என்று சொல்லும்படியாகத் தமிழ்நாட்டில் தமிழ் நிலை குன்றியிருக்குங்கால் அறிஞர்கள் எதிர்பார்த்தபடி பாரதியார் தமிழர்களிடையே தோன்றினார். தமிழின் ஆதிகால நிலை இடைக்கால நிலைகள் வெவ்வேறாயிருந்தன. கடைக்கால நிலையும் மாறுபட்டேயிருந்தது. ஆனால் கடைக்காலத்தில் தமிழர் உலகம் பாரதி தேவை தேவை என்று கதறிற்று.

யாருக்கும் பயப்படாத சுதந்திரம் என்றால் என்ன என்பதை எளிய நடையில் சொல்லித்தர ஆள் தேவை. பிறந்தார் பாரதியார்! அவருக்கு எதிர்ப்பு இருந்ததா! அவர் அனுபவித்தது போன்று வேறு யாரும் அவ்வளவு சிரமங்களை அனுபவித்ததில்லை.

சூரியனை தினம் பார்க்கின்றான், குடும்பிடுகின்றான். சூரியனைப் பார்த்தானா அவன்? இல்லை: கவி பார்க்கிறான்: அதே சூரியனை, இன்பத்தை அழகை அனுபவிக்கிறான். எடுத்துச் சொல்கிறான். பிறகு அனைவரும் பார்க்கின்றனர். முன்பார்த்த அதே சூரியனை இப்பொழுது காண்கின்றனர். குமரியை எல்லோரும்தான் பார்க்கிறார்கள். குமரியைப் பற்றிக் கேட்டால் அது முக்கோணமாக அமைந்திருக்கிறது எனச் சொல்வார்கள். ஆனால் கவி என்ன சொல்கிறார்.

“நீலத்திரைக் கடலோரத்திலே நின்று
நித்தம் தவஞ்செய் குமரி எல்லை.''

அங்கே ஒரு குமரியிருந்து தவம் செய்கிறாளாம்; இது கவிஞனின் உள்ளம்.

பாரதியார் புதுவைக்கு வருமுன் தேசீய கீதமும் நாட்டு வாழ்த்தும் பாடினார். தேசீயப்பாட்டு என்றால் எப்படியிருக்க வேண்டும்? “நான் வாழும் தேசம்'' என்னுடையது. நான் ஒருவனே இருந்தாலும் அந்த தேசம் என்னுடையதுதான். என் வகுப்பார் உயர்ந்தவர்கள் இப்படிப்பட்ட கருத்துக்களை நிரம்பியிருப்பது, “தேசீயக்கவி.'' ஆனால் நமது அன்பர்கள் பலர் தினமும் தேசீய கீதம் எழுதுகிறார்கள்!

பாரதியார் தேசீய கீதம் ஒன்றை எழுதி என்னிடம் காண்பித்து, “பிரஞ்சுக் கவி எவ்வளவு எவ்வளவு வீரமாக எழுதியுள்ளான். எனக்கு அவ்வளவு வருமா'' என்று சொன்னார். தாம் எழுதியது கூட அவ்வளவு, உயர்ந்தது அல்ல என்று நினைத்தார்.

“தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் – இவள்

புதுச்சேரி கடற்கரை

என்று பிறந்தவ ளென்றுணராத
இயல்பின ளாமெங்கள் தாய்!
முப்பதுகோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் – இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்''

எங்களிடம் ஒற்றுமையில்லை யென்று என்னை ஏமாற்றாதே, சிந்தனை ஒன்றுதான் என்று கூறுகிறார். ஜாதி – இது முன்னிருந்ததில்லை, பின்னுமிருக்க வேண்டாம் என்றார் பாரதியார். இதற்கு முன் கபிலர் சொன்னார். அவருக்குப் பெரிய ஆசாமிகள் கூடச் சொன்னார்கள். அவைகளெல்லாம் மூலையில் கிடக்கின்றன ஆனால் பாரதியாருடையதை அப்படித் தூக்கி மூலையில் எறிந்துவிட முடியுமா? மற்றவர்கள் முன்னேறுவதைக் கண்ட தமிழனுக்குப் பசி ஏற்பட்டிருக்கிறதே! இருதயத்தைக் குலுக்கிச் சுடச் சுடக் கொடுத்தால் மூலையில் போட வருமா?

பாரதிக்கு எல்லா மதமும் ஒன்று. கூடுமானால் மதமே இல்லையென்றாலும் பரவாயில்லை. ஜாதி இல்லை என்பது அவருடைய அகராதியில் தீர்ந்த விஷயம். 'மூட நம்பிக்கைகளை ஒழித்தவர் பாரதியார். இந்த தேசம் உருப்பட வேண்டும். தமிழர்கள் சுதந்தரத்துக்கு லாயக்கானவர்களாக ஆக்கப்பட வேண்டும். தமிழினால்தான் தமிழன் உயர்வான்' இதுதான் அவரது மதம். அவர் முகமது, கிறிஸ்து, முத்துமாரி, சக்தி எல்லாவற்றையும் பற்றி பாடியிருக்கிறார். தமிழில் இனிமையாக எதைப் பற்றியும் பாட முடியும் என்பது அவர் கருத்து. பாரதி முத்துமாரி அம்மனைப் பாடியிருக்கிறாரோ என்று ஒருவர் கேட்டால் தாராளமாக அவருக்கு அதை எடுத்துக் காட்டலாம்.

ரசத்திலே தேர்ச்சி கொள்!

அருவியின் வீழ்ச்சிபோல நெஞ்சிலிருந்து கவிதை சலசல வென்று பெருகி உருவாக வேண்டும். கவிதையை உருவாக்க வேண்டுமே என்பதற்காக நலிந்து சொற்களை பொறுக்கிக் கொண்டிருக்கமாட்டார் பாரதியார்.

எழுதிக்கொண்டே போவார் பாரதியார், "கவிதை நின்றுவிட்டது'' என்று கூறி, அந்த ஏட்டை அப்படியே எடுத்து வைத்துவிடுவார்; மறுநாளோ மறுமாதமோ கூட, அந்தக் கவிதையின் மற்றப் பகுதியானது விட்ட இடத்திலிருந்து சுரப்பதுண்டு.

புதிய ஆத்திச்சூடி எழுதத் துவங்கினார். அது "யௌவனம் காத்தல் செய்'' என்பது வரைக்கும் ஓடியது. பிறகு நின்றது. அதை அப்படியே எடுத்து வைத்துவிட்டார்.

நானும் பாரதியாரும் அதிகாலையில் எழுந்துவிட்டோம். பாரதியார் உள்ளத்தைக் காலை மகிழ்ச்சி தோளைக் குலுக்கிற்று. அவர் சொன்னார்; "சுப்புரத்தினம்! மனிதர் வீடு பிடிக்கவில்லை. இயற்கையின் வீட்டில் உலாவ வேண்டும். எங்கே போகலாம்?'' என்று.

நான், "வாழைக்குளம் தாண்டி அடர்ந்த தென்னந்தோப்பும் நீர் ஊற்றும் உண்டு; நிலமும் தூய்மையாய் இருக்கும்'' என்றேன். புறப்பட்டோம். தெரு முனையை அடைந்தவுடன், பினாகபாணி குழந்தையின் சாவு எதிரில் வந்தது. இறந்த குழந்தையுடன் போகிற பினாகபாணி, எங்களை எதிர்ற் கண்டு கும்பிடும் போட்டுவிட்டார். மெதுவான குரலில் பாரதியார் என்னிடம் "என்ன'' என்றார். இந்த "என்ன'' என்பதன் விரிவுரை என்னவென்றால் 'திடீரென்று இப்படிப்பட்ட தொல்லையில் அகப்பட்டுக் கொண்டோமே, போய்த்தான் தீர வேண்டுமா?' என்பதாம்.

கவிதை உலகு இப்போது ஒத்துவராது; வழக்க உலகில் இறங்கித்தான் ஆக வேண்டும். அதனால், நான் பாரதியாரை நோக்கி, "ஆம்; போய்த்தான் ஆக வேண்டும் இடுகாடுமட்டும்'' என்றேன்.

பாரதியார் பிண வீட்டுக்குப் போக விரும்பமாட்டார். இரக்கமில்லாதது காரணமல்ல. அடிமைநாட்டாரின் குழி விழுந்த கண்களில், துன்பத் துளிகளையும் காண அவரால் பொறுக்க முடியாது.

மண வீட்டுக்குப் பாரதியார் இரண்டு தடவை கூடப் போவார். சாப்பிடுவதற்கல்ல. அரிதான மகிழ்ச்சியடைந்த மக்களோடு அளவளாவப் பாரதியாருக்கு விருப்பம் அதிகம்.

கூட்டத்தோடு நானும் பாரதியாரும் நடந்து கொண்டிருந்தோம். மெதுவான குரலில் பாரதியார் என்னிடம், "மிக்க தொலைவோ?" என்று கேட்டார். நான், "வாழைக்குளம்; தென்னந்தோப்பு; நீரூற்று; அருகில் தான் பாப்பம்மா கோயில்" என்றேன். பாரதியார் கொஞ்சம் அமைதி அடைந்தார்.

குழந்தை புதைக்கப்படுகிறது. அருகில் சிலர் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வேறு பலர் இருவர் மூவராக நிழல் கண்ட இடத்தில் நின்று பேசுகிறார்கள்.

பாரதியாரை, நாராயணசாமி முதலி, தனியாக அழைத்துச் சென்று அங்கிருக்கும் பாப்பம்மா கோயிலின் பழைய வரலாற்றைப் புளுகிக் கொண்டிருந்தான். எனக்கு அவன் சங்கதி பிடிக்காது. நான் உட்கார இடம் தேடிக் கொண்டிருந்தேன்.

மல்லிகைச் செடியின் அண்டையில், மேல் துண்டை விரித்துப் போட்டு படுத்துக் கொண்டேன். பாரதியார் வந்தார். "குடிக்கத் தண்ணீருக்கு என்ன செய்வது" என்றார். இளநீர் தேடிச் சென்றேன். ஒரு காய்தான் அகப்பட்டது. சீவிப் பொத்தலிட்டபடி எடுத்துவந்தேன். "நீ சாப்பிட்டாயா?" என்று கேட்டார். "காய் அகப்படுவது அரிதாயிருக்கிறது. எனக்குத் தாகமில்லை" என்றேன். ஆவலாய்க் குடித்து வெறுங்காயைக் கீழே போட்டார்.

பாரதியார் கூறுகிறார்; "சுப்புரத்தினம்! உனக்கு இளநீர்க் காயில்லை. அதுமட்டுமல்லாமல் உள் மல்லிகைச் செடியிலிருந்த பூக்களையும், அரும்புகளையும், பறித்துக்கொண்டு போய் விட்டான். அதோ அந்தக் கல்லின் மேல் போட!"

உயிர் ததும்பும் அழகைவிடப் பாப்பம்மா கோவில் சாமி சிறந்ததில்லை என்பது பாரதியார் எண்ணம்! அவரது இந்தக் கருத்தை புரிந்துகொள்ள முடியவில்லை!

நாம் கேட்டேன். "அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று.

"நீ மல்லிகையின் மனத்தையும் அழகையும் சுவைத்திருந்தாய். நான் பார்த்தேன். அப்போது என் நெஞ்சு பெற்ற இன்பத்தின் அளவை நீ கணக்கெடுக்கவில்லை; எடை தெரியவில்லை உனக்கு. ரசத்திலே தேர்ச்சி கொள்!" என்றார். "யௌவனம் காத்தல் செய்" என்று நிறுத்திய புதிய ஆத்திச்சூடியின் அடுத்த வாக்கியமாகவும், எனக்கொரு பாடமாகவும் இதைக் கூறினார்.

"ரசத்திலே தேர்ச்சிகொள்" என்று கூறியவுடன், "சுப்புரத்தினம்! நமது ஆத்திச்சூடி விட்ட இடத்திலிருந்து தொடங்குகிறது" என்று கூறி, "ராஜசம் பயில். போகலாமா?" என்றும் கூறினார். நான் "போகலாம்!" என்றேன்.

பாரதியார் "நீதி தவறேல். ருசி பல வென்றுணர்" என்று கூறிக் கொண்டே, ஊரில் நுழைவதற்குள் "வௌவுதல் நீக்கு" எனப் புதிய ஆத்திச்சூடியை முடித்துத் தீர்த்தார்.

புதுவையில் பாரதியார் செல்வாக்கு

இந்தியா பத்திரிகை நின்றுவிட்டது. அதன் பிறகு பாரதியார், சின்னையா ரத்தினசாமி நாயுடுடன் ஆரம்பித்து நடத்தி வந்த சூரியோதயமும் நின்றுவிட்டது.

இந்தியா பத்திரிகையைத் தான் எனக்கு நன்றாய் தெரியும். அப்போதெல்லாம் நான் சர்க்கார் தமிழ் ஆசிரியனாகிவிட்டேன். இந்தியா பத்திரிகையில் படம் வெளிவரும். சித்திர விளக்கமும் தெளிவாக எழுதியிருக்கும். படங்கள் ராஜீய சம்பந்தமானவை. அர்த்த புஷ்டியுள்ளவை. பத்திரிகை வெளிவருவதை வாசகர்கள் ஆவலோடு எதிர் பார்ப்பார்கள்.

படத்தை வெட்டி அட்டையில் ஒட்டி வீட்டுச்சுவரில் தொங்கவிட்டு வைப்பார்கள். ஒவ்வொரு படமும் இங்கிலீஷ்காரனுக்கும் இந்தியனுக்கும் உள்ள சம்பந்தத்தை – இங்கிலீஷ்காரனிடம் இந்தியன் அனுபவிப்பதை குத்தலாக எடுத்துக் காட்டுவதுதான் அந்தப் பத்திரிகையிலேயே



சுவையான பகுதி. அந்தச் சித்திரந்தான் முதலில் என்னை தன் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம் இன்னொன்று எனக்குக் கூறியது.

சிறு சிறு கதைகள்! இங்கிலீஷ்காரனை நெட்டுடைக்கும் வரலாற்றுத் துணுக்குகள்! நாளடைவில் இவைகளின் பொருளையும் என்னால் சுவைக்க முடிந்தது. இந்தியா நின்றபின் எழுந்த சூரியோதயமும் நின்று சுமார் ஓராண்டும் ஆயிற்று. புதுவையில் தேசீய உணர்ச்சி மெதுவாக மறைந்து போக வேண்டியதுதான். ஆனால் அது மறையாமல் காத்த பெருமை இங்கிலீஷ்காரரையே சேரும். அரவிந்த் கோஷ் வீட்டுக்கெதிரில் சுமார் 15 பிரிட்டிஷ் ரகசியப் போலீஸ்காரரை ஸ்திரமாகப் போட்டு வைத்தார்கள். ஈசுவரன் தர்மராஜா கோயில் வீதியில் சுமார் 10 ரகசியப் போலீஸ்காரர்களைத் திரியவிட்டு வைத்தார்கள்.

அப்போதெல்லாம் புதுவை ஈசுவரன் தருமராஜா கோயில் வீதி சுதேசிகளின் சகவாஸத்திற்குப் பெயர்போனது. பாரதியார் வீடு, வ.வே.சு ஐயர் வீடு, பொன்னு முருகேசம் பிள்ளை வீடு, வாத்தியார் சுப்பிரமணிய ஐயர் வீடு, ஆறுமுகம் செட்டியார் வீடு, ராஜா நாராயணசாமி வீடு, நாகசாமி ஐயர் வீடு அனைத்தும் அந்தத் தெருவில்தான்! இவர்களுக்கெல்லாம் சி.ஐ.டி. போட்டிருந்தார்கள்.

மேற்சொன்ன வீட்டுக்காரர்களுடன் சேர்ந்து எண்ணப்பட்ட சிவக்கொழுந்து நாயகர், சிவா நாயகர், முத்தியாலுப்பேட்டை கிருஷ்ணசாமி செட்டியார், அரவிந்த கோஷ் வீட்டு ராமசாமி ஐயங்கார் (வ.ரா.), லோகநாத முதலியார், ஐயராம் பிள்ளை, குவளைக் கண்ணன், கோவிந்தராஜுலு நாயுடு, கொட்டடி (கரடிக் கூடம்) வாத்தியார் வேணுநாயக்கர் முதலியவர்கள் சதா இந்த வீதியில், பெரும்பாலும் பாரதியார் வீட்டில், இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் பாரதியாரைச் சந்திக்காத நாள் பஞ்சாங்கத்தில் கிடையாது.

கலவை சங்கர செட்டியார், அன்பு டாக்டர், டாக்டர் நாராயண சாமி நாயுடு, டாக்டர் கோபால்சாமி நாயுடு, ஜீயர் நாயுடு ஆகிய பட்டம், பதவி, செல்வாக்குள்ளவர்கள் கூடப் பசியோடு பாரதியாரை நோக்கி வருவார்கள். பாரதியாரைக் கண்டு பேசிய பின்பே அவர்கள் பசி தீரும்.

புதுவையில் படித்தவர்களிடத்தில், விஷயம் அறிந்தவர்களிடத்தில் பாரதியாருக்கு நல்ல செல்வாக்கிருந்தது. பாரதியார் வாசத்தால்தான் ஈசுவரன் தர்மராஜா கோயில் வீதி குறிப்பிடத்தக்கதாயிற்று.

பாரதியார் வெளியில் புறப்படுவார். சி.ஐ.டி. பின் தொடருவான். சட்டப்படி அவன் பாரதியாரை அதிகமாக நெருங்கலாகாது கொஞ்சம் எட்டியே தொடர வேண்டும். அவன் நெருங்கி விடும்

நேரமோ, அவன் தொந்தரவுபடும் நேரமாகும்! பாரதியார் அவனைத் திரும்பிப் பார்ப்பார். அவரின் விழி கோபத்தையடையும். அவன் செய்வது குற்றம் என்று அர்த்தம். நேர்ந்தது தொல்லை சி.ஐ.டி.க்கு! சி.ஐ.டி.யோடு கைகலந்த ஒரு மனிதன் யார்? பாரதியாருக்கு அந்தத் தெரு மனிதனைத் தெரியாது. பாரதியாருக்கு அத்தனை செல்வாக்கு.

பொன்னு முருகேச பிள்ளை, அவரது குமாரர்கள் ராஜா பாதர் பிள்ளை, கனகராஜா பிள்ளை ஆகியோர் பாரதியாருக்கு எல்லா விஷயத்திலும் காப்பாளர் என்றால் மிகையாகாது. முத்தியாலுப்பேட்டை கிருஷ்ணசாமி செட்டியார் விசேஷ பொருளுதவி செய்து வந்தார்.

கலவை சங்கர செட்டியாரும் உதவியாளரே. பிரபலஸ்தர்கள் அனைவருக்கும் பாரதியார் மேல் உயிர். பாரதியாருக்கு இருந்த செல்வாக்கு, பாரதியாருக்குத் தெரிந்திருந்ததைவிட பிரிட்டிஷ்காரருக்கு நன்றாகத் தெரியும்.

பாரதியாரை, சுதேசிகளை, ஒரு பிரிட்டிஷ் சி.ஐ.டி அவமதிப்பானானால், புதுவையில் உள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களின் ஆணிவேர் ஆடும்!

கத்தி விளையாட்டு பார்க்கிறார் கவி பாரதி

நான் ஒருநாள் என் நண்பர் ஒருவர் சகிதம் ஐயரிடம் சென்றேன்.

ரகசியப்போலீஸ் பல ரூபத்தோடு, பல காரணம் கூறிக் கொண்டும் நுழையக்கூடும். ஆதலால், வழக்கப்படி, ஐயர் என் நண்பரை உறுத்துப் பார்த்தார்.

நான் ஜாமீன் போட்டேன், “அவர் எனது நண்பர்” என்று.

பாரதியார்: அப்படியா! நீங்கள் எங்கிருப்பது?

நண்பர்: நான் இந்த ஊர்தான். சுப்புரத்தினமும் நானும் ஒரே பாடசாலையில் வாசித்தோம். உங்களைப் பார்க்கவேண்டும் என்று நான் சுப்புரத்தினத்திடம் கூறினேன்.

குயில் பாட்டுத் தோப்பு

பாரதியார்: அப்படியா, தமிழ்ப் படித்திருக்கிறீர்களா?

நண்பர்: கொஞ்சம் தெரியும்.

இதற்கிடையில் நான், "இவர் கத்தி விளையாட்டில் சமர்த்தர். ஒரு நாளைக்கு விளையாடச் சொல்லுகிறேன்'' என்று ஐயரிடம் கூறினேன்.

அவ்வளவுதான், ஐயர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! தமிழரில் ஒருவர் கத்தி விளையாட்டுக்காரராயிருப்பதால் தேச விடுதலை நிச்சயம் என்று நினைத்துவிட்டார் போலும்!

அவர் சொல்லுகிறார். கத்தி வீரரைப் பார்த்து: "அப்படியா, ஜமாயுங்கள்! நீங்கள் எல்லோருக்கும் அந்த வித்தையைக் கற்றுக் கொடுக்க வேண்டாமோ? அப்படிச் செய்யுங்கள்! சும்மா இருந்தால்! அதிக பலசாலியாக இருக்க வேண்டும் அல்லவா கத்தி விளையாடுறகிதற்கு? பின்னெப்படி முடியும்?''

இவை மாத்திரமல்ல. உத்ஸாகத்தால் எவ்வளவோ கூறினார். என் நண்பர் ஐயரின் குஷியைக் கண்டு அதிக குஷியாகிவிட்டார். "நான் இப்போதே சென்று கத்தியை எடுத்து வரட்டுமா?'' என்று என்னை ரகசியமாகக் கேட்டார். அப்படியே தீர்மானிக்கப்பட்டது. நண்பர் கத்தியை எடுத்துவர வீட்டுக்குப் போனார்.

இன்னும் சற்று நேரத்தில் ஐயர் வீட்டு மெத்தையில் என்ன நடக்கப் போகிறது தெரியுமா? இங்கிலீஷ்காரனுக்கும் எனது நண்பனுக்கும் யுத்தமல்லவா நடக்கப்போகிறது! நாட்டுக்கு விடுதலை நிச்சயமாகிவிடப் போகிறது. எதைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது, கேளுங்கள்.

ஐயர் வந்தவர்களையெல்லாம் இருக்கச் சொல்லுகிறார். வராதவர்களையெல்லாம் அழைக்கச் சொல்லுகிறார். கத்தி வீரரின் மார்பை வர்ணிக்கிறார். ஐயரின் மார்பு கனக்கிறது.

கத்தி விளையாட்டுக்காரர் வந்தார்.

பாரதியாரும் நானும் மற்றவர்களும் உட்கார்ந்தோம். இரண்டு பட்டாக்களை இரண்டு கையில் எடுத்தார் வீரர்.

ஐயருக்குத் தாம் அனுபவிக்கப்போகும் இந்தக் காட்சியை அனைவரும் அனுபவிக்க வேண்டுமே என்ற எண்ணம் போலும். எழுந்தோடிக் கீழேயிருக்கும் தம் மனைவியாரை நோக்கி, "செல்லா, யாராவது வந்தால் மெத்தைக்கு அனுப்பு'' என்கிறார்.

இந்த வார்த்தை அனாவசியம். அவர்கள் யாராவது வந்தால் திருப்பியா அனுப்புவார்கள்?

மீண்டும் ஓடி ஐயர், "செல்லம்மா, வெற்றிலை அதிகமாக அனுப்பு!'' என்றார்.

தோப்புக்கு வெளியே



இரு கையிலும் இரு பட்டாக்கள் சுழலுகின்றன. நானும் இன்னும் சிலரும் கத்தி விளையாட்டைப் பார்க்கவில்லை. ஐயரையே பார்க்கிறோம். ஐயர் கண்கள் சிவக்கும் ஒரு தரம். சிரிக்கும் மற்றோர் சமயம். ஏற்கெனவே மேல் நோக்கியுள்ள மீசையை இன்னும் முறுக்கேற்றிவிடுவார். கைந்நொடிப்பார். எங்களையெல்லாம் பார்ப்பார். தேசப் பிரச்சினை ஒருவாறு வெற்றிகரமாக முடிந்துவிட்டதோ என்பதுதான் எங்கள் எண்ணம்.

கத்தி விளையாட்டு நின்றது. நண்பர் உட்கார்ந்தார்.

ஐயர்: நீங்கள் வீரர்! பார்த்தீர்களா இவர் உடம்பை! நீங்கள் வீரர்! அடிக்கடி வந்து போகலாமே இவ்விடத்தில்.

ஐயர் கையில் ஒரு இலட்சம் ரூபாய் இல்லாதது அப்போது தான் ஐயருக்கு ஞாபகம் வந்தது. கத்தி வீரரைப் பார்த்து, "இந்தப் புத்தகங்களையெல்லாம் நீங்கள் வாசியுங்கள்'' என்று கூறிப் பல புத்தகங்களை அவரிடம் கொடுத்தார்.

மறுநாள் காலை, மத்தியானம், இரவு எந்த நேரத்திலும், ஐயருக்கு இதே நினைவு. வருபவரையெல்லாம், அவர், "நீங்கள் நேற்று கத்தி விளையாட்டுப் பார்க்கவில்லையே?'' என்று கேட்பார்.

இந்த அதிர்ச்சியால், கத்தி விளையாடும் எனது நண்பர் நம் விளையாட்டில் முன்னிலும் அபிவிருத்தி அடைந்ததோடு, தாம் ஓர் வீரர் என்ற நம்பிக்கையும் உண்டாகிவிடும் அல்லவா?

தமிழன் ஒரு துறையில் கெட்டிக்காரனாக இருந்துவிட்டால், ஐயர் அடையும் உத்ஸாகம் அளவிட முடிகிறதில்லை. ஐயரிடம் தென்பட்ட பன்றிக்குட்டி அசல் சிங்கங்களாக ஆகாமற் போவதில்லை.

புதுவையில் கண்ட பாரதியார்

பாரதியார் புதுவையில் தங்கியிருந்தபோது எனக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்தேன். அப்போது புதுச்சேரியில் வாழ்ந்து வந்த தமிழறிஞர்கள் பாரதியாரைக் கவிஞரென ஒத்துக் கொள்ளவில்லை. இவருக்கு தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தக்க புலமை கிடையாது என்பது அவர்களுடைய முடிவாகும். அவருக்கு எழுத்து, சொல், யாப்பு பற்றிய அறிவும் ஆராய்ச்சியும் உண்டு என்பதை நான் வற்புறுத்துவேன்.

அந்நாளில் அவர் புலமையில் நம்பிக்கை கொண்டவர்களில் யானும் ஒருவன். இதனால் எனக்கு எதிர்ப்பும் ஏற்பட்டது. என்னுடைய கடந்த கால வரலாற்றைப் பார்த்தால் எனக்கு என்றும் எவ்விடத்தும் எதிர்ப்பு இருந்தது என்பது புலனாகும். அவ்வெதிர்ப்புகள் என்னை ஒன்றும் செய்துவிடவில்லை. மாறாக என்னுடைய வாழ்வை உயர்த்தியது என்றே கூறலாம். எக்காரியத்தை இயற்றத் தொடங்கினும் எண்ணித் தொடங்க வேண்டும். நமக்கு நல்லது அறமானது என்றுபடும் எண்ணங்களை மற்றவருடைய எதிர்ப்புக்கும் செயலுக்கும் அஞ்சாமல் செயற்படுத்த வேண்டும்.

பாரதியாரோடு தொடர்பு ஏற்படுவதற்கு முன்னர் என்னுடைய நிலைமையை நீங்கள் அறிய ஆசைப்படுவீர்கள். யான் ஒரு தமிழாசிரியன். மேலும் அக்காலங்களில் பலவகையான இசைப்பாக்களை பக்தி நெறியில் பாடிக் கொண்டிருந்தவன். அக்காலத்தில் யான் பாடிய பாக்கள் எல்லாம் ஊர்ப்புறங்களிலும், சென்னை முதலான இடங்களிலுமுள்ள அன்பர்களால் விரும்பி பொருள் கொடுத்து ஏற்றுப் பாடப்பெற்றன.

அக்காலங்களில் புதுவையில் அறிஞர்கள் கூடிப் பல கருத்துக்களைப் பற்றி சொற்பொழிவாற்றும் கலைமகள் கழகம் என ஒரு பேரவை இருந்தது. அதன்கண் யான் ஒருமுறை உணர்வும் அறிவும் வேறுபட்டவையென்று பேசினேன். உணர்வென்பது நுண்பொருள் பற்றியது. அறிவென்பது பருப்பொருள் பற்றியது. இதற்குச் சான்றாகத் திருமங்கை யாழ்வார் பாடிய வாடினேன் வாடி என்று தொடங்கும் பாவில் நாடினேன் நாடி என்றது பருப்பொருளைப் பற்றிய அறிவு தொழிற்படும் நிலை. உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து என்றது நுண்பொருள் பற்றிய உணர்வு தொழிற்படும் நிலை. இவ்விரு வேறுபாடுகளை ஆண்டுள்ளோர் ஒப்பவில்லை. பின்னர் ஆங்கிலம் ஆரியம் தீந்தமிழ் நிறை மறைமலையடிகளும், நரை பழுத்த துறைத்தீர் தமிழில் சுவையொழுகச் சொற்பெருக்காற்றும் ஞானியரடிகளும் அறிவும் உணர்வும் வேறென்பதை விளக்கியுள்ளார்.



பாரதி பூஜித்த விக்கிரகமும் வாளும்

பாரதியாருடைய தொடர்பு என்னுடைய பா நெறியில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்தியது. அவர் கண்ணெதிரில் காணப்படும் மக்களின் தேவைகளைப் பாடினார். அது என்னுடைய மனத்தைக் கவர்ந்தது. பிறகே என்னுடைய பாக்கள் அரசியல், சமுதாயம், மொழி ஆகிய துறைகளில் உள்ள குறை நிறைகளை உருவாக எடுத்துக்காட்டத் தலைப்பட்டன. இவ்வகையில் பாரதியாருக்கு யான் மிகவும் கடமைப்பட்டவன். அவர் பாடிய ஆயிரக்கணக்கான பாக்களில் தமிழனின் தனித்த நாகரிகத்தையோ, பண்பாட்டைப் பற்றியோ பாடவில்லை. காரணம், கூடாது என்பதல்ல. அவரறிந்த வகையில் தமிழன் நாகரிகமெல்லாம் ஆரியச் சார்புடையவே யாகும். சங்க நூற்களை அறிந்தவர் தான் தமிழனின் தனித்த பண்பாடுகளை அறிய முடியும்.

அத்தகைய நூல் தொகுதிகள் உண்டு என்பது அவருக்குத் தெரியாது; இவருக்கு மட்டுமல்ல; தமிழ்ப் புலமை சான்ற இவருடைய தகப்பனாருக்கே தெரியாது. இதனை அவரே கூறியுள்ளார். எட்டையபுர அரசரோடு இவருடைய தகப்பனார் அளவளாவிக் கொண்டிருக்கும் போதெல்லாம் இராமாயணம், பாரதம் போன்ற நூற்களின் கருத்துக்களே பேசப்படும்; ஆராயப்படும். ஆகவே இவை பற்றிய செய்திகளே பாரதிக்குத் தெரியும். கதைகளின் போக்கை மாற்றியும் கூட்டியும் தமிழில் இராமாயண பாரதமாகிய நூற்களை அமைத்திருப்பினும், அவைகளில் காணப்படும் அடிப்படையான சில பண்பாடுகளை தமிழர்களுக்கு எட்டுணையும் பொருந்தாது.

சான்றாகச் சொற்பால் அமுதி வள் யான் சுவை என்றாற்போல ஒருயிரும் ஈருடலுமாக வாழ்க்கை நடத்திய தமிழருக்கு ஒருத்தியைப் பலர் மணத்தல் போன்ற வாழ்வு முறைகள் ஒவ்வாதென்பது வெள்ளிடை மலையன்றோ! புறவாழ்வில் தமிழர் நிகழ்த்திய போர் முறைகளும் வடவர் முறைக்கு முற்றிலும் மாறுபட்டவையாகும். மறைந்து நின்று வேண்டாதாரை அம்பெய்து அழிப்பது தமிழன் வாழ்வில் காணாத புதுமை. ''கடந்தடு'' என்ற சொற்றொடர் வருமிடமெல்லாம் நச்சினார்க்கினியாரெனும் பேராசிரியர் வஞ்சி யாது எதிர் நின்று கொன்று என்று விளக்கம் வரைவதைக் காணலாம். தமிழ் நூல்களைப் பாரதி அறிந்ததைவிட ஆங்கில நூல்களும், வடமொழி நூல்களுமே அறிவார். மேலும் தமிழரைப்பற்றி அறிந்த சிறப்பான செய்திகளும் அவரறியாமல் மறைக்கப்பட்டன.

தமிழையும் தமிழ் நாட்டையும் சிறப்பித்துப் பாடுவதற்கு ஓர் மையம் வாய்த்தது. மதுரை தமிழ்ச் சங்கத்தை நிறுவி நடத்தி வந்த திருமிகு. பாண்டித்துரைத் தேவரவர்கள் தமிழ்நாட்டைப் பற்றி சிறந்த பா பாடுபவருக்குப் பரிசளிப்பதாக செய்தித்தாள்களில் அறிவிப்புச் செய்தனர். யாங்கள் இதனை பாரதிபால் அறிவித்தோம். அவர் முதலில் உடன்படவில்லை. நாமெல்லாம் வெள்ளைக்காரருக்கு எதிர்ப்பானவர்கள். பாண்டித்துரை தேவர் போன்றோருக்கு இதுபோன்ற செய்திகள் பிடிக்காது. இந்நிலையில் நம்முடைய பாடலை அவர் ஏற்பாரா என்பது ஐயம். நாம் வறிதே எழுதி அவர்களுடைய அவமதிப்பை பெறுவதில் என்ன பயன்? என்றனர்.

''நீங்கள் அங்கு அனுப்பாவிட்டாலும் எங்களிடத்திலாயினும் கொடுங்கள்'' என்று கூறினோம். பின்னரே பாடல் எழுதினார். இந்தச் சமயம் வாய்க்காவிடில் தமிழ்நாட்டில் தமிழ்க் கவிதைகளை வழங்கிய பாரதிக்குத் தமிழ்நாட்டை மட்டும் சிறப்பித்துப் பாடுவதற்கு வாய்ப்பே இருக்காது. இச்செய்தி உங்களுக்கு வியப்பை அளிக்கலாம். உண்மை இது தான்.

பாரதியும் பெண்களும்

திருமதி செல்லம்மா ஊரில் இல்லை. பெரிய பாப்பா, சின்ன பாப்பா ஊரில் இல்லை. சாப்பாடு திரு. முருகேசம் பிள்ளை வீட்டிலிருந்து அம்மாக்கண்ணு எடுத்துவந்து ஐயரை உண்பித்தார். இவ்வாறு ஒருநாள் மத்தியானம் தீர்ந்தது. ராத்திரிச் சாப்பாடும் முடிந்தது. இரவில் ஐயர் சாப்பிடப் பால்காரன் வழக்கம்போல் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போயிருந்தான். அது பச்சைப் பால்.

நான் இராச் சாப்பாட்டை முடித்து ஐயரிடம் படுத்துக் கொள்ள வந்தேன். அப்போது அவர் என்னமோ படித்துக் கொண்டிருந்தார். நான் அது என்னவென்று கேட்கவில்லை. பிறகு கொஞ்சநேரம் எழுதினார். அதையும் கவனிக்கவில்லை. நான் வந்ததும் படுத்துக் கொண்டேன். தாம் எழுதுவது இன்னதென்று ஐயர் என்னிடம் சொல்லாததற்கு நான் படுத்துக் கொண்டதுதான் காரணம்.

நான் தூங்கிவிட்டேன். மேலே நடந்தவை எனக்குத் தெரிய வழி யில்லை.

'நடுநிசி' புரண்டேன். நித்திரை சிறிது கலைந்தது. தலை மாட்டில் ஐயர் குந்திக் கொண்டிருந்தார்.

"ஏன்'' என்றேன்.

"இல்லை. பாலைக் காய்ச்சியாக வேண்டும். நான் கீழே போய் அடுப்பின் மேல் பச்சைப் பாலைப் பாத்திரத்தில் வைத்துப் பேப்பர்களைக் கொளுத்தினேன். வெகுநாழியாக பால் காயவில்லை. உன்னிடம் சொல்ல வந்தேன். உனக்குத் தூக்கம்...!"

"எழுப்புவதுதானே. இதோ நான் போய்க் காய்ச்சிக் கொண்டு வந்துவிடுகிறேன்.

மெத்தையைவிட்டு விரைவாக கீழே இறங்கினேன். அடுப்பின்மேல் பால் இருந்தது. அடுப்பின் உள்ளே பேப்பர் எரிந்த சாம்பல் அடைத்துக் கொண்டிருந்தது. நான் அந்தச் சாம்பலை எல்லாம் வெளியில் தள்ளிப் போட்டு, வேறு பல பேப்பர்களைத் தேடிக் கொண்டுவந்து கொளுத்தினேன்.

பால் ஏனென்று கூட கேட்கவில்லை. பேப்பர் கொளுத்துவதால் உண்டாகும் உஷ்ணம் பால் காய்ச்சுவதற்குப் போதாது என்று தெரிந்தபின் விறகை அடுப்பில் இட்டு மண்ணெண்ணெய் ஊற்றிப் பற்றவைத்தேன். விறகில் தீப்பிடிப்பது சுலபசாத்தியமாக இல்லை.

நான் இதோ சுடவைத்துவிடுகிறேன், என்று தெரிந்தவனைப் போல மெத்தையை விட்டுக் கீழே இறங்கியதால் சீக்கிரத்தில் காய்ச்சிய பால் வந்துவிடும் என்று ஐயர் நினைத்திருப்பார். எதிர்பார்த்தபடி சீக்கிரம் வராததுபற்றி அவரே கீழிறங்கி வந்தார். அடுப்புப் பற்ற வைக்கும் ஆரம்ப வேலை எனக்கும் தகராறு என்பதைக் கண்ட ஐயர்,

"ஏன் அந்த வித்தை; அவ்விடத்திலும் இழுப்புத் தானே?''

"இல்லை, இல்லை இதோ ஆயிற்று.''

ஐயர் சிரித்தார். எனக்குக் கூட இதோ ஆயிற்று என்று தான் தோன்றிற்று, முதலில். அதன் பிறகுதான் இது நமக்குத் தெரியாத வேலை என்று விளங்கினது என்று கூறினார்.

நானும் ஐயரும் சேர்ந்து அடுப்பைப் பற்ற வைத்து முடித்தோம். அடுப்பு எரிய ஆரம்பித்தது. பாரதியார் சிந்தனையில் ஆழ்ந்தார்.

கொஞ்ச நேரத்தின் பின், "சுப்புரத்தினம், பெண்கள் செய்யும் வேலை அனைத்தும் ஆண்கள் செய்வது சுலபமில்லை. அவை மிக்க சாதாரணம் என்று நினைத்திருக்கின்றோம். இந்த மாதிரி வேலைகளைப் பெண்கள் அதிகமாக 4 மணியிலிருந்து இரவு 11 மணிவரைக்கும் செய்து நம்மைப் போஷிக்கிறார்கள். இதற்கிடையில் அவர்களை நாம் அடிக்கிறோம்; அதட்டுகிறோம். நான் கூடச்



செல்லம்மாவை அடிக்கிறேன். அதெல்லாம் கூடாது. நாமும் உழைக்கிறோம். பெண்களும் உழைக்கிறார்கள். குடும்பம் நடக்கிறது.

அவர்கள் இல்லாவிடில் நாம் என்ன பண்ணுவது? இதை நினைக்கிறதில்லை. புருஷர்கள் உண்மையில் பெண்களை இழிவுபடுத்துகிறார்கள். எப்போதும் தம் ஆதிக்கத்தில், அடிமைகளாக வைத்திருக்கிறார்கள். பெண்கட்கு ஏனென்று கேட்கக்கூட வாயில்லை. அவர்கள் நிலை அப்படி...''

பல கூறினார். மீண்டும் சிந்தனையில் சென்றார். பெண்களுக்கு ஏதோ நன்மை ஏற்படப் போகிறது என்பது மாத்திரம் எனக்கு விளங்கிவிட்டது. இதற்குமுன் பெண்களைப் பற்றிய ஐயர் எண்ணம் சாதாரணமானது.

கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமை அற்ற பெண்களின் கூட்டமடி கிளியே என்று அவர் அதற்கு முன், திறமையற்றவர்கட்குப் பெண்களை ஒப்புக்காட்டிப் பாடி இருக்கிறார். எனக்குக்கூடப் பெண்கள் விடுதலை என்ற பிரச்சினை ஒன்று இருக்கும் என்று தெரியாது.

பால் காய்வதற்குள் பெண்கள், பெண்கள் உயர்வு, பெண்கள் விடுதலை எல்லாவற்றையும் பற்றி யோசித்து முடித்துவிட்டார்.

பால் காய்ந்தது. ஆற்றிச் சர்க்கரை இட்டுக் குடித்தார்.

“படுத்துக் கொள்ளுவோமா?''
“நாளைக்கு எது பற்றிப் பாட்டு?''

ஐயர் சிரித்தார். ஆனால் உடனே அறுதியிட்டுக் காம்பீர்யமாக,

“பெண்களை விடுவிப்போம்'' என்று பதில் கூறினார்.

அந்தப் பாழும் இரவு எப்பொழுது விடிந்து தொலையும்? என்றது என் நெஞ்சு – விடிந்தது. விழித்தேன்.

“பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா''

என்ற பண்ணும் மொழிகளும் என்னை அவரின் பாதாரத்தில் சேர்த்தன.

ஐயர் எனக்குமுன் எழுந்து எழுதிக் கொண்டிருந்தார். நான் எழுந்ததும் பாடிப்பாடிக் காட்டினார். தொடர்ச்சி வருமாறு:

“தண்மை இன்பம் நற்புண்ணியம் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும்''

தாய் என்ற தத்துவம் பெண்ணாக இருப்பதாலும் பெண் தத்துவம் தாய் ஆனதாலும் அந்தத் தாயின் பெயரும் சதி என்ற பெயரும் சாந்தியையும், இன்பத்தையும், புண்ணியத்தையும் தருவனவாம் என்று கூறினார். பின்னும்

“அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்’’

என்று தொடர்ந்து,

“துன்பம் தீர்வது பெண்மையினாலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்’’

என்று துணிவு கூறிக் காரணத்தையும் காட்டினார். பெண்களால் தான் துன்பம் தீர முடியும். சூரப் பிள்ளைகளை அவர்கள் கொடுக்கிறார்கள். சூரப்பிள்ளைகள் அவர்கள் அம்சம். இதை விடப் பெண்களைப் பற்றி என்ன சொல்ல வேண்டும்.

இவ்வாறு புதிய கருத்துக்களைப் புதிய வழியில் கவிதாரசம் ஒழுகும்படி 9 அடிகள் எழுதி முடித்தார். அன்று ஐயர் வீட்டுக்கு வந்தவர்கள், பெண்கள் உயர்ந்தவர்கள், ஆண்களோடு சமமானவர்கள் என்ற தருமத்தை அறிந்தார்கள். தமிழ்நாடு மறுநாள் தொடங்கிப் பத்திரிகை வாயிலாகப் பெண்கள் உயர்வை உணர்ந்தது.

ஒருநாள் பாரதியார் என்னிடம் சொல்லுகிறார். “நான் இப்போது செல்லம்மாவை அதட்டுகிறது இல்லை. இந்த வார்த்தையை அவர் தெய்வத்தைப் பற்றிப் பக்தர் கூறுவதுபோல் கூறினார். இதை அவர் சொல்லவா வேண்டும்?’’

பால் காய்ச்சியபோது பிடித்த இந்த ஊற்று, புதுமைப்பெண், விடுதலைக் கும்மி, முதலியவாகப் பெருக்கெடுத்து மக்கள் உள்ளத்தில், ‘‘பெண்கள் விடுதலை நாட்டின் உயிர்நாடி’’ என்ற பயிரைக் கதிர் காய வைத்துவிட்டது.

இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் பாரதியைப் பற்றி!

சென்னையில் பாரதி இறந்தார்;

ஆனால் என்னுள் வளர்ந்துவந்த பாரதி அன்பும் இறந்ததா? இல்லை!

✱✱✱

செல்லம்மாவின்

பாரதியாரின் பதினாலாம் வயதில் எங்களுக்கு மணவினை முடிந்தது. அப்பொழுது எனக்கு வயது ஏழு. அக்காலத்தில் விவாகம் முடிந்தவுடன் கணவர் மனைவியர் பேசுவதில்லை. கணவரைக் கண்டால் ஓடி ஒளிய வேண்டும். பாரதியார் மட்டும் இதற்கு விலக்காக நடக்க வேண்டுமென்பார். எல்லோருக்கு மெதிரில்,

தேடக் கிடைக்காத சொர்ணமே, உயிர்ச்சித்திரமே,
மடவன்னமே, அரோ சிக்குது பால் தயிரன்னமே,
மாரன் சிலைவேல்களை கொலைவேலென – விரி
மார்பினில் – நடுவே தொளை
செய்வது கண்டிலை யின்னமே – என்ன
செய்தேனோ நான் பழி முன்னமே?
கன்னத்தினில் குயிற் சத்தமே கேட்கக் கன்றது பார்
எந்தன் சித்தமே, மயக்கம் செய்யுதே காமப்பித்தமே,
உடல் கனலேறிய மெழுகாயின தினியாகிலு மடி பாதகி
கட்டியணைத்தொரு முத்தமே தந்தால்
கை தொழுவேன் உனை நித்தமே" –

என்று என் கணவர் என்னைப் பார்த்துக் காதல் பாட்டுக்கள் பாடுவார். நான் நாணத்தினால் உடம்பு குன்றி, எல்லோரையும் போல் சாதாரண ஒரு கணவன் கிடைக்காமல் நமக்கென்று இப்படி ஒரு அபூர்வமான கணவர் வந்து வாய்க்க வேண்டுமா என்று துன்புறுவேன்.

கிராமத்தில் பழகிய, ஒன்றுந்தெரியாத ஏழு வயதுச் சிறுமிக்கு, கவிஞர்களின் காதல் ரஸானுபவம் எப்படி அர்த்தமாகும்? விவாகத்தின் நாலாம் நாள் ஊர்வலம் முடிந்து பந்தலில் ஊஞ்சல் நடக்கின்றது. ஒரு ஆசு கவி இயற்றினார். அதை இனிய ராகத்தில் பாடி, பொருளும் உரைத்துக் குட்டிப் பிரசங்கம் ஒன்று செய்தார். கல்யாண விமரிசையைப் புகழ்ந்தும், அதை நடத்தியவர்களின் சலியா உழைப்பையும், என் தகப்பனார் கலியாணத்திற்குக் கஞ்சத்தனமின்றி மிகத் தாராளமாகச் செலவு செய்ததையும் வியந்தும், வித்வான்களின் சங்கீதத் திறமையை மெச்சியும் இயற்றிய பாடல். அதைக்கேட்டு யாவரும் "பலே பேஷ்" என்று ஆரவாரித்து, "மாப்பிள்ளை வாய்த்தாலும் செல்லப்பா அய்யருக்கு வாய்த்ததுபோல் வாய்க்க வேண்டும். மணிப்பயல், சிங்கக்குட்டி" என்றெல்லாம் அவரவர்கள் போக்கின்படி புகழ்ந்தனர். என் தகப்பனார் மாப்பிள்ளையைக் கண்டு உள்ளம் பூரித்து, உடல் பூரித்து மகிழ்ச்சியடைந்தார். திருநெல்வேலி ஜில்லாவிலேயே சிலகாலம் வரையில் அந்தக் கல்யாண விமரிசை ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. எங்கும் அது பற்றியே பேச்சு.

***

பாரதி



தந்தை இறந்தபின் பாரதியார் ஆதரவற்றிருந்தபோது அவரது அத்தை குப்பம்மாள் அழைக்கக் காசிக்குச் சென்றார். அங்கே கலாசாலையில் சேர்ந்து ஹிந்தி, ஸம்ஸ்கிருதம் முதலியவைகளை வெகுசீக்கிரத்தில் கற்றுப் பிரவேசப் பரீக்ஷையில் முதல் முதலாகத் தேறினார்.

தாய் தந்தையற்ற பாரதியை அத்தையார் அழைத்துச்சென்று கல்லூரியில் சேர்த்தார். பாரதி பள்ளி செல்லும் நேரம் தவிர மற்ற நேரங்களில் கங்கா நதிக்கரையில் உட்கார்ந்து கொண்டு கவிதைகள் புனைவதிலும், இயற்கையழகுகளை அனுபவிப்பதிலும், நண்பர்களுடன் படகில் உல்லாச யாத்திரை போவதிலுமாகப் பொழுதைக் கழிப்பார்.

அந்தணருக்கேற்ற ஆசாரமின்றி எல்லா ஜாதியாருடனும் கை கோர்த்துக்கொண்டு உலாவுவதும், நியம நிஷ்டையில்லாது எப்போதும் கோட்டும் சட்டையும், தலையில் முண்டாசும், காலில் பூட்ஸும் அணிந்திருப்பதும், நாளடைலில் ஸ்ரீ கிருஷ்ண சிவன் அவர்களுக்கு வெறுப்பையுண்டாக்கியது. ஆயினும் சொன்னால் தம் மனைவி மனம் வருந்துவாளென்று அவர் ஒன்றும் சொல்லத் துணிவதில்லை. ஒருநாள் தற்செயலாகப் பாரதியைப் பார்த்ததும் அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. விஷயம் என்ன வென்றால் இத்தனை அநாசாரத்தோடு அந்தணருக்கு அத்யாவசியமான குடுமியை – சிகையை – எடுத்துவிட்டு, வங்காளிபோல் ‘கிராப்’ செய்துகொண்டு, வகிடு எடுத்து வாரி விட்டு, மீசையும் வைத்துக் கொண்டு பாரதி காட்சியளித்தது தான் சிவனுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை.

“அப்பா! சுப்பய்யா எதற்கடா இந்தக் கோலம்? நீ என்ன கைம்பெண்ணா, தலையை மொட்டையிட்டுக்கொள்ள? உனது புத்திசாலித்தனமும், படிப்பும் இதற்கெல்லாமா உபயோகப்பட வேண்டும்? சாக்ஷாத் சிவ ஸந்நிதானத்திலே சைவப்பெரியார் களுக்கு மத்தியில், நாலு தலைமுறையாக சிவ பக்தி குடும்பத்திலே பிறந்தும் உனக்கு இப்படிப் புத்தி தோன்றுமா? உன் தகப்பனார் இப்போது ஜீவியவந்தராயிருந்து பார்த்தால் மானம் பொறுக்க முடியாமல் பிராணனை விடுவாரே! நல்லது. இன்றிலிருந்து நீ எங்களுடன்

ஒரே பத்தியில் சாப்பிடக் கூடாது. என்றைக்கு நீ குடுமி வளர்த்து, மீசையை எடுத்து விட்டு வருகிறாயோ அன்றுதான் பந்தியில் உட்காரலாம்‘‘ என்றார்.

பாரதி பதிலொன்றும் உரைக்காமல் மூன்றாம் மாடியிலிருந்த தமது அறைக்குச் சென்றார். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அவரது அத்தை கையில் தட்டில் சாப்பாடு எடுத்துக் கொண்டு, மாடிப்படி யேற முடியாமல் ஏறி வருவதைக் கண்டு, ‘அத்தை! ஏன் இவ்வளவு சிரமப் படுகிறாய்?’ என்று கேட்கவும், அத்தை, ‘‘அப்பா! அவர் ஏதோ கோபத்தில் பேசியதற்காக நீ வருந்தாதே! பின்னால் அவருக்கே தெரியும்’’ என்று சமாதானப்படுத்தி, போஜனம் செய்வித்த பின்னரே மற்றவருக்குப் பரிமாறக் கீழே சென்றார்.

✶✶✶

பாரதியாருக்கு அப்போது (ஏன். கடைசி வரையிலும்) மிக அழகாகச் சிங்காரித்துக் கொண்டு உலாவுவதில் பிரியம் அதிகம். திருநெல்வேலி ஜில்லாவில் அவரது கிராப்புத் தலைக்காகவும், மீசைக்காகவும், நாங்கள் கேட்ட அவமரியாதை வார்த்தைகளும், கேலிப் பேச்சுக்களும் கணக்கிலடங்கா.

எத்தனை தான் பணமில்லாவிட்டாலும் ஆடை மட்டும் எப்போழுதும் புதியதுதான் அணிவார். அந்தக் காலத்தில், உயிர் பிரிவதற்குச் சிலமணி நேரத்திற்கு முன்கூட ஷர்ட்டு கோட்டுக்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு, தலைப்பாகையைச் செம்மையாகக் கட்டிக் கொள்வதில் ஈடுபட்டிருந்தார்.

இப்போது சிலவிடங்களில் பாரதிதினத்தன்று அவரது அன்பர்கள் கூடி விழாக் கொண்டாடுந் தருணங்களில், ‘‘ஐயோ! நமது கவிஞர்பெருமான், கிழிசல் கோட்டு அணிந்து, தோளில் அந்தக் கந்தலை மறைக்க இரண்டு ஊசிகள் (லேப்டி பின்கள்) குத்திக் கொண்டிருந்தார். என்னே வறுமையின் கொடுமை!’’ என்று பேசி வருகின்றார்கள். ஊசி அணிந்திருந்ததின் உண்மைக் காரணம் அதுவன்று!

ராணுவ அதிகாரிகள், கப்பல் உத்யோகஸ்தர்கள் முதலியோர் தம் சின்னங்களைத் தெரிவிக்கத் தோளில் பல நிறங்களில் பட்டைகளும், மார்பில் பலவித நூல்களினால் பூக்கள் மாதிரி வேலை செய்த சட்டையும் அணிவதைப் போலத் தாம் ‘பாரத ராணியின் உண்மையான தளகர்த்தன்’ என்பதைக் குறிப்பதற்காகவே அவ்விதம் அணிவதாகச் சொல்லுவார். அப்போது கதரும், தேசீயச் சின்னமாக சர்க்காவும் ஏற்படாததால் இப்படிச் செய்து வந்தார்.

பாரதியார் 1902ம் வருஷம் காசியிலிருந்து ஊருக்குத் திரும்பினார். நமது குலாசாரப்படி ருது சாந்திக் கல்யாணம் நடந்தது. பாரதியார் அப்போது நவநாகரிகத்தை உயர்ந்த முறையில் அனுஷ்டித்துக் காண்பிக்க விரும்பினார். பெண்கள் கல்வியில் முன்னேற்றமடைந்து, ஆங்கிலப் பெண்மணிகளைப் போல் நாகரிகமடைந்து வாழ வேண்டுமென்றும் கருதினார். நமது சம்பிரதாயங்களும், மூடப்பழக்க வழக்கங்களும் அவருக்குப் பெருத்த வேதனையை உண்டு பண்ணின.

ஒவ்வொருவரும் மற்றவர்களைக் குறை கூறிக்கொண்டே, தாங்கள் தாராளமாக தப்பிதம் செய்வதையும், தகுந்த தலைவர்களின்றி நாடு சீர்குலைந்திருப்பதையும், பழைய சாஸ்திரங்கள் செல்லரித்து, படிப்பாரின்றி அழிவதையும், மாந்தர்கள் ‘அறியாமை’ எனும் சேற்றில் அழுந்தித் தவிப்பதையும் கண்டு, பாரத நாட்டிற்கு யாரால் விமோசனம் ஏற்படப் போகின்றது என்று மனம் புழுங்கினார்.

✶✶✶

அவர் ஒரு புதுமைப் பித்தர்; அவருடைய நோக்கங்க ளெல்லாம். உயரிய நோக்கங்கள். சமுத்திரக் கரைக்கு எல்லோரும் செல்வது வழக்கம். பெண்கள் பர்தா வழக்கம் அவருக்குப் பிடிக்காது. ஆனால் பெண்கள் வரம்பு மீறி நாகரீகமென்று சொல்லிக்கொண்டு நடப்பதும் பிடிக்காது. பெண்களை உள்ளே அடக்கி வைக்கக்கூடாது என்பது அவருடைய சித்தாந்தம். வீட்டினுள்ளே பெண்களைப் வைப்பதால் பிரயோஜனமில்லை. மனத்தில் களங்கமின்றி ஆண் பூட்டி மக்களோடு

பழகவேண்டும். அங்ஙனமே ஆடவர்களும் ஸ்திரீகளும் மத்தியில் உள்ளத்தில் மாசின்றி உறவாட வேண்டும். இப்படி ஜாக்கிரதையுடன் சிறிது காலம் நடந்தால் தனியே ஒவ்வொருவர் மனமும் பரிசுத்தமாகிவிடும். மூடி மூடி வைப்பதால், புருஷர்களுக்குப் பின்னும் பெண்களைப் பார்ப்பதில் ஆசை அதிகமாக வரம்பு மீறியும் ஹேது உண்டாகின்றது. இத்தகைய கொள்கையை உடையவர். பாரதியார்.

இவ்விதமான ஏற்பாட்டினால் எங்கள் வீட்டிற்கு யார் வந்தாலும் பெண்கள்தாம் அவர்களை வரவேற்று உபசரித்து மாடியில் தங்கள் தகப்பனாரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். அவர் மூன்றாவது மாடியில் உலாவிக் கொண்டிருப்பார். அவர் மனதிற்கு நாம் நடப்பது, நினைப்பது முதல் தெரிந்துவிடும். காதும் கண்ணும் மிகக் கூர்மையுடையன.

பெண்கள் யாருக்கும் அஞ்சித் தலையைக் கவிழக்கூடாது. ''யாரேனும் விடர்கள் கெட்ட ஹிருதயத்தோடு உன்னை நோக்கினால், நீ அவனைத் தைரியமாகப் பத்து நிமிஷம் உற்றுப்பார். அவன் வெட்கித் தலைகுனிந்து விடுவான். அல்லது அவன் முகத்தில் திடீரென்று உமிழ்ந்துவிட்டு அப்பால் செல்'' என்று குழந்தைகளுக்கு உபதேசம் செய்வார்.

***

பழைய நண்பர் ஒருவர் ஒருநாள் ஸ்ரீ பாரதியாரிடம் வந்து, 'என்ன ஸ்வாமிகளே! இப்படிப் பாட்டுப் பாடிக் கொண்டு காலம் கழிக்கின்றீர்களே! நான் வாழ்நாள் முழுவதும் பாரதநாட்டின் விடுதலைக்காகச் சிறைசென்று படாத பாடெல்லாம் பட்டாயிற்று, இன்று எனக்குச் சாப்பாட்டிற்கு வழியில்லை. வயிற்றுக் கொடுமை ஸஹிக்காமல் ஏதேனும் கொடிய செயலில் இறங்க மனம் தூண்டுகிறது. தர்ம சிந்தனையினால் பசி ஆறாது. இது திண்ணம். எங்காவது திருட்டோ, கொள்ளையோ செய்யத் துணியட்டுமா?'' என்று பொறுமையை இழந்த த்வனியுடன் வினவினார்.

அதைக் கேட்டதும் ஸ்ரீ பாரதியாருக்கு ரத்தம் கொதித்தது. அவரிடம் காசில்லை. என்ன செய்வது? பக்கத்து வீட்டாரிடம் சிறிது தொகை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு, 'பாரத ஸமுதாயம்' என்ற பாட்டைப் பாடிக் காண்பித்து ஒருவாறு சமாதானப்படுத்தினார். நண்பரும் வயிறும், மனமும் குளிர்ந்து சென்றார்.

''தனியொருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம்'' என்று சொல்வதற்கு எவ்வளவு உணர்ச்சியும் துணிச்சலும் வேண்டும்? கடற்கரைப் பிரஸங்கம் ஒன்றில் இப்பாடலை அன்புருகப் பாடி ஜனங்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வுலகில் வாழ்த்த போது பாரதியார் எத்தனையோ துன்பங்களை அனுபவித்தார்; எவ்வளவோ கஷ்டங்களுக்கு உள்ளானார். ஆனால், தாய்நாட்டிடம் அவர் கொண்டிருந்த அளவிலாத அன்பு மட்டும் கணமும் சலிக்கவில்லை. தமிழையும் தமிழர்களையும் அவர் ஒரு கணமும் மறக்கவில்லை. அல்லும் பகலும் அனவரதமும் அவருடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த மனோரதம் இதுதான்:

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு!

***

பாரதியை அறிதல் புரிதல் தெளிதல்

வறுமையில் தொடங்கி கடும் வறுமையில் முடிந்த பாரதி வாழ்க்கை



கோ.கேசவன்

காலத்திற் கேற்ற வகைகள் – அவ்வக்
காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் – எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை

– இது பாரதியார் பாடல் ஆகும். எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடிய ஒழுக்கங்களும் கருத்துகளும் இல்லை என்பதை இது குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட கருத்தும் ஒழுக்கமும் தோன்றும் என்பதையும் இது குறிக்கிறது. சோசலிசக் கருத்துகளின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் இக்கருத்து பொருந்தும் எனலாம்.

பாரதியின் காலம் 1882–1921 ஆகும். இதில் பாரதியின் அரசியல் வாழ்க்கைக் காலம் 1905–1921 ஆகும். இதிலும் அவர் அரசியலில் முனைப்பாகச் செயல்பட்ட காலம் 1906–1910 ஆகும். எனினும் இறுதிவரை அரசியல் பத்திரிக்கையாளராக இருந்துள்ளார். அவரது காலத்தில் இந்தியப் பகுதிகள் பிரிட்டனின் குடியேற்றப் பகுதிகளாக இருந்தன.

அதாவது பாரதி காலத்தில் சமூகத்தில் முதலாளியம், ஏகாதிபத்தியத்தின் தேவைக்கானதாக இருந்தது. சுயமாக இல்லை. இந்த சூழலில் தான் இந்தியாவில் சோசலிசக் கருத்துகள் அறிமுகமாயின. அதாவது முதலாளியம் முழுமையாகவும் தேசியத் தன்மையிலும் முகிழ்க்காத காலத்தில் அறிமுகமாயின. 1917 நவம்பரில் ரசியாவில் ஏற்பட்ட சோசலிசப் புரட்சியானது சோசலிசக் கருத்துக்களை குடியேற்ற நாடுகளில் உள்ள அரசியலர்களுக்கு அறிமுகம் செய்தது. பாரதிக்கும் அது அறிமுகம் ஆனது.

மாறாத தத்துவம் என்ற ஒன்று இல்லை, காலம் தோறும் மாறிக் கொண்டே இருக்கும் என்ற இயக்கவியல் பாரதிக்கு இருந்தது. ‘எல்லா சாஸ்திரங்களும் ஏறக்குறைய உண்மைதான். ஆனால் எல்லோருக்கும் எப்போதும் ஒரே சாஸ்திரம் ஒத்துவராது’ என்று எழுதி இருக்கிறார். ‘சென்றது இனி மீளாது’ என்பதில் பாரதி உறுதியுடன் உள்ளார். ‘சென்றதனைக் குறித்தல் வேண்டா இன்று புதிதாய் பிறந்தோம்’ என்கிறார். ஆழ்ந்த வேதாந்தப் பிடிப்புள்ள பாரதியின் பார்வை, சாசுவதக் கோட்பாட்டின் வீச்சிலிருந்து முற்றிலும் விடுபடாத நிலையையும் பல இடங்களில் காண்கிறோம்.

தெய்வ விதி மாறாது, சாஸ்திரவிதியும் நாட்டுவிதியும் மாறிக் கொண்டே இருக்கும் என்பது பாரதியின் சிந்தனை ஆகும். இந்த இடத்தில் தான் பாரதியின் இயக்கவியல் கண்ணோட்டம் முரண்பாடு அடைகிறது. பாரதியின் சமூகக் கருத்துகளில் சமூக சமத்துவம் பேணப்பட வேண்டும் என்ற குரலைக் காணலாம். எனினும் பல இடங்களில் சமூக ஏற்றத்தாழ்வை ஒப்புக் கொள்ளும் போக்கையும் காண்கிறோம். இத்தகு நிலைக்கு அவரது சாசுவதக் கோட்பாட்டின் பிடிப்பே அடிப்படைக் காரணமாகும்.

ரசியப்புரட்சி குறித்து பாரதி ஏராளமான கட்டுரைகளை ‘இந்தியா’ பத்திரிக்கையில் எழுதி இருக்கிறார். இக்கட்டுரைகளில் ஜார் ஆட்சியின் கொடுங்கோன்மையை எதிர்க்கும் ஜனநாயகவாதியாகவும் முதலாளியச் சீர்திருத்தத்தை வரவேற்கும் அரசியல்வாதியாகவும் போராளிகளைத் தோழமையுடன் நேசிக்கும் புரட்சியாளராகவும் பாரதியை இனம் கண்டு கொள்கிறோம்.

நிலத்தை அனைவருக்கும் பொதுவுடமை ஆக்குதல், தொழிற்சாலைகளில் போட்டி முறைக்குப் பதில் கூடியுழைக்கும் முறையைக் கொணர்தல், தொழிலாளர்கள் அரசு அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளல் ஆகியவையே சோசலிசம் என பாரதி புரிந்து கொள்கிறார். இது வன்முறைப்பாதையாக இருக்கக் கூடாது என்றும் பாரதி கருதுகிறார்.

தொழிற்சாலைகளை அனைவருக்கும் பொதுமை ஆக்கிவிடவேண்டும் என்பதையும் அவர் ஏற்கவில்லை. தனியுடமை ஒழிப்புக்கு பாரதி சிந்தனையளவில் உடன்படவில்லை. அதேநேரத்தில் உற்பத்தி சாதன உடைமையாளர்க்கும் உற்பத்தி சாதனமற்ற உழைப்பாளர்க்கும் இடையிலான முரண்பாட்டை பாரதி எழுதியுள்ளார்.

பாரதி வாழ்க்கை, வறுமை நிலையில் தொடங்கி கடும் வறுமையில் முடிவுற்றது. எனவே பசியைப் போக்க வேண்டும் என்ற கருத்து அவரது படைப்புகளில் பல இடங்களில் அமைந்துள்ளது. பசித்த வயிற்றுக்கு சோறிட வேண்டும் என்பதே இவரது கொள்கையாகும். இம்மனிதாபிமான உணர்வு, சோசலிசத்தோடு தொடர்பு கொண்டதாக பல இடங்களில் இல்லை. ‘பொதுவான மனிதாபிமான அளவிலேயே பாரதியாரின் பொதுமைச் சிந்தனை இருந்தது’ என்ற கைலாசபதியின் கூற்று அழுத்தமானது.

சமய வழிப்பட்ட தேசியவாதிகளுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. கலியுகம் நீங்கிக் கிருதயுகம் தோன்றி அனைத்தும் நன்மையாக முடியும் என்று நம்பிக் கொண்டிருந்தனர். பாரதியும் அப்படியே நினைத்தார். கிருதயுகம் என்பதை இந்து சமயத்தின் பெருமைகளை இசைக்க வல்ல காலம் என்றும் சொல்கிறார். வேற்றுமைகள் இருக்கும், ஆனால் அது அன்பால் தீர்க்கப்படும் என்பார். முதலாளிய சமத்துவ சீர்திருத்தக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்கிறார். நிலவுடமையை ஏற்றுக் கொண்டு அதற்குள் செய்து கொள்ளும் சீர்திருத்தமாகவே பாரதியின் சிந்தனைகள் அமைந்துள்ளன.

(சோசலிசக் கருத்துக்களும் பாரதியாரும் – நூலின் சில பகுதிகள்)

பாரதி ஓர் இந்திய தேசியக் கருத்துருவம்

தமிழவன்



சுப்பிரமணியபாரதி ஒரு கலாச்சாரத்தின் வெளிப்பாடு. வெள்ளைக்காரர்களின் இந்தியப் பிரவேசத்திற்குப் பிறகு துண்டுதுண்டாகப் பல்வேறு பிராந்திய கலாச்சார முத்திரைகளுடன் இருந்து கொண்டிருந்த இந்தியா, தனக்கான பொருளாதார அரசியல் மையப்படுத்தலை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, வெள்ளைக்காரனின் கல்வியையும் தாண்டி ஒரு கருத்துருவத்திற்கு வடிவம் கொடுத்தது. அதன் பெயர் இந்திய தேசியக் கருத்துருவம்.

உள்ளடக்க ரீதியாக இந்த இந்திய தேசியக் கருத்துருவம் தனக்குள் தேசிய முதலாளிகளின் பொருளாதார நலனுக்கான குரலைக் கொண்டிருந்ததுபோலவே, பிரதானமாக பிராமண சாதீய சடங்காசார சட்டகத்தை இந்திய ஒன்றிப்புக்கான அடையாளக் குரலாகக் கொண்டிருந்தது.

இதில் நகர வர்த்தகர்களின் நலன் சார்ந்திருந்தது; அத்வைத மரபு ஒலித்தது. பிரம்மம் இறுதியுண்மையாக பாரதி காண்கிறான். அரவிந்தரிடமும் இப்படிப்பட்ட கருத்து உண்டு. சக்தி, காளி, கண்ணன், முருகன் என்ற தெய்வங்களை உள்வாங்கும் தன்மை உண்டு. தமிழ் மொழியின் தெய்வத்தன்மை, இந்துஸ்தானத்தின் மகிமை இப்படிப்பட்ட சிந்தனைகளும் இருந்தன.

சுதந்திர தேவியாக உருவக நிலை கொண்டது. பாரதம், பாரதமாதா ஆகியது. கோகலே, சாமியாராகி விட்டார். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, மகாத்மாவாகி விட்டார். ‘பார்ப்பானை ஐயரென்ற காலம் போச்சு’ என்று சொல்லும் பார்ப்பன எதிர்குரலும் ஓரளவு ஒலிக்கிறது இங்கு. வங்காளம், மராட்டி மற்றும் உலகக் கலாச்சாரப் பார்வைகளும் கலந்துள்ளன.

மொத்தத்தில் மத, சாதி, பிராந்திய அழுத்தங்களுடனான இந்திய தேசியக் கருத்துருவம் ஒன்று எல்லா மொழிகளிலும் பரவியிருக்கிறது. தமிழிலும் இது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கில எதிர் கருத்துருவமாகப் பரவியிருக்கிறது. பலவித வர்க்க, சாதிய, மத, பிராந்திய சிந்தனா ஒழுங்கமைவின் ஒவ்வொன்றும் பின்னி இறுகிய சட்டகத்தின் பெயர், இந்திய தேசியக் கருத்துருவம்.

சுப்பிரமணியபாரதி ஆரம்பகால சமஸ்தான உறவுகளை, அப் பாதிப்பால் எழுதிய பாடல்களை விட்டபிறகு இந்த இந்திய தேசியக் கருத்துருவத்துள் தன்னைக் காண்கிறான். இந்தச் சட்டகத்துள் தன்னைக் கண்ட பாரதி, தனது கவிதைக் குரலை இச்சட்டகத்தின் பண்புக்குள்ளிருந்து பெறுகிறான். இதனால் பாரதி தனக்கான உலகை நிர்மாணித்து விடுகிறான்.

சாதி, மதம், பெண் விடுதலை, அறிவியல், ஆங்கில ஆட்சி, ஏசு, ரஷ்யப்புரட்சி இவை பற்றி எல்லாம் தனது கருத்துச் சட்டகத்தின் குணத்துடனான சிந்தனைகளை உருவாக்கிவிட முடிகிறது. மரங்களுக்கு ஏன் பச்சை நிறம் என்றால் நந்தலாலாவின் நிறம் பச்சை என்று சொல்கிற பாரதி, ரஷ்யப் புரட்சி பற்றிப் பேசுகையில் மாகாளி கடைக்கண் வைத்தால் ரஷ்யப் புரட்சி வந்தது; ஜார் என்னும் மன்னன் வீழ்ந்தான் என்று புரிந்து கொள்கிறான்.

பெண் விடுதலை பற்றிச் சொல்லும் போது, தனது சிந்தனையில் ஏறியுள்ள சட்டக அமைப்பு, பாரதியை

பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானகம் இங்கு தென்பட வேண்டும்

என்று சொல்ல வைக்கிறது. பெண் விடுதலையையும் வானகம் தென்படுவதையும் ஒன்றாகவே பார்க்கிறான் பாரதி. அந்திப் பொழுதைப் பற்றிப் பாடுகையில் பாரதிக்கு,

காவென்று கத்திடுங் காக்கை – என்றன்
கண்ணுக் கினிய கருநிறக் காக்கை.
மேவிப் பலகிளை மீதில் – இங்கு
விண்ணிடை அந்திப் பொழுதினைக் கண்டே
கூவித் திரியும் சிலவே; – சில
கூட்டங்கள் கூடித் திசைதொறும் போகும்.
தேவி பராசக்தி யன்னை – விண்ணிற்
செவ்வொளி காட்டிப் பிறைதலைக் கொண்டாள்.

தேவி பராசக்தியின் வடிவ வர்ணங்களாக இயற்கையின் காட்சி, அந்திப் பொழுதின் மாட்சி போன்றன தெரிகின்றன. காதல் செய்யும் மனைவியைச் சக்தியின் வடிவமாகப் பார்க்கிறான் பாரதி. அந்நிய தேசத்துக் கடவுளான ஏசு, சிலுவையில் அறையப்பட்டது கூட ஓர் இந்திய மதக் கருத்தின் விளக்கமாய் அமைகிறது.

இப்படிப் பார்க்கிற பாரதி, உலகைத் தனது இந்திய மரபு சார்ந்த, மதம் சார்ந்த சட்டகம் வழிக் காண்கிறான் என்பது புரிகிறது. இங்கு இன்னொரு விஷயமும் கவனம் கொள்ளத்தக்கது. இந்திய மரபுச் சட்டகம் பாரதிக்கு ஒரு தடையாக இருக்கவில்லை. 'என் அறிவில் தெய்வத் தன்மை காணப்படுகிறது. நான் ஒரு தேவனைப் போலே சிந்தனை செய்ய வல்லேன்,' என்கிற பாரதி 'தமிழா பயப்படாதே, ஊர் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்' என்கிறான்.

மேலும் 'ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ஜாதி இரண் டொழிய வேறில்லை என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள். புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே.... தமிழா, உனது வேலைகள் அனைத்திலும் பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன' என்கிறான்.

இந்த மேற்கோளிலிருந்து பாரதியின் இந்தியப் பார்வை சட்டகம், அவனுக்கு ஐரோப்பியரின் நல்ல பார்வைகளை ஏற்கவும், ஜாதி வேற்றுமை பார்க்கலாகாது என்கவும், புராணங்களை வேதங்களாக நினைத்து மடமை பேசித் திரிவதைக் கண்டிக்கவும் இடம் தருகிறது. எனவே, பாரதி முடங்கிப்போன ஒரு சட்டகத்தில் தன்னை மாட்டிக் கொள்ளவில்லை என்று கண்டு கொள்கிறோம்.

இந்தப் பின்னணியுடன் பாரதியின் தேசிய கீதங்களை நாம் அணுக வேண்டும். வெள்ளைக்காரர்கள் பற்றிய எதிர்ப்பை இந்திய தேசியக் கருத்துருவத்துடன் சேர்த்துச் சிந்திக்கலாம். பாரதியைப் புற உலகின் நிகழ்வு பற்றிய இயங்குமுறையை அறியவும் விழிப்படையவும் செய்தது, வெள்ளைக்காரர்களின் அரசியல் பற்றிய எதிர்ப்பு. தன்னுடைய ஆளுமையாய் இந்திய தேசியக் (தமிழ்த் தேசியமும், இந்துஸ்தானமும் அன்று பாரதிக்கு முரண்பட்டவை அல்ல) கருத்துருவச் சட்டகம் ஏற்படுகையில் தேசியப் பாடல்களின் உந்துதளம் இந்தச் சட்டமாகிறது.

பாரதநாடு ஒரு பெண் தெய்வப் படிமத்தைச் சட்டகமாகக் கொண்டு அணுகப்படுகிறது. இந்திய தேசியக் கருத்துருவத்தின் ஒரு தாரையாக இந்தப் பெண் தெய்வ வழிபாடு காணப்படுகிறது. வேதாந்தத்தின் சாரம் அத்தனையும் தனது கருத்துருவத்தில் கொண்டிருப்பவன் பாரதி என்பதை அவருடைய பிற சிந்தனை அமைப்புகளை அறிகையில் புரிந்து கொள்ளலாம். இந்நிலையில் வேதாந்தமாய்ப் பொருள் உரைத்தல் என்பது, பாரதியின் உலகைப் புரிய ஏற்றுக்கொண்ட சட்டக அமைப்பினுள் வந்து விடுகிறது என்று அறிகிறோம்.

மொத்தத்தில் பாரதி வாழ்ந்த காலகட்டத்தின் இயங்கக் கூடிய சக்தி வாய்ந்த கருத்துருவம் ஒன்று, இந்திய பிராந்திய மொழிகளின் வேற்றுமை அற்றவிதமாய் உருவானதும் அதில் பாரதி தன்னை இனம் கண்டதும் உண்மை. அதுபோல் அவரது கவிதை, இந்தக் கருத்துருவச் சட்டகத்திலிருந்து தனக்கு ரூபம் கொண்டிருக்கிறது.

பாரதியின் கவித்துவ உலகம் பற்றிய இதுவரையான பார்வைகளின் மேலோட்டத்தன்மை இப்போது புரியும். பாரதியை இந்துமத வாதியாய்ப் பார்ப்பதோ, புரட்சிக்காரராய்ப் பார்ப்பதோ, பிராமண ஆதிக்க வாதியாய்ப் பார்ப்பதோ, இந்திய ஒருமைப்பாட்டுக் குரலாய்ப் பார்ப்பதோ தமிழ்க் கருத்துருவ வாதியாய்ப் பார்ப்பதோ, பின்னங்கொண்ட பார்வைகளே.

கவித்துவ உள்சட்டகம் என்ற உள் இயங்கும் ஒழுங்கின் மொழிவயப்பட்ட குணத்தைப் புரியும் தளத்தில் நாம் வைக்கப்படுகிறோம். கவித்துவ உள்சட்டகம், மொழியின் வார்த்தைகள் பிறப்பெடுக்காத ஆரம்ப ஒலியின் கூட்டமென்ற கட்டத்தைத் தனது குணமாய்க் கொண்டது. இலக்கியத்தின் செயல் தளம் மனதின் உள்ள மொழிவயப்பட்ட தளம் என்பது இங்கு எளிதாய்ப் புரிந்து விடுகிறது.

பாரதி ஏன் சிலவேளை பைத்திய நிலை கொண்ட கவிதைகளை எழுதினார்? ஸ்தூல உலகின் நியதிகளைக் கடந்த பிம்பங்களை, படிமங்களை தனது கவிதைகளில் வைத்தான் என்பது இப்போது புரியும். அவை அவனுள் செயல்பட்ட இலக்கிய மொழிச் சட்டகத்தின் ஈர்ப்பை நோக்கிய குவி இயக்கங்கள். இவ்வியக்கத்தின் இன்னொரு பெயர் கவித்துவ உள்சட்டகம்.

இவ்வகையில் சுப்பிரமணிய பாரதி ஓர் யுகத்தின் கவிதையாற்றலின் குறியீடு ஆகிறார் என்றும், சமூக, கால, தள இயக்கங்களின், சுழற்சியின் மையக் கோடு அகஸ்மாத்தாக கிடைத்த பாரதி என்ற தனிநபர் வழி ஒடுகிறது என்றும் அறிகிறோம். பாரதி என்ற தனிநபர் முக்கியமில்லை என்பதும் ஒரு சமூக ஆற்றலின், மக்கள் சார்ந்த இயங்கு பிரவாஹத்தின் படைப்புச் சுழற்சி தான் மிக முக்கியமாகி யுகமாற்றத்தைக் கவிதையாக்குகிறது என்றும் அறிகிறோம்.

(அன்னம் வெளியீடான பாரதீயத்தில் வந்த கட்டுரை – இருபதாம் நூற்றாண்டு கவிதை)

கவிதைகளின் வேகத்தில் சாதனை

பிரமிள்

இம்மாதிரி ஒரு சிறு கட்டுரையில் சுப்பிரமணிய பாரதியின் கலைத் தன்மையின் பல்வேறு அம்சங்களையும் முழுக்க அளவிட்டுவிட முடியாது. ஆனால், ஒரு புதிய கோணத்தையும் பார்வையையும் பாரதி சிந்தனைக்கு என்று கோடு கீறிக் காட்ட முடியும்.

இதுவரை தேசியக் கவி, தீர்க்கதரிசன கவி, சித்த புருஷன், வேதாந்தி என்றெல்லாம் அவரவர் தன்மைக்கு ஏற்ப, கலைத் துறைக்கோ, கலா ரசனைக்கோ கிஞ்சித்தும் இலாபம் ஏற்படாதபடி பாரதி பற்றிப் பேசி வந்திருக்கிறார்கள். மகாகவி என்று அவரைக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களிலும், அவரது கலா சக்தியைப் பற்றிய நிர்ணயத்தை எவரும் செய்ததாகத் தெரியவில்லை – அவருக்கு மகாகவி ஸ்தானம் கிடைக்க வேண்டுமென்று ‘போராட்டம்’ செய்த ஒரு குறுகிய கால எல்லையினுள் தவிர.

கவிஞன் என்ற பாரதியை அடையாளம் காணத்தான் இங்கே முயல்கிறேன். அப்படியானால் கவிதை என்றால் என்ன?

கவிதை என்பது சக்தி. சிருஷ்டி முழுவதிலும் ஊறி அதை இயக்கும் சக்திக்கு மறுபெயர்தான் கவிதை. அது வார்த்தையினுள் பாஷையினுள் – அடைக்கப்படும் முன்பே படைப்பினுள் கவிதையாகவே கலந்து நிற்கிறது.

கவிஞனுடைய வேலை இந்தச் சக்திக்குத் தன்னை ஊற்றுக் கண்ணாகத் திறந்து கொள்வதுதான். இயற்கை என்ற ஒளியை விசிறும் மின்சாரம்தான் கவிதை. அந்த மின்சாரத்தை இயற்கையின் ஜொலிப்பைக் கொண்டு, கவிஞன் உணர்கிறான். அவனை அவனது பாஷை மூலம் நாம் உணர்கிறோம். ஆகவே பாஷைத் தகட்டைச்

செப்புக் கம்பியாக நீட்டி, தன் ஆத்மாவினுள் கரைந்த கவிதையைப் பாய்ச்சுகிறான்.

நம்முடேயும் அக்கவிதை பாய்ந்து மனசில் ஒளியாகப் பூக்கிறது. கேவலம், நம்மால் கவிஞன் தரும் பாஷை வடிவான செப்புக் கம்பியைப் பாதை யாக்கி இயற்கையினுள் நேரடியாகப் போக முடிவதில்லை. செப்புக் கம்பியினுள் துடிக்கும் சக்தியை அனுபவித்ததோடு நின்று விடுகிறோம். அதிலேயே திருப்திப்பட்டு அந்த பாஷை வடிவையே 'கவிதை' என்று அழைக்கிறோம்.

அர்த்தம், உணர்ச்சி, அழகுருவம், ஒலிநயம் என்பவற்றுள் எதையும் காட்ட முடியாத இன்னொரு அம்சம் கவிதைக்கு உண்டு. அதுதான் வேகம். இந்த வேகம், இடத்தில் பயணம் செய்யும் போது நிகழும் அசைவான தீவிர வேகம், மந்த வேகம் என்பவற்றோடு தொடர்புள்ளதல்ல.

கவிதையில் நான் குறிப்பிடுவது மனோசக்திகளைத் தூண்டிவிடும் வேகமாகும். ஒரு முழு வெட்டான வர்ணனையைக் கவிதை பற்றித் தரமுடியாததன் காரணம் இந்த வேகம் தான். வேகத்தை உணர்ச்சி, சப்தம் போன்ற தூலத் தன்மைகளோடு குழப்பக்கூடாது. ஏனெனில் இந்த வேகம்தான் கவிதை. பின் காரணம் முன்பு சொன்ன இயற்கையின் இயக்கச் சக்தி பாஷை மினூடே கொள்ளும் பரிமளிப்புதான் வேகம். இதை உணர்த்தி விமர்சிப்பது முடியாது.

'போர்த் தொழில் விந்தைகள் காண்பாய் – ஹே
பூதலமே! அந்தப் போதினில்! என்றான்.

என்ற வரியிலும்,

மோகனப் பாட்டு முடிவுறப் பாரெங்கும்
ஏக மவுன மியன்றதுகாண்'

என்ற வரியிலும் வேகம் ஒன்றே. இதற்குமேல் வாசகரே வேகத்துக்கு நான் கொள்ளும் கருத்தைச் சிந்தித்து உணரக்கேட்டுக் கொள்கிறேன். 'இது வேகமுள்ள கவிதை' என்பதைவிட, இது வேகமுள்ளது; ஆகவே கவிதை என்று சொல்வது உண்மையானது.

பாரதியிடம் வேகத்தின் சாமர்த்தியம் வெகுஅற்புதமானது. பாரதியின் கவிதைகளில் பெரும்பாலானவை வேகத்தைத் துணைக் கொண்டு உணர்ச்சியை ஆங்காங்கே பிதுக்கிக் காட்டிக் கொண்டு செல்பவை தான்.

நான் சொல்வது, உணர்ச்சிகள் ஓடும்போதும், அவற்றின் கீழுள்ள வேகம் என்ற படுகையே கவிதைகளுள் மிதந்து தெரிகிறது என்பதுதான். இது பாரதி கவிதைகளின் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.



மன உணர்ச்சிகளையும் மீறிய ஓர் ஆத்ம வேகம் பாரதி கவிதைகளுள் வாசகனை ஈர்த்துவிடுகிறது வார்த்தை பேசாது அமைதியிலிருக்கும் போதும் ஓர் உயர்ந்த மனிதரின் முக ஒளி வசீகரித்து விடுவதுபோல கவிதையின் உணர்ச்சியையும் வேகத்தையும் பிரித்து உணர்பவர்கள், பாரதி கவிதைகளில் உணர்ச்சியைவிட வேகம் மிதப்பாயிருக்கிறது என்று நான் சொல்வதை உணர்வார்கள்.

பாரதியை மகாகவி என்று இதற்காகவே ஒப்புக்கொள்கிறோம். ஏனெனில் பாரதி, வாசகர்களைப் பிடிப்பதற்காக அழகுகளையோ. தேர்ந்தெடுத்த படிமங்களையோ, படபடக்கும் உணர்ச்சி ஒட்டங்களையோ கையாளவில்லை. தன்னோக்குக்கு தன்னூடேயிருந்து கவிதை வெளிப்பட விட்டுவிட்டான்.

பாரதி உணர்ச்சிகளையும் தேர்ந்து கொள்ளவில்லை. பாஷை எப்படி ஒரு சாதனமோ, அப்படியே தன் கவிதைக்கு, உணர்ச்சியையும் வாய்க்காலாக்கிக் கொண்டான் என வேண்டும். கவிதை அவனது சாதனம் அல்ல. கவிதைக்கு அவன் தன் மனோநிலைகளை, அதாவது தன்னை சாதனமாக்கிக் கொண்டான். மகாகவிகளைப் பற்றிய உண்மை இது. அவர்கள் தங்களைத் தாங்களாக இயக்க முடியாது. இயற்கை அழைக்கும்போது தலைகுனிந்து அதற்கு இணங்கி இயங்குபவர்கள் அவர்கள். அந்த இயல்பான இயக்கம் பாரதி கவிதைகள் முழுவதிலுமே காணக்கிடைக்கிறது எனலாம்.

வெறும் வேகமும் இயற்கையனுபவமும் மட்டும் கவிதை அனுபவத்துக்குத் தயாராக வரும் உள்ளத்திற்குத் திருப்தி தருவதில்லை. உயிரற்ற படிமங்களின் மாலைகளும் கவிதை அல்ல. இதுவரை குறிப்பிட்ட தனி அம்சங்கள் முழுவதுமே நிரம்பியிருக்க வேண்டும். அப்படி நிரம்பிய கவிதைகளை பாரதியிடமிருந்து பொறுக்குவது சுவாரஸ்யமான ஒரு வேலை. பொறுக்கப்பட்ட கவிதைகள் தான் பாரதியின் கலைத்தன்மையின் முழுமைக்கு அத்தாட்சிகளாகும்.

(1961 – எழுத்து இதழ் அக்டோபர் – நவம்பர்)



மொழியையும் இலக்கியத்தையும் புதுமைப்படுத்தியவர்

முனைவர்
சிற்பி பாலசுப்பிரமணியம்

இரண்டு யுகங்களின் சந்திப்பு மையத்தில் தோன்றியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882–1921), அதனால் காலம் பற்றிய கூர்மையான மனத்தோடு எழுந்தவை அவருடைய கவிதைகள்.

பண்டைப் பெருமைகள் குலைந்து அடிமை இருளில் மூழ்கிய சமுதாயம் நிலைமையைத் 'தூவென்று' தள்ளி விடைபெற்றுக் கொண்டிருந்தது. 'தொண்டு தன்னம்பிக்கையும் விடுதலை ஒளியும், புதிய சிந்தனைகளின் வெளிச்சமும் நிரம்பிய புதிய சமுதாயம் மலர்ந்து கொண்டிருந்தது. இந்த இரு யுகங்களின் சந்திப்பில் போகின்ற பாரதத்தைப் புறந்தள்ளி, எழுகின்ற பாரதத்துக்கு 'இளைய பாரதத்தினாய் வா வா வா' என்று வரவேற்புப் பண் இசைத்தன அவருடைய எழுத்துக்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சியின் விதைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விழுந்து கொண்டிருந்தன. தமிழ்க் கவிதையை எளிமைப்படுத்தியதோடு, சமுதாயம் பற்றிய கவலைகளையும் தேக்கித் தந்தது இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பா.

கீர்த்தனைகளின் அழகையும், பேச்சு மொழியின் இனிமையையும், சாதிக் கொடுமையின் அவலத்தையும் முன் வைத்தது கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனை.

பெண் விடுதலை, சமய ஒருமைப்பாடு ஆகியவற்றை முதன்மைப்படுத்தின வேதநாயகம் பிள்ளையின் பாடல்கள். புதுவது புனையும் முயற்சியாக நாவல் வடிவத்தையும் அவர் அறிமுகம் செய்திருந்தார்.

மொழிப்பற்று, அறிவியல் நோக்கு, புதுமைப் பெண் பாத்திரங்கள் என மனோன்மணியம் சுந்தரனாரின் நாடகம் ஒரு தனிப்பாதை வகுத்திருந்தது. இலக்கியத்தில் மாற்றத்தின் காற்று வீசிக்கொண்டிருந்த அதே நேரத்தில் நாட்டு விடுதலைக்கான கள ஒத்திகைகளும் நிகழத் தொடங்கியிருந்தன.

ஏறத்தாழப் பதினைந்தாண்டுக் காலம் இடையறாது பாரதியாரின் அயர்வறியாத எழுதுகோல் இயங்குவதற்கு இதழ்கள் களம் அமைத்துத் தந்தன. இருபதாம் நூற்றாண்டின் எல்லைகளைத் தாண்டி நவீன தமிழ் இலக்கியம் புதிய நெறிகளில் பயணிக்கப் பாரதியாரே அடித்தளம் இட்டார். அதற்குப் பக்கத் துணையாயிற்று அவருடைய இதழ்ப் பணி.

1905இல் ஆட்சித் தலைவர் கர்சன் பிரபு வங்க மாநிலத்தை மத ரீதியாகப் பிரித்தபோது எழுந்த எதிர்ப்புக் குரலில் பாரதியார் கவிதையும் சேர்ந்து ஒலித்தது. ‘வங்கமே வாழிய’ என்ற அந்தக் கவிதை தான் பாரதியாரின் முதல் தேசியக் கவிதை.

பழம் பெருமை பாராட்டல், பாரத நாட்டை வாழ்த்துதல், தேசியக் கொடி வணக்கம், தேசியத் தலைவர்களைப் போற்றல், சுதந்தர மாண்பு, விடுதலை பெற்ற சமுதாயம் பற்றிய கனவு எனப் பல நிலைகளில் எழுந்தவை தேசியக் கவிதைகள். விடுதலைத் தீக்கு விறகு சேர்க்கிற பணியை மட்டும் அவர்தம் தேசியக் கவிதைகள் செய்தன அல்ல. எப்படி அமைய வேண்டும் விடுதலை பெற்ற சமுதாயம் என்று திட்டங்களும் வகுத்தார்.

‘முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை’ என்று அறிவித்தார். மனிதர் உணவை மனிதர் பறிக்காத, மனிதர் நோக மனிதர் பார்க்காத சமுதாயம். ஓர் குலம், ஓர் இனம் எனச் சாதி ஒழிந்த சமத்துவம் மலர்ந்த சமுதாயம். பாரதியாரின் கவிதைப் பிரபஞ்சம் வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் தழுவியது.

கவிதை மெத்த வளருது மேற்கே’ என்பதைக் கண்ட கவிஞர் அதனைத் தமிழிலும் அறிமுகம் செய்ய முனைந்தார். வேத ரிஷிகளின் கவிதைகளை மொழிபெயர்த்த அனுபவமும் இணைந்தது. காட்சி, காற்று, சக்தி, கடல் என்ற தலைப்புக்களில் கவிஞர் புதுக்கவிதைச் சோதனைகள் நிகழ்த்தினார்.

இயற்கை ரகசியங்களில் புகுந்து, அறிவியல் மகத்துவங்களில் திளைத்து, உயிர் வாழ்வின் மையங்களைத் தேடுகிற முயற்சி இக்கவிதைகளின் மூலக்கரு. தனித்தன்மை வாய்ந்த ஒரு மொழியைக் கவிஞர் செழுமைப்படுத்தி, தனக்குள் முழுமை காணும் இயற்கை கொண்ட புதுக் கவிதையை கண்டடைகிறார்.

வியக்கத்தக்க ஒரு புதுமொழியைத் தேடிய யாத்திரையாகவும், ஒரு சாதனையாகவும் பாரதியாரின் புதுக்கவிதை அறிமுகம் அமைகிறது. தமிழ்ப் புதுக்கவிதையின் ஊற்றுக்கண், தாய்ப்பால், பாரதியாரின் காட்சி முதலிய கவிதைகள். நறுக்குத் தெறிக்கும் நடை பாரதியாருடையது. உரைநடை இலக்கியத்தில் பாரதியார் செய்த புதுமைகளுக்கு ‘சின்னச் சங்கரன் கதை’யும் ‘ஞானரத’மும் சான்று.


சின்னச் சங்கரன் கதை.

இரண்டாம் அத்தியாயம்.

பாரதியாருடைய சிறுகதை இலக்கியம் பெரிதும் மரபு சார்ந்த வெளிப்பாடு. நவதந்திரக் கதைகள் பஞ்சதந்திர மாதிரியில் எழுதப்பட்டவை. வேடிக்கைக் கதைகள் அதன் இன்னொரு வகை. இன்னும் சில கதைகள் நகைச்சுவைக் களஞ்சியங்கள். வடிவும் வனப்புமுள்ள தமிழ்ச் சிறுகதைக்கு வ.வே.சு. ஐயர் தந்தை என்று கூறப்பட்டாலும் வேப்பமரம், காந்தாமணி ஆகிய கதைகளில் பாரதியாரின் செய்நேர்த்தி சிறப்பாகத் துலங்குவதைக் காணமுடியும்.

பாரதியின் குறுநாவல் என ‘ஆறில் ஒரு பங்கு,’ ‘ஸ்வர்ண குமாரி’ ஆகியவற்றைக் கருதலாம். அவருடைய ‘சந்திரிகையின் கதை’ முழுமை பெறாமல் நின்று போன நாவல். இவற்றில் எல்லாம் விதவை மறுமணம், சாதிக் கொடுமை, நாட்டுப்பற்று ஆகிய செய்திகள் முக்கியத்துவம் பெற்றன. சமத்துவம் சகோதரத்துவம், புரட்சி என்ற மேல் நாட்டுச் சித்தாந்தங்களை இந்திய மரபுகளின் வழியாகத் தந்தது பாரதியார் இழைத்த புதுமை.

தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் புதுமைப்படுத்திச் செழுமைப் படுத்திப் புதிய யுகத்துக்கேற்ப வடிவமைக்க வேண்டிய பொறுப்பைத் தன் தோளில் ஏற்றுக் கொண்டார் பாரதியார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலார், சுந்தரம் பிள்ளை, வேதநாயகர், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியோர் அமைத்த களம் புதிது என்றாலும், எளிமையை நோக்கிய பயணத்தை அவர்கள் தொடங்கியிருந்தார்கள் என்றாலும் மொழி புதுமைப்படுத்தப்பட வேண்டிய தேவை காத்துக்கிடந்தது. பாரதியார் அந்த வெற்றிடத்தில் ஒரு புயலாய் நுழைந்தார்.

பழமையில் உதிர்த்தெறிய வேண்டிய நடை, கருத்து ஆகியன பாரதி கையில் பட்டுப் புது நடை பொழியலாயிற்று. பாரதியாரின் நவீனத்துவ முயற்சிகளே, தமிழ் எழுத்தில் பின்னர் மணிக்கொடி யுகத்தைத் தரக் காரணம் என்பது தெளிவு.

பாரதியார் தமிழ் இலக்கிய வானில் மட்டுமல்லாது, இந்திய சுதந்திரத்துக்கும் ஒரு விடிவெள்ளி. தமிழ் நவீனத்துவத்தின் முதல் புள்ளி. இலக்கியத்துக்கு ஒரு பயனுள்ள காணிக்கை.அவருடைய மொழியிலேயே சொல்வதானால் அவர் படைப்புக்கள் ‘காலம் கொன்ற விருந்து.’

(புதிய இலக்கிய வரலாறு நூலில் இருந்து)

கட்டுரைகள்

சுதேசி இயக்கத்தில் பாரதியின் புரட்சிகர நோக்கும் போக்கும்...

தொ.மு.சி.ரகுநாதன்

பாரதியின் தேச பக்திக்கான அடிப்படை அவரது பதினான்காவது வயதிலேயே அவரது இதயத்தில் பதிந்து விட்டது. 1902–1903 ஆம் ஆண்டிலேயே அவருக்கு தேச பக்தி உணர்வு தோன்றிவிட்டது. இது கர்சான் தர்பார் நடத்தி வந்த காலம். வங்கப் பிரிவினையானது இந்திய நாடே விழிப்புற்றெழவும், தீவிரவாத தேசிய இயக்கம் பிறப்பெடுக்கவும் காரணமாக இருந்தது.

ஸ்ரீமதி நிவேதிதா தேவியை 1905 ஆம் ஆண்டில் சந்திக்கின்றான். ‘ஸ்வதேச பக்தி உபதேசம் புரிந்தருளிய குரு’ என்று அவரைக் குறிப்பிடுகிறான். பாரத தேவியின் ரூபத்தை தனக்குக் காட்டியதாகக் குறிப்பிடுகிறான். ஸ்காட்டிஷ் இனத்தைச் சேர்ந்த மார்க்ரெட் எலிசபெத் நோபிள் என்கிற அவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். விவேகானந்தரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர்.

அவர் 1898 ஆம் ஆண்டு கல்கத்தா வந்தார். சந்நியாசி ஆனார். அவருக்கு ‘நிவேதிதா’ என்று பெயர் சூட்டினார் விவேகானந்தர். தனது குருநாதரான விவேகானந்தர், இங்கிலாந்து சென்றபோது சந்தித்த ரஷ்ய நாட்டு புரட்சிவாதியான குரோபோட் கின்னை இவரும் சந்தித்துள்ளார். பிரிட்டிஷார் மீதான வெறுப்பு நிவேதிதாவுக்கு அதிகம் ஆனது.

1902ஆம் ஆண்டு பிப்ரவரி 3 அன்று சென்னை மகாஜனசபை அரங்கில் சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய அய்யரின் தலைமையில் நிவேதிதா உரையாற்றினார். இதன் பிறகு நிவேதிதாவின் நடவடிக்கைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் கண்காணிக்கவும்,

அவருக்கு வரும் கடிதங்களை தணிக்கை செய்யவும் தொடங்கியது. தேச பக்த இயக்கங்களுடன் தொடர்பு கொண்டார். இந்தியாவின் பல பகுதிக்கும் சென்றார்.

அரவிந்தரைச் சந்தித்தார். ஆயுதப் போராட்ட அமைப்புகளுடன் தொடர்பில் இருந்தவர் அரவிந்தர். இவர்கள் இருவரும் இணைந்தார்கள். ரகசியப் புரட்சி நடவடிக்கைகளை அரவிந்தர் சொல்ல, அதனை நிவேதிதா ஆதரித்தார். பாரிஸ்டர் பி.மித்ராவை தலைவராகக் கொண்ட ஒரு கூட்டு இயக்கம் தொடங்கப்பட்டது. அதற்கு ஐந்து பேருள்ள மத்திய கவுன்சில் அமைக்கப்பட்டது. அந்த ஐவரில் ஒருவராக நிவேதிதா இருந்தார்.

இதில் ஒரு அமைப்பாக இருந்தது தான், 'அனுசீலன் சமிதி' ஆகும். இதன் தலைமையகம் டாக்காவில் இருந்தது. இதன் பல்வேறு கிளைகள் வங்கம் முழுக்க பரவி இருந்தது. இந்த



பாரதியின் குரு நிவேதிதா தேவி

இயக்கம் குறித்து பேராசிரியர் மஜூம்தார் History of Freedom Movement in India என்ற நூலில் விரிவாக எழுதி இருக்கிறார். அதில் நிவேதிதாவுக்கும் அந்த இயக்கத்துக்குமான ரகசியத் தொடர்புகள் சொல்லப்பட்டுள்ளது.

"நிவேதிதாவிடம் மாஜினியின் சுயசரிதத்தின் ஆறு தொகுதிகளும் இருந்தன. அதன் முதல் தொகுதியை அவர் புரட்சிக் கழகத்துக்கு (அனுசீலன் சமிதி) வழங்கினார்; அது வங்காளம் முழுவதும் சுற்றுக்கு விடப்பட்டு, பரவலாகப் படிக்கப்பட்டது. அதன் முதல் தொகுதியில் இறுதியிலுள்ள 'கொரில்லாப் போர்முறை' பற்றிய அத்தியாயம் டைப் அடிக்கப்பட்டது; அப்போது

கழகத்தின் தலையாய நோக்கமாகவிருந்த இந்த விதமான போர் முறையில் அதன் உறுப்பினர்கள் பயிற்சி பெற வேண்டுமென்பதற்காக, அதன் பிரதிகள் பரவலாக வினியோகிக்கப்பட்டன.

பின்னர் 1908இல் நிவேதிதா பூபேந்திரநாத தத்தருக்கு (விவேகானந்தரின் தம்பி) அவர் கைது செய்யப்படுவதற்கு முன், மாஜினியின் சுய சரிதையில் மீதமிருந்த ஐந்து தொகுதிகளையும், அத்துடன் ‘ஒரு புரட்சிவாதியின் நினைவுக் குறிப்புக்கள்’, ‘ரஷ்ய மற்றும் பிரெஞ்சுச் சிறைக்கூடங்களில்’ என்ற தலைப்புக்களில் பீட்டர் குரோபோட்கின் எழுதியிருந்த இரு நூல்களையும் கொடுத்தார். சிறைக்குச் செல்லுமுன் குரோபோட்கின்னின் இந்த இரு நூல்களையும் படிக்குமாறு கேட்டுக்கொண்டார்; மேலும், ரஷ்யப் புரட்சியின் உண்மையான இயல்பு, பணக்காரர்களை எதிர்த்து ஏழைகள் நடத்தும் போர்தான் என்பதையும் அவரிடம் விளக்கிக் கூறினார்’’ என்று எழுதி இருக்கிறார் மஜும்தார்.

அந்த வகையில் ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கும் இந்திய இளைஞர்கள் தயாராக வேண்டும் என நிவேதிதா விரும்பியது தெரிகிறது. இத்தகைய நிவேதிதாவை, பாரதி சந்தித்தார். அவரது வாழ்க்கையில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. இது பற்றி ‘சித்திரபாரதி’யில் ரா.அ.பத்மநாபன் சொல்கிறார்:

‘‘நிவேதிதா தேவியைச் சந்தித்தபோது நடந்த ஒரு விஷயம் பற்றித் தம் ஆப்த நண்பர் எஸ்.துரைசாமி அய்யரிடம் வெகுநாள் கழித்துப் பாரதி சொன்னாராம். அந்தச் சந்திப்பு பாரதியின் மனதை எப்படி அடியோடு மாற்றியது என்பதற்கு இதுவும் தக்க ஆதாரம் காட்டுகிறது.’’

‘பாரதத் தாய் விலங்குகளோடு கண்முன் நிற்பதாய் காணும் அளவுக்கு உணர்ச்சி வேண்டும்; அப்படிக் கண்டால்தான் விலங்கை எப்படியாவது நீக்கவேண்டும் என்ற உணர்வு வரும்’ என்று நிவேதிதா தேவி சொன்னராம். இப்படிக் கூறி வந்த அந்த அம்மையார் திடீரென ஆவேசம் வந்தவர்போல், தமது மேலங்கியை மார்பெதிரே பிய்த்துத்திறந்து, ‘உங்களுக்குத் தைரியம் வேண்டும். எங்களை இங்கே குத்திக் கொல்ல உங்களுக்குத் தைரியம் வேண்டும்!’ என்றாராம். தேச விடுதலைக்காகத் தம் போன்ற வெள்ளையரைத் துஷ்ட நிக்கிரகம் செய்யவும் அஞ்சாத தீரம் வேண்டுமென்பது நிவேதிதாவின் குறிப்பு. அடிமை மக்களுக்கு ஆண்மையின் அவசியத்தை அவர் இவ்வாறு வற்புறுத்தினார். இந்த உபதேசம் பாரதியின் நெஞ்சில் ஆழப்பதிந்தது. (சித்திர பாரதி ராஅ.ப. பக் 24) என்ற காட்சி மூலமாக அறியலாம்.

அடுத்து பாரதியை ஆட்கொண்டவர் திலகர். 1905ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட வங்கப் பிரிவினையின் காரணமாக தீவிரத் தேசியவாதம் வீறுகொண்டு எழுவதற்கு முன்பே, ஆங்கிலேயர் ஆட்சியை ஆயுத பலம் கொண்டு அகற்றுவதற்கான வழிவகைகளைத் திலகர் ஆராயத் தொடங்கிவிட்டார். இந்திய இளைஞர்களுக்கு ராணுவப் பயிற்சியளிக்கும் விஷயமாக ரஷ்யாவின் உதவியையும் நாடி இருக்கிறார். ரஷ்ய ஆவணக் காப்பகங்களில் கிட்டிய சான்றுகள், தகவல்கள் முதலியவற்றை ஆதாரம் காட்டி சோவியத் ஆராய்ச்சியாளரான ஏ.வி.ரெய்க்கோவ் பல கட்டுரைகளை எழுதி உள்ளார்.

வ.உ.சிதம்பரனார்

இந்திய தேசிய இயக்கத்தின் புரட்சிகரமான போக்குகள் ஆரம்பக் காலத்தில் வெடிகுண்டு வீச்சு போன்ற நடவடிக்கைகளாகத்தான் இருந்தது. ‘ஸ்ரீ திலகரின் வழித்துணை’ என்று பாரதி குறிப்பிடும் கணேஷ் ஸ்ரீ கிருஷ்ண கபார்தே வங்காளத்தில் வெடிகுண்டுகளைத் தோற்றுவித்தவர் என்று ரௌலட் சட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேபோல், வெடிகுண்டு வீசும் நிகழ்வுகள் 1905–1906ஆம் ஆண்டுகளில் ரஷ்யாவிலும் நடந்தது. அதன் தாக்கம் தான் இவை. ‘மாடம் காமா மூலமாகத்தான் சில ரஷ்யப் புரட்சிவாதிகளும் பயங்கரவாதிகளும் இந்திய இளைஞர்களுக்கு குண்டு செய்யும் விதத்தைக் கற்றுக் கொடுத்தனர்’ என்று எழுதுகிறார் எம்.பி.டி.ஆச்சார்யா. இவர் பாரதி ஆசிரியராக இருந்த ‘இந்தியா’ இதழின் நிருவாகி ஆவார். பாரதி புதுவை வந்தபிறகு, ஆச்சார்யா ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று விட்டார்.

இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தீவிரவாதத் தேசிய இயக்கமும், புரட்சி நடவடிக்கைகளும் இந்தியாவில் மும்முரமடைந்து வந்த காலத்தில், லண்டனில் வ.வே.சு.அய்யர், சாவர்க்கார், பாரீசில் மாடம் காமா, கிருஷ்ண வர்மா, ஜெர்மனியில் செண்பகராமன் பிள்ளை, விவேகானந்தரின் தம்பி பூபேந்திரநாத தத்தர் போன்றவர்களும் இந்திய விடுதலைக்காக அங்குப் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு ஐரோப்பாவிலிருந்துகொண்டு இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டு வந்த புரட்சிவாதிகள், முதல் உலகப் போர் (1914 – 1918) வெடிப்பதற்கு முன்னால் போர் வெடிக்குமானால், இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் உள்ள பகைமையைப் பயன்படுத்திக்கொண்டு, ஜெர்மன் படைகள், மற்றும் பிரிட்டிஷ் இந்தியராணுவத்திலிருந்து தம் பக்கம் திரும்பக் கூடிய போர்வீரர்கள் ஆகியோரின் துணையோடு, இந்தியாவின் மீது தாங்கள் படையெடுத்தே இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுவித்து விடலாம் என்று நம்பினர், அவ்வாறு அவர்கள் படை மூண்டுவரும் காலத்தில், இந்தியாவுக்குள்ளும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான உள்நாட்டுப் போர் வெடித்தால், இந்திய விடுதலை சுலபமாகக் கிட்டிவிடும் என்றும் நம்பினர். இவர்கள் முதல் உலகப் போர் தொடங்கியவுடன் மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கி, குறிப்பாகத் திலகரோடு தொடர்பு கொண்டனர்.

இது சம்பந்தமான ஒரு விவரத்தை வ.உ.சிதம்பரம்பிள்ளையே வழங்கியிருக்கிறார். 1912 டிசம்பர் மாதம் தமது சிறைவாசம் முடிந்து வெளிவந்த வ.உ.சிதம்பரம்பிள்ளை, ஜூன் மாதம் தமது மாண்டலே சிறைவாசத்தை முடித்து வெளிவந்திருந்த தமது குருநாதரான திலகரைச் சந்தித்துப் பேச 1915 பிப்ரவரியில் புனாவுக்குச் சென்றார்; அவர் சென்ற வேளையில், கோபால கிருஷ்ண கோகலே (1915 பிப்ரவரி 15 அன்று) காலமாகிவிட்டார். வ.உ.சி.யைத் தமது வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு கோகலேயின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பி வந்த திலகர், தம்மோடு மறுநாள் நடத்திய பேச்சு வார்த்தையைக் குறித்து, வ.உ.சி. 1928 புனாவில் வெளியிடப்பட்ட திலகரைப் பற்றிய கட்டுரைத் தொகுதியொன்றில் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

பால கங்காதர திலகர்

ஜி.சுப்பிரமணிய ஐயர்

“அடுத்த நாள் அதிகாலையில் எனது குரு (திலகர்) என்னைத் தமது தனியறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது நடந்துகொண்டிருந்த ஐரோப்பிய யுத்தம் பற்றியும், அப்போது ஜெர்மனியில் இருந்த இந்தியத் தேசபக்தர்களிடமிருந்து நமக்குக் கிடைத்திருந்த செய்தியைப் பற்றியும் அவர் என்னோடு பேசினார். போரின் போக்கில் சில சந்தர்ப்பங்கள் தோன்றும் என்பதும், அந்தச் சந்தர்ப்பங்களில் இந்தியர்கள் இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதும்தான் அந்தச் செய்தியின் சாரம். இது சரியானது தானா, சாத்தியமானதுதானா, அந்தச் செய்தியின் படி நாங்கள் நடந்துகொண்டால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்பதைப்பற்றி நாங்கள் இரண்டு அல்லது மூன்று நாட்கள் விவாதித்தோம். இதன்போது எனது குரு, போர் சம்பந்தமாக ஐரோப்பாவில் பல சிக்கல்கள் இருந்து வருகின்ற காரணத்தால், அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் எழாமலே போகலாம் என்று தீர்க்கதரிசனமாகக் கூறினார்.” (Lokamanya Tilak-Pradhan and Bhaget பக் 301–302).

இதிலிருந்து 1915ஆம் ஆண்டிலும் கூட, ஆங்கிலேயர் ஆட்சியை அகற்ற அயல்நாட்டுப் படையின் உதவியை நாடுவதற்கும். இந்தியாவில் உள்நாட்டுப் போர்தொடங்குவதற்கும் சாத்தியப்பாடு உண்டா என்பதைத் திலகர் மட்டுமல்லாமல், வ.உ.சி.யும் இரண்டு மூன்று நாட்களாக விவாதித்திருக்கிறார்கள் என்பதும், அதற்கான சாத்தியப்பாடு இல்லை என்று உணர்ந்த பின்னர்தான் இருவரும் அந்தத் திசைவழியில் செயல்படத் துணியவில்லை என்பதும் நமக்குப் புலனாகின்றது.

உண்மையில் திலகரே ஒருமுறை இவ்வாறு கூறியிருக்கிறார்: “நான் ஒன்றும் ஆயுதந்தாங்கிய போராட்டத்துக்கு எதிரி எனக் கொள்ளவேண்டாம். ஆயுதம் தாங்கிய போராட்டமும் கூட, முற்றிலும் சட்டப்பூர்வமானது என்றே நான் கருதுகிறேன். என்றாலும், தற்போது அத்தகைய போராட்டத்தை அறிவிப்பது சாத்தியம் அல்ல. அத்தகைய போராட்டத்தால் ஐம்பது சதவீதமேனும் வெற்றி கிட்டும் என்று எவரேனும் எனக்கு உறுதியளித்தால், வெற்றிக்கான மீதி ஐம்பது சதவீத வாய்ப்பை நான் ஆண்டவனிடம் விட்டுவிட்டு ஓர் ஆயுதந் தாங்கிய போராட்டத்தை அறிவித்துவிடுவேன்’’ (V.S.Joshi எழுதியுள்ள ‘Tilak and Revolutionaries’ கட்டுரையில் காட்டப்பட்டுள்ள மேற்கோள். Modern Review ஜனவரி 1965).

இதைக் கருத்தில்கொண்டு யுத்தமாநாடு நடந்த சந்தர்ப்பத்தில் அப்போது கவர்னராகவிருந்த லார்டு வெல்லிங்டனோடு, திலகர் தனியாகப் பேசிக்கொண்டிருந்தபோது வெல்லிங்டன் இவ்வாறு சொன்னார்: “அப்படியென்றால், மிஸ்டர் திலக், இதிலிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தை எந்தவொரு சட்ட விரோதமான புரட்சிகரமான முறைகளின் மூலமும் தூக்கியெறிவதையே நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்பது எனக்குத் தெளிவாகத்தெரிகிறதே”.

இதற்குத் திலகர் அந்த ஆங்கிலேய கவர்னரிடம் இவ்வாறு பதிலளித்தார்: “ஆம், என்னால் முடிந்தால் நிச்சயம் அவ்வாறே செய்வேன். ஆயினும், நாட்டின் இன்றைய நிலையில் அத்தகைய ஐரிஷ் முறைகளைப் பின்பற்றுவது சாத்தியமற்றது; நடைமுறைக்கொவ்வாதது;

செண்பகராமன்


வ.வே.சு. ஐயர்

எங்களுக்குத் தற்கொலைக்குச் சமமானதும் கூட. எனவே நான் அரசியல் சட்டப்பூர்வமாகவே, எனினும் மூர்க்கமாகவும் வேகமாகவும் குறிக்கோளை எய்த அரசாங்கத்தோடு போராட என்னால் ஆனதையெல்லாம் செய்யவே முயல்வேன்.'' (Lokamanya Tilak Pradhan and Bhagat. பக் 302).

எனவே, திலகரின் வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளது போல், ''சுதந்திரத்தை எய்துவதற்கான சாதனம் என்ற முறையில் புரட்சிக்குள்ள சாத்தியப்பாட்டை ஒன்றும் திலகர் தள்ளுபடி செய்யவில்லை. மாறாக, அதனை மேற்கொள்வதற்கான காலம் கனிந்துவரவில்லை என்றே அவர் உணர்ந்தார்; அநேகமாகப் பயனே அளிக்காத ஒரு முயற்சியில் தலைசிறந்த இந்திய இளைஞர்களை வீணடிக்கும் கருத்தை அவர் அங்கீகரிக்கவில்லை. காந்தியைப் போலன்றி, திலகர் அகிம்சையை ஒரு சமயக் கொள்கையாகவோ தத்துவமாகவோ பார்க்கவில்லை.'' (மேற்கூறிய நூல்பக். 207), அவர் புரட்சிக்குத் தயார் செய்வதை ஆதரித்தார். இத்தகைய திலகரைப் பின்பற்றுபவராக பாரதி இருந்தார்.

திலகரைப் போலவே அன்றைய தீவிரத் தேசியவாத இயக்கத்தின் முக்கியத் தலைவர்களாக லாலா லஜபதிராய், அரவிந்தர், விபின் சந்திரபாலர் ஆகியோரும் இருந்தார்கள்.

லாலா லஜபதிராயின் பேச்சுகள், இளைஞர்களை அத்தகைய தீரத்திலும் தியாகத்திலும் ஈடுபடுமாறு மறைமுகமாகத் தூண்டுவதாக அமைந்திருந்தன. நேரடியாக இல்லாமல் மறைமுகமாக வழிநடத்துபவராக அரவிந்தர் இருந்தார். விபின் சந்திரபாலர், வங்காளத்தில் அனுசீலன் சமிதி என்ற ரகசியச் சங்கம் தொடங்கப்பட்ட போது அதனை அமைப்பதற்கும் உதவினார்.

ரகசியச் சங்கங்களுக்கு உத்வேகமும் ஊக்கமும் அளித்து, அவற்றுக்கு ஆதரவாகவும் இருந்த அரவிந்தரை ஆசிரியராகக்கொண்டு 'வந்தேமாதரம்' பத்திரிகையையும் நடத்திவந்தார். அந்தப் பத்திரிகையின் மீது பிரிட்டிஷ் அரசாங்கம் வழக்குத் தொடுத்தபோது, அந்தப் பத்திரிகைக்கு அரவிந்தர்தான் ஆசிரியர் என்ற உண்மையை நீதிமன்றத்தில் ஒப்புக்கொள்ள மறுத்து, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காகச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைக்கும் சென்று திரும்பினார்.

தீவிரவாதத் தேசிய இயக்கம் மும்முரமடைந்த காலத்தில், விபின் சந்திர பாலர் அந்த இயக்கத்தின் ஏனைய தலைவர்களைப்போலவே, சாத்விக எதிர்ப்புப் போராட்டத்தையே மேடைதோறும் வலியுறுத்திக் கேட்பவர் மயங்கும் விதத்தில் அற்புதமாகச் சொற்பொழிவுகளும் ஆற்றிவந்தார். ஆவேசப் பிரசங்கியான விபின் சந்திர பாலர் ஆயுதந்தாங்கிய போராட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவாக எதுவும் பேசவில்லை என்பது உண்மைதான் என்றாலும், அவரும் திரைமறைவில் அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தார்.


சாவர்க்கர்

இத்தகைய விபின் சந்திர பாலரை சென்னைக்கு அழைத்து வந்து சொற்பொழிவாற்றச் செய்வதற்காக, 1907 ஏப்ரல் மாதத்தில் அப்போது சென்னை மாகாணத்தோடு சேர்ந்திருந்த ஆந்திரப் பிரதேசம் ராஜமகேந்திரபுரத்துக்கு

பாரதி சென்றார். 'பால பாரத் சங்க'த்தின் பிரதிநிதியாக தன்னை பாரதி அறிமுகம் செய்து கொண்டார்.

விபின் சந்திர பாலர் 1907 ஏப்ரல் இறுதியில் சென்னைக்கு வந்து மே மாதத் தொடக்கத்தில் ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். 'வந்தேமாதரம்' என்ற தலைப்பில் மே 10ஆம் தேதி ஏழாவது சொற்பொழிவை நிகழ்த்தவிருந்த தருணத்தில், லாலா லஜபதிராய் நாடுகடத்தப்பட்டார் என்ற செய்தி வந்ததால், அவர் தமது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு உடனே வங்கத்துக்குத் திரும்பி விட்டார். பாரதி தனது கவிதைகளில் புகழ்ந்துரைத்தவர்கள் அனைவரும் எத்தகைய நோக்கம் கொண்டவர்கள் என்பதை இதன் மூலம் அறியலாம். பாரதியின் புரட்சிகர நோக்கையும் போக்கையும் புரிந்து கொள்வதற்கு இவை அடிப்படையானவை ஆகும்.

தீவிரத் தேசியவாத இயக்கத்தை வங்கத்தில் முன்னின்று நடத்திய விபின் சந்திர பாலர் (1858–1932), மகாராஷ்டிரத்தில் நடத்திய திலகர் (1856–1920), பஞ்சாபில் நடத்திய லாலா லஜபதிராய் (1865–1928) ஆகிய தலைவர்களெல்லாம் 1906ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நாற்பது வயதையும் அதற்கு மேலும் எட்டிவிட்ட மூத்த தலைவர்களாகவே இருந்தனர். அரவிந்தர் ஒருவர் மட்டுமே (1872–1950) அந்தக் காலத்தில் 40 வயதை எட்டாத தலைவராக இருந்தார்.

தமிழ்நாட்டிலோ இந்த இயக்கத்தின் முப்பெரும் தலைவர்கள் எனக் கருதப்பட்ட வ. உசிதம்பரம் பிள்ளை (1872–1936), சுப்பிரமணிய பாரதி (1882–1921), சுப்பிரமணிய சிவா (1884–1925) ஆகிய மூவரிலும், வ.உ.சி. ஒருவர்தான் அந்தக் காலத்தில் அரவிந்தரைப்போல் 40 வயதை எட்டாதவராக, சொல்லப்போனால் 35 வயதைக் கூடப் பூர்த்தி செய்யாத மூத்த தலைவராக இருந்தார். பாரதி, சிவா இருவரும் அப்போது 25 வயதுகூடப் பூர்த்தியாகாத இளைஞர்களாக இருந்தனர்.

அரவிந்தர்

மேலும், அக்காலத்தில் பாரதியைச் சார்ந்திருந்த துரைசாமி அய்யர், வி.சக்கரைச் செட்டியார், சுரேந்திரநாத் ஆர்யா, எஸ்.என்.திருமலாச்சாரி, எம்.பி.திருமலாச்சா (எம்.பி.டி.ஆச்சார்யா) முதலிய பாரதியின் தோழர்கள் பலரும் இளைஞர்களாகவே இருந்தனர். எனவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தீவிரத் தேசியவாத இயக்கம் இளைஞர்கள் முன்னின்று நடத்திய இயக்கமாகவே அந்நாளில் இருந்தது எனலாம்.

எனவேதான் சென்னை நகரைச் சேர்ந்த, வயதில் மூத்த மிதவாதத் தலைவர்கள், பாரதி போன்றோர் முன்னின்று நடத்திய தீவிரத் தேசியவாத இயக்கத்தை விவரம் தெரியாத "சிறு பிள்ளைகளின் இயக்கம் என்றே மதித்துப் பேசி வந்தனர். இதனால்தான் நிதான கட்சியார் (மிதவாதிகள்) புதிய கட்சியின் (தீவிரத் தேசியவாத கட்சியின்) தலைவரான திலகரை நோக்கி, "ஓய் திலகரே! நம்ம ஜாதிக்கு அடுக்குமா? செய்வது சரியோ சொல்லும்!" என்று புலம்புவதாகப் பாரதி பாடியுள்ளார்.

மேலும் விபின் சந்திரபாலர் சென்னைக்கு வந்து உரையாற்றியதால் ஏற்பட்ட

தாக்கத்தைப்பற்றி எழுதும் போது, “புதிய கட்சி என்றால், ஏதோ வாலிபர் செய்யும் குறும்பென்று நினைத்துவந்த சில சென்னை மேதாவிகள் கூட, இவரது உபந்நியாசங்களைக் கேட்டவுடன், புதிய கட்சியார் சொல்லும் முறைகளைத் தவிர, பாரததேசம் உன்னதம் பெறுவதற்கு வேறுவழிகளே கிடையா தென்று தெரிந்துகொண்டுவிட்டார்கள்” என்று பாரதி எழுதியிருக்கிறார். (பாரதி தரிசனம் – 2 பக். 86).

எனவே, தீவிரத் தேசியவாத இயக்கத்தைச் சென்னையில் பாரதி போன்ற இளைஞர்கள் தாம் தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றனர். இளைஞர்களான அவர்கள் தாம் மொத்த இளைஞர்களையும் மாணவர்களையும் தமது அணியில் ஒன்று திரட்டினார்கள் என்றால் அதுவும் இயல்புதான்.

அந்தக்காலத்தில் இளம் வழக்கறிஞராக விருந்த பாரதியின் நண்பர் சக்கரைச் செட்டியார், “சென்னையிலே மிகக்கூர்ந்த மதியினரெனப் பெயர் படைத்த வக்கீல் ஒருவர் வெகுண்ட போதிலும், சென்னை மிதவாதிகள் எங்கு எங்களோடு சேர்ந்து (ராஜீயத்) தீட்டுப் பட்டுவிடுமோ என்று ஆடைகளைத் தூக்கிக்கொண்டு விலகிநின்ற போதிலும், பாரதியார் எங்களை மேலே நடத்திச்சென்றார்'' என்று எழுதுகிறார். (பாரதியின் ‘ராஜீய வாழ்வு’வி. சக்கரை செட்டியார். பாரதியார் சரித்திரம். 1928. பக். 22).

உண்மையில் பாரதி தேசிய கவியாக மலர்ந்து ‘வங்கமே வாழிய’ என்ற தனது முதல் தேசியப் பாடலைப் பாடியதும், 1905 செப்டம்பர் 14 அன்று மாலை ‘சுதேசிய மாணவர்கள்’ சென்னைக் கடற்கரையில் நடத்திய ‘பெருங்கூட்டத்தில்’ தான். (‘வங்கமே வாழிய’ பாடல் பற்றிப் பாரதியே எழுதிய அடிக்குறிப்பு – பாரதி தமிழ் பெ. தூரன், பக். 8990).

பாரதி காசியில் வசித்து வந்த காலத்தில் பாரதிக்கு அங்கு நண்பராக இருந்தவரும், பாரதி காசியிலிருந்து எட்டயபுரம் திரும்பிய காலத்தில் பாரதியோடு சேர்ந்து திருச்சி வரையிலும் வந்து, பின்னர் தமது ஊரான கரூருக்குச் சென்றவரும், பாரதி 1904 இறுதியில் சென்னை வந்து சேர்ந்தபின், சென்னையில் பாரதியோடு மீண்டும் தம் நட்பைத் தொடர்ந்து மேற்கொண்டவருமான கரூர் பண்டிதர் எஸ்.நாராயண அய்யங்கார் இவ்வாறு எழுதியுள்ளார்:

“பாரதியார் சென்னையில் பல நண்பர்களைப் பெற்றார். காலை வேளைகளில் கல்லூரி மாணவர்களின் கூட்டம் அவர் வீட்டில் நிறைந்திருக்கும். மாலைவேளைகளிலும் அப்படியே, அநேகமாகப் பிரதி தினமும் மாலை வேளைகளில் கடற்கரைக்குப் போவது வழக்கம். பாரதி கடற்கரை மணலில் உட்கார்ந்ததும் அவரைச் சுற்றி மாணவர்கள் தேசிய கீதங்கள் பாடும்படி வேண்டிக்கொள்வார்கள். அவரே பாடும்போது அவரது பாட்டுக்கள் மிகவும் உருக்கமாக இருக்கும். கடற்கரையிலிருந்து இரவு ஏழரை மணிக்குத்தான் திரும்புவோம்.

சுப்பிரமணிய சிவா

லாலா லஜபதிராய்

விபின் சந்திரபாலர்

பாரதியாரின் அரசியல் நோக்கங்கள் நாளுக்குநாள் மிகவும் தீவிரமடைந்து வந்தன. பொதுவாக, பச்சையப்பன் கல்லூரி, பிரஸிடென்சி காலேஜ், கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவைகளின் மாணவர்களிடையே பாரதியின் செல்வாக்கு வளர்ந்து வந்தது.'' (சென்னையில் பாரதி, தினமணி சுடர் 16.09.1956),

எனவே, வங்கப் புரட்சியாளர்கள் சென்னைக்கு வந்து தமிழ்நாட்டிலும் ஆயுதந் தாங்கிய போர் மற்றும் ஆயுதந்தாங்கிய நடவடிக்கை ஆகியவற்றுக்குத் தயாராகும் ரகசிய இளைஞர் சங்கங்களைத் தோற்றுவிக்க முயற்சிகளை மேற்கொண்ட காலத்தில், அவர்கள் பாரதியின் அரசியல் நண்பர்களான நீலகண்டரையும் சுரேந்திநாத ஆரியாவையும் அது சம்பந்தமாகச் சந்தித்துப் பேசினார்கள்.

அதே சமயம் பாரதியே அவர்களுக்குத் தனது நண்பர்களை அறிமுகம் செய்துவைத்த போதிலும், நிவேதிதா தேவியிடம் சுதேச பக்தியுபதேசம் பெற்றவனும், சென்னையிலிருந்து தீவிரத் தேசியவாத இயக்கத்தின் ஒரே பத்திரிகையாக, ஒரே குரலாக வெளிவந்த 'இந்தியா' பத்திரிகைக்கு ஆசிரியராக விளங்கியவனும், வங்கத் தலைவர் விபின் சந்திர பாலரின் நம்பிக்கைக்கு உரியவனாக விளங்கியவனும், இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் மதிப்பும் செல்வாக்கும் பெற்று விளங்கியவனும் ஆன பாரதிக்கும் அந்தப் புரட்சியாளர்களுக்கும், அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கும் எந்தச் சம்பந்தமுமே இருக்கவில்லை என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடத் துணிவது நம்புமாறில்லை என்பது தெளிவு.

அதிலும் அன்னியராட்சியும் அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் நிலவிவரும் ஒரு நாட்டில், நாட்டின் விடுதலைக்காக ரகசியச் சங்கங்களும் நிறுவப்படவேண்டும் என்ற அவசியத்தை, திலகர், அரவிந்தர், விபின் சந்திர பாலர் முதலியோரெல்லாம் உணர்ந்திருந்த காலத்தில், அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொண்ட பாரதி மட்டும் அதை உணராமல், அவற்றில் எந்தச் சம்பந்தமும் இன்றி விலகியிருந்தான் என்று கொள்வது இயல்புக்குப் பொருந்தாததாகும். சென்னையிலும் அத்தகைய ரகசியச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கலாம், அவ்வாறு ஒரு சங்கம் அமைக்கப்பட்டிருக்குமாயின் புரட்சிக்கவிஞனும் பத்திரிகையாளனுமான பாரதிக்கு அதில் நிச்சயம் சம்பந்தம் இருந்திருக்கும் என்றே நாம் கூறலாம்.

உண்மையில், சென்னையில் 1907–1908 ஆண்டுகளில் அத்தகைய சங்கம் இருந்தது என்று கொள்வதற்கு நமக்கு ஆதாரம் உண்டு. ஏனெனில், பாரதியின் 'இந்தியா' பத்திரிகையின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அதன் பதிப்பாளரான சீனிவாசனைக் கைது செய்த அதே சமயத்தில், 'இந்தியா' பத்திரிகையில் 1908 மே மாதம் வெளிவந்த கட்டுரைகளுக்காக ராஜத்துரோக வழக்கைத் தொடுத்த தருணத்தில், போலீசார் சென்னையிலிருந்த மாணவர் விடுதிகள் பலவற்றைச் சோதனையிட்டனர்.

அப்போது 1908 "முற்பகுதியில் ரஷ்யர்களது ரகசிய ஸ்தாபனம் பற்றி விவரிக்கும் ஒரு பிரசுரத்தின் பிரதிகள் சென்னை பப்ளிக் ஒர்க்ஸ் இஞ்சினீயரிங் ஒர்க்ஷாப்பில் பயின்று வந்த மாணவர்களின்

வசம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது" என்று ரௌலட் அறிக்கை கூறுகிறது. (Rowlatt Report – பக். 163). எனவே, சென்னையில் ஓர் ரகசியச் சங்கம் இருந்தது என்றும், அதில் பாரதியும், பங்கெடுத்து வந்தான் என்றும் கூறலாம்.

ஏனெனில் இவ்வாறு நிகழ்ந்திருப்பது சாத்தியம் என்பதையே பாரதியின் எழுத்துக்களும் நமக்குச் சூசகமாக உணர்த்துகின்றன. தீவிரவாத தேசியக் கட்சியைச் சேந்த பாரதி, அந்தக் கட்சித் தலைவர்களான திலகர், அரவிந்தர், விபின் சந்திர பாலர் போலவே சாத்வீக எதிர்ப்பையும் பகிஷ்கார இயக்கத்தையும் முழுமையாக ஆதரித்தே நின்றான். ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் பாரதிக்கு நம்பிக்கை இருந்த காரணத்தால் தான் ஆங்கிலேயர் கொண்டு வந்திருந்த ஆயுதத் தடைச் சட்டத்தைக் கண்டித்து எழுதினார்.

பாரத நாடு சுதந்திரம் பெறுவதற்குச் சரீர பலம் அவசியம் என்றும், அதற்காக சரீரப் பயிற்சிக் கூடங்களைத் தொடங்க வேண்டும் என்றும் தொடர்ச்சியாக மூன்று கட்டுரைகள் எழுதினார். உடற்பயிற்சி கூடங்களை ஊக்குவித்தார். இத்தகைய உடற்பயிற்சிக் கூடங்கள் புரட்சி நடவடிக்கைகளுக்கான வெளிவட்டங்களாகச் செயல்பட்டன.

பாரதி அங்கம் வகித்த பால பாரத சங்கம், சென்னையில் நடத்திய ஊர்வலத்தில் 80 பேர் தடிக்கம்புகளும் கொடிகளும் எடுத்துச் சென்றார்கள். அதில் வந்தே மாதரம், அல்லாஹோ அக்பர் என்று எழுதப்பட்டு இருந்தது. (இந்தியா 16.02.1908)

1878 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சுதேசியப் பத்திரிக்கைச் சட்டம் சென்னை மாகாணத்துக்குப் பிரயோகிக்கப்படவில்லை. ஆனால் அந்த சட்டம், 1906 காலக்கட்டத்தில் சென்னை மாகாணத்தில் அமலாகக் காரணம், பாரதி நடத்திய 'இந்தியா' இதழ் தான். வ.உ.சி.யும், சிவாவும் சிறைக்குச் செல்லவும், பாரதி புதுவையில் அடைக்கலம் ஆகவுமான நிலை உருவானது. இது கலெக்டர் ஆஷ் கொலையில் (1911 ஜூன் 17) முடிந்தது. ஆஷ் செய்த செயல்கள், தமிழ்நாட்டில் முதல் முதலாக ஆயுதந் தாங்கிய புரட்சி நடவடிக்கைகளுக்கான ஒரு சங்கம் திரட்சி பெற்று உருவாகுவதற்கு ஒரு தூண்டுகோலாக விளங்கிவிட்டது.

இதே 1910ஆம் ஆண்டில் தான் புதுவையில் இருந்து பாரதி நடத்தி வந்த இந்தியா, சூர்யோதயம், விஜயா ஆகிய பத்திரிக்கைகள் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் வருவதற்கு தடை விதிக்கப்பட்டது. அன்னியராட்சியை ஆயுதம் தாங்கி எதிர்த்துப் போராட வேண்டும் என்ற வேட்கையை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தனது கவிதையில் வெளிப்படுத்தினார் பாரதியார். சிவாஜி, குருகோவிந்தசிங் பற்றிப் பாடிய கவிதையும், ரஷ்யப் புரட்சியை ஆதரித்து எழுதியதும் இதற்குச் சான்றுகள்.

(பாரதி காலமும் கருத்தும் என்ற நூலில் இருந்து சில பகுதிகள்)

பாரதியின் இறுதிக்கால இந்திய விடுதலை இயக்கச் செயல்பாடுகள்

– பேராசிரியர் ய.மணிகண்டன்

சின்னஞ்சிறிய வாழ்க்கைப் பரப்பு.
ஆனால் அதற்குள் பென்னம்பெரிய அனுபவங்கள்,
அர்ப்பணிப்பு, செயற்பாடுகள், சாதனைகள்.
– இதுதான் மகாகவி பாரதி.

இந்திய அளவில் மாபெரும் தலைவர் திலகரோடு தொடர்பு;

விவேகானந்தரின் ஞானப்புதல்வி நிவேதிதையுடன் சந்திப்பு;

நிவேதிதையே பாரதியின் இதழ்களுக்குக் கட்டுரைகள் எழுதும் அளவுக்குத் தொடர்பு;

இந்திய அளவில் கல்கத்தா, சூரத் காங்கிரஸ்களில் பங்கேற்ற செயற்பாடும் அனுபவமும்;

எட்டயபுரம் அரசவையில் சிறுபருவத்திலேயே பெருமதிப்பு;

மதுரையிலே தமிழாசிரியப் பணி;

தமிழின் முதல் நாளிதழில் 22ஆம் அகவையிலேயே உதவி ஆசிரியப் பணி;

உலகச் செய்திகளையெல்லாம் அறிந்து மொழிபெயர்க்கும் செயல்கள்;

அம்பேத்கராலேயே பௌத்த நெறியில் முன்னோடி நிலையில் கருதப்பட்ட தென்னிந்தியாவின் மாமேதை, சமூக சீர்திருத்த முன்னோடி லட்சுமி நரசுவோடு தொடர்பு;

ஆங்கிலேய அரசாட்சிக் காலத்திலேயே, தமிழின் பேராளுமையாக விளங்கிய உ.வே.சா. பொறுப்பேற்றிருந்த சென்னை மாநிலக் கல்லூரியில் மாணவர் தமிழ் மன்றங்களில் சொற்பொழிவாற்றிய, தலைமை ஏற்ற, பாடல்கள் பாடிய நிலை;

‘சக்கரவர்த்தினி’, ‘இந்தியா’, ஆங்கில ‘பாலபாரதா’, ‘விஜயா’, ‘கர்மயோகி’, ‘சூரியோதயம்’ எனப் பல வார, மாத, நாளிதழ்களில் ஆசிரியர் நிலையிலும் முதன்மை நிலையிலும் செயற்பட்ட வீச்சு;

செயல்பட்ட இதழ்கள் பலவும் ஆங்கிலேய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட தீவிரம்;

ஆங்கிலேய அரசாட்சிக்கு எதிரானப் பாடல்கள், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய ஒப்பற்றப் படைப்புகள்;

கனவு, ஆறில் ஒருபங்கு ஆகிய படைப்புகள் படைத்தமையும் அவை ஆங்கிலேய அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டமையும் என்னும் நிலை;

இருபதாம் நூற்றாண்டின் கவிதைத் துறையில் பேரிடம் பெற்றுவிட்ட புதுக்கவிதைக்கு முன்னோடியான வசன கவிதை முயற்சி;

உலகளாவிய பத்திரிகையாளர், ஆங்கிலேயர் நெவின்சன் என்பவரால் 25ஆம் வயதிலேயே வியந்து சென்னையின் தமிழ் கவிஞன் எனப் பதிவு செய்யப்பட்ட வரலாறு;

உலகளாவிய எழுத்தாளரும் கவிஞரும் திறனாய்வாளருமாகிய அயர்லாந்தின் ஜேம்ஸ் எச்.கஸின்ஸ் என்பவரால் வாழ்ந்த காலத்திலேயே இந்தியாவின் நான்கு கவிஞர்களுள் ஒருவராகத் தாகூர், அரவிந்தர், சரோஜினி நாயுடு ஆகியோரோடு குறிப்பிடப்பட்ட உயர் நிலை;

ஞானத்தின் உச்சம் என்று நவிலப்பட்ட அரவிந்தரோடு நாள்தோறும் வேத ஆராய்ச்சி;

அதே காலகட்டத்தில் ஒழுங்கற்றுத் திரிந்த குள்ளச்சாமி என்னும் மாங்கொட்டைச்சாமியோடு நெருக்கம்;

வ.உ.சி.யும் வரதராஜுலு நாயுடுவும் இன்னும் எண்ணற்ற பலரும் தங்கள் சுதேச உணர்வை வீறுகொள்ளச் செய்தவர் என்று போற்றிய விடுதலைப் பேராட்ட முன்னோடி முகம்;

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கும் சமூகப் போராளி ரா.கனகலிங்கத்திற்கும் முன்னோடியாக, குருநாதராகத் திகழ்ந்த பெற்றி;

அதிசயிக்கத்தக்க சந்திப்பாக அமைந்துவிட்ட காந்தியுடனான சந்திப்பு;

தென்னாப்பிரிக்காவில் இருந்தபோதே காந்தியைப் பாரதி அறிந்தது மட்டுமல்ல, பாரதியையும் காந்தி அறிந்திருந்த நிலை;

அன்னிபெசண்டுக்கு எதிராகக் குறிப்பிட்ட கருத்துநிலையில் நூலே படைத்தமை;

அதே அன்னிபெசண்ட் நடத்திய ஆங்கில இதழ்களில் தொடர்ந்து எழுதியமை;

பாரதியின் விடுதலைக்கு அன்னிபெசண்டே முயன்றநிலை;

தாகூர், ஜகதீச சந்திரபோஸ், விக்டர் யூகோ, வால்ட் விட்மன் என இந்திய, உலகளாவிய ஆளுமைகளின் எழுத்துகளை, பேச்சுகளை மொழிபெயர்த்துத் தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்திய முயற்சி;

பின்னாளில் சில விமர்சனங்களை வைத்தவர் எனினும் தந்தை பெரியாரின் குடியரசு தொடக்ககால இதழ்களிலேயே நோக்கப் பாடலாக இடம்பெற்ற முன்னோடி நிலை.

இன்னும் இன்னும் எத்தனை எத்தனையோ பன்முகங்களும் முன்னோடி முகங்களும் கொண்ட இருபதாம் நூற்றாண்டுத் தமிழின், தமிழ் சமூகத்தின் இலக்கிய, விடுதலைப் போராட்ட, சமூக சீர்திருத்தப் பேராளுமை மகாகவி பாரதி.

பாரதியின் வாழ்க்கைப் பயணத்தை எட்டயபுர வாழ்க்கை, காசி வாழ்க்கை, முதற்கட்டச் சென்னை வாழ்க்கை, புதுச்சேரி வாழ்க்கை, பிந்தைய கடைய, எட்டயபுர வாழ்க்கை, இரண்டாம்கட்டச் சென்னை வாழ்க்கை என்று வரலாறு வகைப்படுத்திக் காட்டுகின்றது.

பத்தாண்டுகள் அடைக்கலம் புகுந்து புதுவையில் வசித்த பாரதி பரந்த உலகத்தில் சிறகடிக்க விரும்பினார். பொருளாதார நெருக்கடிகள் இருந்தபோதிலும் புதுச்சேரி வாழ்க்கை ஓரளவுக்கு அமைதியான வாழ்க்கை. வ.வே.சு. ஐயர், மண்டயம் சீனிவாசாச்சாரியார், அரவிந்தர் ஆகியோருடைய தோழமை; குள்ளச்சாமி முதலியோரின் பழக்கம்; பாரதிதாசன், கனகலிங்கம் முதலியோரின் அன்பு; ‘இந்தியா’, ‘விஜயா’, ‘சூரியோதயம்’, ‘கர்மயோகி’ முதலிய இதழ் வெளியீட்டுச் செயல்பாடுகள்; கனவு, சின்னச்சங்கரன் கதை, ஆறில் ஒருபங்கு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு என்றெல்லாம் அற்புதப் படைப்புகள் படைத்தமை இவையெல்லாம் புதுவை வாசக் காலத்துப் பாரதி வாழ்க்கையின் முக்கியமான அம்சங்கள். ஆனாலும் பாரதி ஒருகட்டத்தில் விட்டு விடுதலையாகவே விழைந்தார்.

பாரதியின் புதுச்சேரி வாழ்க்கையைச் சோமசுந்தர பாரதியார் உணர்ந்து வடித்திருக்கும் பகுதி நாம் கருத்தில்கொள்ளத்தக்கதாகும்.

......பத்து வருஷம், அரணில்லாது தானே சுமத்திக் கொண்ட சிறையில், விலங்கற்ற கைதியாய், வறுமை, நோய் முதலிய துன்பங்களுக்காளாய் வெளியில் புகழ்பவரன்றி, நெஞ்சில் நேசிப்பாரும் ஆதரத்துடன் ஆதரிப்பாரும் இன்றிப் பலவாறு வருந்தினர். துன்பம் நிறைந்த இக் காலத்தில்தான் இவர் அளவற்ற நூல்களை இயற்றிக் குவித்து வைத்தார். அவைகளெல்லாம் கையெழுத்துப் பிரதியாகவேயிருந்து வருகின்றன. அவைகளேயன்றி, அழகிய வசன நூல்களும், சிறுகதைகளும் பல செய்துள்ளார். இவர் வசனநடை எளிதில் யாரும் உணர ஒழுகுவதுடன் இனிய, எளிய நடையும், வடித்த சுவை நிறைந்தும், யாப்பற்ற கவிகளென்று சொல்லும்படி அதி மாதுர்யமாயிருக்கும்.

(சுதேச கீதங்கள் – முதல் பாகம், 1922, ப. XXIV)

இந்தப் புதுவை வாழ்க்கையிலிருந்து விடைபெறக் காலம் செல்லச் செல்லத் துடித்தார் பாரதியார். பல்வேறு முயற்சிகளைப் புரிந்தார். பாரதியின் அந்த மனநிலையை மனைவி செல்லம்மா “புதுவையில் தேச பக்தி விரதத்தைப் பலவிதமாக அனுஷ்டித்தார். திரும்ப வந்து தந்நாட்டை ஒருமுறை பார்க்க வேண்டுமென்ற அவா அதிகரித்தது” என்று நினைவுகூர்ந்திருந்தார். யாது நேரினும் நேரட்டும் என இறுதியில் புதுச்சேரியைவிட்டு வெளியேறினார்.

1918 நவம்பர் 20ஆம் நாள் கடலூர் அருகே கைதுசெய்யப்பட்டார். கடலூர் சிறையில் இடப்பட்டார். 1918 டிசம்பர் 14இல் சில நிபந்தனைகளை ஒப்புக்கொண்ட நிலையில் விடுதலை செய்யப்பட்டார். குறிப்பிட்ட இடங்களில் தங்கியிருக்க வேண்டும், எழுதுபவற்றை வெளியிடும்முன் அதிகாரிகளிடம் காண்பிக்க வேண்டும் என்பன நிபந்தனைகள். அரசியல் செயல்பாடுகளிலிருந்து விலகியிருப்பதாக அப்போதைய மனநிலையில் பாரதி எழுதி அளித்திருந்தார்.

நிபந்தனைகளை ஒப்புக்கொண்ட பாரதியின் நிலையை, ஆங்கிலேய அரசாங்கத்துக்குப் பாரதி எழுதிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு பாரதி சமரசம் செய்துகொண்டுவிட்டதாக இப்போதைய பார்வையில் சிலர் எழுதுகின்றனர், பேசுகின்றனர். ஆனால் பாரதியாரோடு

நாவலர் சோமசுந்தர பாரதியார்

நெருக்கமாகப் பழகிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் அறிஞர் சோமசுந்தர பாரதியாரும் செக்கிழுத்த செம்மல் சிதம்பரனாரும் அவ்வாறு பாரதியை எண்ணவில்லை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடத்தில் குவளைக்கண்ணன் இது பற்றிக் குறை கூறியபோது "நாமெல்லோரும் பாரதியை மீண்டும் பெற்றோம். கோழைகளை வீரராக்க வாழும் பாரதியைக் கோழை என்று சொல்லக் கூடாது (பாட்டுப் பறவைகள், ப.204)" என்று பதில் கூறியதோடு அதனைத் தன் கைப்படவே எழுதியுமிருக்கின்றார். பாரதியை உள்ளும் புறமுமாக நன்குணர்ந்த இவர்களெல்லாம் இந்நிகழ்வைக் குறைகூறாததற்குக் காரணம், பாரதி புரிந்த தியாகத்தை உணர்ந்திருந்ததும் பாரதியின் ஆழ்மனத்தை அறிந்திருந்ததுமே ஆகும். பாரதியை உள்ளும் புறமுமாக நன்குணராத இந்தத் தலைமுறையின் சிலர் இந்த ஒரு நிகழ்வை மட்டும் வைத்து வேறுபட்ட கருத்தை வெளிப்படுத்துகின்றனர் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

எல்லாம் சில காலம்தான். மீண்டும் வீறுகொண்ட பாரதி வெளிப்பட்டார். இந்திய விடுதலைக்காக எழுதிக் குவித்தார்; பேச்சில் முழங்கினார். ஊர் ஊராகச் சென்று இந்திய விடுதலைக்காக உரத்துக் குரல்கொடுத்தார்.

கைதாகி விடுதலை பெற்ற பின்னர் கடைய வாழ்க்கை, எட்டயபுர வாழ்க்கை, சென்னை வாழ்க்கை அமைந்தன. இந்தக் காலகட்டமே பாரதியின் இறுதிக்காலமாகும். இந்த இறுதிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஒன்பது மாதங்களைக் கொண்டது. முழுதாக மூன்று ஆண்டுகள் கூட இல்லை. இந்த இறுதிக்காலத்தில் விடுதலைப் போராட்டக் களத்தில் அவர் இயங்கிய இயக்கம், வெளிப்படுத்திய வீச்சு, எழுத்து விளைச்சல்கள் வரலாற்றில் மிகுந்த கவனத்திற்குரியவை.

பாரதி வாழ்க்கையை முழுதாக அறியாத சிலரும், பொதுவான நிலையிலான சிலரும் கைதாகி விடுதலை அடைந்த பின்னர் பாரதி இந்திய விடுதலை இயக்க அரசியலில் பங்கேற்கவில்லை என்று கருதுகின்றனர். இந்தக் கருத்து உண்மையில்லை என்பதை இறுதிக்காலத்தின் உண்மை வரலாறு தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது. முழுமை பெறாத மூன்று ஆண்டுகளில் பாரதி புரிந்த செயற்பாடுகளின் முழுமையைக் காணக் காண வியப்பும் மதிப்பும் விரிந்துகொண்டே செல்கின்றன.

கவிதைக் களத்தில் பாரதி

புதுவையிலிருந்து வெளியேறிய பின்னர் பாரதி மிகுதியான கவிதைகளைப் படைக்கவில்லை. ஆயினும் இந்திய விடுதலைக் கனல் கக்கும் முந்தைய பாடல்களைக் கொண்ட "நாட்டுப் பாட்டு" தொகுதியை 1919ஆம் ஆண்டும் 1920ஆம் ஆண்டும் மீண்டும் மீண்டும் வெளிவரச் செய்தார். இந்திய விடுதலையை மையமிட்ட புதிய பாடல்களையும் அதில் இடம்பெறச் செய்தார். "வந்தே மாதரம்", "பாரத தேசம்", "நாட்டு வணக்கம்", "எங்கள் நாடு", "எங்கள் தாய்", "மாதாவின் துவஜம்", "பாரத தேவியின் திருத்தசாங்கம்", "ஜய பாரத", "சுதந்தர தேவியின் துதி", "சுதந்தர தாகம்", "பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி" முதலிய பாடல்களெல்லாம் இந்தத் தொகுதியில் இடம்பெற்றிருந்தன.

எனவே ஆங்கிலேய ஆட்சிக்குக் கட்டுப்பட்டோ அஞ்சியோ விடுதலைப் போராட்டக் கவிதைகளை வெளியிடுவதை, இடம்பெறச் செய்வதை அவர் தவிர்க்கவில்லை. மாறாக இந்தப் பாடல்கள் இடம்பெற்ற தொகுதியைக் குறித்த விளம்பரத்தை, அறிவிப்பை மீண்டும் மீண்டும் 'சுதேசமித்திரன்' நாளிதழில் வெளிவரச் செய்தார் பாரதி. விடுதலைப் போராட்டக் கவிதைகளை மீண்டும் மீண்டும்

வெளியிடுவதிலும் வெளியிட்டவை குறித்த அறிவிப்புகளைப் பரவலாக அறியச் செய்வதிலும் பாரதி முனைப்புக் காட்டினாரே தவிர ஒதுங்கிக்கொள்ளவில்லை; ஒடுங்கிக்கொள்ளவில்லை.


பாரதிதாசன்

இவ்வாறு வெளிவந்த பாரதியின் கவிதைகளால் பாரதியின் இறுதிக்காலத்தில் தமிழகமெங்கும் நூற்றுக்கணக்கான கூட்டங்களில் பாரதியின் பாடல்கள் ஆவேசமாகப் பெருந்திரளான மக்கள் கூட்டங்களால் பாடப்பட்டன. மக்கள் பரவலாக விடுதலைப் போராட்டத்தில் பாரதியின் பாடல்களால் ஈர்க்கப்பட்டுத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர்; சிறை சென்றனர். இது குறித்த ஏராளமான பதிவுகள் இப்பொழுது 'சுதேசமித்திரன்' இதழிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முன்பு எழுதிய பாடல்களை மீண்டும் வெளியிட்டமை ஒருபுறமிருக்க காந்தியடிகளைக் குறித்த "மகாத்மா காந்தி பஞ் சகம்", "இந்தியாவின் அழைப்பு", "ஸ்ரீ பாரத மாதா நவரத்ந மாலை" முதலிய படைப்புகளையெல்லாம் இறுதிக்காலத்தில்தான் பாரதி படைத்தார்.

இவையெல்லாம் இந்திய விடுதலைக்காக உரத்த குரலை எழுப்பின. காந்தியின் தலைமையைக் கொண்டாடின. குறிப்பாக "ஸ்ரீ பாரத மாதா நவரத்ந மாலை" என்னும் படைப்பு பாரதி இறப்பதற்கு இரண்டு மாதங்கள்முன் படைக்கப்பட்ட சிறு பிரபந்தமாகும். ஒன்பது பாடல்களைக் கொண்ட இந்தப் படைப்பு அழுத்தமான, ஓங்கிய குரலை இந்திய விடுதலைக் களத்தில் எழுப்பியது.

"ஸ்ரீ பாரத மாதா நவரத்ந மாலை" என்னும் சிறு நூலிலே ஒத்துழையாமை இயக்கத்தைப் போற்றிப் பாடியிருக்கின்றார். ஒத்துழையாமை இயக்கத்தைத் "தீது சிறிதும் பயிலாச் செம்மணி மாநெறி" எனக் குறிப்பிட்டுப் போற்றியிருக்கின்றார். மேலும் காந்தியடிகள் முன்னெடுக்கும் ஒத்துழையாமை இயக்கத்தால் உறுதியாக விடுதலை அடைவோம் என்பதனை "வேதனைகள் இனிவேண்டா; விடுதலையோ திண்ணமே" எனவும், "திண்ணம் விடுதலை திண்ணம்" எனவும் "காந்திசொற் கேட்டார் காண்பார் விடுதலை கணத்தினுள்ளே" எனவும் மீண்டும் மீண்டும் விடுதலை உறுதி என முழங்கியிருக்கின்றார். விடுதலை பெற்ற பாரத தேவியின் திருக்கோலத்தை இச்சிறு நூலின் இறுதியிலே காண விழைந்ததைப் பாரதி உணர்வும் அழகும் ததும்பப் பின்வருமாறு உயிர்ப்போடு பாடியிருக்கின்றார்.

"பாரத தேவியே, கனல்கால்
இணைவிழி, வால வாயமாஞ் சிங்க
முதுகினி லேறிவீற் றிருந்தே.
துணைநினை வேண்டு நாட்டினர்க் கெல்லாந்
துயர்கெட விடுதலை யருளி
மணிநகை புரிந்து திகழ்திருக் கோலங்
கண்டுநான் மகிழ்ந்திடு மாறே".

பாரதி இறுதிக்காலம் வரை காண விழைந்த திருக்கோலம் பாரத தேவியின் விடுதலை பெற்ற கோலமே. இந்தியத் திருநாட்டின் விடுதலையே பாரதியின் இலக்கு. இம்மியளவும் இந்த இலக்கிலிருந்து பாரதி இறுதி வரை விலகவே இல்லை.

இதழியல் எழுத்துகளில் பாரதி

'சுதேசமித்திரன்' இதழில் விடுதலை உணர்வை ஊட்டும் பல கட்டுரைகளைத் தொடர்ந்து பாரதி இறுதிக் காலத்தில்



தீட்டியிருக்கின்றார். ஒத்துழையாமை இயக்கம் தொடர்பான தனது பார்வை, காந்தியின் முயற்சிகள் குறித்த கருத்துகள், விடுதலை இயக்க அரசியலில் வேறுபட்ட போக்குகள் கொண்ட பிரிவினரைப் பற்றிய பார்வைகள், உலகளாவிய நிலையில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான செயல்பாடுகள், விடுதலைக்கு முயலும் பிற நாடுகள் குறித்தெல்லாம் விரிவாகப் பாரதி எழுதியிருக்கின்றார்.

குவளை கண்ணன்

“எகிப்தின் விடுதலை” (01.09.1920), “துர்க்கா பூஜை” (23.10.1920), “சுதேச மித்திரன் பத்திரிகையும் தமிழ்நாடும்” (30.11.1920), “உலக விநோதங்கள்” (03.12.1920), “உலக விநோதங்கள் ஐரோப்பிய நாகரிகம்” (09.12.1920), “ரஸத் திரட்டு” (10.01.1921), “ஒளிர்மணிக் கோவை” (11.01.1921), “முக்யமான குறிப்புகள் வாக்குச் சீட்டு” (18.01.1921), “உலக நிலை கிலாபத் விஷயம்” (19.01.1921), “குறிப்புகள் தீர்வைப் பாகுபாடு” (19.01.1921), “குறிப்புகள் – தொழிற்கக்ஷியின் உதவி” (21.01.1921), “தீப்பொறிகள்” (14.02.1921), “புதுமைகள்” (02.03.1921), “ஜர்லாந்தும் இந்தியாவும்” (19.07.1921), “ஒருகோடி ரூபாய்” (11.08.1921) ஆகிய பாரதியின் கட்டுரைகள் விடுதலை இயக்கக் களத்தில் மக்களுக்கு விழிப்பையும், அறிவையும், உணர்வையும் ஊட்டுவனவாகச் ‘சுதேசமித்திரன்’ வாயிலாக வெளிப்பட்டன. இந்த இடத்தில் ஒன்றை நினைவில்கொள்ள வேண்டும். பாரதி எழுதியதில் கிடைத்தவை மட்டுமே இவை. மிகப் பல இதழ்கள் கிடைக்கவில்லை என்பதே உண்மை நிலை.

நம்மவ ரெல்லாரும் கூடி முயன்று, பாரதமாதாவின் ராஜரீக விலங்குகளை நீக்கி, விடுதலை யேற்படுத்திக் கொடுக்கப் போகிற தினம் – நல்ல நாள் – எப்போது வரப்போகிற தென்பதை ஒவ்வொரு நிமிஷமும் மிக ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறேன்.

(சுதேசமித்திரன், 30.11.1920)

எனவே, கீழ்த்திசை நாகரிகம் இந்தியாவில் மறுபடி சுடர் விட்டெரிவதை ஐரோப்பியர் கண்டு, தமது நாகரிகத்தினும் இது சிறந்ததென்றுணரும்படி செய்யவேண்டும். இதற்கு இந்தியா ஸ்வராஜ்யம் பெற்றாலன்றித் தகுந்த ஸௌகர்யங்க ளேற்பட மாட்டா.

(சுதேசமித்திரன், 09.12.1920)

இந்தியா ராஜாங்க விடுதலை பெற்றுவிடுமானால் தன் அனுஷ்டானத்தாலே உலகத்தாருக்கு இக் கொள்கையின் நலங்களை விளக்கிக் காட்டி உலக முழுதும் இதனைப் பரவச் செய்தல் ஸாத்யப்படும்.

(சுதேசமித்திரன், 10.01.1921)

இந்தியா ஸ்வராஜ்யம் பெறுவதே மனித உலகம் அழியாது காக்கும் வழி.

(சுதேசமித்திரன், 10.01.1921)

முப்பது கோடி ஜனங்க ளுடையது; இன்றைக்கும் ஜகதீச சந்த்ரர் முதலியவர்களின் மூலமாக உலகத்தாருக்கு நாகரிகப் பாதையிலே வழிகாட்டுவது; பூமண்டல சரித்திரத்திலே வீர்ய முதலிய ராஜ குணங்களில் நிகரற்றதாகிய இந்தியாவுக்கு விடுதலை எப்போது தரப்போகிறீர்கள்?

(சுதேசமித்திரன், 19.7.1921)

இவையெல்லாம் விடுதலை, விடுதலை என்று 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் வாயிலாக வெளிப்பட்ட பாரதியின் உணர்வுப்பொறிகளில் ஒருசில. இப்படி ஏராளம் 1920, 1921ஆம் ஆண்டுகளில் பாரதி அடிமைப்பட்டுக்கிடந்த தமிழ்ச் சமூகத்திற்கு அறிவூட்டும், உணர்வூட்டும் சிந்தனைகளை விடுதலை இயக்கக் களத்தில் வெளிப்படுத்தி இருக்கின்றார். இறுதிக்கால வாழ்க்கைப் பரப்பில் இறுதிவரை இலக்கு மாறா விடுதலைப் பயணத்தில் பாரதி வேகம் காட்டி வந்திருக்கின்றார்.

ரா.கனகலிங்கம்

மக்கள் மன்றங்களில் பாரதி

இறுதிக் காலத்தில் சென்னைக் கடற்கரையில் பல்லாயிரம்பேர் கூடிய மாபெரும் கூட்டங்களிலும் தமிழகத்தின் பல பகுதிகளில் நடைபெற்ற கூட்டங்களிலும் கலந்துகொண்டு பாரதி இந்திய விடுதலைக்காக வீறுமிக்க சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கின்றார்; பல்லாயிரம் பேரை உணர்வுகொள்ளச் செய்திருக்கின்றார். பழைய தஞ்சை மாவட்டத்திலே திருத்துறைப்பூண்டி என்னும் ஊருக்கு அருகிலுள்ள மணலி, கடலூர், திருவண்ணாமலை, ஈரோடு எனப் பல ஊர்களுக்கும் சென்று விடுதலைக்காக முழங்கிய செய்திகள் அண்மைக்காலங்களில் கண்டறியப்பட்டுள்ளன.

1920 டிசம்பர் 13ஆம் தேதி மணலி என்னும் கிராமத்திலே நடைபெற்ற குலோத்துங்கன் வாசகசாலை ஆண்டுவிழாவிலே பாரதியும் சத்தியமூர்த்தியும் பங்கேற்று உரையாற்றியிருக்கின்றனர். "இந்தியாவின் முற்காலப் பெருமையும் தற்கால நிலைமையும்" என்னும் தலைப்பில் பாரதியார் இரண்டு மணி நேரத்திற்குமேல் பேசியிருக்கின்றார். அண்மையில் கண்டறியப்பட்டுள்ள பாரதியின் இந்தப் பேச்சிலிருந்து ஒரு பகுதியை இங்கு நாம் காணலாம்.

அப்பால் ஸ்ரீமான் பாரதி "இந்தப் பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு (தோடி)", "ஜயமுண்டு (கமாஸ்)" என்ற கீதங்கள் பாடினார். "இந்தியாவின் முற்காலப் பெருமையும் தற்கால நிலைமையும்" என்ற மகுடத்தின் கீழே, ஸ்ரீமான் பாரதி பேசியதன் சுருக்கம்: இந்தியாவின் சரித்திரம் ஐந்து பகுதி: (1) வேத இந்தியா (2) பௌத்த இந்தியா (3) ஹிந்து இந்தியா (4) மஹமதிய இந்தியா (5) ஐரோப்பிய இந்தியா என.

இவற்றுள் ஐரோப்பிய இந்தியா சில விஷயங்களில் குற்றமில்லை. பல விஷயங்களில் குற்றமுடையது. இக்குற்றங்கள் நீங்கி இந்தியா ஆறாவதாகத் தோன்றி, உலகத்தில் தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டும். இந்தியாவில் நியாயம் ஏற்பட்டால்தான் உலகத்தில் நியாயம் ஏற்படும். ராஜரீக வேற்றுமைகள், ஜாதி வேற்றுமைகள், வர்ண வேற்றுமை, பால் வேற்றுமை, ஜந்து வேற்றுமை (மாம்ஸ பக்ஷணம்) முதலிய எல்லா விதமான பார பக்ஷங்களிலும் முடிவான நியாயம் இந்தியாவில் தீர்மானிக்கப் பட்டாலன்றி உலகத்தில் நியாயம் ஏற்படாது. இந்தியா பூமிக்கு முத்திரை நாடு. இது கரு நாடு.

(சுதேசமித்திரன், 15.12.1920)

1921 ஜனவரி 31ஆம் நாள் சென்னைக் கடற்கரையில் சென்னை மாணவர்களின் மகாநாடு கூடியது. இந்த மாநாட்டில் சுமார் பத்தாயிரம் பேர் கூடியதாகச் 'சுதேசமித்திரன்' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது. இந்த மாபெரும் மாநாட்டில் பாரதியார் கலந்துகொண்டு மாணவர்களை நோக்கி மிக விரிவாக உரையாற்றியிருக்கின்றார்.

சில காலங்கள் முன்பு கண்டறியப்பட்ட இந்தப் பதிவு ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் பாரதி மிகக் கடுமையாகவும் ஆவேசத்துடனும் பேசிய பேச்சை நமக்குத் தருகின்றது. நாகபுரி காங்கிரஸின் தீர்மானங்களையும், மாணவர்கள் கல்விச்சாலைகளைத் துறந்து ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துப்

போராடவேண்டியதன் அவசியத்தையும், சுயராஜ்ஜியத்தை அடைவதற்காகப் பாடுபட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் தனது உரையிலே பாரதியார் முழங்கியிருக்கின்றார்.

பாரதியாருடைய பேச்சு உருக்கத்துடனும் வீராவேசத்துடனும் வெளிப்பட்டது எனவும் மாநாட்டில் பாரதியார் கர்ஜனை புரிந்தார் எனவும் ‘சுதேச மித்திரன்’ செய்தி வெளியிட்டிருக்கின்றது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து இறுதிக்காலத்தில் பாரதி தீவிரமாகப் பங்கெடுத்த செயல்பாடுகளை இத்தகைய பதிவுகள் ஆதாரபூர்வமாக நமக்குத் தருகின்றன.

1921 மார்ச் மாதம் 24ஆம் தேதி கடலூர் சென்ற பாரதியாரை இந்து முஸ்லீம் தலைவர்கள் கூடி வரவேற்றிருக்கின்றனர். பெருந்தொகையிலான மக்கள் கூட்டம் பாரதியை வரவேற்க இரயில்நிலையத்திற்கு வந்திருந்ததாம். எந்தக் கடலூரில் கைது செய்யப்பட்டாரோ அதே கடலூரில் சில ஆண்டு இடைவெளியில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றார் பாரதி.

அன்று மாலை 5,000 பேர் அடங்கிய மாபெரும் பொதுக்கூட்டத்தில் “தற்கால நிலைமையும் நமது கடமையும்” என்னும் பொருளில் இரண்டு மணிநேரம் சொற்பொழிவை ஆற்றி யிருக்கின்றார். மக்களிடையே பாரதியின் பேச்சு பெரும் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று கடலூரிலிருந்து செய்தியாளர் தந்தி மூலமாகச் ‘சுதேசமித்திரன்’ நாளிதழுக்குச் செய்தி அனுப்பியிருக்கின்றார். பாரதி பங்கேற்ற இந்தப் பெருங்கூட்டம் குறித்த செய்தியைச் ‘சுதேசமித்திரன்’ நாளிதழ் பின்வருமாறு வெளியிட்டிருந்தது.

கூடலூரில் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி

கூடலூர், 25-03-2021: ஸ்ரீமான் சி.சுப்பிரமணிய பாரதி சென்னையிலிருந்து புறப்பட்டு வியாழக்கிழமை காலை இவ்வூருக்கு வந்துசேர்ந்தார். ஸ்டேஷனில் அவரை இவ்வூர் ஹிந்து முஸ்லீம் தலைவர்கள் வரவேற்றனர். பெரிய ஜனக் கூட்டமும் வந்திருந்தது. இரயில்வே ஸ்டேஷனிலிருந்து பாரதியார் மேளவாத்தியங்களுடனும் கொடிகளுடனும் வந்தே மாதர கோஷத்துடனும் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மாலையில் ஹஸரத்தைக் காண முஸ்லீம் மசூதிக்கருகிலுள்ள பெரிய மைதானத்தில் 5,000 ஜனங்களடங்கிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. மிஸ்டர் பாரதியைக் கண்ட ஜனங்கள் சந்தோஷக் கடலில் மூழ்கி மிகவும் உற்சாகம் காட்டினார்கள். இவ்வளவு வைபவங்களுக்கிடையே மிஸ்டர் பாரதியார் எழுந்து “தற்கால நிலைமையும் நமது கடமையும்” என்ற விஷயத்தைக் குறித்து இரண்டு மணிநேரம் உபந்யசித்தார். ஜனங்கள் மிகவும் உபந்யாசத்தைக் கேட்டுப் பரவசமடைந்து விட்டனர். இன்றைய தினம் மாலை நியூ டவுனில் இன்னொரு உபந்யாசம் நடைபெறும் என்று ஒரு நிருபர் தந்தி மூலம் அறிவிக்கிறார்.

(சுதேசமித்திரன், 25 மார்ச் 1921)



1921 ஏப்ரல் 6ஆம் நாள் மாலை சென்னைக் கடற்கரையில் சுயராஜ்ய வாரம் கொண்டாடுவதற்கான பெருங்கூட்டம் கூடியது. ஏறத்தாழப் பத்தாயிரம் பேர் கூடியிருந்தனர். அந்தப் பெருங்கூட்டத்தில் பாரதியார் இந்திய விடுதலைக்கான தன் பாடல்களைப் பாடி முழங்கியிருக்கின்றார். இந்தச் செய்தி ஏப்ரல் 7ஆம் தேதி 'சுதேசமித்திர'னில் வெளிவந்த பதிவு நமக்குக் கிடைத்துள்ளது.

அடுத்த ஒரு வாரத்தில் ஏப்ரல் 13ஆம் தேதி ஜாலியன் வாலாபாக் நினைவு தினத்தை முன்னிட்டுச் சென்னைக் கடற்கரையில் பெருங்கூட்டம் கூடியிருக்கின்றது. இந்தப் பெருங்கூட்டத்தைச் 'சுதேசமித்திரன்' நாளிதழ் மகாநாடு என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தின் தொடக்கத்தில் பாரதியார் பாடல்கள் பாடியதோடு நிறைவுச் சொற்பொழிவையும் நிகழ்த்தியிருக்கின்றார். ஜாலியன் வாலாபாக் நினைவு தினக் கூட்டத்திலே இந்திய விடுதலைக்கான குரலைப் பாரதி உரத்து மொழிந்திருக்கின்றார். பாரதி பேச்சின் விவரத்தைச் 'சுதேசமித்திரன்' பின்வருமாறு ஏப்ரல் 14ஆம் நாள் வெளியிட்டிருக்கின்றது.

அம்ருதசரஸில், ஜாலியன் வாலாத் திடலில், ஆயிரக்கணக்கான நிரபராதிகளைச் சுட்டு வீழ்த்திய தினமாகிய ஏப்ரல் மாதம் 13ஆம் தேதி ஸ்வராஜ்யத்துக்கு அஸ்திவாரம் போட்ட தினமாகையால் நேற்று சென்னைவாசிகள் அதைப் பெரிதும் கொண்டாடினார்கள். மாலை 4 மணிக்கு மேல் பல கடைகள் மூடப்பட்டிருந்தன. மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடந்தது.

மிஸ்டர் சுப்பிரமணிய பாரதி கடைசியாக நம்மையாளும் இங்கிலாந்தின் தற்போதைய தரித்திர நிலைமையையும், மற்ற நாட்டாருக்கு இங்கிலாந்தினிடத்திலுள்ள மதிப்புக் குறைவையும், வெகு அழகாய் எடுத்துக்காட்டி, இந்தியா சுதந்தரமடைய இதுவே தருணமென்றும், சுயராஜ்யம் சீக்கிரத்தில் சித்திக்கும் என்பதில் சந்தேகமே இல்லையென்றும் சொன்னார்.

(சுதேசமித்திரன், 14.04.1921)

வரலாற்றை முழுதாக அறியாமல் தேடுதலோ முயற்சிகளோ புரியாமல் பாரதி ஜாலியன் வாலாபாக் படுகொலை தொடர்பாக எழுதவில்லை எனச் சிலர் எழுதியுள்ளனர். ஆனால் பாரதி ஜாலியன் வாலாபாக் படுகொலை தொடர்பாக எழுதியுமிருக்கின்றார், பேசியுமிருக்கின்றார் என்பதை இத்தகைய பதிவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

1921 மே மாதம் 2ஆம் தேதி திருவண்ணாமலையில் பாரதி பேசிய ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. "இந்தியாவின் எதிர்கால நிலைமை" என்ற பொருளில் பாரதியார் சொற்பொழிவை ஆற்றியிருக்கின்றார். இந்திய விடுதலைக்கான குரலை அந்தப் பொதுக்கூட்டத்தில் பாரதி ஓங்கி ஒலித்திருக்கின்றார். பாரதியாரின் இந்தப் பேச்சு ஊரெங்கும் ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டதென்று செய்தியாளர் 'சுதேசமித்திர'னுக்கு அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தச் செய்தியை நாம் இங்கே காணலாம்.

திருவண்ணாமலையில் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் நேற்று மாலை கோவிலுக்கு எதிரில் ஒரு பெரிய பொது ஜனக் கூட்டத்தில், இந்தியாவின் எதிர்கால நிலைமை என்ற விஷயத்தைக் குறித்து ஓர் உபந்யாசம் செய்தார். நமது வேதங்களில் வெகு நாளைக்கு முன்பாகக் கூறப்பட்டுள்ள ஏகை சுபாவம் என்ற தத்துவத்தை இப்பொழுதுதான் ஐரோப்பியர்கள் கண்டுகொண்டிருக்கிறார்கள் என்றும், இந்த தத்துவத்தைக் கொண்டுதான் நம் பாரத நாட்டின் எதிர்கால நிலைமை சீர்படுத்தப்பட வேண்டுமென்றும், தேசீய விடுதலை அல்லது ஸ்வராஜ்யத்திற்கும் இந்த மார்க்கமே தக்க கருவியாய் இருந்து இந்தியாவே அதற்குத் தலைமை ஸ்தானம் வகிக்க வேண்டுமென்றும், உலகத்தில் நடைபெறும் சம்பவங்களினால்

நாம் அப்பேர்ப்பட்ட பாதையில் போய்க் கொண்டிருக்கிறோமென்றும், இந்தியாவின் விடுதலைக்கு எதிரிடையாய் உள்ளவர்களையெல்லாம் கடவுள் சரியானபடி தண்டித்து வருகிறாரென்றும், கூடிய சீக்கிரத்தில் நாம் விடுதலையடைவோம் என்றும் ஸ்ரீ பாரதியார் பேசினார். ஊரெங்கும் இப்பிரசங்கம் ஒரு மஹத்தான பரபரப்பை உண்டாக்கிவிட்டதென்று ஒரு நிருபர் தந்தி மூலம் அறிவிக்கிறார்.

(சுதேசமித்திரன், 03.05.1921)

திருவண்ணாமலையில் மறுநாளும் பாரதி பேசும் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயிரம் பேருக்குமேல் கூட்டத்தில் கூடியிருந்தனர். கூடியிருந்தவர்களின் உள்ளங்களில் பாரதியின் பேச்சு உற்சாகத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தியதாம். மகாத்மா காந்தியின் தலைமை குறித்தும் விரைவில் விடுதலை வசப்படும் எனவும் அந்தக் கூட்டத்திலே பாரதியார் பேசியிருக்கின்றார். பாரதியார் தனது பாடல்களையும் பாடிச் செய்த பிரசங்கத்தைத் திருவண்ணாமலை ஜனங்கள் மறக்கமாட்டார்கள் என 05.05.1921 'சுதேசமித்திர'னில் வெளிவந்த விரிவான செய்திப் பதிவு குறிப்பிட்டிருக்கின்றது.

பாரதி மறைவதற்கு ஒரு மாதம் முன்பு 1921 ஆகஸ்ட் முதல் நாளில் ஈரோட்டில் வாய்க்கால் கரையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சின் தலைப்பு **"இந்தியாவின் எதிர்கால நிலை"**.

இறுதிக்காலம் வரை பாரதி இந்தியத் திருநாட்டின் விடுதலையை மனங்கொண்டே, மையமிட்டே எழுதியிருக்கின்றார்; பேசியிருக்கின்றார்; கவிதைகள் படைத்திருக்கின்றார்; மேடைகளில் பாடல்கள் இசைத்திருக்கின்றார். இப்படிக் கடலூரில் கைதாகி விடுதலை பெற்ற காலத்திற்குப் பின்னர்ச் சென்னையிலும் தமிழகத்தின் பல நகரங்களிலும் கிராமங்களிலும் இந்திய விடுதலைக்காகப் பாரதியார் உரத்து முழங்கியிருக்கின்றார் என்பதை வரலாறு காட்டுகின்றது.

இறுதிக்காலம் வரை தான் கொண்ட குறிக்கோளிலிருந்து விலகாமல் பாரதியார் செயல்பட்டிருக்கின்றார்; இந்திய விடுதலைக்காகக் கவிதை, இதழியல் எழுத்துகள், மேடைப்பேச்சுகள் எனப் பல்வேறு வழிகளிலும் போராடியிருக்கின்றார். இதனை இந்தப் பதிவுகளும் இன்னும் பல பதிவுகளும் உறுதிசெய்கின்றன. வாழ்வில் "நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்கு உழைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என வகுத்துக்கொண்ட இலக்கணத்திற்கு இலக்கியமாகவும் திகழ்ந்த வரலாற்றுப் பேராளுமை மகாகவி பாரதி.

துணைநூற்பட்டியல்

பாட்டுப் பறவைகள், மன்னர்மன்னன், குயில் வெளியீடு, புதுச்சேரி, 2000.

சுதேச கீதங்கள் (முதற்பாகம்), **சி.சுப்பிரமணிய பாரதி,** வெளியீடு: **செல்லம்மா பாரதி, பாரதி ஆச்ரமம்,** சென்னை, 1922.

கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் – பன்னிரண்டாம் தொகுதி, பதிப்பு: சீனி. விசுவநாதன், வெளியீடு: சீனி. விசுவநாதன், சென்னை, முதற்பதிப்பு: 2010.

கால வரிசையில் பாரதி பாடல்கள், பதிப்பு: சீனி. விசுவநாதன், வெளியீடு: சீனி. விசுவநாதன், சென்னை, முதற்பதிப்பு: 2012, மறு அச்சு: 2013.

இதழ்கள்

சுதேசமித்திரன்: 01.09.1920, 23.10.1920, 30.11.1920, 03.12.1920, 09.12.1920, 15.12.1920, 10.01.1921, 11.01.1921, 18.01.1921, 19.01.1921, 21.01.1921, 14.02.1921, 02.03.1921, 25.03.1921, 14.04.1921, 03.05.1921, 05.05.1921, 19.07.1921, 11.08.1921.

கட்டுரையாளர் குறிப்பு:

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித்துறை தலைவராக பணியாற்றும்
பேராசிரியர் ய.மணிகண்டன் எழுதியுள்ள பாரதி–பாரதிதாசன் பற்றிய நூல்கள்
ஆய்வுப் பரப்பில் பெரும் வரவேற்பைப் பெற்றவை!

காலம் ஆனார் பாரதி

பாரதி கிருஷ்ணகுமார்

இளமையில் தனது 39 ஆவது வயதில் பாரதியார் காலமானார். சென்னை திருவல்லிக்கேணியில் தான் வாழ்ந்த சின்னஞ் சிறிய ஒண்டுக் குடித்தன வீட்டில் 1921ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ஆம் தேதி அதிகாலை ஒன்றரை மணிக்குப் பாரதியார் காலமானார்.

பாரதியார் காலமானது குறித்து நான் வேறு எந்த சொல்லையும் மறந்தும் பயன்படுத்துவதில்லை. அவர் மறைந்து போனார், இறந்து போனார், மாண்டு போனார், செத்துப் போனார், சிவலோக பதவி அடைந்தார் என்றெல்லாம் ஒருபோதும் சொன்னதில்லை. குறிப்பிட்டதில்லை.

“காலமானார்” என்கிற ஒரு சொல்லை மட்டுமே எப்போதும் பயன்படுத்துகிறேன். ஏனெனில் தமிழ்க் கவிதை உலகின், சிந்தனை உலகின் இறந்த காலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் ஆகப் பாரதியார் திகழ்ந்தார். திகழ்கிறார். திகழ்வார். அதனாலேயே, பாரதி காலமானார் என்று மட்டுமே குறிப்பிடுகிறேன்.

காலமடைந்து நூறு ஆண்டுகள் கடந்த பின்னும், இன்றும் நிலைத்திருக்கும் பாரதியின் படைப்புகளையும், புகழையும் மட்டுமே நான் சுட்டிக் காட்டவில்லை. அது பாரதியை அறிந்த, அறியாத அனைவரும் அறிந்த உண்மை. பாரதி நினைக்கப்படுகிறான். புகழப்படுகிறான். போற்றப்படுகிறான். உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறான். அவனது வாழ்வு குறித்தும் படைப்புகள் குறித்தும் எழுதப்படும் வழி நூல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. எனவே நான் இங்கு குறிப்பிடுவது பாரதியின் புகழையும் அவரது படைப்புகளையும் குறித்து மட்டுமே அன்று.

மாறாக, பாரதியார் உருவாக்கிய விதைத்த, தோற்றுவித்த, பயிற்றுவித்த, உணர்ப்பித்த, முன்மொழிந்த கருத்துக்களும் சிந்தனைகளும் தமிழ்க் கவிதை உலகில், பாரதியைப் பழிக்கிறவர்களிடம் கூட நிறைந்து ததும்பிக் காணப்படுவதே பாரதியின் தனித்துவமான சாதனை. இதனை சாதனை என்கிற ஒரு சொல்லில் சுருக்கி விட எனக்குச் சம்மதம் இல்லை. அது பாரதியாரின் சக்தி, சாதனை, சாதகம், சாகசம் என்று எல்லையற்று விவரிக்கும் அளவுக்கு கருத்தியல் தளத்தில், சிந்தனைத் தளத்தில் பாரதி ஒளிர்கிறார். காலம் கடந்தும் நின்று ஒளிர்கிறார்.

தன் நாடு தன் மக்கள், தன் சுற்றம், தன் உறவு என்று சிந்தித்துச் சிந்தித்து அதன் எல்லைக்குள் மட்டுமே தம்மைச் சுருக்கி கொண்டு, எழுதிக் கொண்டும் இருந்த இருபது நூற்றாண்டு காலத் தமிழ் இலக்கிய உலகில் கடல் கடந்து எல்லைகளைக் கடந்து உலகின் பிற நாடுகளின் அரசியல் சமூக வாழ்க்கை பற்றி எழுதிய முதல் கவிஞர் பாரதியார் மட்டுமே. ரஷ்யா, இத்தாலி, பெல்ஜியம், ஜப்பான், சீனா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து என்று விரிந்து பரந்து எழுதியதோடு இல்லாமல் சர்வதேசியக் கண்ணோட்டத்தை தமிழில் உருவாக்கிய பெருமையும் பாரதியாருக்கு உண்டு.

உலகு, அவனி, பூமி, தரணி போன்ற பல சொற்கள் உலகத்தைப் பற்றி குறிப்பிடுவதற்காகத் தமிழ் இலக்கியத்தில் காணக் கிடைக்கிறது. ஆனால் எல்லைகளாகப் பிரிக்கப்பட்ட நாடுகளின் சமூகப் பொருளாதார அரசியல் மற்றும் கலை இலக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்ததன் மூலம் தமிழில் சர்வதேசியக் கண்ணோட்டத்தை ,தமிழ்ச் சிந்தனை மரபில் உருவாக்கிய பெருமை பாரதியாரை என்றும் காலம் கடந்து, காலத்தை வென்று நிலை நிறுத்தி வைத்திருக்கும்.

ஆன்ம விடுதலை குறித்தும் அகவிடுதலை குறித்தும் பேசுகிற சமய இலக்கியங்கள் இங்கு எண்ணற்றவையாக இருந்தன.

இருக்கின்றன. அவைகள் பேசும் களத்தை உணர்ந்து உட்கொண்ட பாரதியார் அவைகளைக் கடந்து ஆன்ம விடுதலையின் அடையாளமாக முதலில் கண்டது "அனைத்து உயிர்களும் தெய்வம் சமம்" என்பதேயாகும். அங்ஙனம் உணர்ந்ததும் அதைத் தனது படைப்புகளில் உறுதி செய்ததும் கவனம் கொள்ளத் தக்கன.

இங்கு சைவர்கள் சிவனை மட்டுமே பாடினார்கள். வைணவர்கள் திருமாலை மட்டுமே புகழ்ந்தார்கள். வீரமாமுனிவர் தேம்பாவணி தான் எழுதினார். உமறுப்புலவர் சீறாப் புராணமே எழுதினார். அவர்கள் எழுதியதை நான் பிழையாகச் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் தமிழைக் கற்பனையை திறனை தங்கள் தங்கள் வழிபடும் தெய்வங்களுக்கு மட்டுமே கொடையாக அளித்தனர்.

ஆனால் மகாகவி பாரதியார் தனது தமிழை எல்லாத் தெய்வங்களுக்கும் தாரை வார்த்தார். எல்லாத் தெய்வங்களையும் பேதமின்றி போற்றி பாடினார். ஒரு தெய்வமே உயர்ந்தது என்று கொள்ளாது, எல்லாத் தெய்வங்களையும் ஒரு சேர உயர்த்திப் பாடிய பாரதியின் சமய நல்லிணக்கமே இனி வரும் எல்லா நூற்றாண்டுகளுக்குமான ராஜபாதை.

நாகரீகமான மனிதர்கள் மட்டுமே நடந்து செல்கிற பாதை. மனித நாகரீகத்தின் அற்புத வளர்ச்சியை மென்மேலும் உயர்த்தும் பாதை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

ஏனெனில் இது பாரதி மீது கொண்ட அன்பினால் மட்டுமே எழுதப்படுகிற கட்டுரையன்று. ஆய்வு நோக்கிலும் எழுதப்படுகிறது என்பதை உணர்ந்து வாசிப்பது உதவிகரமாக இருக்கும். அனைத்து

மதங்களுடனும், அனைத்துத் தெய்வங்களுடனும் நல்லிணக்கமாக இருக்க இயலாதவர்கள் பாரதியைப் பாடுவதும் பேசுவதும் பெரும் குற்றமாகிறது. அது பாரதிக்கும் அவன் புகழ்ந்து பாடிய தெய்வங்களுக்கும் செய்கிற துரோகம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆன்ம விடுதலையைத் தொடர்ந்து தேச விடுதலைக்கும் பாடிய பெருமை பாரதிக்குத் தான் அமைந்திருந்தது. அந்நிய ஆட்சியை எதிர்த்த போர்க்குரல் மட்டுமே பாரதியின் குரல் அன்று. மாறாக விடுதலை பெற்ற இந்தியா எந்தத் திசையில் எவ்வாறு செல்ல வேண்டும் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்கிற வரைவுத் திட்டத்தையும் பாரதியார் முன்மொழிகிறார்.

“நாடு என்பது நாடா வளத்தன” என்னும் வள்ளுவனின் வார்த்தையை மனதில் வரித்துக் கொண்டு பாரதி பாடிய பாடலே “வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்” எனும் ஆகச் சிறந்த பாடல்.

அதன் பொருள் Make in India அல்ல; Made in India. “Make in India” என்பது எழுத்து பிழை மட்டுமல்ல. வரலாற்றுப் பிழை. இந்தப் பிழையைத் தொடர்ந்து குற்றமெனச் செய்கிறவர்கள், பாரதியைக் கொண்டாடும் போற்றும் தகுதியை இழந்தவர்கள் ஆவார்கள்.

அவர்கள் தங்கள் ஏற்கெனவே இழந்த தகுதியையும் தரத்தையும் காப்பாற்றிக்கொள்ள பாரதியின் புகழைப் பாடுகிறவர்கள். அவர்கள் தங்கள் சிந்தனைக்கு ஒப்ப பாரதியைக் கடத்திவிட முயல்கிறார்கள். பாரதி அக்கினிக்குஞ்சு. கடத்துவதும் கையில் வைத்திருப்பதும் எல்லோருக்கும் சாத்தியமானது அல்ல.

பாரதியை அசலாகவே அறிந்து உணர்ந்து நேசிக்கிறவர்கள், இந்தக் "கடத்தி விடும்" கயமைக்கு எதிராகக் குரல் கொடுத்துப் பாரதியின் பண்பை மேன்மையை உரக்கச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். நமது பணி உண்மையை உரக்க உரக்க, உறைக்க உறைக்கச் சொல்வது மட்டுமே ஆகும். உண்மை பொய்யர்களைச் சுட்டுப் பொசுக்கும்.

ஆன்ம விடுதலையும், தேச விடுதலையும் பாடிய பாரதியே மொழியின் விடுதலை குறித்தும் வழிவகைகள் பேசி வைத்திருக்கிறார். இலக்கணத்தை மீறி உணர்வுக்கும் உண்மைக்கும் முதலிடம் கொடுத்துக் கவிதை எழுதும் இலக்கணத்தை பாரதியே உருவாக்கினார்.

உரைநடை வேறு, கவிதை வேறு என்றிருந்த தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைநடைக் கவிதை என்னும் புதிய வகைமையை சொல்லித் தந்ததும் பாரதியாரே ஆகும்.

ஜப்பானிய மொழியில் எழுதப்பட்டிருந்த ஹைக்கூ கவிதைகள் பற்றி தமிழர்களுக்கு அறிமுகம் தந்ததும் பாரதியாரே ஆகும். தமிழ் மொழியின் சிறப்பை, தமிழ்ப் புலவர்களின் மேன்மையை உலகிற்கும் உள்ளூரில் உள்ளோருக்கும் உணர்த்தியவர் பாரதியார்.

எட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக மறைத்து, ஒளித்து வைக்கப்பட்டிருந்த கவிச்சக்கரவர்த்தி கம்பனை, அவரது கவிதைத் திறனை முதலில் முழங்கி கம்பனின் பெருமையை நிலை நிறுத்தியவர் பாரதியாரே ஆவார்.

அதே போல் உலகில் வேறு எந்த இனத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பைத் தமிழினத்திற்குத் தேடித் தந்தவர் பாரதியார்.

ஒருவர் தான் பிறந்த நாட்டைத் தனது தாய் நாடு என்பார் அல்லது தந்தையர் நாடு என்பார். உலகின் சில நாடுகளில் தான் பிறந்த நாட்டைத் தந்தையர் நாடு என்று குறிக்கும் பழக்கம் இப்போதும் இருக்கிறது.

எப்படிப் பார்த்தாலும் ஒருவருக்குப் பிறந்த நாடு என்பது தாய் நாடு அல்லது தந்தையர் நாடு மட்டுமே. ஆனால் உலகிலேயே தமிழர்களுக்கு மட்டுமே தாய் நாடும் உண்டு; தந்தையர் நாடும் உண்டு.

அதை நமக்கு வழங்கிய பாரதியாரை தமிழர்கள் எந்த நாளும் எந்தக் காலமும் மறந்திட இயலாது. இந்தியாவைத் தாய் நாடு என்று புகழ்ந்து அடையாளம் காட்டிய பாரதியே நம் தமிழ்நாட்டை நமக்குத் தந்தையர் நாடு என்று அறிமுகப்படுத்துகிறார்.

ஒன்றியமாக இந்தியாவைத் தாய் நாடு என்றும், தனித்துவமாகத் தமிழ்நாட்டை தந்தையர் நாடு என்றும் இனம் கண்டு கொண்டார் பாரதியார். அதனால்தான் அவர் இவ்வாறு பாடினார். "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற நயம் படப் பாடி வைத்தார்.

ஆன்ம விடுதலை, தேச விடுதலை, மொழி விடுதலையைத் தொடர்ந்து பெண் விடுதலை பாடிய பெரும் கவிஞர் பாரதியாரே ஆவார். எந்த பெண்பாற் புலவரும் பாடாத பெண் விடுதலையைத் தமிழில் முதன்முறையாகப் பாடி பெண்களின் வாழ்வில் சிறிதேனும் மாற்றமும் வழியும் பிறக்க வகை செய்தவர் பாரதியார்.

இந்தச் சமூகத்தில் பெண் முழுமையான விடுதலை பெறுகிற வரையில் பாரதி பின்பற்றப்படுவான். பெண் முழுமையான விடுதலை அடைந்ததும் பாரதி போற்றப்படுவான். எனில் பாரதி என்றும் எப்போதும் காலம் கடந்து நிற்பான் என்பதே இதன் பொருளாகும்.

ஆன்ம விடுதலை, தேச விடுதலை, மொழி விடுதலை, பெண் விடுதலை, சமூக விடுதலை என்று அனைத்து வகையான அடிமைத்தனங்களில் இருந்தும் மனிதனை மீட்கும் மாயக்கரங்களுக்கு சொந்தக்காரர் பாரதியார்.

அதிகாரம் எங்கெல்லாம் எப்போதெல்லாம் அடிமைகளை உற்பத்தி செய்து தேக்கி வைக்கிறதோ அப்போதெல்லாம் அங்கெல்லாம் "விடுதலை விடுதலை பறையருக்கும் இங்கு புலையருக்கும் விடுதலை" என்னும் விடுதலை கீதமே தேசங்களின் எல்லையைக் கடந்த கீதமாக முழங்கும்.

விடுதலை உணர்வின் உச்சத்தை உணர்ந்தவர் பாரதியார். அதன் மேன்மையை ஆன்ம பலத்துடன் அனுபவித்தவரும் அவரே ஆவார். அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் அவருக்கு எப்போதும் ஏற்புடையது இல்லை. அச்சமின்மையின் உச்சம் பாரதியார் என்றால் அது மிக மிக ஏற்புடையது. "உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலே அச்சமில்லை அச்சமில்லை" என்பது யோசித்துப் பார்க்கப் பார்க்கப் பொருள் விரியும் அற்புதக் கவிதை.

எது விழுந்தால் நாம் எந்த இடத்திலும் சென்று விலகி நின்று தப்பி விடவே முடியாதோ, அந்த வானம் உச்சியில் விழுகிற போதிலும் அச்சமில்லை என்பதே பாரதி மனிதகுலம் முழுமைக்கும் தரும் அருமருந்து.

இந்த ஒப்பற்ற மேம்பட்ட விடுதலை உணர்வின் களமாக, காலமாக, கருத்தாக விளங்கியதாலே தான் பாரதியார் எல்லா உயிர்களையும் சமமென்று உணர முடிந்தது. நடத்த முடிந்தது. வாழவும் முடிந்தது.

நிறைவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். "வானில் பறக்கும் புள்ளெல்லாம் நான்" என்று உறவு கொண்டாடியவர் பாரதியார்.

இந்த உலகத்தின் கடைசிப் பறவை சிறகு விரித்துப் பறக்கிற காலம் வரை பாரதியார் வாழ்ந்து கொண்டிருப்பார். எப்போதும் "காலமாகி" நிற்பார். சமத்துவம் உணர்ந்தோர் உள்ளமெங்கும் நிறைந்து வழிந்து கவிதை வெள்ளமாகப் பாரதியார் பிரகவித்து ஓடிக்கொண்டே இருப்பார்.

<u>கட்டுரையாளர் குறிப்பு:</u>

பாரதி கிருஷ்ணகுமார்

2021ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின்
மகாகவி பாரதி விருது வென்றவர்.
"அருந்தவப் பன்றி" சுப்பிரமணிய பாரதி என்ற ஆய்வு நூலின் ஆசிரியர்,
திரைப்பட ஆவணப்பட இயக்குநர், சொற்பொழிவாளர்,
மனிதவள மேம்பாட்டு ஆலோசகர்.

பாரினில் ஆச்சரியம் பாரதி அல்லவா?

– பாரதி பாஸ்கர்

அரசவைகளையும், ஜமீன்தார்களின் முற்றங்களையும், சிற்றரசர்களின் அந்தப்புர மன்றங்களையும் அலங்கரித்துக் கொண்டிருந்த தமிழ்க்கவிதையை, ஏழைகளுக்காகவும் அடிமைகளுக்காகவும் போராடும் ஆயுதமாகவும், கதியற்றவர்களின் களமாகவும் மாற்றிய மந்திரக்காரன் பாரதிதான்.

பாரதி, நாட்டு விடுதலைக்காக மட்டுமல்ல, மானிட விடுதலைக்காகவும் இசைத்தவர். பெண்ணியம், சிறுபான்மையியம், சூழலியல் என அடுக்கடுக்காக இன்றைய போராளிகள் எதற்காகவெல்லாம் குரல் எழுப்புகிறார்களோ, அந்தச் சிந்தனைகள் முளைக்கக் கூட நிலமில்லாத காலாதீத வெளியிலேயே, அந்த சிந்தனைகளின் ஊற்றுக்கண்கள் அனைத்தும் அவரிடமிருந்துதான் முளைத்து வந்தன.

நாட்டார் வழக்குப் பாடல் வகைகளைத் தமிழ் கவிதை உலகில் துணிந்து அறிமுகப்படுத்தியவர் பாரதிதான். சிறு கதை, குறு நாவல், புதுக்கவிதை, பத்திரிக்கைத்துறை – என தமிழின் ஒவ்வொரு நவீன வடிவிலும் முன் ஏராக பாரதியே நிற்கிறார்.

தமிழ் நிலத்தில் பெண்ணின் உரிமைகள் பற்றிய முதல் சிந்தனைகள் பாரதியிடமிருந்து தான் பிறந்தன. 1905 இல் இருந்தே, பெண் கல்வி மற்றும் சமத்துவத்திற்காக ஒலித்த முதல் குரல் பாரதியுடைய குரல் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

உண்மையில் தேச விடுதலையில் பாரதிக்கு ஈடுபாடு ஏற்படும் முன்னரேயே, பெண்களின் உரிமைக்குக்

குரல் எழுப்பும் கோபம் பாரதியிடம் இருந்திருந்தது. பாரதி காசியில் வசித்த நாட்களில் கூடவே இருந்த நண்பர் எஸ். நாராயண அய்யங்கார் இதைப் பதிவு செய்கிறார்.

'ஒரு சமயம் சரஸ்வதி பூஜை அன்று பாரதி காசியில், தமிழில் ஒரு உபந்நியாசம். (சொற்பொழிவு) செய்தார். தலைமை வகித்தது காசியின் பிரபல பண்டிதராகிய சீதாராம சாஸ்திரி. சுப்பையா (பாரதி) காரசாரமாக பெண் கல்வி தேவை என்று பேசினார். தலைவருக்கு அதில் உடன்பாடு இல்லை. பாரதிக்குக் கோபம் வந்துவிட்டது. பெண் கல்வி இல்லாமல் தேசம் உருப்படாது என்று மேலும் காரசாரமாக முழங்கினார். கல்வியும் சமத்துவமும் மட்டுமே பெண்களுக்குத் தேவை என்று அவர் அன்று வலியுறுத்தியதும் கூட்டம் பாதியில் கலைந்தது'

1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 'சக்ரவர்த்தினி' என்னும் மாதர் பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்கிறார் பாரதி. தமிழின் முதல் மகளிர் பத்திரிக்கை!

பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் பத்திரிக்கையின் பெயரின் கீழ் இடம் பெறும் motto வாக்கியத்தை பாரதி தானே வடிவமைக்கிறார்.

'பெண்மை அறிவுயரப் பீடோங்கும்:
பெண்மைதான்
ஒண்மையுற ஓங்கும் உலகு.'

1906 ஜூலை மாத சக்ரவர்த்தினி இதழில் பாரதி எழுதும் தலையங்கத்தைப் பாருங்கள்.

ஏக காலத்தில் ஒரு ஆண் இரண்டு, மூன்று ஸ்திரீகளை (பெண்களை) விவாகம் செய்து கொள்ளலாம் என்ற விதி முற்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். இக்காலத்திலும் இது மாறி விட்டதாகத் தெரியவில்லை. இது நம் தேசத்திற்கு பெரிய அவமானம் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். பெண்களுக்கு

கற்பு நிலை எத்தனை அவசியமோ அந்த அளவுக்கு ஆண்களுக்கு அவசியமில்லை என நினைப்பதைக் காட்டிலும் மூடத்தனம் கிடையாது. வண்டியிழுக்கும் இரு மாடுகளில் ஒன்றின் கால்களை ஒடித்துவிட்டால். இன்னொரு மாடு எவ்வளவு நன்றாக இருந்தும் என்ன பயன்?'

கற்பு நிலை என்று சொல்ல வந்தார்இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்

என்று பின்னால் அவர் பாடிய பாடலுக்கான கருத்துக்கள் எப்போதோ அவரின் நெஞ்சில் நிலை பெற்றுவிட்டன. இந்தக் கட்டுரையை பாரதி எழுதும் போது அவருடைய வயது வெறும் 22 தான்.

இந்த அனல் பறக்கும் வரிகளை எழுதும் புத்தாக்கச் சிந்தனை மட்டுமல்ல, தன் சொந்த வாழ்விலும் இதைக் கடைப்பிடிக்கும் நேர்மையும் பாரதியிடம் இருந்தது.

பெண்ணின் அழகையையும் அங்கங்களின் சிறப்பையும் ஏற்றிப்பாடி, ஜமீன்தார்களின் அரசவைக் கவிஞர்களாகப் பலர் காலம் தள்ளி வந்த காலத்தில், பாரதி, ஆணாதிக்கச் சிந்தனைகளே இல்லாமல் எப்படி இருந்தார்? அவரது சிந்தனைகளின் தெளிவு காரணமா அல்லது நிவேதிதா தேவியின் சந்திப்பு அவரைப் புடமிட்டதா அல்லது பிறப்பிலேயே, '**மானுடர் அனைவரும் சமம்**' என்னும் கொள்கை கொண்டு மரபணுவிலும் வந்திருக்கும் ஆணாதிக்கச் சிந்தனையைக் கடந்தாரா என்று தெரியவில்லை. வியப்பாக இருக்கிறது. '**பாரினில் ஆச்சரியம் பாரதி**' அல்லவா?

"விடுதலைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனர்;வெல்லுவம் என்றே
திடமனதின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம் பிரதிக்கினை செய்வோம்.
உமையவள் சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒரு நிகர்செய் துரிமை சமைத்தாள்.
இடையிலே பட்ட கீழ் நிலை கண்டீர்.
இதற்கு நாம் ஒருப்பட்டிருப்போமோ?"

‘இதற்கு நாம் ஒருப்பட்டிருப்போமோ?’ என்னும் கேள்வி அவர் ஆண்களைப் பார்த்துக் கேட்கும் கேள்வி.


CHAKRAVARTINI.

Vol. I.

CONTENTS

PAGE

சமீபத்தில் ஒரு இடத்தில் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட பெண்கள் சிலர், அந்த கொடுமையான சம்பவம் நிகழ்ந்த போது அணிந்திருந்த உடைகளை காட்சிக்கு வைத்திருந்தார்கள். சிலர் சொல்கிறார்கள் அல்லவா? ‘இவுக போடற ட்ரெஸ் தான் காரணம்’ என்று? அவர்கள் எந்த உடையை அணிந்திருந்தார்கள்? அந்த காட்சியில் போய்ப்பார்த்தேன். பாதிக்கப்பட் பெண்கள் அணிந்த உடைகளில் எல்லா உடைகளும் இருந்தன. புடவை, ஜீன்ஸ், புர்க்கா, சல்வார். அங்கே ஒரு டயபரும் வைக்கப்பட்டிருந்தது. கைக்குழந்தை போடும் உடை.

வயது என்பது வரம்பேயின்றி, பாலியல் கேளிக்கை மற்றும் வக்கிரம் இரண்டுக்கும் இன்றும் ஆளாகி வாடும் நம் பெண் குழந்தைகளுக்காகவும், இளம் மற்றும் பேரிளம் பெண்களுக்காகவும் காலத்திற்கு முன்பு எழுந்த குரல் பாரதியின் குரல்.

அவரின் ‘இதற்கு நாம் ஒருப்பட்டிருப்போமோ? – என்னும் கேள்வி கால காலாமாக அப்படியே தொங்குகிறது. அவர் மறைந்து நூறு ஆண்டுகள் ஆனபின்பும் விடை கிடைத்தபாடில்லை.

‘ஆண்களோடு பெண்களும் சரி, நிகர்,
சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே’ – என்னும் அவரின் அமரத்துவம் வாய்ந்த கவிதை வரிகள் இனியாவது நமக்கு ஒளி காட்டும் தீபமாக நிற்கட்டும்.

<u>கட்டுரையாளர் குறிப்பு:</u>

பாரதி பாஸ்கர்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வாயிலாக மக்களுடன் உரையாடி வருகிறவர். பட்டிமன்ற பேச்சாளர்.

வாலிகனும் கதலியும் பாரதியும் இளைஞர்களும்

- பழ அதியமான்



பாரதியின் உள்ளடக்கம் ஆங்கிலம் வழியாகப் படித்த இன்றைய புதிய தலைமுறையைக் கவரும்படியாக இருக்கிறதா என்பது ஒரு கேள்வி. பாரதியின் உள்ளடக்கமும் வெளிப்பாடும் அவ்வாறு உள்ளதா என அறிய எளிமையான இரு சான்றுகளை நாம் பார்க்கலாம். இன்றைக்கு எந்த தொலைக்காட்சியைத் திறந்தாலும் பார்வையாளர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாவதைப் பார்க்க முடிகிறது.

அந்நிகழ்ச்சிகளில் திறனை வெளிப்படுத்தும் ஒருவரைப் பார்வையாளர்கள் எழுந்து நின்று பாராட்டுவதை அடிக்கடி காணமுடிகிறது. தமிழ் மரபில் இத்தகைய கூட்டமாக நின்று பாராட்டும் மரபு இருக்கிறதா என்று தெரியவில்லை. பொதுவழக்கிலோ இலக்கிய வழக்கிலோ இம்முறையைக் காண இயலவில்லை. மகிழ்ச்சியை, பாராட்டை வெளிப்படுத்த மார்புறத் தழுவுவதும் (ஆலிங்கனம்), காலில் விழுவதும் (சாஷ்டாங்க நமஸ்காரம்) நடந்திருக்கின்றன. இவை இயல்பாய் நிகழ்வன.

சம அந்தஸ்து உள்ளவரைப் பாராட்டவோ, மகிழ்வை வெளிப்படுத்தவோ கட்டியணைக்கிறோம். நம்மைவிட உயர்ந்தவராயின் காலில் விழத்தோன்றும். கூட்டமாக எழுந்து நின்று பாராட்டும் பழக்கம் அல்லது உணர்வு கிழக்கத்திய முறையாய்த் தெரியவில்லை. மேற்கிலிருந்து நாம் கற்ற அதுவும் சமீபத்தில் பெற்ற பண்பாட்டுக் கூறாய் அது இருக்கலாம்.

பாரதி எழுதிய பாஞ்சாலி சபதத்தில் பார்த்தனும் பாஞ்சாலியும் சூரிய அஸ்தமனத்தைக் காணும் காட்சி

ஒன்று வருகிறது. "வண்ணக்களஞ்சியம்" என பாரதி வர்ணிக்கும் அக்காட்சியும் அப்பாடலும் மிகப் புகழ்பெற்றவை. அந்தக் காட்சியின் எழிலைப் பாரதி 48 வரிகளில் அற்புதமாக எடுத்துரைக்கிறார். இப்பாடலில் பாரதியின் நுண்மையாகப் பார்க்கும் திறனும் பார்த்ததைக் கவித்துவம் ததும்பும் வார்த்தைகளுடன் வெளிப்படுத்தும் திறனும் பதிவாகியுள்ளன. அவை அவரை மகாகவியாகப் பிரகடனப்படுத்துவன. பார்த்தன் பாஞ்சாலியிடம் பேசுவதாக அவ்வருணனைக் காட்சி அமைகிறது. அதன் இறுதிப் பகுதியின் வரிகள் பின்வருபவை.

அமைதியொடு பார்த்திடுவாய் மின்னே! பின்னே
அசைவுறுமோர் மின் செய்த வட்டு; முன்னே
சமையுமொரு பச்சை நிற வட்டங் காண்பாய்,
தரணியில் இங்கு இது போலோர் பசுமை உண்டோ?
இமை குவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணிலாது இடை இடையே எழுதல் காண்பாய்
உமை கவிதை செய்கின்றாள், எழுந்து நின்றே
உரைத்திடுவோம், "பல்லாண்டு வாழ்க" என்றே

– என்பன அப்பாடல்வரிகளுள் சில.

உமை செய்கிற கவிதையை எழுந்து நின்று வாழ்த்தச் சொல்லுகிறார் பாரதி. சமீப காலத்தில் தமிழ் காட்சி ஊடகம் வழியாகப் பிரபலமாக விளங்கும் இந்த ஸ்டாண்டிங் ஓவேஷன் (Standing ovation) என்ற நவீன கால நடைமுறையைப் பாரதி காட்டியிருக்கிறார். நாம் குறிப்பிடும் பொருளில்தான் பாரதி சொன்னாரா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. எனினும் நாம் கொள்ளும் அர்த்தம் வரும்படியும் சொல்லாட்சி அமைந்திருக்கிறதுதானே. இளைஞர்கள் பாரதியைப் படித்தால் இன்னும் இது போல இன்றை நினைவூட்டும் பலவற்றைக் கண்டு ரசிக்க முடியும்.

அடுத்து இன்னொன்று. எரிமலை வெடித்து நெருப்பு ஆறாய் உருகி ஓடும் ஒரு காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். எரிமலை ஒன்றுகூட இல்லாத இந்தியாவில் வாழும் நம்மால் அக்காட்சியை மனக்கண்ணில் கற்பனை செய்து காணமுடியும். நாம் நேரில் பார்க்காதவை எனினும் தொலைக்காட்சியின் விளைவாய் பலப் பல காட்சிகள் இன்று மூளையில் பதிவாகிக் கிடக்கின்றன. அதனால் முன் சொன்ன எரிமலை வெடித்து நெருப்பு ஆறாய் உருகி ஓடும் காட்சியை நம்மால் கற்பனை செய்து விட முடியும். ஆனால் தொலைக்காட்சிகள் உருவாகி இருக்காத பாரதியின் காலத்தில் அதை அவர் எப்படி கற்பனை செய்தார் என்று தெரியவில்லை. இத்தகைய காட்சி ஒன்றைப் பாரதி கவிதையாக்கி இருக்கிறார்.

துரியோதனனின் கோபத்தை அதே பாஞ்சாலி சபதத்தில் பாரதி இப்படி வர்ணிக்கிறார்:

"குன்றம் ஒன்று குழைவுற்று இளகிக்
குழம்பு பட்டு அழிவு எய்திடும் வண்ணம்
கன்று பூதலத்து உள்ளுறை வெம்மை
காய்ந்து எழுந்து வெளிப்படல் போல்"

என்பது அந்த காட்சி வர்ணனை. கல்லைப் பிசைந்து கனியாக்கினார் மாணிக்கவாசகர் என்றால் குன்றம் ஒன்றை இளக்கி, குழையச் செய்கிறார் பாரதி. அசாதாரண காட்சி அல்லவா இது!

எரிமலைகள் இல்லாத ஒரு நாட்டில் பிறந்த பாரதி, எரிமலைகள் தீக்கக்கும் நாடுகளுக்கும் பயணம் போகாத பாரதி, எரிமலைக் குழம்புகளைத் தொலைக்காட்சியில் பார்க்க வாய்ப்பில்லாத பாரதி, வெறும் பத்திரிக்கை வழிச்செய்திகளை மட்டும் கொண்டு காணாத காட்சி எல்லாம் காட்டுகிறார் பாரதி. வெளிநாடுகளிலேயே காலம் கழிக்கும் நமது தமிழ் இளைஞர்கள் பாரதியைப் படித்தால் இன்னும் என்னென்ன இப்படி கண்டு அறிவரோ!

பாரதியின் வாழ்க்கை பத்திரிக்கையோடு பிணைந்திருந்ததால் காலமும் தொழில்நுட்பமும் சந்திக்கும் முனையில் அவர் வாழ்ந்தார். அதன் ஊடாக வருங்கால நிகழ்வுகளையும் அவர் ஊகித்திருந்தார். ஜப்பான் நாட்டு ஹைக்கூ பற்றி பாரதி பேசி இருப்பது அதில் ஒரு பருக்கை.

அதேபோல் ஹாலி வால் நட்சத்திரம் பற்றி பாரதி பாடியிருந்தது இன்னொரு பருக்கை. 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை காட்சி தரும் அந்த வால் நட்சத்திரம் (பாரதியின் மொழியில் சொன்னால் தூமகேது) பாரதி காலத்திற்குப் பிறகு மீண்டும் பூமிக்கு 1986இல் காட்சி தந்தது. அப்போது பாரதியின் பாடல் பிரபலமாக நினைவு கூரப்பட்டது. பாரதி அந்தத் தூமகேதுவைப் பற்றி அதன் வருகை நிகழ்ந்த 1910இல் பாடி இருந்தார். சாதாரண என்ற பெயர் கொண்ட தமிழ் ஆண்டு அதுவானதால் சாதாரண வருஷத்து தூமகேது என்று அந்தப் பாடலுக்குத் தலைப்பு அமைந்தது. ஆண்டுடன் தொடர்புடைய ஒன்றுக்கு ஆண்டின் பெயரைச் சூட்டியதும் ஒரு நவீனம்தான்.

ஆறுமுகம் (முருகன்) பற்றிய பாரதி பாடல் ஒன்றுக்குத் தலைப்பு ‘ஆறு’. தன்னைச் சுற்றி நடக்கும் எதையும் பொருள்படுத்தி பதிவு செய்திருப்பது இன்னொரு ஆச்சரியம். அறிவியலில் ஆர்வமுள்ள இளைஞர்கள் இதைப் போலவும் “பொருளில்லாப் பொருளின் விளைவில்லா விளைவு” (வசன கவிதை: **சக்தி**) போலவும் இன்னும் பல அம்சங்களைப் பாரதியிடம் காணக்கூடும். இப்படியான சமகாலப் பொருத்தப்பாட்டுக்கு வாய்ப்புள்ள பல கவிதைகள் பாரதியிடம் இருக்கின்றன.

எனினும் அவற்றை இளைஞர்கள் வாசிக்கும் படியான நிலையில் அவை இருக்கின்றனவா என்பது இரண்டாவது கேள்வி.

“ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி” எழுத விரும்புவதாக குறிப்பிட்டு எழுதியவர் பாரதி. ஆனால் படித்த வாசகனுக்குக் குறிப்பாக இளைஞனுக்குப் பாரதி வாசிக்கும்படியான நிலையில் உள்ளாரா? ஓரிரு சான்றுகளை இந்த நோக்கில் எடுத்துக்காட்டலாம். இதற்கும் பாஞ்சாலி சபதத்தையே பயன்படுத்தலாம்.

தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவு தர மொழிந்திடுதல் சிந்திப்பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவு பல காட்டல் கண்ணீர்த்
துளிவர உள் உருக்குதல், இங்கு இவை எல்லாம் நீ அருளும் தொழில்கள் அன்றோ?
ஒளி வளரும் தமிழ்வாணீ! அடியனேற்கு இவை அனைத்தும் உதவுவாயே.

என்று தமிழ்வாணியை வேண்டி பாஞ்சாலி சபதத்தின் சூதாட்டச் சருக்கத்தைத் தொடங்குகிறார் பாரதி. இதை முதலாவது பாடல் எனக் கொண்டால் நான்காவது பாடலிலேயே வாசகனுக்குத் தெளிவுறவே அறிந்திடுதல் என்ற செயல்பாட்டில் பிரச்சனை தோன்றி விடுகிறது. பாண்டவர் வரவேற்பு பகுதியில் அமைந்த பாடல் அது. கௌரவரின் புதிய மாளிகையைக் காண பின் சூதாட அஸ்தினாபுரத்திற்கு பாண்டவர்கள் வருகிறார்கள். ஊர்வலக் காட்சியின் வர்ணனை:

வாலிகன் தந்ததோர் தேர்மிசை ஏறி, அம்
மன்னன் யுதிட்டிரன் தம்பியர் மாதர்கள்
நால்இயலாம் படையோடு நகரிடை
நல்ல பவனி எழுந்த பொழுதினில்,.....

என்றந்தப் பாடல் போகும். அந்தப் பாடலில் வாலிகன் தந்த தேரில் ஏறி மன்னன்’ யுதிட்டிரன் அதாவது தருமன், தன் தம்பியர் மற்றும் சிலருடன் ஊர்வலமாக வந்தான் என்ற விவரணை இடம்பெறுகிறது.

அப்பாடலில், தேர் தந்ததாகக் குறிக்கப்படும் வாலிகன் என்பவர் யார் என்ற கேள்வி இலக்கியத்தை ஆழமாக வாசிக்கும் வாசகருக்கு எழும்தானே. பிண்டமாகப் புரிந்துகொண்டு வாசிப்பது வாசிப்பு ஆகாது. நுட்பமாகப் புரிந்து வாசிப்பதே வாசிப்பு. வாலிகன் என்ற சொல் கதிரைவேற் பிள்ளை, மு.சண்முகம் பிள்ளை, ச.வையாபுரி பிள்ளை ஆகியோரின் அகராதி மற்றும் பேரகராதிகளில் காணப்படவில்லை. பெயர் அகராதியான அபிதான சிந்தாமணியிலும் இல்லை. சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடம் கேட்டேன். வில்லிபுத்தூரார் சொல் விளக்க

பட்டியலிலும் சில நிகண்டுகளிலும் தேடிப் பார்த்து அலுத்துப் போனேன் என்று லெக்சிகன் விரிவாக்கத் திட்டத்தில் அப்போது பணிபுரிந்த புலவர் கு.சிவமணி (அண்மையில் இந்த அறிஞர் காலமாகிவிட்டார்) என்னிடம் சொன்னார்.

தொடர்ந்து யோசித்ததில் “பாஞ்சாலி சபதத்தை வியாசர் பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதி விடலாம், அதாவது கற்பனை திருஷ்டாந்தங்களில் எனது சொந்த சரக்கு அதிகம் இல்லை. தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி” என்ற பாரதியின் முன்னுரை நினைவுக்கு வந்தது. அதனால் வியாச பாரதத்தில் அச்சொல்லைத் தேட விரும்பினேன். வியாச பாரதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பைத் தேடிய போது தான் பல உண்மைகள் எனக்குப் புலப்பட்டன. இங்கு நல்ல விற்பனையில் உள்ள பல தமிழ் வியாச பாரதங்கள் தழுவல்கள், தர்ஜமாக்கள் தாம். முழு மொழிபெயர்ப்புகள் அல்ல என்பது அவ்வுண்மைகளுள் ஒன்று.

வரிக்கு வரியான வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பு என்பது அநேகமாக ஒன்றுதான் நம்மிடையே கிடைக்கிறது என்பது இன்னொரு உண்மை. அந்த ஒன்று கும்பகோணம் ம.வீ.ராமானுஜாச்சாரியார் தன் வாழ்நாள் பணியாகச் செய்த மகாபாரத மொழிபெயர்ப்பு என்று அறிய வந்தேன். அதைத் தேடும் முயற்சியில் இறங்கினேன். குறிப்பிட்ட பகுதி அடங்கிய மகாபாரதத்தின் சபா பருவத்தின் மொழிபெயர்ப்பு ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு எனக்குக் கிடைத்தது. படிக்கத் தொடங்கினேன். தருமன் அஸ்தினாபுரம் அடையும்போது இரவு ஒரு மணி ஆகிவிட்டது. ‘**அக்னி**’ தந்த தேரில் ஏறி தருமன் வந்ததாக வருணனை இருப்பதைக் கண்டு உள்ளம் களி கொண்டது.

வால் என்பது இளமை, தூய்மை, வெண்மை என்ற பொருள்களில் வழங்கும் சொல் என்பது புரிந்தது. தூய்மை பொருந்தியவன் வாலிகன். இச்சொல் அக்னிக்குப் பொருந்துவதும் புரிந்தது.



வாலியன், வாலறிவன் என்று தொடர்ச்சியாகப் பல சொற்கள் மனத்தில் வந்து போயின. எப்பொழுது விடியும் என்று காத்திருந்து காலையில் இதை மேலே குறிப்பிட்ட புலவரிடமும் இரண்டு துணைவேந்தர்களிடமும் கேட்டு உறுதி செய்தேன்.

வாலிகன் என்பது அக்னி என்பதை அறிய இத்தனை பாடு. உள்ளத்தில் களி வளர ஆனந்தம் பொங்கிய அந்த இரவு நேரத்தைப் பல்லாண்டுகளுக்குப் பிறகும் என்னால் இன்றும் நினைவுக்கு கொண்டு வர முடிகிறது. புரியாத ஒரு சொல்லின் பொருளைத் தெரிந்துகொள்ள எல்லோருக்கும் எனக்குக் கிடைத்த நேரம் கிடைக்குமா? அதுவும் இளைஞர்களுக்கு ஏது நேரம்?

பாரதியில் இடம்பெற்றுள்ள கடினச் சொல்லுக்கான இன்னொரு சான்றையும் பார்க்கலாம். திருதராஷ்டிரனிடமிருந்து பாண்டவருக்குப் பாகப்பிரிவினையாகக் கிடைத்த பகுதி காண்டவ பிரஸ்தம். அதன் அருகில் இருந்தது காண்டவ வனம். “அந்தக் காட்டை அழித்து உன் பசியைத் தீர்த்துக் கொள்” என்று பிரம்ம தேவர் நெருப்புக் கடவுளான அக்னியிடம் கூறியிருந்தார். அக்னி பசியாற முயன்றான்.

அந்தக் காட்டில் இருந்த தட்சகன் என்னும் பாம்பு இந்திரனின் நண்பன். அக்னி காட்டை எரிக்கும் போதெல்லாம் நண்பனைக் காப்பாற்றும் பொருட்டு இந்திரன் மழை பொழிவித்து நெருப்பை அணைத்து விடுவான். நகரின் விரிவாக்கத்திற்காக கிருஷ்ணனும் அர்ஜுனனும் காண்டவ வனத்தை அழிக்க வேண்டும் என்று நினைத்தபோது அக்னி அவர்களோடு கூட்டணி வைத்துக் கொண்டது.

சிறப்பான வில், தேர், குதிரை வேண்டுமென கூட்டணிக் கட்சியினர் கேட்க அக்னி ஏற்பாடு செய்தது. காண்டீபம், சிறந்த தேர், குதிரைகள் முதலியவற்றை அக்னி பலரிடமிருந்து வாங்கி வந்து தந்தது என்று மகாபாரதம் கூறுகிறது. அம்முறையில் அக்னி (வாலிகன்) இடமிருந்து தேர் வந்த கதையை விளக்குகிறது சபாபர்வம் (பக்கம் 103).

அந்தத் தேர் தான் வாலிகன் தந்த தேர் எனப் பாரதி குறிப்பிடுவது. பாஞ்சாலி சபதத்தில் அக்னி ஏற்பாடு செய்த வில்லும் வரும். “காண்டீபம் அதன் பெயர்”. வாலிகன் என்ற ஒரு சொல்லின் பொருளை அடைய இந்தப் பாடுபட வேண்டியிருந்தது. இத்தகைய சிரமத்தை ஒரு ஆய்வாளன் படலாம். ஆனால் ஒரு எளிய, பொதுவாசகனான இளைஞன் பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

இன்னொரு சாதாரண சொல்லும் என்னைப் பாடாய் படுத்தியது. அக் கதையைச் சொல்லி இந்தச் **“சொற்பொருள் தேடு”** படலத்தை முடிப்போம்.

பாண்டவர் ராஜசூய யாகம் நடத்துகின்றனர். அதில் பல நாட்டு மன்னர்களும் காணிக்கை வந்து செலுத்துகின்றனர். அதைப் பாரதி 16 பாடல்களில் விவரிக்கிறான். இதைப் பார்த்து பொறாமை

பட்ட துரியோதனன் ஊருக்கு திரும்பி வந்து தன் தந்தையிடம் நடந்ததைக் கூறுகிறான். அந்த விவரிப்புடன் வருகிறது ஒரு பாடல். மான், புதுத்தேன், கொலை நால்வாய், மலைக்குதிரை, பன்றி, கலைமான் கொம்புகள், களிறுகளின் தந்தம், கவரிகளின் தோல் வகை, பொன், செந்நிறத்தோல், கருந்தோல், திருவளர் கதலியின் தோல், வெந்நிறப் புலித்தோல், யானை, விலை உயர்ந்த பறவை, விலங்கினங்கள், சந்தனம், அகிலின் வகைகள் எல்லாம் கொண்டுவந்து மன்னர்கள் காணிக்கையாக தந்தனர் என்கிறான் துரியோதனன்.

திருவளர் கதலியின் தோல் என்பதைத் தவிர மற்ற சொற்கள் புரிந்தன. புரியவில்லை எனினும் அகராதிகளில் கண்டு அவற்றின் பொருளை அறிந்து கொள்ளலாம். ஆனால் திருவளர் கதலி என்பதின் பொருள் புரியவில்லை. கதலி என்பதற்கு வாழை, கொடி என்று பொருள் தருகிறது பெப்ரிஷியஸ் அகராதி. கடுதாசிப் பட்டம், காத்தாடி, நேந்தா மரம், வாழை, விருதுக்கொடி எனப் பொருள் தருகிறது கதிரைவேற்பிள்ளையின் மொழி அகராதி. கதலி என்ற சொல்லை வாழை என்னும் பொருளிலேயே 'மன்னும் இமயமலை' எனத் தொடங்கும் பாடலிலும் பாரதி பயன்படுத்தியுள்ளார்.

ஆட்டுக்கு இரையாகும் வாழைப்பழத் தோலையோ, மலர் தொடுக்க உதவும் வாழைப்பட்டை நாரையோ நாடாளும் மன்னருக்கு சீர்வரிசையாகத் தரப்பட வாய்ப்பில்லை. அகராதி தரும் இந்தப் பொருள்கள் எவையும் இந்தக் குறிப்பிட்ட கதலியின் தோல் என்பதற்குப் பொருத்தமாகத் தெரியவில்லை. அப்படியானால் இங்கே வரும் கதலி என்ற சொல்லுக்குப் பொருள்தான் என்ன என்கிற குழப்பம் ஏற்பட்டது.

இறுதியில் பாரதியே இதற்கு உதவினார். தஞ்சைப் தமிழ் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பாரதி பாடல்கள் நூலில் பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதி எழுதிய சொல் விளக்க குறிப்பும் இடம்பெற்றுள்ளது. அந்தக் குறிப்பில் "கதலி என்பது ஒரு வகை மான்" என்று அவரே குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் இந்தக் கதலி என்பது மான் என்ற பொருளில் வேறு இலக்கியத்தில் ஆட்சி இருக்கும் இடம் இன்னும் தெரியவில்லை.

ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோரும் நன்கு பொருள் விளங்கும்படி எழுத விரும்பிய பாரதி எழுதிய பாஞ்சாலி சபதத்தில் தான் மேலே காட்டிய இரண்டு சொற்களுமே பயின்றுள்ளன. சான்றுக்குத்தான் சில காட்டினேன். இன்னும் பல உள்ளன. என் பாரதி கவிதைகள் நூலின் முன்னுரையில் பல சொற்களைச் சுட்டியுள்ளேன். ஆக பாரதியின் எழுத்து எல்லோருக்கும் எல்லா காலத்துக்கும் எளிமையானது என்று நாம் கூறி விட முடியாது.

எல்லா பாடல்களும் "பாருக்குள்ளே நல்ல நாடு" என்பது போலவும் "ஓடி விளையாடு பாப்பா" என்பது போலவும் எளிமையாக அமையவில்லை. புலவர்களுக்கே தடுமாற்றம் தரும் சொற்களும் புலவர்களால் உறுதி செய்ய வேண்டிய சொற்களும் அகராதியில் தேட வேண்டிய சொற்களும் கொண்டது பாரதியின் கவிதைகள்.

இந்த நிலையில் இளைஞர்களை இப்பொழுது இருக்கும் பதிப்பிலேயே படிக்கும்படி வேண்டுவது என்பது அவர்களை பிரதியிலிருந்து வெளியே அனுப்ப வகை செய்யக்கூடியது அல்லது சில பாடல்களுக்குள் மட்டும் உறைய வைக்கக் கூடியது. எனவே பாரதியை இளைஞர்களிடம் கொண்டு போவதற்கு ஒரு புதிய எளிமையான அருஞ்சொற்பொருள் கொண்ட பதிப்பு தேவை. பாரதியின் இறப்பு நூற்றாண்டில் அதன் தேவையை நாம் கோரலாம். அப்படி ஒரு பாரதி கவிதைப்பதிப்பு நூல் வரும்போது 'பார்மீது அவன் சாகாதிருப்பான்'

<u>கட்டுரையாளர் குறிப்பு:</u>

பழ அதியமான்,

ஆய்வாளர், எழுத்தாளர்.

பாரதியியல் பயில்வோம்!

– நிரஞ்சன் பாரதி

பள்ளிப்படிப்பை முடித்து, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, தங்கள் திறமையாலும் மேதைமையாலும் பார் போற்றும் பேராளுமைகளாக விளங்கியோர் பலர். ஆனால், பார் போற்றிய பேராளுமையாக வாழ்ந்து மறைந்த பிறகும் பாரே படிக்க விரும்பும் பள்ளித்தலமாக விளங்குவோர் வெகு சிலரே. அந்தச் சிலரில் சீரியவர் மகாகவி பாரதியார். இந்தப் பெருமை தமிழ்நாட்டின் தவப்பயன் அன்றி வேறென்ன?

அவரைப் பள்ளித்தலம் என்று சொல்வதை விடப் பல்கலைக்கழகம் என்று சொல்வதே சாலப் பொருத்தமானது. அவர் ஒரு கல்வி நிலையம் எனில், அவரிடம் படிக்கும் அல்லது அவரைப் படிக்கும் படிப்புக்கு என்ன பெயர்?

பாரதியியல்.

இந்தப் படிப்பை இன்று படிப்போர் ஏராளம். நடைமுறையில் இதைப் படிப்பு என்று சொல்வதைவிடத் துறை என்று சொல்லலாம். மலர்த்தேனில் தோய்ந்து மகிழும் வண்டினைப் போல், இத்துறையில் தோய்ந்திருப்போர் பலர். அன்பு மீதூர ஆய்ந்திருப்போர் பலர். ஆச்சர்யங்களின் அடைக்கலமாக, என்றைக்கும் அழியா அழகுள்ளவராகப் பாரதியார் இருப்பதே இதற்கு முதற்பெரும் காரணம். அவர்தம் படைப்புகள் எல்லாமே இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

அவரது வரலாறு தினமும் புதிதாக எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்துறை சுறுசுறுப்பாக இயங்குவதற்கு இது மற்றுமொரு காரணம். அவர் பற்றிய அரிய செய்திகள் இன்னமும் ஆய்வாளர்களால் தொடர்ந்து வெளிக்கொணரப்பட்டு வருகின்றன. பாரதியாரை ஆய்வு



பாரதி குடும்பத்தினர்



1947இல் எட்டயபுரம் பாரதி மண்டப திறப்பு விழாவில் இராஜாஜி

செய்யவே தங்கள் வாழ்க்கையைக் காணிக்கையாக்கிய ஒவ்வொருவரும் நம் மதிப்புக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

பாரதியாரின் இயங்குதளம் சார்ந்து வெளிவரும் செய்திகள் எல்லாமே நம்மைப் பெருவியப்பில் ஆழ்த்துகின்றன. நம் மனக்கண்ணில் அவரது திருவுருவத்தை மேலும் மேலும் ஓங்கச் செய்கின்றன. முப்பத்தெட்டு ஆண்டுகளில் இப்படியொரு பெருவாழ்க்கை சாத்தியமே என்று நம்மைப் பார்த்துக் கண்சிமிட்டுகின்றன.

சரி. பாரதியியலை எவ்வாறு புரிந்து கொள்வது?

பாரம்பரிய ஞானம், நவீனத்துவ சிந்தனை இந்த ஈராறுகள் இரண்டும் இணையும் கூடுதுறை தான் பாரதியியல். நவீன தமிழ், தமிழர் நலன், கவிதை, தேசியம், சமூக சீர்திருத்தம், மத நல்லிணக்கம், பெண்ணியம், சமத்துவம், சகோதரத்துவம், ஒருமைப்பாடு, விடுதலை, தத்துவம், ஆன்மிகம் எனப் பற்பல பற்பல பொருண்மைகளின் சிறப்பைச் செழுந்தமிழில் வாரி வழங்கும் ஒரு தேடுபொறி தான் பாரதியியல். பாமரனும் பண்டிதனும் சிறியோரும் பெரியோரும் என துருவங்கள் எல்லாமே சேர்ந்து பயிலும் விந்தைக்கல்வி தான் பாரதியியல்.

எக்காலத்தும் பொருந்தக்கூடிய அவரது படைப்புகளின் வழியே அவரது ஆன்மாவை சென்று தரிசிப்பதும் பாரதியியல் தான். பாரதியின் ஒவ்வொரு படைப்பும் தனியொரு சொற்பிரபஞ்சமாக விரிகிறது. அதிலுள்ள ஒவ்வொரு வரிக்குப் பின்னாலும் ஒரு பெரும் வரலாறு இருக்கிறது. அவரின் பாடல் வரிகளைப் படிப்பதோடு நில்லாமல் அதன் பின்னணியையும் தெரிந்துகொண்டால் அவரின் ஆன்மாவுக்குப் பக்கத்தில் நாம் போகலாம்.

நுனிப்புல் மேயாமல் அவரை நுணுகி நுட்பமாக ஆராயத் தொடங்கினால் தான் அவரைத் தொட முடியும். அவரில் ஆழ்தலும் அவரோடு வாழ்தலும் தான் பாரதியியலின் இலக்கணம். அவரைப் படிக்கத் தொடங்கி, பிறகு பிடிக்கத் தொடங்கி, முடிக்கத் தெரியாமல் தவிக்கும் ஆனந்தத் தவிப்பு தான் பாரதியியலின் உச்சம்.

பாரதியார் உடலால் நம்மை விட்டுப் பிரிந்து நூறாண்டுகள் ஆகியிருக்கலாம். ஆனால், அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் அரிய காட்சிப்பொருளாக அப்பால் இராமல், இன்று வரை ரத்தமும் சதையுமாய் கண்முன் நடமாடும் மாட்சிப்பொருளாய் அவர் நம் அருகில் நிற்கிறார். சாதி, மதம், இனம், நாடு,மொழி, நிறம் என எந்தப் பாகுபாடும் இல்லாமல் அவரை யார் வேண்டுமானாலும் சந்திக்கலாம். சிந்திக்கலாம். அவ்வாறு நிகழும் போதெல்லாம் இன்முகத்தோடு வரவேற்று நம்மோடு அவர் உரையாடுவது போலவே இருக்கும். அவரது கவிதைப் புத்தகத்தை ஏந்துவதும், இன்று பிறந்த ஒரு புதுக்குழந்தையை ஏந்துவதும் ஒன்றே.

அவரது நினைவு நூற்றாண்டு நிறைவு நமக்கெல்லாம் ஒரு அன்பான மற்றும் இன்றியமையாத நினைவூட்டலைச் செய்துள்ளது.

“உலகமே, நான் ஒரு வானமாய் உனக்காகப் பரந்து விரிந்து கொண்டே இருக்கிறேன். ஒரு பறவையாய் என்னில் பறந்து செல்ல விரைந்து வா. நீ காணாத காட்சிகளையெல்லாம் காண்பாய்” என்பது தான் அந்த நினைவூட்டல்.

இதை உளமார மதித்துப் போற்றி, பாரதி வாசகர் என்னும் நிலையிலிருந்து படியேறி நாம் எல்லோரும் “பாரதியியல்” பயில்வோம். உண்மையான பாரதியைத் தரிசிக்க முயல்வோம்.

<u>கட்டுரையாளர் குறிப்பு:</u>

நிரஞ்சன் பாரதி

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் எள்ளுப்பேரன்,
புகழ்பெற்ற கருநாடக இசைக்கலைஞர் ராஜ்குமார் பாரதியின் மகன்,
கவிஞர், பாடலாசிரியர், எழுத்தாளர், பேச்சாளர், இணையத் தமிழாசிரியர்
எனப் பல தளங்களில் இயங்கி வருபவர்.

பாரதியின் கனவுக்குத் தடை

- டாக்டர் வி.வெங்கட்ராமன்

பாரதி, ஒரு தலைசிறந்த தேசியவாதி மட்டுமல்ல, மிகச் சிறந்த இலக்கியவாதியும் கூட. அவரது இலக்கியப் படைப்புகள் ஒவ்வொன்றும் காலத்தால் அழியாதவை. சுதேசி இயக்கப் போராட்டத்தின் போது பாரதியால் எழுதப்பட்டு வெளிவந்த கதைகளும், கட்டுரைகளும், இந்திய மக்களைத் தலைநிமிரச் செய்தன என்பது குறிப்பிடத்தக்கது.

1910ஆம் ஆண்டு இந்தியப் பத்திரிக்கைச் சட்டத்தின் பிரிவுகள் (4) மற்றும் (12)ன் துணைப்பிரிவு(1)ன் படி இந்தியா, சூரியோதயம், விஜயா போன்ற புதுவை சுதேசியப் பத்திரிக்கைகள் மார்ச் மாதம் தடைசெய்யப்பட்டதும், ஏப்ரல் மாதம் முதல் இந்தியா அலுவலகம் மற்றும் இவர்களது மற்ற சுதேசி எழுச்சிப் பட்டறைகள் அனைத்தும் பிரிட்டிஷ் அரசு கேட்டுக்கொண்டதன்படி, பிரெஞ்சு அரசால் மூடி சீல் வைக்கப்பட்டன.

1910ஆம் ஆண்டுவரை தேசிய எழுச்சிப் பிரச்சாரங்களை இப்பத்திரிக்கைகள் வாயிலாக இந்திய மக்களுக்கு எடுத்துரைத்து, சுதேசியத்தினை தடையின்றி வளர்த்துக் கொண்டிருந்த பாரதி மற்றும் பாண்டிச்சேரி சுதேசிகளால் வேறு ஏதும் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பாரதி, பத்திரிகைகளின் மூலமாக எழுப்பி வந்த தேசியவாதத்தைச் சிறு சுதேசிய வெளியீடுகள் மூலம் பரப்புவது என முடிவு செய்தார். 1910ஆம் ஆண்டு பத்திரிகைச் சட்டத்தின் ஷரத்துக்கள் மிகக் கொடுமையாக இருந்தபடியால் சுதேசிகளால், நேரடியாக எதிர்க்கும் படைப்புகளை வெளிக் கொணரவிரும்பவில்லை. ஒருவேளை அவ்வாறாக பாரதி வெளியிட்டிருந்தாலும் அவை, உடனடியாக தடை செய்யப்பட்டிருக்கும்.

ஆகவே பாரதி இவ்வகையான படைப்புகளில் பிரிட்டிஷ் அரசின் தான்தோன்றித்தனத்தினை நேரடியாக விமர்சிக்காமல் தனது படைப்புகளின் வாயிலாக வெளிவரும் பாத்திரங்கள் மற்றும் வேறு சில வழிகளில் உதாரணமாக ஒரு கவிதைத் தொகுப்பினை கனவு என்ற தலைப்பில் வெளியிட்டு, அந்தப் படைப்பில் தனது வாழ்க்கையில் நடந்த விஷயங்களைச் சொல்லும் 'சுயசரிதையாக', அதே சமயத்தில் தனது பெயரினையோ, தான் சம்பந்தப்பட்டவர்களது பெயர்களையோ நேரடியாக பாத்திரங்களாக அமைக்காமல், வேறுபெயர்களில் அப்பாத்திரங்களை உருவாக்கி அப்பாத்திரங்களின் வாயிலாக பிரிட்டிஷ் அரசின் கொடுமைகளை விமர்சித்து எழுதியுள்ளார் பாரதி.

இம்மாதியான வெளியீடுகளைக் கொண்டுவர வேண்டிய சூழலைப் பார்க்கும் போது, இவற்றையெல்லாம் ஏன் பாரதி கொண்டு வருகிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. பாரதியின் பெயரினைக் கொண்டு 1910ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இரண்டு சிறு நூல்கள் வெளிவந்தன. இந்த இரண்டும் பாண்டிச்சேரியிலிருந்து தான் வெளிவந்துள்ளன. பாண்டியிலுள்ள இந்தியா அலுவலகம் மூடப்பட்டபின்னர், இந்தியா மற்றும் விஜயா போன்ற பத்திரிகைகளை வெளிக்கொணர்ந்த சரஸ்வதி அச்சகத்திலிருந்துதான் இப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

பாரதி, 1910 முதல் 1912ஆம் ஆண்டு வரை பல வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறார். அவற்றில் அரசியல் சாயம் பூசப்பட்டவைகளாக இரண்டு பிரசுரங்கள் கருதப்பட்டன. கனவு மற்றும் ஆறில் ஒருபங்கு, இவை இரண்டிலும் பாரதியின் பெயர் 'ஆசிரியர்' என பதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் 1911ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் நாள் மணியாட்சி இரயில் நிலையத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் வில்லியம் டி ஆஷ் சுட்டுக் கொல்லப்பட்டதற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் காரணமாக புதுவையிலுள்ள சுதேசிகளை பிரிட்டிஷ் போலீஸ்

கண்காணிக்கத் துவங்கியதும் பாரதி, 1911ஆம் ஆண்டு எழுதிய இந்திய ஜனங்களிடையே தேசிய ஒற்றுமையை கொண்டுவருவது எப்படி? என்ற பிரசுரத்தில் தனது பெயர் குறிப்பிடப்படாமலேயே வெளி யிட்டிருக்கிறார்.


NOTIFICATION

(1)



1912ஆம் ஆண்டு, பாரதி பாஞ்சாலி சபதம் இயற்றியபோது, அதற்கும் அரசியல் சாயம் பூசப்பட்டது. பாரதியின் கிருதயுகம் இவ்வகையைச் சார்ந்ததாகும். பாரதியின் முதலிரண்டு பதிப்புகளில் 'ராஜதுவேஷ' கருத்துக்கள் அதிகமிருப்பதாக கருதப்பட்டுத் தடைசெய்யப்பட்டதும், மூன்றாவது பிரசுரம் 1912ஆம் ஆண்டு மார்ச் மாதம் தடைசெய்யப்பட்டது.

இம்மூன்றாவது பிரசுரத்தின் ஆசிரியர் பெயர் குறிப்பிடாததால், அது யாருடைய வெளியீடு என்பது தெரியாமலேயே போய்விட்டது. பிரிட்டிஷாரின் ஆவணங்களில் மூன்றாவது பிரசுரத்தை எழுதியவர் பாரதிதான் எனக் குறிப்பிடப்படவில்லை. இங்கிலாந்திலுள்ள இந்தியா லைப்ரரி ஆவணங்களில் குறிப்பாக (Micro Film Records) மைக்ரோ படச்சுருள் ஆவணத்தில் மட்டுமே பாரதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

1912ஆம் ஆண்டில் பாரதியின் கைவண்ணத்தால் தீட்டப்பட்டு வெளிவந்த பாஞ்சாலி சபதம், பிரிட்டிஷ் அரசின் பார்வைக்கு பாரதியால் அனுப்பி வைக்கப்படுகின்றது. பாரதி 1912ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னை மாகாண கவர்னருக்கு எழுதிய கடிதத்தில், தான் சென்னை வரவிரும்புவதாகவும் தற்போது தனது எழுத்துக்கள் ராஜதுவேஷ மற்றவைகளாக அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டி, அதற்கு ஆதாரமாகப் பாஞ்சாலி சபதம் என்ற நூலினை அனுப்பிவைக்கிறார்.

ஆனால் பிரிட்டிஷ் அரசின் பார்வையில் பாஞ்சாலி சபதத்திலும் 'ராஜத்துவேஷம் அதிகம் புதைந்திருப்பதாகவும், அதனை பாரதி மறைமுகமாக இந்நூலின் மூலம் எடுத்துரைப்பதாகவும் தமிழ் மொழி பெயர்ப்பாளரின் பரிந்துரையை வைத்து பாரதி சென்னை திரும்புவதை அனுமதிக்க மறுத்து, சட்ட ரீதியாக நீதிமன்ற வழக்குகளை சந்திப்பதாக இருந்தால் அனுமதிக்கலாம்' எனப் பிரிட்டிஷ் அரசு பாரதிக்கு எழுதிய பதில் கடிதம், பாரதியின் மனதை ஆழமாகப் பாதித்துள்ளது.

பாரதியின் பாஞ்சாலிசபதம் உறைபொருளில் புதைந்திருந்த மறைபொருள் பாரதியை பாண்டிச்சேரியிலேயே தங்கச் செய்து விடுகிறது. இந்தப் பகுதியில், பாரதியால் எழுதப்பட்டு வெளி யிடப்பட்ட தேசிய இலக்கியங்களுக்கு பிரிட்டிஷ் அரசு விதித்த தடைகளையும் அதற்குண்டான ஆட்சேபனைக்குரிய பகுதிகளைப் பற்றிய விளக்கமும் பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது. இந்ததேசிய இலக்கியங்கள் மூலம் பாரதியின் 'சுதேசியக் கனவு' நின்று போய்விடவில்லை.

பாரதியின் அரசியல் வாழ்க்கைக்கு ஏற்பட்ட நெருக்கடி, அன்றாட வாழ்விற்காக பாரதி இன்னல்கள் என 1913ஆம் ஆண்டு முதல் 1918ம் ஆண்டுவரை பாரதியின் வாழ்க்கை, 'கானல் நீராக' அமைந்திருப்பதை, அவரது புதுவை வாழ்வின் கடைசி ஆண்டுகளின் சான்றுகள் மூலம் பார்க்க முடிகின்றது. இப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள பாரதியின் படைப்புகள் அவற்றின் மீதான பிரிட்டிஷ் அரசின் தாக்குதல்களும், பிரிட்டிஷ் ஆவணங்கள் குறிப்பாக 'லண்டன் நூலகத்தின் மைக்ரோ பிலிம்' ஆவணங்கள், உள்துறை ஆவணங்கள், சென்னை மாகாண ஆவண காப்பகம் மற்றும் பாரதியின் வாழ்க்கை வரலாற்று ஆவணங்களிலிருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய இலக்கியங்களுக்குத் தடை

1911ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசால் கீழ்க்கண்ட ஏழு பிரசுரங்கள் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக செய்திகளை வெளியிட்டுள்ளது என சென்னை போலீஸ் மூலமாகத் தகவல் தெரியப் படுத்தப்படுகிறது. மேற்கண்ட இவ்வறிக்கையை பெற்றுக் கொண்ட சென்னை மாகாண பிரிட்டிஷ் போலீஸ் ரகசிய அறிக்கையொன்றினை தயாரிக்கும்படி சென்னை ரகசிய போலீஸ் இலாகாவிற்கு 1911ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆணையொன்றினை பிறப்பிக்கின்றது.

அந்த ஆணையின் படி சென்னை ரகசிய போலிஸ் தர்ம துப்பு துலக்க ஆரம்பித்தது. ஏற்கனவே பாண்டியிலிருந்து வெளிவந்த ரகசிய செய்திகளை உறுதிப்படுத்தும் வகையில் சென்னை ரகசிய போலிஸ் 1911ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் நாள் சென்னை மாகாண அரசின் தலைமைச் செயலகத்திற்கு ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது. அதன்படி கீழ்க்கண்ட ஏழு சுதேசி பிரசுரங்களின் பெயர்களையும் வரிசைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொன்றையும் வாசித்து அவற்றின் தன்மைகளையும் தனித்தனியாக எடுத்து காட்டியிருந்தது.

1. 'யங் இந்தியா' (நவீன இந்துஸ்தான்) இரண்டு வரிசையில் வெளியான தெலுங்கு சுதேசி வெளியீடுகள்;

2. வைகுண்ட ஏகாதசியன்று சுவாமியின் திருப்பள்ளி எழுச்சி தமிழில் வெளியான சுதேசிப் பிரசுரம்;

3. ஆரியர்களுக்கு ஆலோசனை கூறும் வார்த்தை (A Word of advice to the Aryans) தமிழில் வெளியிடப்பட்ட சுதேசிப்பிரசுரம்;

4. புதிய பாரத அமைப்பில் சேர்க்கைக்கான உறுதிமொழி (Oath of admission to the New Bharatha Association) தமிழில் வெளியிடப்பட்ட சுதேசிப்பிரசுரம்.

5. நியாயபிமானி பாண்டியிலுள்ள காரைக்கால் பகுதியிலிருந்து வெளிவந்த, சுதேசிகளால் நடத்தப்பட்ட தமிழ் தினசரி பத்திரிகை.

6. கனவு (Kanavu) பாரதியால் எழுதப்பட்ட கவிதைகள் மற்றும் தனது சுயசரிதை அடங்கிய சுதேசிப் பிரசுரம்.

7. ஆறில் ஒரு பங்கு (Arilorupongu) புதுவையிலிருந்து பாரதியால் எழுதி வெளியிடப்பட்ட சிறுகதை அடங்கிய பிரசுரம் என ஏழு வகையான சுதேசிப் பிரசுரங்களை பிரிட்டிஷ் அரசின் இந்தியப் பத்திரிகைச் சட்டம் 1910ஆம் பிரிவு 12ன் படியும், கடல் மார்க்க சுங்கவரிச் சட்டம் (1878)ன் பிரிவு 19ன் படியும் குற்றஞ்சாட்டப்பட்டது.

1911ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசால் கண்டுபிடிக்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்ட இந்த ஏழு பிரசுரங்களில் முதல் நான்கு சுதேசிப் பிரசுரங்களை இந்திய பத்திரிகைச் சட்டம் பிரிவு 12 (1) 1910ன் படி தடைசெய்யவும், மற்ற இரண்டு சுதேசிப் பிரசுரங்கள் பிரிட்டிஷ் பகுதியில் வெளியிடப்படாததால், அதே சமயத்தில் இவை இரண்டும் பாண்டியிலிருந்து அதாவது பிரெஞ்சு இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் அரசினால் தேடப்பட்டு வரும் சுதேசி இயக்கத்தைச் சார்ந்த 'காங்கிரஸ் தீவிரவதியுமான சுப்பிரமணிய பாரதியால் எழுதப்பட்டு 191................ஆம் ஆண்டு அதாவது பாண்டியிலுள்ள இந்தியா அலுவலகத்திலிருந்தும் அவர்களது சரஸ்வதி அச்சகத்திலிருந்தும் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டதும்) அதே சமயத்தில், இந்திய பத்திரிக்கைச் சட்டத்தின் வாயிலாக இவ்விரண்டு சுதேசி பிரசுரங்களின் மீது நடவடிக்கை எடுக்கவும் ஆணை பரிந்துரைக்கப்பட்டது.

சென்னை ரகசிய போலீஸாரின் இவ்வறிக்கை சென்னை மாகாண அரசு தலைமைச் செயலரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. SH. ஸ்லேட்டர், சென்னை மாகாண கீழ்நிலைச் செயலரின் ஆணை 1911ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை அட்வகேட் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, இவ்விரு சுதேசிப் பிரசுரங்களையும் தடைசெய்யலாம் என்ற பரிந்துரையின்படி செப்டம்பர் 8ம் நாள் சுப்பிரமணிய பாரதியால் எழுதி வெளியிடப்பட்ட இவ்விரண்டு பிரசுரங்களையும் பிரிட்டிஷ் அரசு தடைசெய்து ஆணை வெளியிட்டது.

தலைமைச் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் பாரதியின் கனவு மற்றும் ஆறில் ஒரு பங்கு ஆகிய இரண்டு சுதேசிப் பிரசுரங்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன. பாரதியின் கனவு (சுயசரிதை) என்ற கவிதை வரிப்பாடல்களின் தன்மை பிரிட்டிஷ் அரசுக்கு எதிரானவையே எனவும், அதே சமயத்தில் கனவு என்ற இந்த படைப்பில் ஒரு தனிப்பட்ட சுதேசியின் சுதந்திரக் கனவுப் பற்றி விளக்குவது போல் கவிதைகளை படைத்து தனது மனதில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய எதிர்ப்பினை வெளிப்படையாக இக்கவிதை வரிகளின் மூலம் தனது சொந்தக் கருத்துக்களை மற்றொரு இந்தியனின் கனவுகளாக சித்தரித்து; ஆங்கிலேயர்களின் கல்வியினை நேரிடையாக சாடும் இந்திய மாணவராக தன்னை மாற்றிக் கொண்டு பாரதி தனது எண்ணங்களை வெகு மோசமாக சித்தரித்து இருக்கிறார் என்றும்; இரண்டாவது வெளியிட்டான ஆறில் ஒரு பங்கு என்ற சிறு நூலில் தேசிய சேவையினை ஆதரித்து, பிரிட்டிஷ் ஆட்சியினைப் பற்றி நேரிடையாக எதிர்க்காமல் இந்தப் படைப்பில் பாரதி மறைமுகமாகச் சாடியுள்ளார் என்ற குற்றச் சாட்டினை பிரிட்டிஷ் அரசு முன் வைத்தது.

கனவு என்ற பிரசுரத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள், இரண்டாவதாக வெளியிடப்பட்ட ஆறில் ஒரு பங்குவில் அமையப் பெறாவிட்டாலும், இவை இரண்டுமே ராஜதுவேஷ கருத்துக்களைக் கொண்டுதான் வெளியிடப்பட்டது என அரசு முடிவு செய்தது. மேலும் பாண்டிச்சேரியில் அச்சிடப்பட்டு, பிரிட்டிஷ் அரசின் அனைத்து தரப்பு கண்காணிப்பையும் மீறி இவ்விருபடைப்புகள், 1911ஆம் ஆண்டு ரகசியமாகச் சென்னை மாகாணத்தில் அதிகமாக விநியோகிக்கப்பட்டிருந்தது.

மதுரை, திருநெல்வேலி மற்றும் செங்கோட்டை போன்ற பகுதிகளில் சுதேசிகளால் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக பிரிட்டிஷ் கட்டுப்பாடுகளையும் மீறி இவ்விரண்டு பிரசுரங்கள், திருநெல்வேலி சதி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் வீட்டிலும் அவர்களது தீவிரவாத போக்கு கொண்ட பாரத மாதா இயக்கக் கிளைகளிலும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி சதி வழக்கு பல வழிகளில் பாரதியின் புதுவை வாழ்விற்கு கேள்விக் குறியினை எழுப்பியுள்ளது. இவ்வழக்கினைப் பற்றிய முழுவிபரம் ஏற்கனவே ‘ஆஷ் கொலை வழக்கும் பாரதியும்’ என்ற தலைப்பில் இப்புத்தகத்தில் மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. பாரதிக்கும் ஆஷ் கொலைக்கும் நேரடித் தொடர்பு இல்லாவிடினும் சுதேசி இயக்கவாதிகள் யாரெல்லம் இச்சதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளனரோ அவர்கள் அனைவருக்கும் பாரதி தொடர்பு உள்ள காரணத்தினால் பாரதியின் புதுவை வாழ்க்கைக்கு இந்த ‘திருநெல்வேலி சதி வழக்கு’ ஒரு பெரும் திருப்பு முனையாக அமைந்தது.

பாரதியின் இவ்விரண்டு படைப்புகளுக்கும் பிரிட்டிஷ் அரசால் கொடுக்கப்பட்ட தடை ஆணையின் ஆங்கில வடிவம் அரசு ஆணை எண் 1588ல் (Judicial - Confidential) நாள் 11 அக்டோபர் 1911இல் வழங்கப்பட்டதை அவ்வாறே தரப்பட்டுள்ளது.

Order No:1588/ Judicial Deptt. Confidential, dt.11 October 1911.

NOTIFICATION (தடை ஆணை)

“The Following Notification will be published in the Fort St. George Gazette:-

Where as the two Tamil Pamphlets specified below; printed and published at Pondicherry, contain matter which,in the opinion of the Governor-in- Council, has a tendency to excite disaffection towards the government and therefore of the nature described in Section4,Sub-Section (1) of the Powers Conferred by section 12, Sub-Section(1), of the said Act, declared that all copies of the publication are foreficted to his Majesty:

Kanavu’, a poem and other songs by C.Subramania Bharathi;

Ariloru pangu, a short story by C.S. Bharathi

Madras
10 October 1911.

H.A. Stuart
Acting Chief Secretary to the
Government of Madras.

தடை ஆணையின் தமிழாக்கம்

“ஆலோசனை நடத்திய கவர்னர் குழுவின் கருத்தின்படி, பாண்டிச்சேரியில் அச்சிட்டு வெளியிடப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு தமிழ் சுதேசிய பிரசுரங்களிலும் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின்பால் பற்றின்மையைத் தூண்டும் தன்மையைக் கொண்டுள்ள விஷயங்கள் அமைந்துள்ளது. எனவே அவை இந்தியப் பத்திரிகைச் சட்டம் 1910, பிரிவு(4), துணைப்பிரிவு (1)ல் தன்மையைக் கொண்டுள்ளது. இதனால் ஆலோசனை நடத்திய கவர்னரின் குழு. பத்திரிகைச் சட்டத்தின் பிரிவு (12), துணைப் பிரிவு (1)ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி இந்த வெளியீடுகளின் பிரதிகள் அனைத்தையும் பறிமுதல் செய்து மாட்சிமை தங்கிய மன்னரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கிறார்.

கனவு – ஒரு கவிதையும் பிற பாடல்களும்
சி.சுப்பிரமணிய பாரதி எழுதியது.

ஆறிலொரு பங்கு ஒரு சிறு கதை
சி.சுப்பிரமணிய பாரதி எழுதியது.

சென்னை
10 அக்டோபர் 1911.

H.A. **ஸ்டுவர்ட்**
சென்னை அரசின் பொறுப்பு
தலைமைச் செயலாளர்.

பாரதி படைப்புகளுக்கு போடப்பட்ட தடை ஆணையானது முறையாக சென்னை மாகாண அரசு, புனித ஜார்ஜ் கோட்டை, அரசு குறிப்பில் உடனடியாகப் பதிவு செய்யப்பட்டு மாகாண மக்களுக்கு பத்திரிகைகளின் மூலம் தெரியப்படுத்தியது. மேற்கண்ட இவ்வாணை வெளியான ஒரு சில வாரங்களில் இத்தடை பற்றிய அனைத்து குறிப்புகளடங்கிய அறிக்கையொன்றினை சென்னை மாகாண அரசு சார்பில் S.H.ஸ்லேட்டர், அரசின் கீழ் நிலைச் செயலாளர், இந்திய கவர்னர் ஜெனரலின் தலைமைச் செயலானருக்கு, 1911ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் நாள் ஒரு கடிதம் மூலம் அனைத்து நடவடிக்கைகளையும் தெரியப்படுத்தி, உள்துறை அலுவலகத்திற்கு முறையான செய்திகள் அனுப்பி பாரதியின் இப்படைப்புக்களை இந்தியா முழுவதும் தடைசெய்யக்கோரி இந்திய அரசு உள்துறைச் செயலருக்குப் பரிந்துரைத்தார்.





இந்திய அரசு உடனடியாக ஆவண செய்து, மேற்கொண்டு சென்னை மாகாண அரசின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்ட இவ்வகையான சுதேசிப் பிரசுரங்கள் வெளியிடா வண்ணந்தக்க நடவடிக்கை எடுக்க ஆணையிட்டது. அதோடு நிற்காமல், பிரிட்டிஷ் இந்தியா முழுவதுமுள்ள மாகாண அரசுகளுக்கும் இத்தடை ஆணையை வேண்டி சென்னை மாகாண அரசிற்கு தெரியப்படுத்தி,

ஒவ்வொரு மாகாண அரசின் அரசு குறிப்புகளிலும், பாரதியின் இப்படைப்புகளுக்கு வழங்கப்பட்ட தடையினை பிரசுரிக்க ஆணையிட்டது.

பாரதியின் கனவு மற்றும் ஆறில் ஒரு பங்கு ஆகிய இரண்டு சுதேசிப் படைப்புகளிலும், அரசு அஞ்சும் வண்ணம் எந்தவொரு ராஜதுவேஷ விஷயங்கள் குறிப்பிடப்படவில்லை. எனினும் இவை இரண்டும் பாரதியால் எழுதி வெளியிடப்பட்ட காரணத்தினால் தான் இத்தண்டனை வழங்கப்பட்டது என்பது புதுவையில் உள்ள சுதேசிகளுக்கு நன்றாகத் தெரியும்.

பாரதியின் கனவுக்குத் தடை

1910ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின் பாரதியின் தேசியப்பணி சற்று பின்னடைவைக் கண்டது. 1908ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ஆம் நாள் முதல் புதுவையிலிருந்து வெளிவந்த இந்தியா இதழின் வாயிலாக நாட்டின் விடுதலைக்காகப் பல கட்டுரைகளையும், கவிதைகளையும், கருத்துப் படங்களையும் வெளியிட்டு, அப்பத்திரிகைகளை பெரும்வாரியாக பிரிட்டிஷ் இந்தியா பகுதிகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். ஆனால் பாரதியால் இத்தேசியத் தொண்டினை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை.

1908ஆம் ஆண்டு வரை சென்னையிலிருந்து வெளியான இந்தியா இதழ்கள், பிரிட்டிஷ் அரசின் சட்டங்களின் படி, 1908ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை வெளிவந்த இதழ்கள் பிரிட்டிஷாரின் ஏகாதிபத்ய உணர்வுகளால் உந்தப்பட்டு, கைது ஆணை பிறப்பிக்கப்பட்டதால் இந்தியா இதழ்களின் வரவு நின்று போனது.

அதன் விளைவாக பாரதி புதுவை வரவேண்டிய நிலை ஏற்பட்டது. புதுவையிலிருந்து தனது வெற்றிப் பணியினைத் தொடர்ந்து நடத்தி, இந்திய மக்களிடையே தேசியவாதத்தினைத் தொய்வின்றிக் கொண்டு சென்ற பாரதிக்கு 1910ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்திய அரசின் புதிய பத்திரிகைச் சட்டம் இந்தியா பத்திரிகையின் எதிர்காலத்தைத் தடுத்து நிறுத்தியது. ஆயினும், பாரதி தனது தேசியப் பணியினை ஒருபோதும் விட்டுக் கொடுத்துவிடவில்லை.

இந்தியா பத்திரிகை 1910ஆம் ஆண்டு ஏப்ரலில் நிறுத்தி வைக்கப்பட்டதும், பாரதி பல்வேறு வழிகளில் தனது எழுத்துப் பணிகளை தொடர்ந்து நடத்தி வந்தார். இந்தியா இதழ்களுக்காக எழுதி வைக்கப்பட்டிருந்த தேசியக் கவிதைகள் மற்றும் சிறுகதைகள் எனப் பல படைப்புகளைப் பாரதி படைத்துக் கொண்டிருந்தார். பத்திரிகையில் வர இயலாத சில கவிதை மற்றும் கதைத் தொகுப்புகளை சிறுசிறு பதிப்புகளாகவும், பிரசுரங்களாகவும் வெளியிட்டு அவற்றையெல்லாம் பிரிட்டிஷ் இந்தியாவிற்கு மறைமுகமாக அனுப்பிக் கொண்டிருந்தார்.

1911 ஜூன் மாதத்திற்குப் பின் பாரதியின் ஒவ்வொரு நடவடிக்கையையும் பிரிட்டிஷ் அரசு, பிரெஞ்சு அரசின் உதவியோடு கண்காணித்து வந்தது. இச்சூழ்நிலையில்தான் இந்தியா மற்றும் விஜயா போன்ற பத்திரிகைகள் அச்சிடப்பட்ட சரஸ்வதி அச்சகத்திலிருந்து கனவு, என்ற தலைப்பில் ஒரு சுதேசிப் பிரசுரமும், ஆறில் ஒரு பங்கு என்ற தலைப்பில் ஒரு சிறுகதைப் தொகுப்பும் 1910 மற்றும் 1911ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

பாரதியின் கனவு (சுயசரிதை) என்னும் தொகுப்பு, பாரதியின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் ஒரு சுய விமர்சன கவிதைத் தொகுப்பாகும். கனவு என்ற தலைப்பில் வெளியான அக்கவிதைத் தொகுப்பினை முதலில் நாம் நன்றாக தெரிந்து கொண்டால்தான் அதிலுள்ள கருத்துக்களில் தேசியவாதமும். ஏகாதிபத்ய எதிர்ப்பினையும் பாரதி எவ்வாறு இணைத்து கருத்து கூறியிருக்கிறார் என்பதனை காணமுடியும்.

சுயசரிதை
கனவு

“பொய்யாப் பழங்கதையாய்க் கனவாய்
மெல்லப் போனதுவே” –பட்டினத்துப் பிள்ளை



முன்னுரை

வாழ்வு முற்றும் கனவெனக் கூறிய
    மறைவ லோர்தம் உரைபிழை யன்றுகாண்
தாழ்வு பெற்ற புவித்தலக் கோலங்கள்
    சாத மன்றெனல் யானும் அறிகுவேன்;
பாழ்கடந்த பரநிலை யென்றவர்
    பகரும் அந்நிலை பார்த்திலன் பார்மிசை;
ஊழ்க டந்து வருவதும் ஒன்றுண்டோ?
    உண்மை தன்னிலோர் பாதி யுணர்ந்திட்டேன்

மாயை பொய்யெனல் முற்றிலும் கண்டனன்;
    மற்றும் இந்தப் பிரமத் தியல்பினை
ஆய நல்லருள் பெற்றிலன்; தன்னுடை
    அறிவி னுக்குப் புலப்பட லின்றியே
தேய மீதெவ ரோசொலுஞ் சொல்லினைச்
    செம்மை யென்று மனத்திடைக் கொள்வதாம்
தீய பக்தி யியற்கையும் வாய்ந்திலேன்;
    சிறிது காலம் பொறுத்தினுங் காண்பமே.

உலகெ லாமொர் பெருங்கன வஃதுளே
    உண்டு றங்கியி டர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கை யோர்
    கனவி லுங்கன வாகும்; இதனிடை
சிலதி னங்கள் உயிர்க்கமு தாகியே
    செப்பு தற்கரி தாகம யக்குமால்;
திலக வாணுத லார்தரு மையலாந்
    தெய்விக க்கன வன்னது வாழ்கவே

ஆண்டோர் பத்தினில் ஆடியும் ஓடியும்
    ஆறு குட்டையின் நீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத் தேறியி றங்கியும்
    என்னொ டொத்த சிறியர் இருப்பரால்
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
    வீதி யாட்டங்க ளேதினுங் கூடிலேன்
தூண்டு நூற்கணத்தோடு தனியனாய்த்
    தோழ மைபிறி தின்றி வருந்தினேன்.

மேற்கண்ட வரிகளில், ஹுணர்களின் (ஆங்கிலேயர்களின்) அருமையான கல்வித் திட்டத்தை வர்ணிக்கும் அவரது தந்தை பாரதியை திருநெல்வேலிக்கு ஆங்கிலக் கல்வி பயில அனுப்பி வைக்கிறார். இந்த வேடிக்கையான நிகழ்ச்சியைப் பாரதி, “சிங்கக் குட்டியைப் புல் தின்னச் சொல்வது போலுள்ளது'' எனக்கூறி, “பார்ப்பனச் சிறுவன் ஒருவனை மாட்டுக்கறி விற்பதற்கு அனுப்புவது போல் உள்ளது'' எனவும், இந்தப் பணியினைச் சிறந்தது எனக் கூறும் எனது தந்தை' என்றுரைத்து “எனது தந்தையார் என்னை பிரயோஜனமில்லாத ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்காக, தேவையில்லாத இப்பணியினைத் தனக்குப் பெற்றுத் தர விழைகிறார் என்று பாரதி சாடுகிறார்.

இந்த ஆங்கிலக் கல்வியால் நாய்கள், பன்றிகள் விரும்பும் தொழிலைத்தான் செய்யமுடியும் என்றும், உயர்ந்த தரம் என மதிக்கப்படும் இக்கல்வியால் மிகச்சாதாரண பணிகளைச் செய்யும்

பணியாட்களை மட்டுமே உருவாக்க முடியும், அதனால் வாழ்க்கையில் எந்தவொரு பிடிப்பும் இல்லாது, வெறும் ஒரு நாள் சாப்பாட்டிற்கு மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற நிலையை உருவாக்கித் தரும் இந்த ஆங்கிலக் கல்வியை, மோசமான மனிதர்களால் கொண்டு தரப்படும் இந்த ஆங்கிலக் கல்வியை எனது மனம் எப்படி ஏற்றுக் கொள்ளும்? இந்தத் தவறைச் செய்யச்சொல்லி எனது தந்தையும் என்னை வற்புறுத்துகிறார்'' என்று குற்றஞ்சாட்டுகிறார்.

பிரிட்டிஷ் அரசின் தமிழ் மொழி பெயர்ப்பாளர், கனவு கவிதைத் தொகுப்பிலுள்ள இருபத்தியொன்றாம் கவிதைப் பகுதியில், பாரதியின் ஆங்கிலக் கல்வி எதிர்ப்புப் பாணியை எடுத்துரைத்து, ஆங்கிலேயர்களை 'ஹுணர்கள்' என்று பாரதி வர்ணிப்பதாகவும், ஆங்கிலக் கல்வி பயில்வது என்பது ஒரு சிங்கக்குட்டி புல்லை தின்பதற்கு உகந்ததாகவும், ஓர் பார்ப்பனன் மாட்டிறைச்சித் தொழிலைச் செய்வதற்கு ஒப்பானதாகவும்; ஆங்கிலக் கல்வியினைப் பயின்றால் எந்தவொரு அறிவும் கிட்டாது எனவும்; இந்தக் கல்வி முறையினால் சாதாரண வேலைப் பணியாளர்களை உருவாக்க மட்டுமே முடியும் என்றும்; நாய்களும், பன்றிகளும் ஒரு துண்டு ரொட்டிக்கு அலைவது போல் ஆங்கில மோகம் கொண்டவர்கள் இந்தக் கல்வியினைப் பயில்வதற்கு பிரியப்படுகின்றனர்.

அப்பேற்பட்ட பிரயோசனமில்லாத இந்த ஆங்கிலக் கல்வியை கற்க வேண்டுமென்று தனது தந்தை வற்புறுத்துகிறார் என்று பாரதி கருத்து கூறுகிறார். இக்கவிதை வரிகளை மொழிமாற்றம் செய்து ஆங்கிலேயர்களை 'ஹுணர்கள்' என அழைத்தது, முதல் குற்றமாகவும் ஆங்கிலக் கல்வி யினை விமர்சிப்பது அடுத்த குற்றமாகவும் கருதி சென்னை மாகாண அரசுக்கு தமிழ்மொழி பெயர்ப்பாளர் குறிப்பு எடுத்து அனுப்பினார்.

இதைத் தொடர்ந்து இருபத்தி மூன்றாம் கவிதைத் தொகுப்பு பகுதியில் பாரதி இதைப் பற்றி மேலும் விளக்குகிறார் என்பதனை கட்டிக் காட்டப்படுகிறது.

கேட்டறிந்த சென்னை மாகாண தலைமைச் செயலரது அலுவலகம், அரசின் கீழ்நிலைச் செயலரது கருத்தினைப் பெற ஆணை பிறப்பித்தது. கீழ்நிலைச் செயலாளரான எஸ்.ஏ. ஸ்லேட்டரது, ஆலோசனைப்படி பாரதியின் கனவு (சுயசரிதை) கவிதைத் தொகுப்பில், சட்டவிரோத விஷயங்கள் உண்மையிலேயே எழுதப்பட்டிருக்கிறது என்றும் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியினைப் பற்றியும், ஆங்கிலக் கல்வியினைப் பற்றியும் தவறான பிரச்சாரங்களை மேற்கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டி 1911ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் நாள் பாரதியின் கனவுக்கு அரசு தடைவிதித்தது. அந்தத் தடையினை புனித ஜார்ஜ் கோட்டை அரசுக் குறிப்பில் பிரசுரிக்க வேண்டி பிரிட்டிஷ் அரசு ஆணை பிறப்பித்தது.





சென்னை மாகாணம் மட்டுமின்றி, பிரிட்டிஷ் இந்தியா எல்லைக்குள்ளான எல்லைப் பகுதியிலும் இந்தக் கவிதை தொகுப்பு பிரசுரம் விநியோகிக்கப்படக்கூடாது எனவும், அவ்வாறு அவை விநியோகிக்கப்பட்டால், பிரிட்டிஷ் காவல் துறை சார்பில் நடவடிக்கை எடுத்து, இந்தப் புத்தகங்கள்

அனைத்தும் பறிமுதல் செய்ய வேண்டுமெனவும் இந்தியப் பத்திரிகைச் சட்டம் 1910ன் படி அறி வித்தது.

“பாரதியின் கனவுத் தொகுப்பில் உண்மையிலேயே ராஜத்துவேஷக் கருத்துக்கள் அதிகம் இல்லாதிருந்தாலும் அதை எழுதியதும், பிரசுரித்ததும் பாரதி தான்! எனவே இந்தத் தடையானது சரியானதுதான்’’ என எஸ்.ஏ. ஸ்டேட்டர் தனது கருத்துக்கு நியாயப்படுத்தி பேசினார். ஆனால், பாரதியின் மற்றொரு வெளியீடான ஆறில் ஒரு பங்கு என்ற சிறுகதையின் மீதான தடை முற்றிலும் மாறுபட்டது. பாரதியின் இவ்விரண்டு படைப்புகளும் ஒரே சமயத்தில் பாண்டிச்சேரியிலிருந்து இந்தியா பத்திரிகை அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்டது.

பாரதியின் முதல் தொகுப்பு நூலான கனவு என்பது, ஒரு கவிதைத் தொகுப்பு நூல், ஆனால் இரண்டாவதான இந்தப் பிரசுரம் ஒரு சிறு கதை. ஆறில் ஒரு பங்கு என்னும் இந்தச் சிறுகதையில் புனையப்பட்டிருக்கும் பாத்திரங்கள் அனைத்தும் இயல்பான பாத்திரங்களாகவேயிருப்பினும், பாரதி இந்தப் பாத்திரங்களின் வாயிலாக தேச விரோத கருத்துக்களை தூவ விட்டிருக்கின்றார். இந்த மாதிரியான சிறுகதை வெளியீடுகள் இந்திய மக்கள் மனதில் தேசப்பற்றினையும் பிரிட்டிஷ் எதிர்ப்புக் கோஷங்களையும் ஏற்படுத்திவிடும்.

எனவே, இவ்விரண்டு வெளியீடுகளையும் தடைசெய்து இவ்விரண்டு வெளியீடுகளும், தரைமார்க்கமாகவோ கடல் மார்க்கமாகவோ அல்லது அஞ்சல் வழியின் மூலமாகவோ பிரிட்டிஷ் இந்திய சென்னை மாகாணத்திற்கு வரவழைக்கப்பட்டு விநியோகிக்க விடாமல் தடுத்து நிறுத்தும் முகமாக கடல் மார்க்க சுங்கவரிச் சட்டம் 1878 மற்றும் இந்திய பத்திரிகைச் சட்டம் 1910 ஆகிய இவ்விரண்டு சட்டங்களின் பிரிவுகளின்படி மேற்படி படைப்புகள் தடைசெய்யப்பட்டது. ஆறில் ஒரு பங்கு, கனவு என்ற கவிதை நூலினைக் காட்டிலும் அதிக பக்கங்களைக் கொண்ட சுதேசிப் பிரசுரமாகும்.

பாரதியின் ஆறில் ஒரு பங்குவிற்குத் தடை

ஆறில் ஒரு பங்கு என்ற சிறுகதை நூல் பாரதியால் 1910ஆம் ஆண்டு எழுதி வெளி யிடப்பட்டது. ஜாதி, மத உணர்வுகளுக்கு அப்பால் ‘ஒரு புதிய இந்தியா’ என்ற இலக்கில் பாரதியால் படைக்கப்பட்டது. ஏறக்குறைய முப்பத்தி ஏழு பக்கங்களைக் கொண்டு வெளியிடப்பட்டது. ஆறில் ஒரு பங்கு என்ற சிறுகதை நூலில் தேசிய சேவை செய்ய வேண்டுமெனில் ஒருவன் பிரம்மச்சாரியாக இருந்தாக வேண்டிய அவசியம் இல்லை. காதலித்துக் கருத்தொருமிக்க இருவர் கோவிந்தராஜன் மற்றும் மீனாம்பாள், இவ்விருவரையும் பாத்திரங்களாகப் படைத்து, இவ்விருவருக்குள் ஏற்பட்ட காதல், வந்தே மாதர போராட்டத்தின் காரணமாகத் திசைதிருப்புவதை சுட்டிக் காட்டி, கருத்தொற்றுமைமிக்க இவ்விருவருமே தேசியப் பணியில் ஈடுபடலாம். இதனால் பாரதமாதாவிற்கு ஒரு தொண்டனுக்குப் பதிலாக இரண்டு தேசாபிமானிகள் கிடைப்பார்கள்’’ என்ற கருத்தினைத்தான் பாரதி ஆறில் ஒரு பங்கு என்ற இந்த கதையில் வலியுறுத்தியிருக்கிறார். பிரிட்டிஷ் அரசு இந்த நூலினைத் தடைசெய்யும் அளவிற்கு சுதேசிக் கருத்துகள் பாரதியால் எழுதப்படவில்லை.

இந்தச் சிறுகதையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யக் கருத்துகள் அதிகம் இல்லாவிடினும் ‘இதை எழுதியது பாரதி’ என்பதினால் இந்நூலின் பல இடங்களில் சட்டவிரோத கருத்துக்கள் அதிகமிருப்பதாக சுட்டிக்காட்டி 1911ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியா அரசால் தடை செய்யப்பட்டது. எந்தெந்தப் பகுதிகளில் சட்டத்திற்கு மீறிய கருத்துக்கள் பாரதியால் படைக்கப்பட்டிருகின்றது என்பதைக் காண வேண்டுமாயின் முதலில் ஆறில் ஒரு பங்கு என்னும் அச்சிறுகதையின் முழுவடிவத்தினை நன்கறிந்தால்தான், அதில் எந்த அளவிற்கு ராஜதுவேஷ கருத்துக்கள் இடம் பிடித்திருக்கின்றன என்ற கேள்விக்கு விடை காணமுடியும்.

1910இல் பாரதியின் இந்தியா மற்றும் சூர்யோதயம் போன்ற பத்திரிகைகளின் மீதான தடைக்குப் பின்னால் வெளியிடப்பட்டதென்பதால் பாரதியின் முழுக்கவனமும் இந்நூலின் உருவாக்கத் திலிருந்திருக்க வேண்டும். அதே நோக்கத்தில்தான் பிரிட்டிஷ் அரசின் நிர்வாகமும் பாரதியின்







படைப்புகளை உற்றுநோக்கி வந்தது. அவ்வகையில் ஆறில் ஒரு பங்கு என்ற இச்சிறுகதையும் சிக்கிக் கொண்டது எனலாம்.

ஆறில் ஒரு பங்கு

முகவுரை

ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி; வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது; வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது.

இந்த உணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத்தன்மையும் கொடுக்கும். “நாய; பந்தா வர்ததே அயநாய” வேறு வழியில்லை.

இந்நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத்தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

அத்தியாயம் 1

ஆசிரியன்.

மீனாம்பாள் வீணை வாசிப்பதிலே ஸரஸ்வதிக்கு நிகரானவள். புரசைவாக்கத்திலுள்ள எங்கள் வீட்டிற்கு அவள் வரும் சமயங்களிலெல்லாம் மேல் மாடத்து அறையை அவளுடைய உபயோகத்துக்காகக் காலி செய்து விட்டுவிடுவது வழக்கம். நிலாக் காலங்களில் இரவு எட்டு மணிக்கெல்லாம் போஜனம் முடிந்துவிடும். ஒன்பது மணி முதல் நடுநிசி வரையில், அவள் தனது அறையில் இருந்து வீணை வாசித்துக் கொண்டிருப்பாள். அறைக்கு அடுத்த வெளிப்புறத்திலே பந்தரில், அவளுடைய தகப்பனார் ராவ்பகதூர் சுந்தரராஜுலு நாயுடு கட்டிலின்மீது படுத்துக் கொண்டு, சிறிது நேரம் வீணையைக் கேட்டுக் கொண்டிருந்து, சீக்கிரத்தில் குறட்டை விட்டு நித்திரை செய்யத் தொடங்கி விடுவார். ஆனால், மகாராஜன் குறட்டைச் சத்தத்தால் வீணை சத்தம் கேளாதபடி செய்து விடமாட்டார்:

‘வந்தேமாதரம்’ என உச்சரிப்பதும், அந்த அமைப்பில் இணைந்து கொண்டு செயல்படுவதும் ஆங்கிலேய அரசினைப் பொறுத்த மட்டில் சட்டத்திற்குப் புறம்பான செயலாகும் என்பதைப் பாரதி தைரியமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் ஐந்து அத்தியாயங்களைக் கொண்டிருக்கும் இச்சிறுகதையின் நான்காவது அத்தியாயத்தில் பிரிந்துபோன நாயகியின் மறுபிரவேசத்தை எடுத்துக்காட்டி, அந்தப் பெண்ணையும் வந்தே மாதரம் கூட்டத்துடன் இணையச் செய்து, ஊர்விட்டு ஊருவந்து, மீண்டும் தனது உற்ற காதலனைச் சந்திக்கச் செய்யும் அக்கோலத்திலும் கூடப் பாரதி, ‘இந்த இரண்டு காதல் சின்னங்களும் சுதேசியம் பாடி வந்தே மாதரம்’ கூட்டத்தினரால், காசியில் மீண்டும் இணைந்து, தேச ஊழியம் செய்வது எனத் தீர்மானிக்கின்றனர் என்று முடிக்கிறார்.

சிறுகதையின் முடிவிலும், பாரதி சுயராஜ்யக் கருத்துக்களை விடாது, காதலர்கள் இணைந்தாலும் அவர்கள் இருவரும் உயரிய நோக்கத்திற்காகப் பாடுபடப் போவதாக அறிவித்து, ‘இரண்டு ஜீவன்கள் பாரதமாதாவின் சேவைக்காக லயப்பட்டன. பிரகிருதி வடிவமாகத் தோன்றிய மாதாவின் முகத்திலே புன்னகை காணப்பட்டது. ‘வந்தே மாதரம்’ எனப் பாரதி முடிக்கின்றார்.

இவ்வரிகளிலும் பாரதி சுதேசிக் கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, சிறுகதையின் முடிவினை சுயராஜ்ய பாதைக்கு இட்டுச் செல்லும் படியாக அமைத்து, இச்சிறுகதையினைப் படிக்கும் அனைத்து தமிழ் மக்களும், பொருளை உணர்ந்து தேச சேவை புரிதல் வேண்டுமென்ற ஒரு அறை கூவலை பாரதி வெளிப்படுத்தியிருப்பது சட்டத்திற்குப் புறம்பான பணியாகும் என பிரிட்டிஷ் ரகசிய போலீஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆறில் ஒரு பங்கு என்ற சிறுகதையில் பாரதி, ராஜதுவேஷ கருத்துக்களை தூவ விட்டதுமட்டுமல்லாமல், பிரிட்டிஷ் ஆட்சியினை ஏளனப்படுத்தி எழுதியும், நிர்வாகத்தின் குறைகளைத் தெரியப்படுத்தியும், மக்களிடையே நிலவிவரும் சுதேசிய சிந்தனைகளை மென்மேலும் வளர்க்கும் ஒரு சக்தியாகவும் இச்சிறுகதையினை பாரதி படைத்திருக்கிறார்.

உண்மையிலேயே, பாரதியின் படைப்புகளிலேயே மேலும் மிகக் குறைவாக சுதேசியம் பேசப்பட்ட இலக்கியப் படைப்பு என்பது ஆறில் ஒரு பங்கு எனும் சிறுகதையாகும். இச்சிறுகதையானது பாரதியின் பார்வையில், பிரிட்டிஷ் எதிர்ப்பிற்காக மட்டுமே எழுதப்பட்டதல்ல.

தீண்டாமையைத் தவிர்த்திட வேண்டி, அவற்றால் ஏற்பட்டுள்ள நிலைமைகளை மையப்படுத்தி அனைவரும் சமூகத்திற்கு முன் சமம் மாறாக பாரத தேசத்தில் நிலவி வந்த ‘சமுதாயச் சீர்கேடான என்ற நிலையைக் கொண்டு வருவதன் மூலமே சுயராஜ்யம் அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் பாரதி இச்சிறுகதையினை அமைந்திருப்பதை அறிந்தும், இந்தச் சிறுகதையினை 1911ஆம் ஆண்டு இந்தியப் பத்திரிகைச் சட்டம் (1910) பிரிவுகளின்படி தடைசெய்யக் கோரியும், இதனுடைய விநியோகத்தினைப் பாண்டியிலிருந்து சென்னைக்கு வரவிடாமல் இந்திய கடல்மார்க்க சுங்கவரிச் சட்டம் பிரிவு 19இன் படி (1878)யும் தடைசெய்ய வேண்டி கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஆறில் ஒரு பங்கு 1911ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

1910ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெளிவந்த இந்நூல் சென்னை மாகாணமெங்கும் விநியோகிக்கப்பட்டிருந்தது. 1911ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதிதான் தடை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதியின் ஆப்த நண்பர் ஆர்யா!

- கடற்கரய் மத்தவிலாச அங்கதம்

சாயாஜி ஷிண்டே நடித்த 'பாரதி' படத்தை என்னைப்போல் பலரும் பார்த்திருக்கலாம். அந்தத் திரைப்படத்தின் ஆரம்பக் காட்சி பாரதியின் இறுதிச் சடங்குடன்தான் ஆரம்பமாகும். ஒரு பக்கம் 'குவளைக் கண்ணன்' தேம்பித் தேம்பி அழுவார். மறுபக்கம் பாதிரியார் உடையில் சுதேந்திரநாத் ஆர்யா குலுங்கிக் குலுங்கிக் குமுறுவார். பின் தன் உஷ்ண உரையால் அக்காட்சிக்கு கனம் கூட்டுவார். இக்காட்சிக்கு இடையில் ஒத்த நாடி தேகத்தைக் காட்டியபடி கனகலிங்கம் விசும்பிக் கொண்டு நிற்பார். கல் நெஞ்சரையும் கரைக்கும் காட்சிகள் இவை.

குவளைக் கண்ணன் வேடத்தில் தோன்றியவர் பிரபல இயக்குநர் டி.பி.கஜேந்திரன். இவரை 'குவளையூர் கண்ணன்' எனப் பாரதியே இவரைப் பாடியுள்ளார். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை பாரதியைத் தாக்கியபோது கம்பி கிராதிகளைத் தாண்டிக்குதித்துப் போய் தோளில் சுமந்த கர்மவீரர் இவர். 'ஆர்யா தோற்றத்தில் நடித்தவர் 'நிழல்கள்' ரவி. இந்த இரு நடிகர்களையும் தமிழ் மக்கள் அறிவர். ஆனால் பாரதியை அறிந்தோர்கூட அறியாத மனிதர் ஆர்யா.

இத்திரைப்படக் காட்சி முன்வைப்பதைப்போன்று பாரதியின் இறுதிச் சடங்கில் கனகலிங்கம் பங்கேற்கவில்லை. இவர் பாரதி இறந்த நாளில் சென்னையில்தான் இருந்தார். ஆனால் தகவல் கிடைக்காததினால் அவர் சடங்கில் பங்குபெறவில்லை. அதேபோல் ஆர்யா மயான களத்தில் நின்று தமிழில் பேசவில்லை அவர் தெலுங்கில் பேசினார். இப்பிழைகள் படத்தில் நடந்தவை.

சுரேந்திரநாத் ஆர்யா

மற்றொரு பிழை சரித்திரத்தில் நடந்தது. மாபெரும் பீரங்கிப் பேச்சாளன் ஆர்யா அடையாளம் தெரியாமல் வரலாற்றுப் புழுதியில் புதைக்கப்பட்டார். பாரதியின் சென்னை வாழ்க்கையில் அவருடன் போராட்டக் களத்தில் நின்ற ஆப்த நண்பர் ஆர்யா. விபின சந்திரபால் மீது விருப்புக் கொண்டு சுதந்திரப் போரில் அடியெடுத்து வைத்த ஆர்யா, பின் சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து தன் இறுதிக் காலத்தை முடித்துக் கொண்டவர்.

சுருங்கச் சொன்னால் அவரைச் சுதேசிகள் கைவிட்டனர். சுயமரியாதைச் சுடர்களும் மறந்தனர். இந்த இரண்டிற்கும் இடையில்தான் ஆர்யாவின் சரித்திரம் புதைந்துள்ளது. காலனிய காலத்து ஆவணங்கள் ஆர்யாவைக் கண்டு அஞ்சி நடுங்கிய காலம் உண்டு. பாரதியையும் ஆர்யாவையும் அவர்கள் மனித உருவில் நடமாடும் ஆபத்தான நபர்கள் எனக் கணித்தனர்.

அன்றைய ‘மூர்’ மார்க்கெட்டில் பாரதி, தன் செந்தமிழால் அனல் பறக்கப் பாடுவார். ஆர்யா அவர் அருகே நின்று சுந்தரத் தெலுங்கில் தீப் பறக்கப் பேசுவார். இந்த இருவரும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக இயங்கிய இரட்டைக்குழல் துப்பாக்கி.

ஆர்யா தான் பயணித்த ஊர்களில் எல்லாம் சுதேசியம், அந்நிய உடை பகிஷ்கரிப்பு என இடைவிடாமல் பிரச்சாரம் செய்த பிரசங்கி. 1904 இல் பாரதி சென்னைக்கு வந்தபிறகு ‘சென்னை ஜனசங்கம்’ ஆர்யாவை அவருக்கு அடையாளம் காட்டியது.

பாரதி மற்றும் ஆர்யாவின் மூர் மார்க்கெட் பேச்சுக்கள் ஆங்கில ஆட்சிக்கு பங்கம் விளைவித்து, பொது அமைதியைக் கெடுத்து வருவதாக 1908ஆம் ஆண்டு மார்ச் மாதம் சென்னை நகரக் காவல்துறை ஆணையர் அரசுக்குப் புகார் கடிதம் எழுதினார்.

அதில், “பொது அமைதிக்குக் கேடு விளைவித்துச் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க மக்களைத் தூண்டும் செயலுக்குச் சுப்பிரமணிய பாரதி, எத்திராஜ் சுதேந்திரநாத் ஆர்யா ஆகிய இருவரும்தான் பொறுப்பு என்பதற்கான போதிய சான்றுகள் இருந்தால் உடனடியாக அவர்கள் பேரில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனத் தெரிவித்தார்.

பாரதி சென்னையைவிட்டு அகலும் வரை ஆர்யாவின் அரவணைப்பு அவரை நிழல்போல் தொடர்ந்தது. செந்தமிழ் புதுவைக்குப் பாரதி தப்பிச் சென்ற காலத்தில் ஆர்யா கைது செய்யப்பட்டார். சிறைவாசம் பெற்றார். தண்டனைக் காலம் முடிந்த பிற்பாடு ஆர்யா, புதுவைச் சென்று பாரதியைச் சந்தித்ததாக சகுந்தலா தனது நூலில் குறிப்புகள் உள்ளன.

சிறை ஆர்யாவின் உடல் வலிமையைக் குறைத்தது. மன உறுதியையும் குலைத்தது. அவர் வேதாகமத்தைத் தழுவியதைக்கேட்டு பாரதி தூண்டில் புழுவாய்த் தவித்தார். பின் அமெரிக்கா போன ஆர்யா, அங்கு ஆங்கில மாது ஆன ஒகிலி மார்த்தா என்பவரை மணந்தார். இவர்கள் இருவரும் மருத்துவர்கள்.

புதுவை அடைக்கலம் முடிந்து பாரதி வெளியேறியபோது கடலூர் சிறை அவரை அடைத்தது. பின் விட்டு விடுதலையாகி சிட்டுக் குருவியைப்போலக் கடையம் பறந்த அவர், இறுதியில் பிழைப்பு வேண்டி குடும்பச் சகிதமாக மீண்டும் மதரா சபட்டனம் புகுந்தார். அப்போது ஆர்யாவின் வேப்பேரி ரண்டல்ஸ் சாலை பங்களாதான் அவரது குடும்பத்தாருக்கு அடைக்கலம் நல்கியது. அவ்வீட்டை ஒட்டி வசித்தவர்கள் தங்களை 'வேதாகமத்திற்கு மாறிவிட்டீர்களா?' என வினவியதாக சகுந்தலா பகிர்ந்துள்ள தரவுகள் பேசுகின்றன.

பாரதியின் இரு புதல்வியர்

1921இல் வயிற்றுப் போக்கில் தாளாது தத்தளித்த பாரதிக்குச் சிகிச்சை அளித்தவர்களில் ஆர்யாவும் ஒருவர். பாரதியின் இறுதி மூச்சுக் காற்றில் கரைந்த நள்ளிரவில் செய்வதறியாது நின்றவர்களில் ஆர்யாவும் ஒருவர். ஆனால் பாரதி நண்பர்கள் பட்டியலில் பலரும் அவருக்கு உரிய இடம் அளிப்பதில்லை.

வ.ரா.வை அறிந்த அளவுக்கு ஆர்யாவுக்கு உரிய அறிந்தேற்பு கிடைக்கவில்லை. பாரதிதாசனை பேசிய அளவு இந்த எத்திராஜ்லு சுதேந்திரநாத் ஆர்யாவை யாரும் பேசியதில்லை. பாரதியின் நண்பர்கள் குறித்த ஆவணங்களை ஏறக்குறைய 2008 தொட்டு சீராகத் தேடிவருகிறேன். பல தரவுகளைக் கண்டறிந்து பதிப்பித்தும் இருக்கிறேன்.

ஆனால் ஆர்யாவைப் பற்றிக் கிடைக்கக்கூடிய தகவல்கள் அரிதாகவே உள்ளன. பிரிட்டிஷ் ஆவணங்களில் பாரதியின் உற்ற தோழனாகவும் அரசியல் களப் போராளியாகவும் தொடர்ந்து குறிப்பிடப்படுகிறார் ஆர்யா என்பது ஒரு முக்கியமான அம்சம். அதன்பொருட்டு அவர் மீது நமக்கு வியப்பு பெருக்கெடுக்கிறது.

பழங்கால '**குடிஅரசு**' ஆவணங்களில் ஆர்யாவும் பாரதியின் பிறிதொரு நண்பரான தோழர் சக்கரை செட்டியாரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக குறிக்கப்படுகிறார்கள். பாரதியை மிகக்கடுமையாக விமர்சித்த பெரியார், அவரது சக தோழர்களான இந்த இருவரையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதைப் பதிவு வழியே அறிகிறோம்.

சித்திரபுத்திரன் '**குடிஅரசு**'வில் 04.07.1928 பதிவில் ஒன்றில், ஆரியா மற்றும் அவரது சகாவான சக்கரைச் செட்டியார் குறித்தும் பேசப்படும் தகவல்களைப் பார்ப்போம்.

"வங்காளப் பிரிவினையின் காரணமாக இந்தியாவெங்கும் ஏற்பட்ட 'சுதேசி' கிளர்ச்சியின்

போதே சக்கரைச் செட்டியாரும் சுதேந்திரநாத் ஆரியாவும் சென்னை மாகாணத்தின் (தமிழ்நாட்டில்) மேடை மீதேறி தைரியமாய்ப் பிரசங்கம் செய்த பார்ப்பனரல்லாத வீரர்கள். தேசத்தின் உழைப்பிற்காகவும், உழைத்ததின் பலனாகவும், தாங்கள் தங்கள் வரும்படிகளை விட்டவர்கள்.

உண்மைத் தேசாபினாம் என்பது இவ்விரு கனவான்களுக்கும் இல்லாதிருந்து பார்ப்பனர்கள் போலும் மற்றும் இரண்டொரு பார்ப்பனரல்லாதாரைப் போலும் வயிற்றுப் பிழைப்பு தேசாபிமானிகளா யிருந்திருந்தால் சக்கரைச் செட்டியார் வயிற்றுப் பிழைப்பு தேசாபிமானத்தால் ஜட்ஜியாக இருப்பார். அதுபோலவே ஆரியாவும் மாதம் ஒன்றுக்கு ரூ. 1000, 1500 சம்பாதிக்கும் உத்தியோகத்தில் இருப்பார். ஆரியா அவர்கள் தனது உத்தியோகத்தை விடுங் காலத்தில் மாதம் 700 ரூபாய் சம்பளமும் 300 ரூபாய் படியும் வாங்கிக் கொண்டிருந்தார். இருவரும் தேச நன்மையின் பொருட்டு இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாட்டிற்குச் சென்று அரசியல் இயக்கங்களின் போக்கை அறிந்தவர்கள்.

இன்னும் ஆரியா அவர்கள் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வாடகை பங்களாவில் குடி இருக்கிறார். அவரது பங்களாவிலும் பூச்செடிகளுக்குத் தண்ணீர் வார்க்க 3 அல்லது 4 ஆள்களை வைத்திருக்கிறார். ஐரோப்பியர் முறையில் தனது வாழ்க்கையை நடத்துகிறார். அவரது மனைவியார் ஐரோப்பாவில் வசித்து கொண்டிருக்கிறார்.

ஜெயில் என்றால் பொது ஜனங்கள் பயந்து நடுங்கின காலத்தில் சுமார் 20 வருஷம் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டு, பிறகு பல காரணங்களால் அத்தண்டனைகள் குறைந்து ஐந்து வருஷ காலத்திற்குக் குறையாமல் கடினக் காவல் தண்டனை அடைந்தார். ஜெயிலில் மாவு அரைத்தவர். தோட்ட வேலை செய்தவர்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்றில் பல வியப்புக் குறிகளைக் கிளர்த்திடும் ஆர்யாவைப் பற்றிய எனது தேட்டத்தில் இதைப்போன்று சில புதிய பதிவுகளைக் கண்டறிந்துள்ளேன். இதுவரை அவர் எப்போது மறைந்தார் என்ற செய்திகூட பிடிபடாமல் இருந்தது. ஆர்யாவைப் பற்றிய எழுதிய சிலரும் அவரது இறப்பு சார்ந்த விளக்கங்களை அளித்ததில்லை.

செல்வந்தராகவும் அரசியல் செல்வாக்கு மிக்கவராகவும் வலம் வந்த ஆர்யா, அடையாளம் தெரியாத நபராக வரலாற்றில் மறைவதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆகவேதான் சோர்வு கொள்ளாமல் பல பத்திரிகைளைப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஆச்சரிய மிகும் காரியமாக இப்பொழுது 'சிவாஜி' இதழ் மூலம் ஆர்யாவின் இறுதிக் காலம் ஒளி பெற்றுள்ளது.

அந்தக் குறிப்பை முதன்முதலாக உங்கள் முன் பகிர்வதில் உவப்புக் கொள்கிறேன். 24.09.1950 தேதியிட்ட 'சிவாஜி'யில் முகப்புச் செய்தியே ஆர்யாவின் மறைவு குறித்ததுதான்.

''அமரரான சுதேந்திரநாத் ஆர்யா'' பாரதியின் அருமை நண்பர் எனப் பேசும் கட்டுரை 'அவரைக் குறிப்பிடும் ஆறில் ஒரு கடமை' என்கிறது. மேற்கொண்டு பதிவான முழுக் கட்டுரையைக் காண்போம்.

பாரதிதாசன்

சுதேந்திரநாத் ஆரியா, அமரரானார் என்ற செய்தி பத்திரிகையில் வந்தது. பல ஞாபகங்கள் எழுந்து சோகக் கடலில் ஆழ்த்தின.

சமுத்திரக்கரையில் மாபெரும் கூட்டம். அந்நாளில் ஒலிபெருக்கி கிடையாது. அந்த கடல் அலைகள் எழுப்பும் ஓங்காரத்திற்கு மேல் ஓர் குரல் ஓங்கி நின்றது. “தமிழர்களே, ஆந்திரவாடுகளே, நீங்கள் முகத்தில் வளர்த்திருப்பது மீசைதானா? வாரல் மீன்களில், பூனைகளும் கூட மீசை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கும் உங்களுக்கும் வித்தியாசம் கிடையாதா? உங்களுக்கும் ஏதாவது சுயமரியாதை உணர்ச்சியிருக்கிறதா? ஆங்கில ஆதிக்கத்தினால், உங்கள் புத்தி மழுங்கிவிட்டதா? உடனே ஒன்று சேருங்கள். தாய் நாட்டு விடுதலைக்கு வழி பாருங்கள், அவனவன் சுய காரியம் பார்த்துக் கொண்டிருந்தால் நாடு எவ்விதம் சுதந்திரம் பெற முடியும், ரஜபுத்ர வீரரைப்போல் பிரதிக்ஞை செய்து கொள்ளுங்கள், நியம நிஷ்டையுடன் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தால், உங்கள் ஒரு குடும்பம் சுகமாக வாழலாம். கோடிக்கணக்கான மக்கள் பஞ்சமோ பஞ்சம் என்று பரிதவித்து வாழும்போது ஒருசிலர் பஞ்சணை மெத்தையில் துயின்று பாலும் சோறும் தின்று பதவியில் பூரித்தால், அந்த நாடு முன்னேற்றம் அடைவது எப்பொழுது?

‘வந்தே மாதரம்’ என்று தாய்நாட்டை வாயாரா வாழ்த்துவதற்கும் கூட நமக்கு சுதந்திரம் கிடையாது. உண்பதற்கும், உடுப்பதற்கும், மற்றவரை எதிர்பார்க்கும் இன்றைய நிலையை உடைத்தெறிய உடனே வழி காணவேண்டும். இளைஞர்களே! இப்போது நாம் வாழ்வதும் ஒரு வாழ்க்கையா? உண்ணுவதும் சோறா, உறங்குவதும் நித்திரையோ, சுதந்திரம் பெறும் வரை சுக வாழ்க்கையை ஒவ்வொருவரும் தியாகம் செய்யுங்கள். திட பிரமசாரிகளாக நாட்டிற்கு உழைக்க முன்வாருங்கள். எளிய வாழ்வைக் கடைப்பிடியுங்கள், எழுந்து முன்வாருங்கள்” என்று கர்ஜனை புரிந்தது, இளைஞர்களின் இரத்தம் அந்த வார்த்தைகளைக்கேட்டதும் கொதித்தது. தியாக அக்கினியில் குதிக்கவும் அவர்களைத் துணிவுறுத்தியது.

ஒவ்வொரு நாளும், கடற்கரையோ, சந்தியோ, எங்குப் பார்த்தாலும், இந்தப் புரட்சிகரமான செய்தி பரவிக் கலந்தது. அரசாங்கத்திற்கு இது பெரிய தொந்தரவைக் கொடுத்தபடியால் இப்படிப் புரட்சி செய்யும் வாலிபரையெல்லாம், தனது அதிதிகளாக மாற்றிவிட்டது. இம்மென்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம். வந்தே மாதரம் என்றால் வாய்ப்பூட்டு. ஒருநாள் வீரர் ஆரியா, பிரசங்க மேடையிலிருந்தவாறே சிறை சென்றார். சிறு பிராயம். திட மனம் ஆதலால் புன்னகையுடன் சென்றார். தந்தையாரைப் (பாரதி) பிரிவதற்கு மட்டும் அவருக்கு மனது தவித்தது. ஆறு வருஷம் கடின காவல் தண்டனை கிடைத்தது.

புதுவையில் ஒருநாள் ஆரியா வந்து இறங்கினார். புஷ் வண்டியில் உள்ளே வந்தார். தந்தையாரை மார்புறத் தழுவினார். கண்ணீர் சொரிந்தார். நாலைந்து நாள் இருவரும் தத்தம் அநுபவத்தைச் சொல்வதும், அழுவதும், சிரிப்பதும், கர்ஜனை புரிவதுமாகக் கழித்தார்கள். சென்னைக்குப் புறப்பட்டார்கள். ரயில் சார்ஜிக்குகூட அவரிடம் பணம் இல்லை. என் தாயார் உடனே, தமது ஒரே நகையான காதுக் கம்மலைக் கழற்றி பால்காரரிடம் அடகுவைத்து பத்து ரூபாய் வாங்கிக் கொடுத்தார். ஆரியா, அன்பு விழிகளில் மூலமாக வழிந்தோட விடைபெற்றுச் சென்றார். போய் ஒரு மாதத்துக்கெல்லாம், 500 ரூபாய் தந்தி மணியாடர் என் தாயாருக்கு அனுப்பி, இவ்விதம் கடிதமும் எழுதியிருந்தார்.

“சகோதரியே, நீ கொடுத்த பத்து ரூபாயும், எனக்கு பத்தாயிரம் ரூபாயைப் போல் உதவிற்று. இந்த 500 ரூபாயையும் நீதி நகைகளாகச் செய்து அணிந்து கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம். அது எத்தனையோ, துயரமுறுபவர்களைக் காப்பாற்றும் என்பது என் நம்பிக்கை” யென்று.

வி.சக்கரை செட்டியார்

சில காலம் கழித்து மறுபடியும் நாங்கள் சென்னை வந்த சமயம் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து 'ஸ்விஸ்' மனைவியுடன் சுகமாக வாழ்ந்திருந்தார். பால்ய வயதில், அவர் தமது உறவினரில் ஒரு பெண்ணையே காதலித்திருந்தார். ஆனால் ஆரியா தேசப் பணியில் ஈடுபட்டிருந்தபடியால் கல்யாணம் செய்து கொள்வது சாத்தியமில்லாமல் ஆயிற்று.

அவரது காதல் மணம் தடைப்பட்ட வரலாற்றை தந்தையார் எழுதிய 'ஆறில் ஒரு பங்கு' என்ற சிறுகதையில் காணலாம். ஆரியாவைக் கதா நாயகனாகக் கொண்டு எழுதப்பட்டதே அந்தச் சிறுகதை. ஆரியாவின், முதிர்ந்த வயதில் அவர் கிறிஸ்தவப் பாதிரியாக மாறினார். அதற்கும் ஒரு அபூர்வமான சந்தர்ப்பம்தான் காரணம்.

சிறையில் இருக்கும்பொழுது அவரது நண்பர் ஒருவருக்கு உபதேசம் செய்வதற்கு ஒரு பாதிரியார் அடிக்கடி வருவதுண்டாம். அவரது உபதேசம் ஆரியாவை பெரிய சோதனைக்குள்ளாக்கியது. மனது குழம்பித் தத்தளித்தது. கிறிஸ்தவ மதத்தில் சேருவதா, வேண்டாமா என்று மனதைத் தைரியப்படுத்திக் கொள்வதற்காக, '**கீதோபதேசம்**' யாராவது செய்தால் தேவலையென்று அவர் விரும்பினார். சிறையதிகாரிகளிடம் முறையிட்டார். அவரது முறையீட்டை ஒருவரும் லட்சியம் செய்யவில்லை. கடைசியாகப் பாதிரியாரே வெற்றி பெற்றார். ஆரியாவைப் பாதிரியாராக மாற்றினார்.

தந்தையார் இறந்தபோதும் எங்களுடன் இருந்து ஆறுதல் கூறித்தேற்றினார். சிலவருடம் சென்றபின் நாங்கள் மலாயா முதலிய அந்நிய நாடுகளுக்குச் சென்றுவிட்டதால், அவருடன் தொடர்பு கொள்ள முடியாமல் ஆயிற்று. இன்று அவரது முடிவு கேட்டதும் மனம், பொங்கிக் குமுறி, பின்பு ஒருவாறு அமைதியுற்றது''

இப்பதிவை எழுதியிருப்பவர் பாரதியின் மூத்த மகள் தங்கம்மாள் பாரதி என 'சிவாஜி' ஆசிரியரின் குறிப்புக் கூறுகிறது. ஆனால் இதே பொருண்மையில் சகுந்தலா பாரதியும் அவரது நூலில் குறிப்பிடுகிறார். உள்ளடக்கம் ஒரு பொருளைப் பேசினாலும், ஆரியாவின் மறைவையொட்டி பாரதியின் மூத்த மகள் அஞ்சலி எழுதி இருக்கிறார் என்பது புதிய தகவல்.

ஆர்யாவின் செல்வச் செழிப்பு குறித்து தங்கம்மாள் அளித்துள்ள தகவலும் 'குடிஅரசு' தகவலும் ஒன்றிப் போகின்றன. மேலும் 'சிவாஜி' பதிவின் மூலம் ஆரியா 1950 ஆண்டு வரை உயிர் வாழ்ந்துள்ளார் என்பதையும் அறிகிறோம். அந்தச் சுயமரியாதைச் சுடரின் புகழொளி வரலாற்றில் மீண்டும் பிரகாசிக்க வேண்டும். அதைச் சிறிய அளவில் ஈடேறச் செய்கிறது இக்கட்டுரை.

<u>கட்டுரையாளர் குறிப்பு:</u>

கடற்கரய் மத்தவிலாச அங்கதம்,

பத்திரிகையாளர் மற்றும் ஆய்வாளர்.
"உலகம் சுற்றிய தமிழர்' ஏ.கே.செட்டியார் நூலுக்காக விகடன் விருது வென்றவர்.
இவரது 'பாரதி விஜயம்' நூல் ஆய்வுப்பரப்பில் பெரும் கவனம் பெற்றது.
காந்தி கொலை குறித்த இவரது 'காந்தி கொலை – பத்திரிகைப் பதிவுகள்' நூல் சமீபத்தில் வெளிவந்து கவனம் பெற்றுள்ளது.
சென்னை பம்மலில் வசிக்கும் இவர் எழுத்தே வாழ்வென வாழ்ந்து வருகிறார்.

பாரதியின் ஆங்கில எழுத்துகள்



‘ஹிந்து’வில் பாரதி

ஆ.இரா.வேங்கடாசலபதி



அச்சில் வெளிவந்த பாரதியின் இரண்டாம் படைப்பு ‘ஹிந்து’ நாளிதழில் (27 டிசம்பர் 1904) பிரசுரமான ‘Mr Sankaran Nair’s Pronouncement’ என்ற கடிதமாகும். அப்பொழுது பாரதிக்கு வயது இருபத்திரண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இன்றுவரை ஒன்றேகால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தென்னகத்தின் தலையாய ஆங்கில நாளேடாக விளங்கிவரும் ‘ஹிந்து’வில் சி. சுப்பிரமணிய பாரதி (1882–1921) எழுதிய இருபது கடிதங்களும் குறிப்புகளும் இந்நூலில் அடங்கும். இவற்றில் செம்பாதிக்கும் மேலானவை முதன்முறையாக இந்நூல் வழி வெளிச்சத்திற்கு வருகின்றன. அரைகுறையான நறுக்குகளாகவும் செப்பமற்ற பாடங்களோடும் நிலவிய சில பாரதி எழுத்துகள் இந்நூல் வழி முழுமையும் செப்பமும் துல்லியமான காலக்குறிப்பும் பெறுகின்றன.

இவை தவிர, பாரதியோடு செய்யப்பட்ட ஒரே நேர்காணல் எனக் கருதலாகும் ஒரு கட்டுரையும் முதன்முறையாக நூல்வடிவம் பெறுகிறது. மேலும், ‘ஹிந்து’வில் பாரதி எழுதியவற்றுக்குத் தூண்டு கோலாகவும் எதிர்வினையாகவும் அமைந்த கடிதங்களும் கட்டுரைகளும் பிற்சேர்க்கையாக அமைந்து பாரதி பற்றிய விரிவான ஆய்வுக்கு வழிகோலுகின்றன.

1921இல் பாரதி மறைந்தபொழுதே கையெழுத்துப்படிகளாக நின்றுவிட்ட படைப்புகள், பல்வேறு இதழ்களில் தொகுக்கப்படாமல் சிதறிக்கிடந்த எழுத்துகள் என இரு நிலையிலும் பாரதி பதிப்பியல் முழுமை பெறாமல் இருந்தது. ஆனால் சிறிது காலத்திற்குள்ளேயே அவருடைய படைப்பாளுமையின் பெருமையும் சமூக பண்பாட்டு முக்கியத்துவமும் உணரப்பட்டு அவருடைய படைப்புகளைத் தேடி வெளியிடும் முயற்சிகள் தொடங்கிவிட்டன. பாரதியின் மனைவி செல்லம்மாள் தொடங்கிய பாரதி ஆச்ரமத்தின் முயற்சிகள், பாடல்களை வெளியிடுவதோடு நின்றுவிட்டன.

1920களின் இடைப்பகுதியில் பாரதி பிரசுராலயத்தைத் தொடங்கி, பாரதியின் வெளிவந்ததும் வெளிவராததுமான பல நூல்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டுவந்த பாரதியின் தம்பி சி. விசுவநாதய்யர் சிதறிக்கிடந்த பாரதியின் ஆங்கில எழுத்துகளையும் தேடியெடுத்து 1930களின் பிற்பகுதியில் வெளியிட்டார். சென்னையிலுள்ள பிரம்மஞான சபையின் அடையாறு நூலகத்திலுள்ள அன்னி பெசண்டின் ‘நியு இந்தியா’, ‘காமன் வீல்’

இதழ்களிலிருந்தும், புதுச்சேரியில் அரவிந்தர் நடத்திய 'ஆர்யா' மாத இதழிலிருந்தும் (சுத்தானந்த பாரதியின் உதவியோடு) பாரதியின் ஆக்கங்களை அவர் திரட்டினார்.

மேலும் கையெழுத்துப்படியாக இருந்தவற்றையும் சேர்த்து Agni and Other Poems and Translations Dm Essays and Other Prose Fragments என்று இரு நூல்களாக ஆங்கிலக் கவிதைகளையும் கட்டுரைகளையும் தனித்தனியே 1937இல் வெளியிட்டார்.

இரண்டாம் நூலின் பதிப்பாளர் குறிப்பு A few of these pieces were originally published over twenty years ago in the periodicals New India and Commonwealth [sic] (Madras) and Arya (Pondicherry). The others are now published for the first time, from the commonplace note - book and other Ms. material of the late C.S.Bharati, now in the possession of his brother, Mr C.Viswanatha Ayyar' என்று கூறுகிறது. இந்த நூலில் பாரதியின் 'ஹிந்து' எழுத்துகள் எவையும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.('காங்கிரஸ்' பற்றிய கடிதம் 'நியு இந்தியா'வில் வெளிவந்தவாறே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.)

இதன் பிறகு, 1959இல் வெளியான பாரதி ஆய்வு முன்னோடி ரா.அ.பத்மநாபனின் 'பாரதி புதையல்' இரண்டாம் தொகுதியில் பாரதியின் The Fox with the Golden Tail நூல் மறுவெளியீடு செய்யப்பட்டதோடு, The Political Evolution in the Madras Presidency என்ற முற்றுப்பெறாத கட்டுரையின் சில பத்திகளும் இடம் பெற்றன. மேலும், 'ஹிந்து' பத்திரிகையின் Fifty Years Ago பகுதியில் இடையிடையே மறுபிரசுரம் செய்யப்பட்டுவந்த பாரதியின் சில கடிதங்களும் பாரதி ஆய்வாளர்களுக்குக் கிடைக்கலாயின. (எடு: பெ. தூரனின் 'பாரதி தமிழ்' இரண்டாம் பதிப்பில் (1963) இடம்பெற்ற 'Proscription of Innocuous Literature'

பாரதி நூற்றாண்டுக்குக் கொஞ்ச காலத்திற்கு முன்பு சி. விசுவநாதய்யர் தம் நண்பர் ஏ. நடராஜன் என்பவரைக் கொண்டு 1937இல் வெளியான மேற்குறித்த இரண்டு ஆங்கில நூல்களையும் இணைத்ததோடு, இரண்டு பாடல்களையும், ஏழு கட்டுரைகளையும் புதியதாகச் சேர்த்து Agni and Other Poems and Translations & Essays and Other Prose Fragments 616 தனி நூலாக வெளியிட்டார். இவற்றுள் 'Mr Tilak and the British Government' என்ற கடிதம் 'ஹிந்து', 'நியு இந்தியா' இரண்டிலும் வந்தது; 'National Languages as Media of Instruction' 'ஹிந்து'வில் வெளிவந்தது (ஆனால் தேதி 18 அக்டோபர் 1916 என்று பிழையாக உள்ளது. வெளிவந்த தேதி 19 ஆகும்); 'A Letter to Mr Ramsay Macdonald' என்ற நீண்ட கடிதம் பாரதி பயன்படுத்திய ஏராளமான துணைத்தலைப்புகள் இல்லாமல் தொகுக்கப்பட்டிருந்தது.

1982இல் 'பாரதியின் கடிதங்கள்' நூலை வெளியிட்ட ரா.அ.பத்மநாபன், ராம்சே மெக்டோனால்டுக்கு எழுதப்பட்ட இக்கடிதத்தை முழுமையாக, ஏறத்தாழ அனைத்துத் துணைத் தலைப்புகளோடு வெளியிட்டார். இதற்கடுத்து எழுதப்பட்ட 'Police Rule in India' என்ற கடிதம் ஆங்கில மூலமில்லாமல் தமிழாக்கம் மட்டும் இந்நூலில் இடம்பெற்றது.

பாரதியின் படைப்புக்களைக் காலவரிசையில் செப்பமாகப் பதிப்பித்துவரும் சீனி. விசுவநாதன், அண்மையில் வெளியிட்ட அதன் எட்டாம் தொகுதியின் பதிப்புரையில் பின்வருமாறு கூறுகிறார்: The Hindu பத்திரிகையிலே வெளியான பாரதி கடிதக் கட்டுரைகளுக்கான பிரதிகள் பார்வைக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், பாரதியின் எழுத்துக்களை மறுபிரசுரம் செய்திருந்த பாரதி பிரசுராலயத்தாரின் Essays and Other Prose Fragments என்ற நூலும், ஹிந்து அலுவலகமே வெளியிட்ட The Hindu hundred years (sic) என்ற நூலும் பெரிதும் பயன்பட்டன' (ப. 29–30).

மேற்கண்ட பதிப்பு வரலாறு உணர்த்தும் செய்தி இதுவரை ‘ஹிந்து’ நாளிதழின் பாரதி காலத்துக் கோப்புகளை ஆய்வாளர்கள் பார்வையிட இயலவில்லை என்பதேயாகும். மேலும், சீனி. விசுவநாதன் மேற்கண்ட தம் பதிப்புரையில் (ப. 6) கூறுவதாவது: ‘… ராம்ஸே மக்டானல்டு அவர்களுக்கு எழுதிய கடிதத்துடன் “ஹிந்து” பத்திரிகையுடனான பாரதியின் தொடர்பு புதுப்பிக்கப்பட்டது. இதன்பின் இரண்டொரு கடிதங்களும் கட்டுரைகளும் பிரசுரமாகியுள்ளன.

பாரதி ஆய்வின் இன்றைய எல்லை இது. பாரதியின் எழுத்துக்கள் ‘ஹிந்து’வில் இடம்பெற்றுள்ளது அறியப்பட்ட நிலையிலும் அதன் கோப்புகள் பாரதி ஆய்வுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்பது வெள்ளிடைமலை. 1921இல் நீதிபதி மணி ஐயரின் தலைமையில் பாரதி நிகழ்த்திய ‘நித்திய வாழ்வு’ (Life Eternal) என்ற பேச்சின் விவரத்தையும், பாரதியின் குருநாதர் குள்ளச்சாமி படத்தையும் ‘ஹிந்து’ வில் தேட வேண்டும் என்று ‘சித்திரபாரதி’யின் முதல் பதிப்பிலேயே ரா.அ.பத்மநாபன் குறிப்பிட்டிருந்தாலும் இத்தேடல் நடைபெறவில்லை.

ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு ‘ஹிந்து’ நாளிதழின் 1904 முதல் 1921 வரையான காலகட்டத்துக் கோப்புகள் பார்வையிடப்பட்டு, சீனி.விசுவநாதன் குறிப்பிடும் ‘இரண்டொரு’ என்பதற்கு மேலாகப் பத்துக்கும் அதிகமான எழுத்துக்கள் அடையாளம் காணப்பட்டு இந்நூலில் இடம்பெறுகின்றன. பாரதி எழுத்துகள் இத்தனை புதையலாகக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் ரா.அ.பத்மநாபன் குறிப்பிடும் ‘நித்திய வாழ்வு’ உரையும், குள்ளச்சாமி படமும் காணக் கிடைக்காததில் ஏமாற்றமே.

இந்நூலின் முக்கியத்துவத்தை இச்செய்திகள் வெள்ளிடை மலையாகப் புலப்படுத்துகின்றன என்பதில் இருவேறு கருத்துக்கிடமில்லை.

அச்சில் வெளிவந்த பாரதியின் முதல் படைப்பு, ‘விவேக பாநு’ மாத இதழ் (ஜூலை 1904) வெளியிட்ட ‘தனிமையிரக்கம்‘ என்ற ‘சானட்’ வடிவப் பாடலாகும். இப்பாடல் வெளிவந்த காலத்தையொட்டிச் சில மாதங்கள் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பாரதி பணியாற்றினார். “சுதேசமித்திரன்’ நிறுவனர் ஜி. சுப்பிரமணிய ஐயரால் இனங்காணப்பட்ட பாரதி, 1904 நவம்பரில் சென்னைக்கு வந்து, ‘சுதேசமித்திரன்’ நாளிதழில் உதவியாசிரியராகப் பணியாற்றலானார். ஆனால் ‘சுதேசமித்திர’னில் அவருடைய படைப்பு எதுவும் 1906 ஏப்ரல் வரை வெளிவந்ததாகத் தெரியவில்லை.

ஸ்ரீமான் சங்கரன் நாயரின் பிரகடனம்

Mr Sankaran Nair’s Pronouncement

To the Editor of the Hindu

SIR, The intelligent and well-intentioned critic, Mr Plainspeaker, who discussed in Saturday’s Hindu, the memorable pronouncement of Mr Sankaran Nair’s on the necessity of Social Reform for bringing about political regeneration, has been a little misguided by those treacherous things, viz., words. Mr Plainspeaker waxed indignant at hearing of ‘those great principles of equality and brotherhood upon which the British Government is based’.

I understand, and respect the feelings of Mr Plainspeaker, aye, even as I respect the indignant feelings of the downtrodden Pariah when he hears that Hinduism proclaims (I quote Mr Plainspeaker) the ‘one-ness of life’ and the ‘brother-hood of man’.

“Talk of the one-ness of life, the brother-hood of man’ exclaims the Pariah, ‘when yonder Brahman, who would bow low to an Englishman as if to a god, believes that my very shadow would pollute him.”

I entirely agree with Mr Plainspeaker in his righteous protest against British-Indian regulations.

But all this does not in the least affect Mr Sankaran Nair’s position. What the eminent social reformer means to say is simply this: There can be no political emancipation without the feeling of nationality. There can be no feeling of nationality where the caste system is prevalent or, rather, say (as some hyper-critical men want us to believe that the caste system is present in all human communities) where the jati system is prevalent, the wonderful system which makes a Pariah philanthropist inferior to a Brahmin go-between.

Is it doubted in any quarter that, in England, a cobbler boy with necessary merit finds his path clear to the Premiership?

And is it not treason in India to believe that a Sudra (not. to speak of Panchama) with an unparalleled knowledge of Sanskrit scripture and with exceptional goodness and piety can’ ever aspire to the seat of Sringeri?

Why will people be so wilfully blind? Why do they refuse to find any difference between a mountain and a molehill? Where is Great Britain and alas! Where is India?

The National Congress, I readily concede, has some of India’s best sons in its ranks and its aspirations are of the worthiest.

But does anybody seriously believe that a man who, in his stony heart, condemns a babe widow to perpetual misery might be worthy to be placed at the helm of a rising people? Impossible.

‘I do not think India will ever be called-and she ought not to be called-into the Councils of the Empire until we show we have fully and frankly accepted those great principles of equality and brother-hood upon which the British Government is based. The principles are utterly repugnant to the caste-system as understood and practised among us.”

So said Mr Sankaran Nair, and his words are worthy to be written in golden letters.

Without social reform our political reform is a dream, a myth, for social slaves can never really understand political liberty.

And unless and until our Social Conferences prove a success our National Congress is nothing but glare and dust.

C. SUBRAMANIA BHARATI
of the Madras Social Reform Association
THE HINDU, 27 December 1904

குற்றமற்ற இலக்கியத்திற்குத் தடை

Proscription of Innocuous Literature

To the Editor of the Hindu

SIR, I appeal to the people of India-in whose name the Government of India is carried on-against the injustice of the said Government in proscribing my two innocuous Tamil booklets Kanavu (Dream), a poem, an d Aril Oru Pangu (One Sixths), a short story-obviously on the presumption that the latter are seditious. I hold that those who have reported to the Government that my booklets contain expressions which may not be permitted by its law as ignorant persons. I ask for a re-examination of the contents of these booklets by competent persons. I have already approached the Government of Madras on this subject both by means of private communication and writings in the press. But, so far, my efforts have been unavailing. I make this further appeal to the Indian people and demand justice to my booklets at their hands, not in my own interests so much-for these booklets mean almost nothing to me from the points of view of money and fame-as in the interests of what little of freedom of the pen is left to us in British India. If you proscribe love poems and social reform stories on the ground that they issue from the pen of a suspected person, you greatly exceed your limits. I pray that the Public Press should take up this question.

SUBRAMANIA BHARATI
THE HINDU, 8 October 1912

தேசியத் தலைவர்கள் பற்றி ஸ்ரீமதி பெஸண்டின் கண்டனங்கள்: ஒரு பதில்

Mrs Besant's Strictures on the Nationalist leaders: A Reply

To the Editor of the Hindu

SIR, Mr Arabinda Ghose authorises me to contradict on his behalf certain statements about him made by Mrs Besant in her recent letter to the Christian Commonwealth which I have brought to his notice. These allegations are, without exception, inaccurate, misleading or entirely erroneous.

It is misleading to say in connection with an attempt to brand as 'seditious' and 'extremist', the opposition of social orthodoxy to Mrs Besant's more recent developments - that orthodoxy gave Mr Arabinda Ghose as a leader of the advanced nationalist movement. A convinced Hindu in all matters of religious life and faith, Mr Ghose accepts in questions of social conduct the liberalism of Swami Vivekananda.

The assertion of his bitter hostility to the Central Hindu College, for any cause whatsoever, [is] entirely erroneous. He had always, on the contrary, a sincere sympathy and admiration for Mrs Besant's works and for the college as an educational institution which he expressed clearly enough to Mrs Besant herself when he had an interview with her in Calcutta. His opposition at that time was directed against Mrs Besant's now abandoned scheme of an officially recognised and, therefore, officially controlled

University of India and especially for any attempt to include in it the Bengal National College as one of its feeders or centres.

The reason for his 'hostility', even as regards the University, is inaccurately stated. Mr Ghose never opposed the cooperation of Europeans and Indians from any feeling of racial fanaticism and hostility, but as a temporary necessity in order to deliver the Indian mind from long subservience and habituate it again to self-reliance and capacity for working out great objects, free from outside control, supervision or tutorship.

I may add that Mrs Besant's idea that her present troubles are a martyrdom for her loyalty to the Sarkar, and the extremists, as a party, are persecuting her out of political animosity is either a fiction or a self-delusion. She has forgotten apparently that some, at least, of the most prominent leaders of the movement and a well known Bengali scholar and politician often conspicuous on its platforms, were and still are, I believe earnest and convinced Theosophists.

The attitude of these leaders in the present controversy is not known to me but they have certainly not figured among her assailants nor has any 'great leaders' of the advanced party interfered on either side in the Theosophical controversy. This legend will not hold and Mrs Besant must find some other bludgeon for prostrating her opponents and critics.

C. SUBRAMANIA BHARATI

THE HINDU, 7 July 1913

இந்தியாவில் போலீஸ் ஆட்சி

Police Rule in India

To the Editor of the Hindu

SIR, In replying to the Hon. Mr Narasimha Aiyar's interpellations regarding me, the Madras Government has made some observations which are slightly inaccurate.

The Government says that I am a fugitive from justice. I am not one. For, I left British India in 1908. And the Madras Government issued a warrant against me in 1911.

The Government has added that if I wish an enquiry into my conduct, I can go to British India, when, so they promise, judicial proceedings will be instituted against me. All that is very reasonable but that was not the main point of my representations to H.E. the Governor of Madras. I have made some definite charges against the Madras police and I have tried to demonstrate these charges by adducing positive proofs. Is my presence essential in British India for the Government to hold an enquiry into the conduct of their Police?

Pondicherry

8th April 1914

C.S. BHARATI

THE HINDU, 9 April 1914

ஸ்ரீமான் திலகரும் பிரிட்டிஷ் அரசாங்கமும்

Mr Tilak and the British Government

To the Editor of the Hindu

SIR, Mr Tilak's letter to the Mahratta, reprinted in your issue of the 1st instant, is bound to have created an infinite variety of emotions in the minds of his foes and his friends, his detractors and admirers in the country.

All the same there is nothing new, nothing unexpected, nothing surprising in his words to us, the members of the constitutional Nationalist party of which he is the accredited leader. We have always been saying the same thing whenever there was any necessity to explain our attitude to the British Government in India.

The reason why we were not incessantly proclaiming it from house-tops has been, to put it frankly, our unwillingness to please those whose one aim seemed to be to mis-represent us. And again incessant explanations would hardly have left us any leisure for constructive propaganda. And God knows, too, that our revilers were too many and too noisy for us to attempt any explanations at all.

In the face of the present European crisis, however, the Nationalist party every member of it- felt that our position should be made once for all clear to England and our enemies, her proconsuls and her agents, her critics and her friends, her flatterers and her mis-leaders..

And now our leader has spoken for us all in language unmistakable and clear, unmis-takable may I hope, even to those who hailed his release from six years' imprisonment with two special police stations placed on each side of his house in Poona!

I trust that England's chief representatives in India and her Ministers at Home are not ignorant of the tremendous influence which Mr Tilak's name and his words wield over the hearts of his many thousand followers in India. He has given all our thoughts, ideas and aspirations in a nut-shell. We want Home Rule. We advocate no violence. We shall always adopt peaceful and legal methods to achieve our object. In peace time we shall be uncompromising critics of England's mistakes. But when trouble comes we shall unhesitatingly stand by her and, if necessary, defend her against her enemies. And to those who may thoughtlessly persecute us in England's name we shall say: 'Oh ye of little wisdom. It may be in your power to temporarily injure us in petty ways. But you can never crush us. For we are lovers of humanity and servants of God, the children of Righteousness and the peace that shall endure for ever.'

Pondicherry

September - 2

C. SUBRAMANIA BHARATI

THE HINDU, 3 September 1914

போதனா மொழியாகத் தேசீய மொழிகள்

National Languages as Media of Instruction

To the Editor of the Hindu

SIR,In the course of a recent lecture at Triplicane, Mr J.C. Rollo of the Pachaiyappa's College has supported the use of English as the only right medium of instruction to Indian boys and girls. But he recognises, rightly, that the consensus of Indian opinion is against his view. He thus summarises the arguments on our side. 'It is urged that a student will save much time by being instructed in the vernacular (sic), that text-books in the vernacular (sic) will be within easy reach of all classes of people, that an Indian possessed of literary genius will be able to commit the fruits of his genius in his own vernacular (sic)'. This summary is far from being exhaustive. Our main argument is that one's mother-tongue is the only natural and human medium for imparting instruction. If anyone should doubt this, let him go and make enquires of educationalists in Japan, Scandinavia, England, Italy, Mexico or any other land where human beings are human beings. Speaking of the Tamil country, especially, the blunder of using a foreign medium becomes shocking because the Tamil language happens to be far superior to English for accurate and scientific expression, a fact which naturally enough, Mr Rollo seems to be quite ignorant of. 'It cannot be denied,' he says, naively, 'that there is no vernacular (sic) in Southern India fitted for the teaching of science or the technicalities of history.' But the self-complacency betrayed by this statement of Mr Rollo is quite pardonable in him, considering the present state of things educational in British India.

'Insufficiency of scientific terms' is the next charge levelled against our languages. But the Nagari Pracharini Sabha is publishing a very useful dictionary of scientific terms in easy Sanskrit which can be introduced wholesale into every Indian language, thus securing the unity of scientific phraseology for India, even as Europe has borrowed wholesale from Latin and Greek for a similar end.

Within a few years, the novelty of such terms will disappear and they will look quite natural in Tamil or Gujarati books, even as all those big classical terms appear very natural nowadays in English or French scientific text-books.

Of course, we have no objection to teaching English as a secondary language in our schools and colleges. I think that any rational Englishman ought to be satisfied with this concession.

C. SUBRAMANIA BHARATI

THE HINDU, 19 October 1916


பஞ்சம்.
பாரதியின்
கருத்துப்
படங்கள்
இந்தியா
1906 - 1910
ஆ.இரா.வேங்கடாசலபதி

இப்படத்தில் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயர்கள் 1 வருஷத்திற்கு 45 கோடி ரூபாய்களை தவறாமல் உறிஞ்சி விடுகிறதைத் தெளிவாய் விளக்கிறது. இந்தியா பொக்கஷத்திலிருந்து பணப் பெட்டியைப் பார்த்து இந்தியர்கள் ஏங்கும் கண்ணீர் விட்டழுகிறார்கள். ஐயோ பாவம்! என்ன கஷ்டம்!



பால் கறக்கும் மார்லி தமக்குள்ளேயே சொல்லிக்கொள்ளுகிறார்:—"அட்டா அப்பா! இந்த "இந்தியா" பசுவையோ பால் கறக்கிறேன்! குடம் குடமாக கறந்து சுமந்து விட்டிருந்தபோதிலும் இன்னும் வற்றவில்லையே! இப்படிப்பட்ட பசுவின் வயிற்றிலே பிறந்த கன்றுகள் எத்தனை சிறந்த அதிருஷ்டமுடையன!

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

[பு 2 ... 1907 ... 3]



இ - 7.

பிரிடிஷ் ஆட்சி { அடங்கி நீண்டிருந்த வங்காளம் ஆட்சிக்கொடுமையைத் தாங்கமுடியாமல் உதைய ஆரம்பித்திருக்கிறது.
(சித்திரவிளக்கத்தைக் காண்க.)

[[illegible] ஆதம்ஜீ "சட்டசபைகளில் [illegible] மகமதியர்கள் பரஸ்பர எதிரிகளாயிருக்கிறார்கள்"
என்று [illegible] சட்ட சபையில் சொல்லியிருக்கிறார்] அதைப்பற்றியே பிரிவுபட்ட எலெக்ஷன், விரோத அனுகூலம்
[illegible] ஏற்பாடுகள் செய்திருப்பதாகச் சொல்லுகிறார். பிரிவுச் சுவரை மிதித்துத் தள்ளிவிட்டு மாதாவின்
கொடிக்கீழ் [illegible] தழுவிக் கொள்ளுகின்றனர்.
([illegible])


பாரதியின்
கருத்துப்
படங்கள்

ஆவணங்கள்

தனது அரிய பாரதி ஆய்வுச்
சேகரிப்பிலிருந்து தொகுத்தவர்

ய.மணிகண்டன்

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

Topics of the Week

பெயர் போட்டுக்கொள்ளாத ஆசிரியராகப் பாரதியார் பணியாற்றிய புகழ்பெற்ற ‘இந்தியா’ இதழின் முகப்புத் தோற்றம்.

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

‘இந்தியா’ இதழில் பாரதியாரின் சிந்தனையின் விளைவாகத் தோற்றம்பெற்ற கருத்துப்படம்.

பாரதியார் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த தமிழின் முதல் நாளிதழ் ‘சுதேசமித்திரன்’ முகப்புத்தோற்றம். பாரதியாரின் கதைகள் அடங்கிய “கதா மாலிகா” கதைத்தொகுதி குறித்த அறிவிப்பு இம்முகப்புப் பக்கத்தில் இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

விஜயா.

“VIJAYA”



சுதேசமித்திரன்.

The Swadesamitran.

[தினப்பதிப்பு.]

புதுவையிலிருந்து பாரதியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ‘விஜயா’ நாளிதழின் முகப்புத் தோற்றம்.



வங்க வாழ்த்துக் கவிகள்

வங்கமே, வாழிய.

HAIL, BENGAL!

‘சுதேசமித்திர’னில் வெளிவந்த பாரதியின் முதல் கவிதை இடம்பெற்ற தோற்றம். 1905 செப்டம்பர் 14ஆம் நாள் சென்னைக் கடற்கரையில் பெருந்திரளாக மாணவர்கள் கூடிய கூட்டத்தில் பாரதியார் “வங்கமே வாழிய - வங்க வாழ்த்துக் கவிகள்” எனப் பாடிய பாடல்கள் வெளிவந்த தோற்றம், சுதேச மித்திரன் 15.9.1905.



2

‘சுதேசமித்திரன்’ இதழில் வெளிவந்த பாரதியாரின் இறுதிக் கவிதை. “இந்தியாவின் அழைப்பு” என்னும் தலைப்பிலான இக்கவிதை ஒரு மொழிபெயர்ப்புக் கவிதையாகும். 1921 சூலை 19ஆம் நாள் இக்கவிதை வெளிவந்தது. அமெரிக்கப் பெண் கவிஞர் மாட் ரால்ஸ்டன் ஷர்மன் என்பவர் எழுதிய கவிதை. இந்தியாவைக் குறித்தும் காந்தியடிகளைக் குறித்தும் இந்திய விடுதலையைக் குறித்தும் அமைந்ததாகும்.

கனவு:

All Rights Reserved.

1910

பாரதி வாழ்ந்த காலத்திலேயே ஆங்கிலேய அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட பாரதியின் “கனவு”, “ஆறில் ஒரு பங்கு” என்னும் இரண்டு நூல்களும் 1910ஆம் ஆண்டில் வெளிவந்தவை. அந்நூல்களின் முகப்புத் தோற்றங்கள்.

ஆறிலொரு பங்கு.

All Rights Reserved.

1910

‘விஜயா’ நாளிதழில் வெளிவந்த பாரதியாரின் ‘பால பாரதா’ (Bala Bharata) ஆங்கில இதழ் குறித்த அறிவிப்புப் பகுதி. இந்த பால பாரதா இதழின் ஒரு வெளியீடுகூட நமக்குக் கிடைக்கவில்லை. இந்த இதழ் தென்னாப்பிரிக்கா வரை பரவலாக வாங்கிப் படிக்கப்பட்டு வந்திருக்கின்றது. தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது காந்தி இந்த இதழைக் குறித்த செய்தியைத் தொடர்ந்து தனது ‘இந்தியன் ஒப்பீனியன்’ இதழில் வெளியிட்டு வந்திருக்கின்றார். பாரதி குருவாகப் போற்றிய நிவேதிதா, பாரதியின் இந்த இதழில் தொடர்ந்து எழுதியிருக்கின்றார் என்பதை இந்தக் குறிப்பு நமக்குக் காட்டுகின்றது.



விஜயா.

BALA BHARATA.,
A monthly Review of Indian
Progressive Thought
Edited by SRI.C.Subramania Bharathi
Highly Spoken of by Sister Nive-
dita and other eminent thinkers.
Inland ... 1 year ... Rs. 1—8—0
... 6 months ... Rs. 1—0—0
Foreign sh.4/-

Apply to:—
The Manager, "BALA BHARATA
Pondicherry.



70 THE COMMONWEAL. NOVEMBER 1st, 1918

THE PLACE OF WOMAN

By C. Subramania Bharati

அன்னிபெசண்ட் நடத்திய ‘காமன்வீல்’ (COMMONWEAL) என்னும் ஆங்கில வார இதழில் 1 நவம்பர் 1918 பாரதியார் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் தோற்றம்.

புதுவையிலிருந்து வெளியேறிய பாரதி பத்தாண்டு இடைவெளிக்குப்பின் முதன்முறையாகச் சென்னை வந்தபோது 5 சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அந்தக் காலத்தில்தான் காந்தியை மகாகவி பாரதி சந்தித்தார். அப்போது ஒரு சொற்பொழிவைப் புகழ்பெற்ற நீதிபதி சர். எஸ். சுப்பிரமணிய ஐயர் தலைமையில் பாரதி நிகழ்த்தினார். சொற்பொழிவின் தலைப்பு “The Cult of The Eternal”. இந்தச் சொற்பொழிவு மிக விரிவாக அன்னிபெசண்ட் நடத்திய ஆங்கில நாளிதழான ‘நியூ இந்தியா’ (ழிமீஷ் மிஸீபீவீணீ) 1919 மார்ச் 4ஆம் தேதியிட்ட இதழில் வெளிவந்தது. அந்தத் தோற்றம் இங்கே காட்சிதருகிறது.



NEW INDIA, TUESDAY, MARCH, 4, 1919

THE CULT OF THE ETERNAL

MR. C. SUBRAMANIA BHARATI'S LECTURE

The first of a series of five lectures on 'The Cult of the Eternal' or the scientific exposition of the art of conquering death was given yesterday by Mr. C. Subramania Bharati at the Victoria Hall. The admission having been restricted by tickets sold at one rupee each, the audience was poor. Dr. S. Subramania Aiyar presided.

பத்தாண்டு இடைவெளிக்குப்பின் முதன்முறையாகச் சென்னை வந்த பாரதி, நீதிபதி சர். எஸ் சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நிகழ்த்தும் சொற்பொழிவுக்கான அறிவிப்பு. அன்னிபெசண்ட் நடத்திய ‘நியூ இந்தியா’ (New India) இதழில் வெளிவந்தது. இந்த அறிவிப்பு விளம்பரத்தில்தான் பாரதியாரின் புகைப்படம் இடம்பெற்றிருந்தது. பாரதியார் வாழ்ந்த காலத்தில் பத்திரிகையில் வெளிவந்ததாகக் கிடைக்கும் அவரது ஒரே புகைப்படம் இதுதான். இந்தப் படமே இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாரதியின் ஆறாவது புகைப்படமாகும். இந்தப் படம் பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களால் முதன்முறையாக இனங்கண்டு வெளியிடப்பட்டது. இந்த விளம்பரம் 1919 மார்ச்சு 1ஆம் நாள் இதழில் வெளிவந்ததாகும்.


NEW INDIA, SATURDAY, MARCH 1, 1919

Mr. C. SUBRAMANIA BHARATI

LECTURES ON

"THE CULT OF THE ETERNAL"

Being a scientific exposition of the Art of Conquering Death

On Sunday, the 2nd March, at 5-30 p.m.

AT THE

VICTORIA PUBLIC HALL

IN ENGLISH

Dr. S. Subramania Iyer Presides

Admission will be only by Tickets costing 1 Rupee each

Tickets can be had at

The Sons of India, Ltd.

89, Ramasamy Street, G. T., at the Sons of India, Ltd. 10, Esplanade and at 25, Pycrofts Road, Triplicane

K. AMRITA, Secretary.

இதற்குமுன் பாரதியின் 5 புகைப்படங்களே கிடைத்திருந்த நிலையில் பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்ட பாரதியின் ஆறாவது புகைப்படம் இது. 1919 பிப்ரவரி மாதம் எடுக்கப்பட்ட படமாகும் இது.

இஸ்லாம் மதத்தின் மகிமை.

முகவுரை.

1920 மார்ச் 7ஆம் தேதி ரமண சமுத்திரம் என்னும் ஊரில் இஸ்லாமியப் பெருமக்களின் அழைப்பை ஏற்று “இஸ்லாம் மதத்தின் மகிமை” என்னும் தலைப்பில் பாரதியார் சொற்பொழிவு ஆற்றினார். அந்தச் சொற்பொழிவின் முழுமையான விரிவான வடிவம் ‘சுதேசமித்திரன்’ நாளிதழில் 18.3.1920இல் வெளிந்தது. அந்தத் தோற்றம் இங்கே இடம்பெறுகிறது.

Reg. No. B. 1922

The Pitfalls

Young India

A Weekly Journal

Edited by M. K. Gandhi

Vol. X Ahmedabad: Thursday, December 13, 1928 No. 50

The Story of My Experiments with Truth

(By M. K. Gandhi)

PART V—CHAPTER XXXV

In the Punjab

காந்தியடிகள் ஆங்கிலத்தில்
நடத்திய ‘யங் இந்தியா’
(Young India) வார இதழின்
முகப்புத் தோற்றம் இது.
இந்த இதழில்தான்
காந்தியடிகள் பாரதி பற்றிய
குறிப்பை எழுதினார்.


412 YOUNG INDIA December 13, 1928

Justice Run Mad

M. K. G.

பாரதி மறைவிற்குப்பின் 1928ஆம் ஆண்டு பாரதியாரின்
கவிதை நூல்கள் பர்மா அரசாங்கத்தாலும் சென்னை
அரசாங்கத்தாலும் தடைசெய்யப்பட்டன. அப்போது அதனைக்
கண்டித்து மகாத்மா காந்தியடிகள் தமது ‘யங் இந்தியா’
(Young India) இதழில் எழுதியிருந்த பதிவு. 1928 டிசம்பர்
13ஆம் தேதி இதழில் வெளிவந்த இப்பதிவில் காந்தியடிகள்
தன் பெயரின் சுருக்க எழுத்துகளை ஆங்கிலத்தில் பதிவின்
இறுதியில் “M.K.G.” எனக் குறிப்பிட்டுள்ளார்.


410 YOUNG INDIA December 13, 1928

Bharathi the Tamil Poet

C. R.

Vande Mataram

1928இல் ஆங்கிலேய அரசாங்கத்தால்
பாரதி நூல்கள் தடைசெய்யப்பட்டபோது
பாரதியார் பாடல்களை இந்திய அளவில்
அறிமுகப்படுத்தும் வகையில் இராஜாஜி
ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து காந்தியின்
‘யங் இந்தியா’ (Young India) இதழில்
வெளியிட்டார். அந்தத் தோற்றம் இங்கே
இடம்பெறுகிறது.

தொகுப்புக்கு அடிப்படையான ஆதார நூல்கள்

பாரதியை தங்களது ஆய்வுகள், படைப்புகளின் மூலமாக தமிழ்ச் சமூகத்தில் உயிர்ப்போடு வைத்திருக்கும் ஆளுமைகள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்களுக்கு நமது நன்றிகள்! கீழ்க்கண்ட நூல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மலர் தயாரிக்கப்பட்டுள்ளது.

கால வரிசையில் பாரதி படைப்புகள்
- சீனி விசுவநாதன்

மகாகவி பாரதி வரலாறு
- சீனி விசுவநாதன்

சித்திரபாரதி
- ரா.அ.பத்மநாபன்

பாரதியின் கடிதங்கள்
- ரா.அ.பத்மநாபன்

பாரதி காலமும் கருத்தும்
- தொ.மு.சி.ரகுநாதன்

பாரதி தரிசனம் - இந்தியா கட்டுரைகள்
- இளசை மணியன்

பாரதி 'விஜயா' கட்டுரைகள்
- தொகுப்பு ஆ.இரா.வேங்கடாசலபதி

வ.உ.சியும் பாரதியும்
- தொகுப்பு ஆ.இரா.வேங்கடாசலபதி

பாரதி கருவூலம் - ஹிந்து நாளிதழில் பாரதியின் எழுத்துகள்
- பதிப்பாசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி

பாரதியின் கருத்துப்படங்கள்
- ஆ.இரா.வேங்கடாசலபதி

பாரதிதாசன் கண்டதும் கேட்டதும்
- பி.ஸ்ரீ

சோசலிசக் கருத்துகளும் பாரதியாரும்
- கோ.கேசவன்

பாரதி விஜயம்
- கடற்கரய் மத்தவிலாச அங்கதம் (தொகுப்பு)

பாரதி 100
நினைவு நூற்றாண்டு மலர்

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால்
அரசு துணைச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

தொகுப்பு உதவி:

ப.திருமாவேலன்,
பொ.தங்கபாண்டியன்,
டி.அருள் எழிலன்

வடிவமைப்பு:
இரா.தமிழரசு

அட்டைப்படம்:
ஓவியர் மருது

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்:
எண்: 5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை – 600 113
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம்: www.tndipr.gov.in

தமிழரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

பாரதி நினைவு நூற்றாண்டு மலர்

அன்பு வேண்டும்
அறிவு வேண்டும்
கல்வி வேண்டும்
நீதி வேண்டும்

இந்த நான்கையும்தான் பாரதி விரும்பினார்.
அவரது எல்லாப் பாட்டுக்கும் அடிப்படை இதுதான்.
இந்த நான்கும் கொண்டவர்கள் மேலோர்,
மற்றவர்கள் கீழோர் என்பது பாரதியின் கருத்து.
இத்தகைய மேலோரை உருவாக்கும் முயற்சிக்குத்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில்
அமைந்திருக்கக்கூடிய அரசு என்றைக்கும் துணை நிற்கும்.
வாழ்க பாரதி!

தமிழரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு